In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ மஞ்சரி

சிவமஞ்சரி 4 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ
சிவமயம்

சிவமஞ்சரி

- நான்காம் தொகுதி -

(பக்கங்கள் – 481 முதல் 640 வரை)

ஆசிரியர் :

"சிவமஞ்சரி செம்மல்" "அருட்பணி அரசு"

பூசை. ச. அருணவசந்தன்

ஸ்வஸ்திஸ்ரீ விய ஆண்டு வைகாசி மூல நன்னாள் (12-6-2006) திங்கட்கிழமை திருஞானசம்பந்தர் திரு நட்சத்திரத்தில் வெளியிடப்பட்டது

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–18.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலின் விவரம்

நூலின் பெயர்	-	சிவமஞ்சரி ④
	-	நான்காம் தொகுதி -
நூலின் ஆசிரியர்	-	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	-	முதல் பதிப்பு - 2000 இரண்டாம் பதிப்பு - 2006
உரிமை	-	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	-	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	-	ப. #29, (பு.#40), பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
பக்கங்கள்	-	8+160 ஆக 168 பக்கங்கள்
நூல் அளவு	-	கிரௌன் 1/4 - 24 c.m. × 18.2 c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	-	21.5 c.m. × 15.2 c.m.
பயன்படுத்தப்பட்ட அச்சுத்தாள்	-	பலாப்பூர் H.B. டபுள் கிரௌன் 11.6 kg.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	-	9.2 தமிழ்-13 Pts.
மின் அச்சுக் கோர்வை	-	ஸ்ரீசீனிவாசா கிராபிக்ஸ், சென்னை - 41.
மறுதோன்றி அச்சகம்	-	ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ், # 3, பழைய சிறைச்சாலைத் தெரு, தங்கசாலை, சென்னை-1. போன் 25283554
நூலின் பொருள்	-	சிவபெருமானைப்பற்றி - புராணங்கள் - வடமொழி தமிழ் வேதங்கள் - தல வரலாறுகள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் - தனித்தனி தலைப்புகளில்.
விலை	-	ரூபாய் 80/-
நூலகக் குறியீட்டு எண்	-	

நூலின் முகப்பில் : திருவான்மியூர் ஸ்ரீ தியாகராஜர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முதல் பதிப்பின் முகவுரை...

எல்லாம்வல்ல சிவபெருமானின் திருவருளினால் சிவமஞ்சரியின் இந்த நான்காவது தொகுதி மலர்ந்து தங்களின் திருகரங்களில் தவழ்கின்றது. இவ்வேளையில் இத்தொகுதியினை உருவாக்கத் துணைநின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்குகின்றேன்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று, நேரில் அழைத்துக் குருவருளையும் திருவருளையும் வழங்கியதுடன் தொடர்ந்து ஆதரவு நல்கிவரும் திருவாடுதுறை ஆதீன கர்த்தர் குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டார சந்நிதிசவாமிகள் அவர்களின் திருவருளைப் போற்றி வணங்குகின்றேன்.

இப்பணியில் உதவி செய்து, வழிகாட்டி வருபவர் எனது வணக்கத்திற்குரிய குருநாதர் குருஜி சிவஸ்ரீ R. துரைராஜன் (எ) பத்பநாபன் அவர்கள் ஆவார். அவர் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வரும் நிறைதவச்செல்வர் சிறந்த சிவபூஜாதுரந்தரர் இந்தப் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஆலயங்களைத் தர்சிக்க நான் மேற்கொண்ட தலயாத்திரைகளுக்கான அத்தனை செலவுகளை ஏற்றுக்கொணடதுடன், பலரைக் கொண்டும் நமக்குப் பலவாறு உதவி செய்து வருகின்றார்கள். அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

அவரையொட்டி அவருடைய அன்பர், நுங்கம்பாக்கம், LVJ பில்டர்ஸ் உரிமையாளர், சிவனிடம் நீங்கா அன்பு நிறைந்தவர், சிறந்த சிவபக்தர் சிவஸ்ரீ M.V. ஜெய்சங்கர் அவர்கள் தொடர்ந்து நமக்கு உதவி வருகின்றார்கள். சிவமஞ்சரியின் மலிவு விலைப் பதிப்பிற்காக விளம்பரங்கள் பெற ஏற்பாடு செய்வதுடன், தானும் அடிக்கடி நன்கொடையளித்து உதவி வருகின்றார்கள். அவருடைய தந்தையார் திரு. விவேகானந்தன் அவர்கள் நம்முடைய பணிகளுக்கு உரிய ஆலோசனைகளை பெற்றுததந்து வருகின்றார்.

எனது சிவப்பணிகளுக்கு உறுதுணையாக நிற்பது எனது அன்பிற்கினிய சகோதரியும். அவர் கணவருமான திருமதி. அனந்தலட்சுமி, திரு. வ. வீரராகவன் தம்பதியராவர். இந் நாலுக்கு விவரம் சேகரிக்க பாபநாசம். திருநெல்வேலி, திருப்புகலூர் முதலான பல தலங்களுக்குப் பயணம் மேற்கொண்டபோது உடன் வந்து உதவியதுடன் பதினெட்டாவது மலரின் இலவச வெளியீட்டிற்கான அச்சுத்தாள்களை டாக்டர் மோகன் காமேசுவரன் அவர்கள் மூலம் ஏற்பாடு செய்தளித்தார்கள்.

பதினாறாவது மலரான சந்திரசேகர் ஆய்வுப் பணிகளுக்காக கலைமகள், மஞ்சரி, எம்.எல்.ஜெ ஆகிய பத்திரிகைகளின் அதிபரான திரு. R. நாராயணசுவாமி அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்வாக அறங்காவலராக இருக்கும் திரு. முத்துச் செட்டியார் சேரிடபிள் அண்டு ரிலீ ஜியஸ் டிரஸ்டு மூலம் நன்கொடை வழங்கி உதவினார்கள்.

பதினேழாவது மலர் தொடங்கியபோது நமது அன்பரும், ஆதரவாளருமான பொறி யாளர் திரு. B. ஜெயராமன் அவர்கள் தனது நண்பரான ஆடிட்டர் திரு. K. சுப்பிரமணியன் அவர்களை அறிமுகப்படுத்தி உதவி பெற உதவினார்கள். திரு. K. சுப்பிரமணியம், S. வசந்தா தம்பதியர் தம் மகன் ஹரிஹரன் பெயரால் நன்கொடை வழங்கினார்கள்.

பத்தொன்பதாவது மலரான சித்தீசுவரர் வெளிவந்தபோது எல்லாம்வல்ல சித்தரின் படம் தேடியலைந்தோம். அப்போது தன் வீட்டிலிருந்த படத்தைத் தந்ததுடன் நெல்லை. நறையூர் சித்தீசுவரம், சித்தர்காடு முதலிய தலங்களுக் குச் சென்றுவர பண உதவி செய்தவர் மேனாள் ரிசர்வ் வங்கிஅதிகாரி திரு. எம். ராஜா அவர் கள் ஆவார்.

பதினெட்டாவது மலரான அகத்தீசுவரரை உருவாக்கும்போது அகத்தியர் வழிபட்ட தலங் களை தரிசிக்க விரும்பினேன். அவ்வகையில் குசத்தலை ஆற்றின் கரையில் அமைந்துள்ள சின்னக்காவணம், பொன்னேரி முதலிய பல தலங்களுக்கு அழைத்துச் சென்று உதவியவர் அகத்தியர் அருள்மாமணி குருஜி வீரேஸ் வரானந்தா (எ) வீரமணி அவர்களா வார். இவர் சிவமஞ்சரியின் ஆரம்ப காலம் முதல் தொடர்ந்து உதவிவருபவர். புகைப்படங்கள் இப் போது எடுக்கவும் உதவினார்கள். இவர்கள் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட காயத்ரி ஹோமம் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இருபதாம் மலரான அதிக தியாகராஜர் நூலின் ஆராய்ச்சிப் பணிக்கு உதவியவர் நமது பேரன்பரும், தோள்கொடுத்து தாங்கி நிற்பவருமான சிவஸ்ரீ என்.ஆர். வெங்க டேசன் கமலா தம்பதியர் நமது கலைக்கூடத் தின் அத்தனை பணிகளுக்கும் முன்வந்து ஆதரவளித்து வருகின்றனர்.

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்திய துடன் சைவ சமயத்தின் மேன்மைகளை விளக்கி ஆலோசனை தந்து நம்மையும் நூலையும் செம்மைப்படுத்தி வருபவர் திருவாவடுதுறை ஆதீன மகாலய சுவடிப் புல நெறியாளரும், ஆகமரத்தினம், சித்தாந்த ரத்தினம், காஞ்சி, சிவ, சதாசிவ தேசிகர் அவர்களாவார். தேனாம்பேட்டை திருமுறை காவலர் திரு. பெருமாள் அவர்கள். சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன சுவடிப்புலம் திரு. த. பூமிநாகநாதன் அவர்கள் ஆகி யோர் அச்சுப்படிகளைப் பலமுறை திருத்தி உதவியுள்ளார்கள்.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங் களைத் திரட்ட உதவியாக இருப்பது டாக்டர். உ.வே. சாமிநாதைய்யர் நூலகமாகும். அந் நூலகக் காப்பாளர் வித்துவான் திரு. பாலசாரநாதன், நூலகர் சிவஸ்ரீ K. பாஸ்கர், உடனாளர் திரு. K. நடராஜன், பணியாளர் கள் பொன்னுவேல், M. மணி திரு. ராமஜெயம், திருமதி. கன்னிகாமணி ஆகியோராவர். மேலும் இந்த வேளையில் நமக்கு எப்போதும் துணையாக இருந்துவரும் சென்னை நங்க நல்லூர், மணவழகர் மாலை மாதஇதழ் ஆசிரி யரும், மேனாள் தமிழ்நாடு மின்சார செயற் பொறியாளருமான கோவூர் திரு. K.P. துரை B.E., அவர்கள் திருவாளர்கள் நங்கைநல்லூர் திரு. கல்யாண சுந்தர மையர், சேலையூர், திரு. சாய்ராம், அப்பாவு மாத இதழ் ஆசிரியர் திரு வான்மியூர் பாம்பனடிமை குகஸ்ரீ வே.நா. சௌந்தரராஜன்–பிரகதா தம்பதியர், திருவல் லிக்கேணி, கயிலைப் புனிதர் திரு. ஷண்முகம் (மேனாள் சார்பதிவாளர் பதிவுத் துறை) பேரா சிரியர் திரு. ராதாகிருஷ்ணன் (அண்ணா பல்கலைக்கழகம்) தவத்திரு. பர்வதமலை சித்தர், ஸ்ரீலஸ்ரீ ஜோதி ராமலிங்க சுவாமிகள், தேனாம்பேட்டை கட்டுமானப் பொறியாளர் திரு. V. ஜெயராமன், மேற்கு மாம்பலம் திரு. P.M. ராஜகணபதி, (நாகை மஞ்சக்கொல் லையைச் சேர்ந்த) பல்லவாரம் மீனா மருத்துவ மனை டாக்டர். அ. மாணிக்கம், சென்னை இருதய சிறப்பு மருத்துவர் டாக்டர். சிவ கடாட்சம், மயிலை சேவா சக்ரா நாராயண சுவாமி, மயிலாப்பூர் டாக்டர். V.P.R. வரதராஜன், சென்னை அடையாறு கற்பகம் கார்டன் ஸ்பீகல் பிரிண்டர்ஸ் உரிமையாளர் குமார் (எ) என். பாலசுப்பிரமணியம், சென்னை மார்ஸ் டிராவல்ஸ் உரிமையாளர் திரு. எ. சுப்பையா, சப்தகிரி டிராவல்ஸ் உரிமை யாளர் திரு. ஸ்ரீனிவாசன் சென்னை ஐயப்ப பக்த மண்டலி தலைவர் திரு. க. அனந்த நாராயணன் (சிவா) ஆகிய யாவருக்கும் எமது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

இறைவன் திருவருளாலும் அன்பர்களின் நல்லாதரவினாலும் சிவமஞ்சரி நான்காம் தொகுதியின் இரண்டாம் பதிப்பு (2006) வெளிவந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகக் கீழ்க்காணும் அன்பர்கள் முன்வெளியீட்டுத் *தொகை அளித்து உதவி செய்துள்ளார்கள். இவர்களுக்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலையெம் அண்ணல் சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வை அருள வேண்டும் என்று அவர் திருவடிகளில் பிரார்த்திக்கிறேன்.

வாழி நலம் சூழ! - அன்பன் பூசை. ச. அருணவசந்தன்

"கயிலைப் புனிதர்"
பேரா. சிவஸ்ரீ. Dr. சோ. முருகன்
தெற்கு ரத வீதி, சிதம்பரம்.

சிவஸ்ரீ. சிவகுமார் (மருதவாணன்)
ஆசிரியர் தமிழன் எக்ஸ்பிரஸ் சென்னை

சிவஸ்ரீ. S. மோகனசுந்தரம்
அறங்காவலர், ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயம் பஞ்சேட்டி

சிவஸ்ரீ. G. பாலசுப்பிரமணியன்
அர்ச்சகர், ஸ்ரீ ஆதிசிவசக்தி விநாயகர் ஆலயம், மந்தவெளி, சென்னை

சிவஸ்ரீ. நடராஜா
17/9, காரணீஸ்வரர், 1வது தெரு,
மயிலாப்பூர், சென்னை–4

சிவஸ்ரீ. B. சம்பத்
28, ஈஸ்வரன் கோயில் தெரு, திருமழிசை

"சித்தாந்த சேவாரத்தினம்"
சிவஸ்ரீ. ம.சேகர்–பத்மாவதி
55, வெண்ணிசாமி நகர், குருவப்பநாயக்கன் பாளையம், அரும்பார்த்தபுரம், புதுவை–11

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ. K. இரத்தினசபாபதி
27, திருவேங்கடமுதலி முதல் தெரு,
புதுப்பேட்டை சென்னை – 2.

"திருப்பணிச் செல்வர்"
Dr. தேவராஜன். M.B.B.S
திருமழிசை சென்னை.

சிவஸ்ரீ. G.T. நாடியன் செல்வன்
CISCO SYSTEMS, INC. BANGALORE-25.
விழுப்புரம் தென்னாற்காடு மாவட்டம்

சிவஸ்ரீ T.K. நீலகண்டன்
2, ரயில்வே காலனி II தெரு அமைந்தகரை
சென்னை –600029

பேரா. சிவஸ்ரீ. V. ஆறுமுகம் Ph.D.,
பார்க்வியூ அப்பார்மெண்ட்,
அகஸ்தியர் தெரு, கிழக்கு தாம்பரம்

சிவஸ்ரீ T.R. ரமேஷ்
டிசில்வா சாலை, ஆழ்வார்பேட்டை,
சென்னை– 18.

சிவஸ்ரீ. Dr.T.R. சுரேஷ் M.B.B.S
காசிவிசுவநாதன் காலனி,
மேற்கு மாம்பலம், சென்னை– 33.

சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ. Dr.C. ரவிசங்கர் B.D.S
ஜெய்சற்குரு பல் மருத்துவமனை, வில்லியனூர் சாலை, ரெட்டி பாளையம், புதுவை 20.

சிவஸ்ரீ. தி. அனந்த நாராயணன்
மந்தைவெளி, சென்னை.

"சித்தாந்த ரத்தினம்" சிவஸ்ரீ. S. வாசு
மீடியாலிங்க் கான்செப்ட்ஸ், சென்னை

சிவஸ்ரீ S. செந்தில்குமார்
யூனிட்மேனேஜர் ICICI புருடென்ஷியல், சென்னை

"அழகன் திருப்பணி மணி"
குகஸ்ரீ. S. குமார் B.Com., CAIIB மேனாள் SBI அதிகாரி
3, துரைசாமிபுரம், 2வது தெரு, திருப்பூர்

சிவஸ்ரீ K.P.P. பன்னீர் செல்வன் M.A (ECO), M.A (B.Adm), M.L.M.B.A.
சிறப்பு அதிகாரி / கூடுதல் பதிவாளர் தமிழ்நாடு வீட்டு வசதிவாரிய கூட்டுறவு சங்கங்களின் இணையம்

"திருவாசகச் செம்மணி"
திருவையாறு வே. இரமணன்
இருப்பு திருவனந்தபுரம்

---

*இத்தொகைக்கு ஈடாக இப்பதிப்பின் அன்பர்களுக்குச் சலுகைவிலையில் வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆ-ர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஸ்ரீ செந்தில்குமார்
புதுபாளையத் தெரு, காஞ்சிபுரம்

Prof. Dr. சத்யநாராயணா ஐ.ஐ.டி. கிண்டி
தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை–42.

Prof. சிவஸ்ரீ Dr. ராதாகிருஷ்ணன் Ph.D.
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை – 23.

சிவஸ்ரீ. G. நல்லப்பன் மேலாளர், ONGC
அஸ்ஸாம், சென்னை – 28.

சில்ப கலாமணி சிவஸ்ரீ சாமிநாதன் (எ) சிவா
S/o. சிவஸ்ரீ சாமி. சுப்பையா ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி, காஞ்சீபுரம்.

சிவஸ்ரீ A. ராஜேந்திரன்
உரிமையாளர் சூரியலட்சுமி ஏற்றுமதிகள், திருப்பூர்

"சித்தாந்த ரத்தினம்" சிவஸ்ரீ. **S. ரவீந்திரன்**
தனலட்சுமி வங்கி, சேலம்.

"சித்தாந்தப் பேராசிரியர் சிவஸ்ரீ. **A. முத்துராம்**
ஆடிட்டர், சென்னை

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ. வி.செங்குட்டுவன்–கல்யாணி
35, 2வது குறுக்குத் தெரு, திருமால் நகர், பாண்டி–13.

சிவஸ்ரீ. N. கார்த்திகேயன்
பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5.

கயிலைமணி **K.K. கோபாலன் சர்மா** பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை –20.

சிவஸ்ரீ **V.S. கல்யாணராமன் I.P.S.** "சுக்ருதா" மாருதி நகர், நகர்பாவி ரோடு, பெங்களூர்

"சித்தாந்த ரத்தினம்" சிவஸ்ரீ. **V. வீரபாண்டியன்** கௌசல்யா நகர், திருப்பாதிரிப்புலியூர், கடலூர்

"அலங்கார கலைமாமணி" சிவஸ்ரீ. **S. பாலச்சந்திர சிவாச்சாரியார் (சதீஷ்)** & **S. விஸ்வநாத குருக்கள் (காமேஷ்)**
புலியூர், கோடம்பாக்கம், சென்னை – 24.

4–ஆம் பக்கத் தொடர்ச்சி

பல ஆண்டுகளாக நமது எழுத்துப் பணிகளுக்கு நல்லாதரவு தந்து ஊக்கப்படுத்தி வரும் எமது குருநாதரும் மஞ்சரி ஆசிரியருமான திரு.லெமன்(எ)லெட்சுமணன், கலைமகள் ஆசிரியர் திரு. கீழாம்பூர் சங்கர சுப்பிரமணின் ஆகியோருக்கு எமது நன்றி.

இந்நூலினை பலருக்கும் அறிமுகப்படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் சிதம்பரம் நடராசர் ஆலய அறங்காவலரும், தில்லை மூவாயிரவரில் ஒருவரான பிரம்மஸ்ரீ பரமேசுவர தீட்சதர் ஐயா அவர்கள் சென்னை, சிவநெறி செல்வர் கவிஞர். ரமணன் அவர்கள், பரமக்குடி திரு–திருமதி. ஹரிவாசுதேவ தம்பதியினர் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

நமக்கு மின்னச்சு செய்து தரும் தனம் லேசர்பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. செ. சிகாமணி, மின்தட்டச்சரும் எனது தம்பியுமான திரு.ச. சேகர், தங்கை சங்கீதா ஆகியோருக்கும் மறுதோன்றி அச்சகத்தினர் திரு. S. முருகநாதன் (ஸ்ரீவேணி கிராபிக்ஸ், திருவான்மியூர்), திரு.A.பாஸ்கர், திரு. K. வாசுதேவன் (பி.எம்.வி. ஆப்செட், சைதாப்பேட்டை), சக்தி கிராபிக்ஸ் உரிமையாளர் வை. சீதாராமன் ஆகியோருக் கும் நிழற்பதிவாளர் சத்யா பிராசஸ் திரு. ராதா கிருஷ்ணன், துர்கா பைண்டிங் திரு. சரவணன், ஓவியர் சசி ஆகிய யாவருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

இவர்கள் யாவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாகிய அண்ணாமலை எம் மண்ணல் சகல செல்வயோகமிக்கப் பெரு வாழ்வை அளித்தருளி அருள்பாலிக்க வேண்டுமென்று அவருடைய பொன்னார்த் திருவடிகளைப் போற்றிப் பணிந்து கொண்டுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்
சிவப்பணியில் மீளா அடிமை

பங்குனி உத்திரம்
20-03-2006 சோமவாரம்

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமண்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை –18.

பூசை. ச. ஆட்சிலிங்கம்

பூசை.ச.ஆட்சிலிங்கம்
(எ) பூசை.ச.அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை

நூலின் உள்ளே ...

மலர் 16	ஸ்ரீ சந்திரசேகரர்	பக்கம்	481
மலர் 17	ஸ்ரீ அக்னீஸ்வரர்	,,	513
மலர் 18	ஸ்ரீ சித்தீஸ்வரர்	,,	545
மலர் 19	ஸ்ரீ அகத்தீஸ்வரர்	,,	527
மலர் 20	ஸ்ரீ அதி (க) தியாகராஜர்	,,	609

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலிய தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.

பேரன்புடைய சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகிறது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைப்படங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (குடித்த எழுத்தில் உள்ள ஐந்து நூல்கள் இந்த நான்காம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.)

1. சிவமே செம்பொருள்
2. மச்சேந்திரர்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமாஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16. **சந்திரசேகரர்**
17. **அக்னீஸ்வரர்**
18. **சித்தீசுவரர்**
19. **அகத்தீசுவரர்**
20. **அதி(க) தியாகராஜர்**
21. கேதார கௌரீசுவரர்
22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீசுவரர்
25. ஸ்ரீ கல்யாணசுந்தரர்
26. ஸ்ரீ பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறைகள் அறிமுகம்
28. வேத, ஆகம, புராணேசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய்நின்ற முதல்வன்
31. ஸ்ரீவீரட்டகாசர்
32. ஸ்ரீகாலசம்ஹாரர்
33. ஸ்ரீமன்மதேசுவரர்
34. ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. ஸ்ரீ தீர்த்தேசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்பரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்ததாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜலிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்.

இந்நூல் ஆசிரியர் பூசை ச, அருணவசந்தன், ஒதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள். தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புநோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்–வளர்–சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் "சிவமஞ்சரிச் செம்மல்" என்ற பட்டத்தையும், அகில உலக பக்தி இலக்கியப் பேரவையினர் "அருட்பணி அரசு" என்ற பட்டத்தையும், சென்னை இந்து தர்ம மன்றத்தினர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகளின் பீடாரோகணப் பொன் விழா விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர். ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சந்திரசேகரனே போற்றி! சுந்தர வடிவே போற்றி! போற்றி!!

ஸ்ரீ சந்திரசேகரர்

இந்தியச் சமய உலகில் பதினாறு என்றதும் நமக்குப் பதினாறு வகையான செல்வப்பேறுகளே நினைவுக்கு வருகின்றன. ஆனால் சைவ அன்பர்களுக்குச் சந்திரனின் பதினாறு கலைகளும், அவன் அவற்றைப் பெற்று உலகில் இன்பம் தழைக்க வலம் வரும்படியாக அருள்செய்த சந்திரசேகர மூர்த்தியுமே நினைவுக்கு வருகின்றனர். சந்திரனின் பதினாறு அமுதகலைகளை நினைந்து சிவமஞ்சரியின் பதினாறாவது இதழ் "சந்திரசேகரர்" என்ற பெயரில் மலர்கின்றது.

இதில் சந்திரன் சிவனருள் பெற்று மண்டலாதிபனாகி உலகினை வலம்வந்தது, பின்னர் தட்சனின் சாபத்தால் உருக்குலைந்தது, சிவவழிபாடு செய்து வளர்ந்துதேய அருள்பெற்றது, சந்திரன் விருப்பமொடு சிவபூசை செய்த தலங்கள், அங்கு அவன் அமைத்து உள்ள தீர்த்தங்கள் ஆகியசெய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சந்திரனுக்கு அருள்செய்யச் சிவபெருமான் மேற்கொண்ட கோலமான. சந்திரசேகர வடிவத்தைப் பற்றியும், அம்மூர்த்தியைப்பற்றி கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும், காணும் செய்திகளும் இந்த நூலில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சிவாலயங்களில் வீற்றிருக்கும் சந்திரன், சிவபூசைகளில் பெற்றுள்ள இடம், அவனை பூசிக்கும் முறைகள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

சந்திரனை வேதங்கள் சோமன் என்று அழைக்கின்றன. அவன் வழிபட்ட லிங்கங்கள் சோமேசுவரர் என்ற பெயர்களில் உள்ளன. எனவே சோமேசுவரர், சோமநாதர் என்ற பெயர்களில் சிவபெருமானுக்கு அமைக்கப்பெற்றுள்ள சிவாலயங்களையும் இதில் தரிசித்து மகிழலாம்.

இந்து சேகரி உடனாய சந்திரசேகரப் பெருமான் அருளினால் எல்லாரும் எல்லாமும் பெற்று சகல செல்வ யோகமுடன் பெருவாழ்வு வாழ இறையருளைப் பிரார்த்திக் கிறோம். – சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரசேகரர், சோமநாதர் - பெயர் விளக்கம்

சேகரன் என்பதற்கு சேகரித்து வைப்பவன் துணை நிற்பவன், காப்பவன், காவலன் எனப் பல பொருள்கள் உள்ளன. தட்சனுடைய சாபத்தால் வருந்திய சந்திரனைத் தனது அருளாற்றலால் காத்து இழந்த ஒளியழகை மீண்டும் அவனுக்கு அளித்து பொலிவு பெறச் செய்ததால் சிவபெருமான் சந்திர சேகரன் என்றழைக்கப்படுகிறார்.

பக்தர்கள் பிழைகளைப் பொறுத்து அவர்கள் குற்றமே செய்யினும் அதனைக் குணமென்று கொள்ளும் சிவபெருமானின் திருவருளை நினைவு ருத்துவது இப்பெயரும் வடிவமும் என்பதால் அனேக ஆலயங்களில் இது உலாமூர்த்தியாக எழுந்தருளி வைக்கப்பெற்றுள்ளது. இந்தத் திருமேனியின் வடிவ ழகையும் வண்ணத்தையும் தனிக் கட்டுரையில் காண்க. சிவபெருமானின் மகேச்வரவடிவங்களில் ஒன்றாகச் சந்திரசேகர வடிவம் சிறப்புடன் போற்றப் படுகிறது.

வேதங்கள் சந்திரனைச் சோமன் என்று அழைத்து அவனை யாகங்களில் சிறப்பிக்கின்றன. அவனைக் குறித்துச் செய்யப்படும் யாகங்கள் சோமயாகம் என்றே பெயர் பெறுகின்றன. அவன் வானமண்டல மாகிய ஊர்த்துவ திக்கின் காவலன்.

சோமன் சிவலிங்கம் அமைத்துச் சிவவழிபாடு செய்த தலங்கள் சோமேசுவரங்கள் என்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள லிங்கங்கள் சோமேசுவரர். சோம நாதர் என்றும் பல பெயர்களிலும் அழைக்கப்படு கின்றன.

மேலும், சோமம் என்பது ஒருவகைக் கொடி யாகும். இதனை கொண்டு தயாரிக்கப்பெற்ற ரசமே சோமபானம் எனப்படும். இதனை உரிய மந்திரங் களைக் கூறி வேள்வியில் ஊற்றி செய்யப்படும் யாகமே சோம யாகம் எனப்படும். இமய மலையின் சரிவுகளில் இக்கொடிகள் உள்ளன என்பர். இந்தக் கொடிகளின் கீழ் எழுந்தருளியிருப்பதாலும் சோம யாகங்களில் வீற்றிருந்து அருள்பாலிப்பவர் என்ப தாலும் சிவபெருமானுக்குச் சோமேசர் என்பதும் பெயராயிற்று.

ஸக+உமா+ஈசர் என்ற மூன்றின் கூட்டமைப்பே சோமேசர் என்றானதென்பர். இதற்கு உமையோடு பிரியாது கூடியிருப்பவர் என்பது பொருள். அன்பர் களுக்குச் சிவபெருமான் அருள்பாலிக்க உமை யோடு எழுந்த கோலமே சோமேசுவரர் ஆகும்.

இவ்வாறு பலவகைகளில் சிவபெருமானுக்குச் சோமநாதர் என்று வழங்கினாலும் சோமநாதர் என்றதும் மக்களுக்குச் சந்திரன் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற கதையே நினைவுக்கு வருகிறது.

சந்திரன் வழிபட்ட நீடூர் அருட்சோமநாதர்

காமவேளை நுதற் கணிற் காய்ந்தரு
ளேம வேணிமகிழ்வனைத் தெந்தையார்
தாமம் வீசிய சந்திரன் பூசையால்
"சோமநாதர்" எனப் பெயர் சூடினார். –நீடூர்த் தலபுராணம்

பொருள் : காமவேளாகிய மன்மதனைத் தனது நெற்றிக் கண்ணால் எரித்த, பொன்போன்ற சடை களையுடைய எமது தந்தையாராகிய சிவபெருமான் குளிர்ச்சியை வீசும் சந்திரன் செய்த பூசையால் மகிழ்ந்து சோமநாதர் என்ற பெயரைச் சூடினார்.

★ திருவாரூர் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில் திருநீடூர் என்ற தலம் அமைந்துள்ளது. இங்கு சூரியனும், சந்திரனும் பூசித்துப் பேறு பெற்றிருக்கின்றார்கள். சூரியன் அம்பிகையை வழிபட்டுப் பேறுபெற்றான். அம்பிகை சூரியனுக்கு அபயமளித்ததால் ஆதித்திய பிரதாம்பிகை என்றழைக்கப்படுகிறாள். சந்திரன் சிவ பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றான். அவன் பெயரால் சிவபெருமான் சோமேஸ்வரர் என்றழைக்கப்படுகிறார். அந்த வரலாற்றை நீடூர்த் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரனுக்கு அருள் செய்த சந்திரசேகரர்

சந்திரனுக்கு அருள்பாலிக்கச் சிவபெருமான் கொண்டருளிய திருக்கோலம் சந்திரசேகரர் என்ற சிவமூர்த்தமாகும். இக்கோலம் கொண்டதற்குப் பலவேறு புராணங்களில் பலவகையான கதைகள் கூறப் பட்டுள்ளன. இவற்றில் தலையானது தட்சப் பிரசாபதிகளின் சாபத்தால் வருந்திய சந்திரனை இறைவன் காத்து அருள்பாலித்த வரலாறாகும். இதனைக் கந்தபுராணம், சிவபுராணம் முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம். பாற்கடலில் பிறந்த சந்திரன் சிவபூசை செய்து சிவன் அருள் பெற்று மண்டலாதிபனாய் ஆன கதையையும் பின்னர் தட்சனின் சாபத்தால் வருந்தி, சிவபூசை செய்து சிவனருள் பெற்ற வரலாற்றையும் காணலாம். சந்திரன் மண்டலாதிபனான கதை திருநீடூர் தலபுராணத்தில் உள்ளதாகும்.

அமுதம் வேண்டி தேவர்களும், அசுரர்களும் கூடி மந்திரமலையைத் தறியாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அதிலிருந்து அரிய பலபொருட்கள் வெளிப்பட்டன. அவைகளில் ஒன்றாகச் சந்திரன் அலைகடலின் மீது தோன்றினான்.

அவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவனுடைய தவத்தினால் மகிழ்ந்த சிவபெருமான் அவன்முன்னே தோன்றி "அன்பனே உனது விருப்பங்களைக் கூறுவாயாக" என்றார். சந்திரன் அவரைப் பலமுறை வணங்கி உமது "சாரூபத்தை எனக்களிப்பாய்" என்றான்.

அதைக்கேட்ட சிவபெருமான், "அன்பனே சோழ மண்டலத்தில் மகிழவனம் என்ற ஒரு தலமுள்ளது. அங்குச் சென்று செங்கழுநீரோடையில் மூழ்கி எம்மைத் தினமும் வழிபடுக. அங்கு உமக்கு வேண்டும் வரங்களைத் தந்தருள்வோம்" என்றார். அதன்படியே அவன் மகிழவனமாகிய நீடூருக்கு வந்து தனது பெயரால் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துவந்தான்.

அவனுடைய அன்பான பூசையால் மகிழ்ந்த சிவ பெருமான், உமாதேவியாரோடு அவன் முன்னே தோன்றினார். அவன் மனம் மிகமகிழ்ந்து அவரைப் பலவாறு போற்றித் துதித்தான்.

சிவபெருமான், "பெரிய பொன்னாலாகிய தேரினை அவனுக்குத் தந்து வெங்கதிரோன் பகலில் ஒளிவீசுவது போல, நீ இரவினில் உலகிற்குத் தண் ஒளி வழங்குவாய்" என்று வரம் தந்து அருள் பாலித்தார். அதன்படியே அவன் இரவில் சஞ்சரித்து உலகிற்கு ஒளி வழங்கிச் சிறப்புப் பெற்றான். இவ்வாறு சந்திரனுக்கு அருள் செய்த நாள் முதல் நீடூர்ப்பெருமான், அருட்சோமநாதர் என்று பெயர் பெற்றார் என்று புராணம் கூறுகிறது.

இதுவே சந்திரன் பிறந்து சிவபூசை செய்து சிவன ருளால் சந்திரமண்டலாதிபனாய் பொன்தேர் பெற்று உலகிற்கு ஒளியளிக்கும் நிலையாகும். இனி, சந்திரன், தட்சனிடம் சாபம் பெற்றதையும் சிவபூஜை செய்து அதனைப் போக்கிக் கொண்ட வரலாற்றி னையும் காணலாம்.

ஸ்ரீ சந்திரசேகரர் – இந்துசேகரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமதேவன் உலகப்படைப்பில் தனக்கு உதவி செய்யும் பொருட்டுப் பத்து புதல்வர்களைப் பெற்றான். அவர்களில் தலைசிறந்தவனாகத் தட்சன் விளங்கினான். அவன் பிரமனிடம் உபதேசம் பெற்றுச் சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் புரிந்தான்.

அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன்னே தோன்றி அவன் விரும்பியபடியே மூவுலக ஆட்சிப்பேறு, தனக்கு இணையாக அனைத்து உயிர்களும் அவனை வணங்கிப் போற்றும் நிலை, உமையவள் அவனுக்கு மகளாகப் பிறந்தருளல் அவளைத் தான் மீண்டும் மணந்து கொள்ளுதல் ஆகிய பெரும்பேறுகளை நல்கினார்.

அதன்படியே தட்சப்பிரஜாபதி மூவுலகங்களுக்கும் தலைவனானான். தன் தந்தை பிரமன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரையும் ஏவலராகக் கொண்டான்.

பின்னர், வேதவல்லி என்பவனை மணந்து ஓராயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்கள் ஆயிரவரும் நாரதமுனிவனின் அருளுரையைக் கேட்டு, சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து மோட்சமடைந்து விட்டனர். இதை அறிந்த தட்சன் மிகவும் வருந்தினான். மீண்டும் தன் மனைவியோடு கலந்து ஓராயிரம் மக்களைப் பெற்று அவர்களிடம் தவம் செய்து படைப்பாற்றலைப் பெற்று வாருங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

நாரதர் அவர்களுக்கும் வீட்டின்பத்தின் (மோட்சத்தின்) பெருமையை விளக்கி தவம் செய்து வீடுபேறு அடையும்படிச் செய்து விட்டார்.

இதனால் மனம் சோர்ந்த தட்சன் இனி எனக்கு ஆண்மக்கள் தேவையில்லை. பெண் குழந்தைகளைப் பெறுவேன் என்று உறுதி பூண்டான். அதன்படியே இருபத்து மூன்று புதல்வியரைப் பெற்றான். அவர்களை 1. தருமன், 2. பிருகு, 3. மரீசி, 4. புலத்தியன், 5. அங்கிரஸா, 6. புலகன், 7. வசிட்டன், 8. அக்கினி, 9. கிரது, 10. பிரதா என்பவர்களுக்கு மணமுடித்துத் தந்தான்.

இவர்களில் தருமன் என்ற முனிவன் சுபத்தி, புத்தி, சுரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, செட்டை, மேதா, கத்தி, சாந்தை, வபு என்ற பதின்மூவரை மணந்தான். ப்ருகு என்ற முனிவன் கியாதி என்பவளை மணந்து திருமகளைப் பெற்றான். அவளைத் திருமால் மணந்து கொண்டார். திருமகளுக்குப் பிறகு அவர்களுக்கு விதாதா, தாதா என்ற ஆண் பிள்ளைகள் பிறந்தனர்.

இப்படியே மரிசீ என்பான் சம்பூதியை மணந்து நான்கு பெண்களைப் பெற்றான்... புலத்தியனை நாரி. சன்னதி மணந்து எண்ணில்லாத பிள்ளைகளைப் பெற்றாள். அங்கிரா—மிருதியையும், புலகன், ப்ருதியையும்: வசிட்டன் ஊற்றையையும், அத்திரி, அனுசுயாவையும், அக்னி, சுவாகா தேவியையும், கிரது, கமை என்பவளையும் பிரதா, சுவேதையையும் மணந்து சுகமாக வாழ்ந்து அனேகம் பிள்ளையரைப் பெற்றனர். இறுதியாகச் சொன்ன பிரதா—சுவேதை தம்பதியருக்கு மேனை, பூமி என்ற இரண்டு பெண்கள் பிறந்தனர். மேனையை இமயமலை அரசனான இமவான் மணந்தான். பூமிதேவி மந்திரகிரி மலை அரசரான மந்திரனை மணந்தாள்.

தன் மகள்களோடும் தவத்திற்சிறந்த மருமகன்களோடும், அவர்கள் மூலம் பிறந்த பேரர்களோடும். கொள்ளுப் பேரர்களோடும் தட்சன் அனேக காலங்கள் சுகமாக வாழ்ந்துவந்தான்.

பின்பு அசுவினி முதலான இருபத்தேழு பெண்களைப் பெற்றெடுத்தான். அவர்களைக் குளிர்ச்சி பொருந்திய சந்திர தேவனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

தட்சன் அவனிடம் "மருமகனே, நீ இந்தப் பெண்கள் எல்லோரிடத்திலும் ஒரே தன்மையான காதலுடன் இருத்தல் வேண்டும். சிலரிடம் அன்பு கூடியும் சிலரிடம் வெறுப்பு கொண்டும் நடக்காதே" என்று சொல்லி அனுப்பினான்.

சந்திரன் தனது பொன்மயமான தேரில் மனைவியர்களை ஏற்றிக் கொண்டு தன்னுலகம் சென்றான். பின்னர் தினமும் அவர்களில் ஒருத்தியோடு தங்கி இன்பம் கண்டு மகிழ்ந்தான்... நாட்கள் செல்லச்செல்ல கார்த்திகை—ரோகிணி என்ற இருவரிடம் மட்டும் அதிக அன்பு கொண்டு மற்றவர்களைப் புறக்கணித்து விட்டான்.

கோபம் கொண்ட மற்ற பெண்கள் அனைவரும்கூடித் தன் தந்தையிடம் சென்று சந்திரனின் செயலை முறையிட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தட்சன், சந்திரனை அழைத்து அவனுக்கு பலவாறு அறிவுரைகளைக் கூறி அனைவரிடமும் சமமான இன்பமுடன் இருக்கும்படி கூறினான்.

சந்திரன் அவற்றை ஏற்கவில்லை. கார்த்திகை, ரோகிணியிடம் மட்டுமே தொடர்ந்து அன்பு செலுத்தியதுடன், மற்ற பெண்களைத் தட்சனின் வீட்டிற்கே திரும்பவும் அனுப்பிவிட்டான்.



இதனால் தட்சனுக்குக் கோபம் உண்டாயிற்று சந்திரனை அழைத்து, "உன்னிடம் அமுதமயமான அழகுக் கலைகள் இருப்பதால் தானே இப்படி ஆணவத்துடன் விளங்குகின்றாய். உனக்கு அழகளிக்கும் அந்த, அமுத கலைகள் இப்பொழுதே அழிந்தொழிவதாக" என்று சாபமிட்டான். அத்துடன் முன் வினையால் க்ஷய ரோகமும் சந்திரனைப் பற்றிக் கொண்டது.

இதனால் சந்திரனுடைய கலைகள் தினம் ஒன்றாக மறைந்தன. இப்படிப் பதினைந்து நாட்களில் பதினைந்து கலைகள் அழிந்து விட்டன. அதனால் அவன் வருந்தி வெட்கமுற்று இந்திரனைச் சரணடைந்தான்.

இந்திரனே, "எனக்குள்ள கலைகள் பதினைந்தும் தட்சனுடைய சாபத்தால் ஒழிந்தன. இப்பொழுதுள்ள ஒரு கலையும் அழியுமாயின் நான் உருக் குலைந்துபோவேன். எனது மேலான பண்புகளும், பெருமையும், அழிந்து எனக்குப் பழியே சேரும். ஆதலால் இந்த இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்றுக" என்று வேண்டினான்.

இந்திரன், "நண்பனே, முன்பு கயிலாயத்தில் விநாயகப் பெருமானின் பெருவயிற்றைக் கண்டு நகைத்தாய். அப்பொழுது அவர் சினந்து உன்னை யாரும் காணாது ஒழியட்டும். நீ அழகற்றுத் திரிவாய்" என்றார். அதன்படியே நீ மறைந்து வாழ்ந்தாய் இப்பொழுது தட்சனின் சாபமும் சேர்ந்து கொண்டது இதனால் உனக்கு மீண்டும் மீண்டும் துன்பமே சேருகிறது என்றான்".

"நீ பிரமனைச் சரணடைந்து அவருடைய மகனும். உனது மாமனுமான தட்சனிடம் வேண்டி உமது சாபத்தை விலக்குமாறு கூறுக" என்றான். அதன்படியே சந்திரன், பிரமனைச் சரணடைந்து வணங்கி, தட்சனிடம் கூறித் தமது சாபத்தை நிவர்த்திக்குமாறு வேண்டினான்.

அதற்குப் பிரமன், "சந்திரனே, தட்சன் இப்பொழுது யார் எதைச் சொன்னாலும் கேட்கும் நிலையில் இல்லை. அவன் அகந்தையாளன், அறிவற்றவன், இரக்கமில்லாதவன், தெளிவும், திறனும் இல்லாதவன் அவனிடம் பேசிப் பயனில்லை. எனவே நீ சிவ பெருமானைச் சரணடைவாய். அது ஒன்றே இப்பொழுது செய்யத்தக்கது. தாமதியாது உடனே கயிலைக்கு விரைந்து செல்வாய்" என்றார்.

அதன்படி, சந்திரன் விரைவாகக் கயிலை மலையை அடைந்து வாயிலில் உள்ள நந்தியைத் தொழுது வணங்கினான். நந்திதேவர் சந்திரனைப் பூமண்டலத்திலுள்ள பிரபாசப்பட்டினத்திற்குச் சென்றுச் சிவபூசை செய்யுமாறு கூறினார். அதன்படியே அவன் பிரபாசபட்டினத்தினை அடைந்து. கடற்கரையில் மணலால் லிங்கமமைத்து மிருத்துஞ்சய மந்திரத்தை ஓயாது ஜெபித்தான். அவனுடைய பக்திக்கு மகிழ்ந்த சிவபெருமான் அவன் பூசித்த லிங்கத்தில் தோன்றி அவனுக்குக் காட்சியளித்தார். அவன் அவருடைய காலடியில் விழுந்து வணங்கினான். நடந்தவற்றைக் கூறிக் தம்மைக் காக்குமாறு பலமுறை வேண்டிவாழ்த்தி வணங்கிப் போற்றினான்.

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் அவனுக்கு அபயமளித்தார். அவனுடைய ஒற்றைக் கலையைத் தமது சடாமகுடத்தில் சூட்டிக்கொண்டார். பிறகு "சந்திரனே," இந்த ஒற்றைக்கலை நமது முடியின் மேலும் இருக்கும். உன்னிடமும் இருக்கும் நமதருளால் இனி, நாள்தோறும் உம்மிடம் கலைகள் ஒவ்வொன்றாக வளரும் என்றாலும் முழுமதியாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் மீண்டும் ஒவ்வொன்றாகப் படிப்படியாக மறையும். இனி வளர்வதும், தேய்வதும் உனக்கு இயல்பாகிவிடும். இதுவும் உலக நன்மைக்கே ஆகும்" என்று அருள்பாலித்தார். பெருமான் சந்திரனுக்கு உண்டான தட்சனின் சாபத்தை நீக்கியதை அறிந்த தேவர்களும், பிரமன், திருமால் முதலியோரும் மகிழ்ந்தனர். இந்த வரலாற்றை கந்தபுராணம் தட்சகாண்டத்தில் விரிவாகக் காணலாம்.

சந்திரன், தட்சனின் சாபத்தை நீக்க வேண்டி பூமியில் அமைத்து வழிபட்ட சிவலிங்கங்கள் சோமேசர், சந்திரசேகரர் என்ற பலபெயர்களில் விளங்கி வருகின்றன. இவற்றைப் பலவேறு தலபுராணங்களால் அறியலாம்.

பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களில் ஒன்றான

சோமநாதம்



சோமநாதர் – சோமநாத்

தட்சனின் சாபத்தால் வருந்திய சந்திரன் நந்தியின் உபதேசப்படி பூவுலகம் வந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள பிரபாசபட்டினம் என்ற இடத்தில் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தான். அந்த இடமே பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களில் முதலாவதான சோமநாதபுரம். இந்நாளில் குஜராத் மாநிலத்தில், சௌராட்டிர கடற்கரையில் சோமநாத் என்ற பெயரில் உள்ளது. புராணத்தில் இது பிரபாசப்பட்டினம் என்று குறிக்கப்பட்டுள்ளது புராணங்கள் இக்கோயில் ஆதியில் பொன்னாலும் அடுத்து வெள்ளியாலும் இறுதியில் கல்லாலும் கட்டப்பட்டிருந்ததென்று கூறுகின்றன.

இத்தலத்திற்குச்செல்ல குஜராத் மாநிலத்தின் தலைநகரான அகமதாபாத்திலிருந்து நிறைய பஸ் வசதிகள் உள்ளன.

ஒருகாலத்தில் சோமநாத் மிகப் பெருஞ்செல்வ பூமியாகத்திகழ்ந்தது. இதன் விமானங்கள் தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டிருந்தன. கதவுகள் வெள்ளியால் ஆனவை. மூலலிங்கம் மரகதக் கல்லால் அணி செய்யப்பட்டிருந்தது. ஏராளமான வைர, வைடூர்ய, ஆபரணங்கள் நிறைந்திருந்தன.

கஜினிமுகமது கி.பி. 1025ல் இதன்மீது படையெடுத்தான். இதன் பலத்த காவலால் பெரும் பகுதியைக் கொள்ளையிட முடியவில்லை. தொடர்ந்து பதினேழுமுறை கொள்ளையிட்டு அளவற்ற செல்வங்களை வாரிச்சென்றான். இதனால் இக்கோயில் முழுவதும் நலிந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுடைய துணையுடன் கே.எம். முன்ஷி அவர்கள் அன்பர்களைக்கூட்டி கோயிலைப் புதியதாக நிர்மாணித்தார்கள். பழைய கோயிலின் சிற்பங்கள் இங்குள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு உள்ளன.

இவ்வூருக்குக் கிழக்கே மூன்று ஆறுகள் கூடும் சங்கமத்துறை உள்ளது. இதற்கு அருகில் சூரஜ்மந்திர் என்ற சூரியனின் கோயில் அமைந்து உள்ளது. சூரியனின் பெயரான சௌரன் என்பதன் மூலம் இம்மண்டலம் சௌராஷ்டிரம் என்று அழைக்கப்படுகிறது.

இங்கு சோமநாதர் ஆலயம் பழையபடி சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. ஏராளமான மக்கள் ஜோதிர்லிங்க யாத்திரையில் கலந்து கொண்டு இப்பெருமானைத் தரிசிக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நட்சத்திர லிங்கங்கள்

சந்திரனின் மனைவியரும் தட்சனின் புதல்விய ருமான அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய பெண்கள் தட்சனின் சாபத்தால் வருந்திய தங்கள் கணவனான சந்திரதேவன் குணம்பெற வேண்டிப் பலதலங்களில் சிவலிங்கம் வைத்து சிவபூசை செய்தனர். அவர்கள் இருபத்தியேழு பேரும் சிவலிங்கங்களை அமைத்து வழிபட்ட தலங்களில் ஒன்று திருவொற்றியூர். இங்குள்ள தியாகராஜசுவாமி ஆலயத்தில் தெற்குப் பிராகாரத்தில் கிழக்கு மேற்காக அமைந்த நீண்ட மண்டபத்தில் 27 நட்சத்திரங்களின் பெயரால் அமைந்த இருபத்தேழு லிங்கங்கள் உள்ளன இவற்றை நட்சத்திர லிங்கங்கள் என்பர். இவை அசுவினிலிங்கம், பரணிலிங்கம் என்று தொடங்கி ரேவதி லிங்கம் வரை நட்சத்திரப் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. இந்த அமைப்பை வேறெங்கும் காணமுடிய வில்லை. இந்த லிங்கங்கள் ஒவ்வொன்றும் வடிவாலும் வனப்பாலும் அளவாலும் பலவகையாக உள்ளன.

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத் திலும் நட்சத்திரலிங்கங்கள் உள்ளன.

சந்திரனின் பல்வேறு பெயர்களால் அமைந்த சிவத்தலங்கள்

தமிழிலும் வடமொழியிலும் உள்ள இலக்கியங்களில் சந்திரனுக்குப் பலவேறு பெயர்கள் அமைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை நிலவு, அம்புலி, திங்கள், மதி, இந்து, சோமன், பிறை என்பனவாகும். இந்தப் பெயர்களின் அடிப்படையில் சிவபெருமானுக்கு அம்புலிமௌலியான், திங்களீசர் திங்கட் சென்னியன், நிலவுசென்னியன், மதிசேர் மௌலியான், இந்துவாழ்சடையான், இந்துசேகரன், சோமேஸ்வரன், இளம்பிறைச் சென்னியன் போன்ற பெயர்கள் வழங்குகின்றன. இப்பெயர்களையொட்டி அமைந்த திருத்தலங்களையும் அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானின் பெருமைகளையும் காணலாம்.

திங்களூர்

சந்திரனின் பெயர்களில் ஒன்றான திங்கள் என்ற பெயரால் அமைந்த ஊர்கள் திங்களூர் என்ற ழைக்கப்படுகின்றன. இப்பெயரில் அமைந்த ஊர்களில் இரண்டு குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் முதலாவது தலம் தஞ்சை மாவட்டத்தில் திருஐயாற்றுக்கு அருகில் உள்ளதாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அப்பூதி அடிகள், திருநாவுக்கரசு நாயனார் பெயரால் தண்ணீர்ப்பந்தல் வைத்துத் திருத்தொண்டு செய்த திருத்தலம் இதுவே (இதன் விரிவைத் திருநாகேசுவரர் மலரில் காண்க) இது சந்திரன் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுக் கயிலைக் காட்சியைக் கண்ட இடமாகும். அதனால் இவ்வூரில் இறைவர் கயிலாயநாதர் என்றழைக்கப் படுகிறார்.

இரண்டாவதான திங்களூர், ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளதாகும். காமதேனு கொங்கு நாட்டில் அமைத்துப் பூசித்த சிவலிங்கங்கள் முப்பத்திரண்டில் இதுவும் ஒன்றாகும் இறைவன் திங்களீசர், சோமேசர்.

மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ள இந்த ஆலயத்து இறைவன் இறைவியின் பெயர்கள் முறையே சோமநாதீசுவரர். சோமநாயகி. மூன்றாம் பிறையாக வானில் தோன்றும் சந்திரனுக்கு அருள் செய்யும் பொருட்டு இத்தலத்தில் இறைவன் மேற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார் என்பர்.

இந்தளூர்

சந்திரனின் பெயர்களில் தலையானது "இந்து' ஆகும். இந்து என்பதற்கு எல்லையற்ற சுகம் என்பது பொருள். அமிர்தத்தைத் தன்கைகளில் ஏந்தி, மோகசாத்திரங்களை அருளி, சுகத்திற்கு வழிசெய்பனாக விளங்குவதால் சந்திரன் "இந்து" என்று அழைக்கப்படுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்துவாகிய சந்திரன், சிவலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறுபெற்ற இடங்கள் இந்தளூர் என்றழைக்கப்படுகின்றன. இப்பெயரில் பல ஊர்கள் இருக்கின்றன என்றாலும் சிறப்பான தலமாக விளங்குவது செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள இந்தளூராகும்.

சிறப்புடன் ஆதிபராசக்தி கொலு வீற்றிருக்கும் மேல்மருவத்தூருக்குத் தெற்கிலுள்ள அச்சிறுபாக்கத்திலிருந்து கிழக்கே செல்லும் சாலையில் 3 கி.மீ. சென்று அங்கிருந்து வலப்புறம் தெற்கு நோக்கிச் செல்லும் சாலையில் சென்றால் இவ்வூரை அடையலாம்.

சந்திரன் வழிபட்டு சுகங்களை அடைந்ததால் இவ்வூர் இந்தளூர் என்றழைக்கப்படுகிறது. சந்திரன் தட்சனின் புதல்விகள் அசுவினி முதலான நட்சத்திரப் பெண்களை மணக்கச் சிவனருள் பெற்ற இடமும் இதுவே. எனவே இறைவன் மணம்புரிநாதர் என்றும் கல்யாணபுரீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார். அகத்தியர் இறைவனின் மணக்கோலத்தைப் பல இடங்களில் கண்டுகளித்ததுபோல் சந்திரன் இங்கு சிவன் உமை திருமணத்தைக் கண்டுகளித்துப்பேறு பெற்ற இடம் என்பதால் இவ்வூர் கல்யாணபுரி என்றும் இறைவர் கல்யாணபுரிநாதர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

ஒரே பிராகாரம் கொண்ட இந்த ஆலயத்தின் வாயில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இதன் வழியாக உட்சென்று வலம் வந்தால் சந்திரன் வழிபட்ட சங்கஷ்டஹர விநாயகர், கல்யாண சுப்பிரமணியர், கிராமதேவதை செல்லியம்மன் ஆகியோர் எழுந்தருளியுள்ள துணைச்சந்நிதிகளை கண்டு வணங்கலாம். முகமண்டபம் கடந்து மகாமண்டபத்தை அடைகிறோம். இதில் சந்திரசேகரர். விநாயகர் முதலிய உலாத்திரு மேனிகள் எழுந்தருளிவைக்கப் பெற்றுள்ளன.

இதன் மேற்கில் அமைந்த உள் மண்டபத்தைக் கடந்து கிழக்கு நோக்கி அமைந்துள்ள கருவறையில் மணம்புரீசுவரசுவாமி, பெரியலிங்கவடிவில் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள சந்நிதியில் அம்பிகை கயலுவந்த கண்ணி (கயிலாந்த கண்ணி) எனும் பெயரில் எழுந்தருளியுள்ளாள். வெளிமண்டபத்தில் நவக்கிரகங்கள் அமைந்துள்ளனர்.

பஞ்சகோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோரும் கோமுகிக்கருகில் சண்டீசரும் எழுந்தருளியுள்ளார்கள். கருவறை, அம்பிகை சந்நிதி, விநாயகர் சந்நிதிகளை அழகிய விமானங்கள் அணி செய்கின்றன.

இக்கோயில் அமைந்துள்ள இந்தளூருக்குப் பேருந்து வசதிகள் அதிகம் இல்லாமையாலும், பெருஞ்சாலையிலிருந்து உள்ளே தள்ளியிருப்பதாலும் நிறைய அன்பர்கள் சென்று வழிபட முடியவில்லை.

பிறையூர்

சந்திரனின் பதினாறு கலைகளில் மூன்றாவதாக விளங்கும் கலையே மூன்றாம்பிறை என்று அழைக்கப்படுகிறது. இதுவே பெருமானின் திருமுடியில் விளங்குவதாகும்.

இதன் பெயரால் பிறையூர் என்ற பெயரில் பல ஊர்கள் அமைந்துள்ளன. மேற்சொன்ன இந்தளூருக்கு அருகிலேயே பிறையூர் என்ற பெயரிலும் ஓர் ஊர் இருக்கக் காண்கிறோம். இங்கு முன்நாளில் பெரிய சிவாலயம் இருந்ததாகக் கூறுவர்.

மேலும், பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள வில்லியனூர் புராணங்களில் வில்வவனம் என்று சிறப்பிக்கப்படுவதாகும். இங்குள்ள திருக்காமீசுவரப் பெருமானைச் சந்திரன் வழிபட்டுப் பேறுபெற்றான் என்று கூறுவர். சந்திரன் இங்கு வழிபாடு செய்ய வந்தபோது தங்கியிருந்த ஊர் அருகில் உள்ளது. அவ்வூருக்குப் பிறையூர் என்பது பெயர். இங்கு சந்திரன் தனது ஆன்ம லிங்கத்தை வைத்து வழிபட்டான் என்பர்.

மதியனூர்

"மதி" என்பது சந்திரனுக்குரிய பெயர்களில் ஒன்றாகும். இப்பெயரால் மதியனூர் இளமதியனூர் என்ற பெயர்களில் ஊர்கள் உள்ளன. தென்னாற்காடு மாவட்டத்தில் மதியனூர் என்ற பெயரில் சில ஊர்கள் அமைந்துள்ளன. உளுந்தூர் பேட்டையை அடுத்துள்ள மதியனூரில் சந்திரன் பூசித்துப் பழைய சிவாலயம் உள்ளது.

தேவாரத்துள் திங்களூர், பிறையனூர் என்ற பெயரில் வைப்புத்தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இப்பெயரில் பல ஊர்கள் இருப்பதால் தேவாரம் குறிப்பிடும் தலம் எதுவென்று தெரியவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரசேகரத் தலங்கள்

சிவபெருமாள் பல திருத்தலங்களில் பல கோலங்களில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். உமாமகேசுவரராகவும், சோமாஸ்கந்தராகவும், நடராஜமூர்த்தியாகவும் பல தலங்களில் விளங்குவதைக் காண்கிறோம். இதுபோன்று பெருமான் சந்திரசேகரராக எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் சிலதலங்கள் சிறப்புடன் விளங்கி சந்திரசேகரத் தலங்கள் என்று போற்றப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்.

திருக்கழிப்பாலை சந்திரசேகரர்

அடியவன் நெடியது உன்பால்
அலமரும் நிலை கண்டே நாங்
கடிதினின் மலைவளர்ந்த கன்னியே
நின்னோடு அன்று
படியில் இந்திரகீலத்திற் பண்டு
தோன்றிய லிங்கத்தூடே
படர்மிகு கபிலன் காணும்படி
வெளிப்பட்டாம் அன்றே

–திருக்கழிப்பாலை தலபுராணம்

(இதன் பொருள்: அம்பிகையே, முன்பு சிறந்த கபிலமுனிவன் செய்த தவத்தைக் கண்டு மகிழ்ந்து மலையில் வளர்ந்த கன்னியாகிய நின்னோடு இந்திரகீலம் என்று பெயர்பெற்ற திருக்கழிப் பாலையில் லிங்கத்தின் இடையே தோன்றி அவனுக்கு அருள்பாலித்த தெய்வப் பதி இதுவே).

சிதம்பரத்திற்குக் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் சிவபுரி என்ற திருத்தலம் உள்ளது. இது பாடல்பெற்ற சிவப்பதியாகும். இங்குள்ள சிவபுரிநாதர் கோயில் சந்நிதித் தெருவுக்கு இணையாகத் தெற்கில் அமைந்துள்ள தெருவில் (சுமார் 50 மீட்டர் தொலைவில்) ஒரு ஆலயம் அமைந்துள்ளது. இதனை இந்நாளில் வைரவன்கோயில் என்று அழைக்கின்றனர். இதுவே திருக்கழிப்பாலை என்று திருமுறைகளில் அழைக்கப்படுவதாகும்.

முன்னாளில் இத்தலம் இங்கிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள மேலைக்கழிப்பாலை என்ற ஊரில் அமைந்திருந்தது. ஒருசமயம் இறைவன் ஒரு அன்பரின் கனவில் தோன்றி அங்கு பெரிய அளவில் இயற்கையில் சீற்றத்தால் கொள்ளிட நதியில் வெள்ளப்பெருக்கு உண்டாகப்போகிறது. ஆதலால் கோயிலில் உள்ள மூர்த்திகளைச் சிவபுரிக்கு எடுத்துச்சென்று புதிய ஆலயம் அமைக்கும்படி கூறினாராம். அதன்படி அங்குள்ள ஆலயத்திலிருந்த மூர்த்திகள் இங்கு கொண்டு வரப்பெற்றன. மறுநாள் பெரிய புயலும் மழையும் வந்து ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஒடி கோயில் முற்றிலுமாக அழிந்து விட்டது. வெள்ளம் வடிந்தபிறகு அங்கிருந்த கற்களையும், தூண்களையும் இங்கு கொண்டு வந்து இணைத்துப் புதியதாக இக்கோயிலை அமைத்தனர். இது சோழர்காலக் கட்டிடக் கலையின் சிறப்பினை உணர்த்தி நிற்கிறது. ஆலயத்தின் முன்புறம் பெரிய கல்லாலான நந்தி சற்று வடக்கு நோக்கிய முகத்துடன் அமர்ந்துள்ளதைக் காணலாம்.

திருக்கழிப்பாலை மூலவர்
ஆய்வுக்கு வரையப்பட்டது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனையடுத்து அமைந்துள்ள ராஜகோபுரத்தின் இரண்டு குடவரைப் பகுதிகளிலும் (எதிர் எதிராக இரண்டு) அதிகார நந்திதேவர் சுயம்பிரபை தேவி யுடன் எழுந்தருளியுள்ளனர். இவர்களை வணங்கி உட்சென்று வலம்வரும்போது கோட்டங் களில் உள்ள விநாயகர், தென்முகக் கடவுள், மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை, கோமுகிக்கு அருகிலுள்ள சண்டே சுவரர், பிராகாரமண்டபத்தில் கண்ணப்பர், கபிலமுனி ஆகியோரைக் கண்டு வணங்குகின்றோம். வட கிழக்கு முனையில் நவக்கிரகங்களையும், பெரிய அளவில் அமைந்துள்ள பைரவரையும் காண்கிறோம். இந்தபைரவர் மிகவும் வரப்பிரசாதியாக விளங்கு வதால் இவர் பெயராலேயே இக்கோயில் "வைரவன் கோயில்" என்று அழைக்கப்படுகிறது.

முன்மண்டபத்தை அடுத்து மகாமண்டபத்தில் நடராஜர், பிரதோஷமூர்த்தி முதலான உலாத்திரு மேனிகள் அமைந்த சந்நிதியையும் தெற்கு நோக்கிய வாறு வேதநாயகி எனும் பெயரில் உமாதேவியார் எழுந்தருளியுள்ள சந்நிதியையும் காண்கிறோம்.

கருவறையில் கபிலமுனி என்ற சித்தரால் அமைக்கப்பட்ட லிங்கம் அமைந்துள்ளது. இந்த லிங்கத்தின் பின்புறம் கல்லினால் அமைக்கப்பட்ட உமை உடனான சந்திரசேகர மூர்த்தியைக் காண்கிறோம். சுமார் ஐந்தடி உயரம் கொண்ட இந்த மூர்த்தி மிகுந்த கலையழகுடன் அமைந்துள்ளார்.

இப்பெருமானைப், பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் "மணவாள நம்பி" என்று குறித்துள்ளார்.

இப்பெருமான் நான்கு கரங்களுடன் நின்ற நிலை யில் காட்சியளிக்கிறார். மேற்கரங்களில் மானும் மழுவும் திகழ்கின்றன. வலது முன்கரம் அபய முத்திரை தாங்கியும் இடது கரம் தொடைமீது வைத்த வாறும் உள்ளன. அருகிலுள்ளதேவி வலது கரத்தில் மலரைத்தாங்கி இடது கரத்தினைத் தொங்கவிட்ட வாறு காட்சியளிக்கின்றாள்.

இப்படி சந்திரசேகர வடிவம் மிகுந்த வனப்புடன் மூலத்தானத்தில் திகழ்வது வேறெங்கும் காண முடியாததாகும்.

இவர்களுக்கு முன்புறம் அமைந்துள்ள லிங்கம் அமுதலிங்கம் எனப்படுகிறது. இது பலமூலிகை களைக் கொண்டு கபிலமுனியால் அமைக்கப் பெற்றதாகும். இந்த லிங்கத்திலிருந்து சந்திரசேகரர் உமாதேவியுடன் தோன்றி அம்முனிக்கு அருள் பாலித்தார் என்று தலபுராணம் கூறுகின்றது. இதன் உச்சி உடைத்து பள்ளமாக உள்ளது. இந்த உடைப் பினை உற்று நோக்க அதில் படிப்படியாக அமைந்து உள்ள பகுதிகள் இது சித்தலிங்கம் என்ற உண்மை யைப் புலப்படுத்துகிறது.

இங்கு பிராகாரத்தின் வடக்கில் ஒரு கிணறு உள்ளது. இது தெய்வ அருளால் தோற்றுவிக்கப்பட்ட தென்பர். இதன் தண்ணீர், பால் போன்று வெண்மையாக உள்ளது. இதனைப் பாற்கிணறு என அழைக்கின்றனர். இதில் தொடர்ந்து நீராடினால் மனநோயும், சஞ்சலங்களும் தீருமென்கின்றனர்.

இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி தும்பைப் பூக்களால் சந்திரசேகரை அர்ச்சித்து வழிபட்டால் திருமணத் தடைகள் நீங்கி இன்பமான திருமண வாழ்வு பெற லாம் . பலருக்கு இத்தலத்தைப் பற்றித் தெரியாததால் இப்படி வழிபடும் நிலையை அதிகம் காணமுடிய வில்லை.

இங்குள்ள ஒரு கல்வெட்டு பெருமானுக்குத் தும்பை மலர் கொண்டுவந்து தர அளிக்கப்பட்ட நிபந்தத்தைப் பற்றிக் கூறுகிறது.

தீய சந்திர தசையால் வருந்துவோர், நீண்ட காலமாகத் திருமணம் தடைபட்டு இல்லறவாழ்வு அமையாதவர்கள் இங்குவந்து சந்திரசேகரப் பெருமானை வழிபட்டு அமுத லிங்கத்திற்கு அபிஷேகம் செய்த பாலை பருகினால் மேற்சொன்ன தொல்லைகள் யாவும் நீங்கும்.

போதுமான விளம்பரம் இல்லாததால் கோயிலைப் பற்றிய செய்திகள் பலருக்குத் தெரியாமல் உள்ளது.

சூரிய – சந்திரபிறை : சிவபெருமான் தலையணியாக சந்திரனை அணிந்துள்ளான். அவனிடமிருந்து தோன்றிய நாட்டியக் கலையை விரும்பிக் கற்ற மகளிரும் அவனைப்போலவே சந்திரபிறை சூரியபிறை ஆகியவற்றைச் சிரத்தினில் சூடினர். பின்னாளில் மங்கலச் சடங்குகளில் பெண்கள் நெற்றிச் சுட்டியுடன் சூரிய, சந்திர பிறைகளை அணியத் தொடங்கினர். இவை மங்கலச் சின்னங்களாகும். தருமசாசனங்களின் முகப்பிலும், ஆலவட்டங்களிலும் இவற்றை அமைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நித்தம் மணவாளன் எனநின்ற நம்பி"

திருவீழிமிழலைச் சந்திரசேகரர்



மூலத்தானம் – திருவீழிமிழலை – திருவாரூர் மாவட்டம்

மயிலாடுதுறையில் இருந்து பேரளம் பூந்தோட்டம் செல்லும் சாலையில் அமைந்துள்ள தலம் திருவீழி மிழலை ஒரு பஞ்சகாலத்தில் திருஞானசம்பந்த ருக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும் இறைவன் தினமும் பொற்காசு நல்க அதைக் கொண்டு அவர் கள் அடியவர்களுக்குச் சோறிட்ட திருத்தலம்.

இங்கு கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்குப் பின்புறம் (சுமார் எட்டடி உயரம் கொண்ட) சந்திரசேகரர் சுதைக் திருமேனியாக எழுந்தருளியுள்ளார். அவரைவிடச் சற்று உயரம் குறைந்த தேவி இடப்புறம் நின்றவாறு காட்சியளிக்கின்றார். இருவரும் இரண்டு கைகளே கொண்டுள்ளனர். சிவபெருமான் அப்ய, வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளார். தேவி வலதுகரத்தில் மலரேந்தி இடது கரத்தைக் தொங்கவிட்டுள்ளாள். இருவரும் திருமணக் கோலத்தில் நிற்பதாக ஐதீகம். இதனை நினைவு கூறும் வகையில் உள்மண்டபத்தில் (திருமணத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடப்படும்) அரசாணிக்கால் என்ற தூண் உள்ளது. இது கவசமிடப்பட்டு நுண்மையான வேலைப்பாடு களுடன் திகழ்கிறது.

இவருக்கு உற்சவராக வீழியழகர் எனப்படும் மணக்கோலநாதர் காத்யாயினிதேவியுடன் எழுந்தரு ளியுள்ளார்.

திருமணக் கோலத்துடன் இரண்டு கைகள் மட்டுமே கொண்டவராக இவ்வளவு பெரிய வடிவில் இறைவன் எழுந்தருளியிருப்பது வேறெங்கும் காண முடியாதாகும். இங்குள்ள சந்திரசேகரரை அப்பரடிகள் "நித்தம் மணவாளன் என நிற்கின்றான் காண்" என்று தேவாரத்தில் போற்றுகின்றார்.

சென்னை அகஸ்தியர்கோயில் சந்திரசேகரர்

சென்னை தி.நகர் பாண்டிபசாரையொட்டி அகஸ்தியர் கோயில் என்ற ஆலயம் சிறப்புடன் அமைக்கப்பட் டுள்ளது. அகத்தியர் கூறியுள்ள யோகநெறியில் வெற்றிபெற்ற சாதகனுக்குச் சிவபெருமான் சிவசக்தி வடிவில் காட்சி கொடுக்கிறார். இந்த யோகக்கலை சந்திரகலா ஞானம் எனப்படும். இதனை நினைவு கூறும் வகை யில் இக்கோயிலின் கருவறையில் சிவலிங்கமூர்த்திக்குப் பின்புறம் பெரிய அளவிலான சந்திரசேகர மூர்த்தியின் வடிவம் அமைக்கப்பட்டு வழிபடப்படுகிறது.

மேலைச்சேரி-சந்திரசேகரர்

இதுவரை நாம் கண்டு மகிழ்ந்தது சிவாலயங்களில் மூலமூர்த்திக்குப் பின்புறம் அமைந்துள்ள சந்திர சேகரரின் வடிவாகும். கிராமீயக் கோயில்களில் இத்தகைய சந்திரசேகரமூர்த்தியைக் காணமுடிவ தில்லை. ஆனாலும் அபூர்வமாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த மேலைச்சேரி எனுமிடத்தில் கிராமீய தெய்வமான பச்சையம்மன் கோயிலில் மூலத் தானத்தில் சந்திரசேகரின் பெரிய வடிவினைக் காண லாம். இதனைப் பற்றிய சுருக்கமான செய்திகள்....

தென்னிந்திய கிராமீய தெய்வழிபாடுகளில் தலைசிறந்த இடம் பெற்றது பச்சையம்மன் வழிபாடா கும். பச்சையம்மனைத் தவக்கோலத்திலுள்ள பார்வதி என்று கூறுவர். அவளைத் திருமணம் செய்துகொள்ள வந்த சிவபெருமானே இந்த ஆலயங்களில் மன்னா தீசுவரர் என்ற பெயரில் எழுந்தருளியிருக்கிறார். மன்னாதீசுவரர், ஆலயத்தின் முற்றத்தில் தனிச்சந்தி யில் வடக்கு நோக்கியவாறும். பச்சையம்மன் கருவறை யில் கிழக்கு நோக்கியவாறும் அமைந்திருப்பதே வழக்கமாகும்.

பொதுவாகப் பச்சையம்மன் ஆலயக்கருவறைகளில் பச்சையம்மனும் மன்னாதீசுவரரும் இணைந்து எழுந்தருளியிருப்பதில்லை. அபூர்வமாக செஞ்சியை அடுத்த மேலைச்சேரியில் பச்சையம்மன் கோயில் மூலத்தானத்தில் கருங்கல் திருமேனியாகச் சந்திர சேகரர் வடிவத்தைக் காண்கிறோம். இது மன்னா தீசுவரரின் திருக்கல்யாண திருக்கோலம் என்பர்.

இங்குள்ள ஆலயம் தனிச்சிறப்புமிக்கதாகும். இதில் ஒன்றன் பின் ஒன்றாக (ஒன்றுக்குள் ஒன்றாக) மூன்று கருவறைகள் அமைந்துள்ளன. இதில் முதற்கருவ றையுள் பச்சையம்மன் வீற்றிருக்கிறாள். அவளை வணங்கி அந்த சந்நிதியின் உள்ளே அமைந்த வாயில் வழியாக உட்சென்று மன்னாதீசுரை வணங்கலாம். அவரை வணங்கி அவருக்குப் பின்புறம் உள்ள வாயில் வழியாக மூன்றாவது கருவறையை அடையலாம். இங்கு பெரியவடிவில் சந்திரசேகரர் நின்றவாறு காட்சியளிக்கின்றார். அவருக்கு அருகில் தேவி நின்றவாறு உள்ளார். இந்த மூர்த்தத்தை மீனாட்சி சுந்தரேசுவரர் என்று அழைக்கின்றனர். இத்தகைய வடிவத்தை வேறெந்த பச்சையம்மன் கோயில்களிலும் காண முடிவதில்லை. கிராமீய தெய்வக் கோயில்களில் மூலத்தானத்தில் சந்திரசேகரமூர்த்தி இடம் பெற்றிருப் பது இங்கு மட்டுமே என்பதால் இக்கோயில் சமய வரலாற்றிலும், ஆலய அமைப்பிலும் தனிச்சிறப்பிடம் பெறுகிறது.

சிவாலயங்களில் அஸ்திரதேவர் என்றபெயரில் சூலம் ஒரு பீடத்தில் நிலைப்படுத்தியிருப்பதைக் காணலாம் இதன் நடுவில் தனியாகவோ, உமாதேவியுடனோ சந்திரசேகரரை அமைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்புகலூர் சந்திரசேகரர்

சிதம்பரம் என்றதும் நடராஜரும், திருவாரூர் என்றதும் சோமாஸ்கந்த மூர்த்தியான தியாகராஜரும், திருமணஞ்சேரி என்றதும் மணக்கோலநாதரும் நினைவுக்கு வருவது போலவே திருப்புகலூர் என்றதும் அன்பர்களுக்கு நினைவுக்கு வருபவர் சந்திரசேகர மூர்த்திஆவார்.

திருப்புகலூரிலுள்ள அக்னீசுவரசுவாமி ஆலயத்தில் தனிச்சிறப்புடன் சந்திரசேகரர் எழுந்தருளியுள்ளார். இவருடைய சன்னதி, கருவறைக்குத் தென்புறம் கொலுமண்டபம் கருவறை, உள்மண்டபம், மாக மண்டபம் ஆகிய அமைப்புடன் அமைந்துள்ளது. இந்தச் சந்நிதியின் கருவறை வெற்றிடமாக விடப்பட்டு அதற்கு முன்னுள்ள உள்மண்டபத்தில் அழகிய சிம்மாசனத்தில் சந்திரசேகரர் உமாதேவியோடு எழுந்தருளியுள்ளார்.

இவர் மேற்கரங்களில் மான், மழு ஏந்தியவராய் முன் வலது கரத்தில் அபய (சிம்மகர்ண) முத்திரை தாங்கி, இடது கரத்தை ஊருமுத்திரையில் வைத்துள்ளார். அருகிலுள்ள தேவி வலதுகரத்தில் மலரேந்தி இடது கரத்தைத் தொங்கவிட்டவாறு காட்சியளிக்கின்றாள். இவருக்கும் சேர்த்து அகன்ற திருவாசி அமைந்துள்ளது. இவர் அக்னிக்குக் காட்சியளித்து அருள்பாலித்தவர் என்று புராணங்கள் கூறுகின்றன. இவருக்கு நேர் எதிரில் அக்னி பகவான் பக்தராக வணங்கிக் கொண்டிருக்கும் நிலையில் எழுந்தருளியுள்ளார்.

இவருக்கு வருடத்திற்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. வைகாசி மாதம் பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. திருவாரூரில் தியாகேசருக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புகள் யாவும் இவருக்கும் நடைபெறுகின்றன. அதனைத் தனிக் கட்டுரையில் காண்க.

உலாத்திருமேனியாகச் சந்திரசேகரமூர்த்தி தனிப்பெருஞ்சிறப்புடன் அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் தலம் இது ஒன்றேயாகும்.

திருவாரூர் தியாகேசரும் திருப்புகலூர் சந்திரசேகரரும்

திருவாரூரில் சோமாஸ்கந்தரான தியாகேசப்பெருமானுக்கு முதன்மையை அளித்து சந்திரசேகர மூர்த்தியைத் துணை உற்சவராக வைத்துள்ளனர். அதற்கு நேர்மாறாகத் திருப்புகலூரில் சந்திரசேகரரை முதன்மை மூர்த்தியாக வைத்து சோமாஸ்கந்தரைத் துணை உற்சவராக வைத்துள்ளனர் இந்த இரண்டு தலங்களிலும் செய்யப்படும் சிறப்புகளில் பல ஒற்றுமைகளைக் காண்கிறோம்.

★ இருவரும் கருவறையில் இல்லாமல் உள்மண்டபத்திலேயே எழுந்தருளியுள்ளனர்.

★ இருவருக்கும் தென்றல் வரும்வாயில் அமைக்கப்பட்டுள்ளது.

★ இருவரும் விழாவின் முடிவில் நடமாடி பக்தர்களுக்குக் காட்சி அருள்கின்றனர்.

★ இருவரும் தேரில் ஏறி உலாவருகின்றனர் மற்றபடி வாகனங்களில் வலம்வரும் வழக்கமில்லை.

★ இருவருக்கும் பாகற்காயும் தூதுவளையும் உரியதாகும் ஆரூரன் பாகற்காய் மண்டபப் பிரவேசம் என்ற விழா கொண்டாடுகின்றார். புகலூரார் பாகற்கொடியறுத்தல் எனும் விழா கொண்டாடுகிறார்.

★ இரண்டு இடத்திலும் முதன்மை விநாயகர் தூண்களிலேயே எழுந்தருளியுள்ளார்கள்.

★ இருவருக்கும் ஆண்டில் ஆறு அபிஷேகங்களும் புண்ணியகால அபிஷேகங்களும் நடைபெறுகின்றன.

திருவாரூரில் மாணிக்கநாச்சியார் என்ற பெண் சிறந்த சிவபக்தையாக விளங்கி ஆரூர்ப்பெருமானின் அருட்காட்சி பெற்றாள். அவளுடைய பெயரால்மாணிக்கநாச்சியார் அர்ச்சனை நடைபெறுகின்றது. அவள்வாழ்ந்த மனையில் ஆலயம் அமைந்துள்ளது. இதுபோன்றே திருப்புகலூரின் வடக்கே மாணிக்கநாச்சியார் திட்டு என்ற இடம் உள்ளது. இங்கும் மாணிக்க நாச்சியார் என்ற பெண்வாழ்ந்து சந்திரசேகரர் அருள் பெற்றுள்ளாள். திருவாரூரில் தேரில் சுவாமி அமர்ந்ததும் மாணிக்கநாச்சியார் பேரில் அர்ச்சனை செய்வது போலவே, திருப்புகலூரில் சந்திரசேகரர் தேருக்கு எழுந்தருளும்போதும் மாணிக்கநாச்சியார் அர்ச்சனை நடைபெற்று வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிற்பநூல் விளக்கும் சந்திரசேகரின் திருவடிவங்கள்

சந்திரசேகரின் திருமேனியை அமைத்து வழிபட வேண்டிய முறைகள் சிற்ப நூல்களில் கூறப்பட்டுள்ளன. இந்நூல்கள் சிவபெருமானின் ஜடாமகுடத்தில் பெயருக்குஏற்ப பிறைவடிவான சந்திரனை அமைக்க வேண்டும் என்று கூறுகின்றன.

இந்நூல்களில் மூன்று வகையான சந்திரசேகரரின் வடிவங்கள் குறிக்கப்படுகின்றன. இவை முறையே கேவலசந்திரசேகர், உமாசந்திரசேகரர், உமா ஆலிங்கனசந்திரசேகரர் என்று பெயர் பெறுகின்றன. இவை ஒவ்வொன்றின் சிறப்பையும் அவை எழுந்தருளியுள்ள தலங்களையும் கண்டுமகிழலாம்.

கேவல சந்திரசேகரர்

கேவல என்பதற்குத் தனித்து, தனித்தன்மை பெற்று நிற்றல் என்பது பொருள். சிவபெருமான் உமையோடு யின்றித் தனித்தநிலையில் நிற்கும் வடிவமே கேவல சந்திரசேகர மூர்த்தமாகும். இதில் சிவபெருமான் நான்கு கரங்களிலும் மான், மழு, அபய, ஊரு முத்திரைகளைத் தாங்கியவாறு காட்சியளிக்கின் றார். தென்னகத்தில் இவ்வாறு உமையின்றி அமைந்த சந்திரசேகரரின் தனித்த வடிவங்களைக் காணமுடிய வில்லை. கேரள, கர்நாடக மாநிலங்களிலுள்ள சிவா லயங்களில் இத்தகைய மூர்த்திகளைக் காணலாம். இந்த மூர்த்தியை வைத்து ஸ்ரீவேலி எனப்படும் ஸ்ரீபலியை நடத்துகின்றனர். பல ஆலயங் களில் வெள்ளியாலும் தங்கத்தாலும் அமைந்த இத்தகைய திருவடிவங்களைக் காணலாம். பழையாறை பட்டீ ச்சரத்தில் கேவலசந்திர சேகரின் சிற்பம் உள்ளது.

கர்நாடக மாநிலம் – தர்மஸ்தலா

மூலவர் மஞ்சுநாதசுவாமி. இருபுறம் அமைந்துள்ளவை கேவல சந்திரசேகர வடிவங்களான ஸ்ரீபலி நித்தியோத்சவ நாயகர்கள்.

மாகேசுவரவடிவங்களில் ஒன்றான இலிங்கோற் பவமூர்த்தி திருவுருவத்தில் லிங்கத்தின் மையத்தில் கேவல சந்திரசேகரரின் வடிவம் அமைந்திருப்பதைக் காணலாம். இனி, சிறப்புமிக்க கேவல சந்திரசேகரர் வடிவங்களில் இரண்டைக் காணலாம்.

மாமல்லபுரத்து சந்திரசேகரர்

புறச்சமயங்களை ஒடுக்கி சைவம் புதிய எழுற்சியைப் பெற்றது பல்லவர் காலத்திலாகும். பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் சமணனாக இருந்து சைவனாக மாறிய பின்னர் பல சிவாலயங் களைக் கட்டுவித்தான். பல்லவமன்னர்கள் சிவபெரு மானுக்கென ஏராளமான குடைவரைக் கோயில் களையும் கட்டுமானக் கோயில்களையும் அமைத் தனர்.

இவற்றின் கருவறையில் சிவலிங்கம் அமைக்கப் பெற்று, சிவலிங்கத்தின் பின்னணியில் (கருவறைச் சுவரில்) சோமாஸ்கந்தர் வடிவம் அமைக்கப்பெற்றது. மாமல்லபுரம் கடற்கரைக்கோயில், மகிஷாசுரமர்த்தனி குகைக்கோயில், காஞ்சி கயிலாயநாதர் கோயில்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலான இடங்களில் காணலாம். இப்படிப் பல ஆலயங்களில் சோமாஸ்கந்தரை அமைத்த பல்லவ மன்னர்கள் ஒரே ஒரு இடத்தில் மட்டும் தாம் அமைத்த குடைவரைக் கோயிலில் கேவல சந்திரசேகர மூர்த்தியை அமைத்துள்ளனர். அந்த இடமே மாமல்லபுரத்திலுள்ள திருமூர்த்தி குகை யாகும்.

பிறகோயில்களில் அமைக்கப்பட்டுள்ளது போன்று இங்கு முன்மண்டபம் அமைக்கப்பட வில்லை. கருவறைகள் மட்டுமே அமைந்துள்ளன.

இங்கு தென்வடலாக மேற்கு நோக்கியவாறு மூன்று கருவறைகள் அடுத்தடுத்து ஒரு பெரிய பாறையில் வெட்டப்பட்டுள்ளன. இதில் வடபுறம் உள்ளது முருகனுக்கும் நடுவில் உள்ளது சிவ பெருமானுக்கும், தென்புறம் உள்ளது திருமாலுக் கும் உரியதாகும்.

மூன்று கருவறைகளையும் அடுத்து தென் புறம் மகரதோரணங்களால் அணி செய்யப்பெற்ற ஒரு மாடம் உள்ளது. அதில் எட்டு கரங்களுடன் கூடிய துர்க்காதேவி எழுந்தருளியுள்ளாள்.

இந்நால்வரும் அசுரர்களை வென்றடக்கி அருள்பாலித்தவர்களாவர். போர்க்கடவுளர் என்ற வரிசையில் சிறந்த இவர்களுக்கு இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருது கின்றனர்.

இங்கு மையக்கோயிலில் சிவலிங்கமும் அதன் பின்னணியில் கேவல சந்திரசேகரரின் வடிவையும் காணலாம். இவரை இருவர் வணங் கியவாறு உள்ளனர். மேலே பூதகணங்கள் பறப் பனபோல உள்ளனர். உமையின்றி சிவபெருமான் தனித்து நின்று அருள்பாலிக்கும் பல்லவர் குடைவரைக் கோயில் இது ஒன்றேயாகும். இக்கோயிலில் இப்போது வழிபாடு இல்லை.



கேவல சந்திரசேகரர் – திருமூர்த்தி குகைக்கோயில்
மாமல்லபுரம் செங்கை மாவட்டம்

ஆக்கூர் ஆயிரத்தொருவர்

மயிலாடுதுறை–திருக்கடவூர் சாலையில் உள்ளது ஆக்கூர் என்னும் தலமாகும். இந்த தலத்தில் ஆயிரத்தொருவர் எனும் பெயரில் சிவபெருமான் உலாத் திருமேனியாக எழுந்தருளியுள்ளார். இது கேவலசந்திரசேகர மூர்த்தி வடிவமாகும். மேற்கரங்களில் மான், மழு அமைய கீழ் வலது கரத்தில் அபய முத்திரை தாங்கி இடது கரத்தை ஓர் ஊன்றுகோல் மீது ஊன்றியுள்ளார். இந்த ஊன்று கோலின் பிடியில் இரண்டு கிளிகள் எதிரெதிர்ப்புறமாக அமைந்திருப்பது கண்டுகளிக்கத்தக்க கலைப்படைப்பாகும்.

இங்கு ஒரு சோழ அரசன் தினமும் ஆயிரம் அந்தணர் களுக்கு விருந்து இட்டான். அந்த விருந்தில் இறைவன் ஒரு வயோதிகனாக வடிவம் தாங்கி ஆயிரத்திலொருவனாக அமர்ந்து உண்டதால் ஆயிரத்து ஒருவர் என்ற அழைக்கப் படுகிறார். அன்று வயோதிகனாக விருந்திற்கு வந்ததை நினைவு கூறும் வகையில் இந்தத் திருவுருவம் அமைக்கப் பெற்றுள்ளதென்பர். ஆனாலும் பெருமானை வயோதிகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

★ அணைத்தெழுந்தபிரான் – ஆலிங்கன சந்திரசேகர்

கோலத்தில் அமைக்காமல் வாலிப வடிமாகவே அமைத்துள்ளனர். ஊன்றுகோலுடன் விளங்கும் இத் தகைய வடிவை வேறெந்த ஆலயத்திலும் காண முடியவில்லை.

உமா சந்திரசேகரர்

இந்தக் கோலத்தில் சிவபெருமான் உமாதேவியுடன் காட்சியளிக்கின்றார். அவருடைய மேற்கரங்களில் மானும், மழுவும் திகழ, கீழ்க்கரங்களில் அபய, வரத, முத்திரைகளைத் தாங்கியுள்ளார். திருவாரூர். திருப்புகலூர் முதலிய திருத்தலங்களில் அமைந்த சந்திரசேகரரின் கீழ்க்கரங்களில் வலதுகரத்தில் அபயமுத்திரையும் இடது கரத்தை தண்டத்தின்மீது ஊன்றும் பாவனையிலும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இவருடைய இடதுபக்கத்தில் உமாதேவியார் நின்றவாறு காட்சியளிக்கின்றாள். அவளுடைய வலதுகரம் நீலோற்பலமலர் ஏந்தியும் (அல்லது ஏந்தும் பாவனையிலும்) இடது கரம் தொங்கவிட்ட நிலையிலும் உள்ளன.

சிவபெருமானின் இத்தகைய கோலமே அனைத்து சிவாலயங்களிலும் உலாமூர்த்தியாக உள்ளன. திருக்கழிப்பாலை, திருவீழிமிழலை முதலிய தலங்களில் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் அமைந்துள்ள வடிவமும் இதுவேயாகும்.

பிரதோஷ நாளில் வலம் வருவதற்கு அமைந்த பிரதோஷநாயகரின் திருவடிவமும் அளவால் சிறிய சந்திரசேகர வடிவமே. திருப்பத்தூர், மதுரை முதலிய திருத்தலங்களில் வெள்ளியால் செய்யப்பெற்ற உமாசந்திரசேகர மூர்த்தியின் வடிவங்களைக் காண்கிறோம்.

உமா ஆலிங்கன சந்திரசேகரர்

சிவபெருமான் உமையை அன்புடன் தழுவி நின்று மகிழும் கோலமே ஆலிங்கன சந்திரசேகர வடிவமாகும். சிவபெருமான் மேலிரண்டுகரங்களில் மான், மழுவும் முன் வலது கரத்தில் அபயமுத்திரையும் தாங்கி இடது கரத்தால் அம்பிகையை அணைத்தவாறு உள்ள கோலமே ஆலிங்கன சந்திரசேகரர் என்று அழைக்கப்படுகிறது. இந்த வடசொல்லின் மூலத்தமிழ்ச் சொல் "அணைத் தெழுந்தபிரான்" என்பதாகும். திருவாவடுதுறையில் இந்த மூர்த்தி மிகவும் சிறப்புடன் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சென்னையை அடுத்த மண்ணிவாக்கம் எனும் திருத்தலத்தில் அளவால் சிறிய சந்திரசேகரரின் வடிவத்தைக் காண்கிறோம். இதில் அம்பிகை தனது வலது கரத்தால் பெருமானை அணைத்தவாறும், பெருமான் தமது இடது கரத்தால் அம்பிகையை அணைத்தவாறும் காட்சியளிக்கின்றனர். இந்த வடிவம் பரஸ்பர ஆலிங்கன மூர்த்தி என்று அழைக்கப்படுகிறது.

பாணிக்கிரஹண சந்திரசேகரர்

தனது இடபுறம் நிற்கும் அம்பிகை தனது வலது உள்ளங்கையை மேல்நோக்கிக் காட்ட சிவபெருமான் அதை தன் இடது கரத்தால் மூடி பற்றும் வகையில் அமைந்த (அற்புதமான கைபிடித்த) சந்திரசேகரர் கோலத்தை மயிலாடுதுறை மயூரநாதசுவாமி ஆலயத்தில் காண்கிறோம். பெருமான் வலது முன் வரதம் காட்ட மேற்கரங்களில் மான் மழு ஏந்தியுள்ளார். (இந்நாளில் இவரை அதிகாரநந்தி என்று குறித்துள்ளனர்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளி சந்திரசேகரர்

(இதுவரை கல்லினால் மூலமூர்த்தியாகவும், பஞ்ச லோகத்தில் செய்யப்பெற்ற உலாமூர்த்திகளாகவும் அமைந்த சந்திரசேகரரின் வடிவங்களைக் கண்டு மகிழ்ந்தோம். இனி, வெள்ளியால் அமைந்த சந்திர சேகரமூர்த்தியைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.)



வெள்ளி சந்திரசேகரர் – திரு ஆப்புடையார் கோயில்

சோமாஸ்கந்தர் நடராஜர் ஆகிய மூர்த்திகளை மாணிக்கத்தால் செய்து வணங்கினால் இம்மையில் அரசபோகவாழ்வும் மறுமையில் இந்திரபதவிக்கு இணையான பதவி பெறலாம் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. மாணிக்கத்திற்கு அடுத்தபடியாக பொன்னால் (மேற்குறித்த) மூர்த்திகளைச் செய்து வணங்குவதும் உண்டு. பாண்டியநாட்டுத் திருத்தலமான திருபூவணத்தில் பொன்னனையால் என்ற பெண் பொன்னால் சோமாஸ்கந்தமூர்த்தியை செய்து வழிபட விரும்பியதையும், சிவபெருமானே எல்லாம் வல்ல சித்தராக வந்து அத்தகைய மூர்த்தியை ரசவாதத்தின் மூலம் அவளுக்குச் செய்தளித்ததையும் திருவிளையாடற்புராணமும், திருபூவணநாதர் உலாவும் குறிப்பிடுகின்றன.

நடராஜரையும், சோமாஸ்கந்தரையும் பொன்னால் செய்து வழிபட்டதைப் போலவே சந்திரசேகரரின் வடிவத்தினை வெள்ளியினால் செய்து வழிபடும் வழக்கம் இருந்துவந்துள்ளது. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும், நெல்லை மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் திருவாப்புடையார் ஆலயத்திலும் வெள்ளியால் செய்யப்பட்ட சந்திரசேரரின் வடிவங்கள் உள்ளன.

ஜோதிட வல்லுனர்கள் வெள்ளியை சுக்கிரனுக்கு உரிய உலோகமாகக் கொள்வர். சிவநெறியாளர் வெள்ளியைச் சந்திரனோடு தொடர்புடைய உலோகமாகக் கொள்வர். எனவே சந்திரசேகரர் என்னும் பெயர் பூண்ட பெருமானின் திருவடிவை வெள்ளியால் செய்து வழிபடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

வெள்ளியால் அமைந்த சந்திரசேகர மூர்த்திக்குப் பாலால் அபிஷேகம் செய்து தும்பை மலர்களைச் சூட்டி வழிபட்டால் அரசபோகம் கிடைக்குமென்று நம்புகின்றனர். கேரள, கர்நாடக மாநிலங்களில் உள்ள சிவாலயங்களில் தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட சந்திரசேகரர் வடிவங்கள் வழிபாட்டில் உள்ளன.

★ தங்கத்தால் செய்த சந்திரசேகரப் பெருமாள் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ளார்.

★ இறையுருவங்களை வெள்ளியால் செய்து வழிபடுதலை அனைத்து சமயங்களிலும் காணலாம். வைணவ ஆலயங்களில் செல்வர் எனப்படும் நித்தியோற்சவர் வடிவம் வெள்ளியால் அமைந்துள்ளது.

காஞ்சி வரதராசர் ஆலயம். திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் ஆலயம் ஆகியவற்றில் வெள்ளியாலான திருமால்வடிவங்கள் சிறப்புடன் திகழ்கின்றன.

ஜைனர்கள் வெள்ளியால் சந்திரப்பிரபசுவாமியைச் செய்து வழிபடுவர். ஜைனப் பெருந்திருவிழாவின் ஒரு அங்கமாக இந்த வெள்ளிசுவாமி உற்சவம் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரசேகரரும் விழாக்களும்

கொடியேற்றிச் செய்யப்படும் பெருந் திருவிழாக்கள் அனைத்திலும் சோமாஸ் கந்த மூர்த்தியே முதன்மையான மூர்த்தி யாக இருந்து விழாகாண்கிறார். கொடி யேற்றம் இல்லாது செய்யப்படும் மாதப்பிர வேசம், அடியவர் விழாக்கள், விஜயதசமி, காணும் பொங்கல், மாசிக்கடலாடல், பங்குனி உத்திரம் ஆகியவற்றில் சந்திர சேகர மூர்த்தியே வலம் வந்து அன்பர் களுக்கு அருள்பாலிக்கிறார்.

எனவே, பெரிய சிவாலயங்களில் இணை உலா மூர்த்தியாகவும் கொடிமரம் இல்லாத சிவாலயங்களில் முதன்மை உலாமூர்த்தியாகவும் சந்திரசேகரமூர்த்தி எழுந்தருளியுள்ளார். பிரதோஷம், ஸ்ரீபலி முதலியவற்றில் ஆலயத்தை வலம்வரு வதும் சந்திரசேகரமூர்த்தியே ஆவார்.

திருவண்ணாமலை முதலிய சில ஆலயங்களில் பெருந் திருவிழாவில் காலை நேரத்தில் சந்திரசேகரரின் வீதியுலாவும் இரவில் சோமாஸ்கந்த மூர்த்தியும் வலம் வருகின்றனர் (கொடியேற்றுதல் தேரோட்டம் முதலியன பகலில் நடைபெறுவதால் அதில் சோமாஸ்கந்தரே வலம்வருவார். இவைதவிர மற்ற பகல்நேர உலாக்களில் சந்திரசேகரரே வலம் வருகிறார்) மேலும் தியாக ராஜ ஸ்தலங்களில் தியாகராஜர் மணித்தண்டில் மட்டுமே வலம் வருவதால் மற்றைய வாகனங்களில் வலம்வரும் விழாக்களை சந்திரசேகரரை வைத்தே நடத்துகின்றனர்.

திருவாரூர், திருநள்ளாறு முதலிய சப்தவிடங்கத் தலங் களிலும், கீழ்வேளூர், நாகூர் முதலிய உபய விடங்கத் தலங்களிலும் சந்திரசேகரருக்குச் சிறப்பு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

மேலும் சோமாஸ்கந்தமூர்த்தி மூலமூர்த்திக்கு இணையானவர். ஆதலால் அவரை வெளியூருக்கு எடுத்துச் சென்று நீண்டநாட்கள் வைத்துப் பூசனை செய்யக்கூடாது. காலையில் பூசையை முடித்துக் கொண்டு வலம் வரச் செய்து இரவு அர்த்தஜாம பூசைக்குள் கோயிலுக்குள் சேர்த்துவிட வேண்டும். ஆதலால் நீண்டதூரம் பயணம் செய்து மாசிமாத கடலாடச் செய்தல் முதலான வெளியூர் உலாச்செல்வதற்குச் சந்திரசேகர மூர்த்தியை எழுந்தருளச் செய்வதே வழக்கமாகும்.

சந்திரசேகர பட்டம்

பட்டம் கட்டிக் கொள்ளுதல் என்பதற்கு உரிமை பெறுதல் என்பது பொருள் (இந்த சொல்லுக்கு உரிய விரி வான விளக்கம் 11வது மலரான ஸ்ரீருத்திரர் என்னும் நூலில் "உருத்திரபட்டம்" எனும் தலைப்பில் அளிக்கப்பட்டு உள்ளது).

திருவாரூர் முதலிய விடங்கத் தலங்களில் அமைந் துள்ள முதன்மை மூர்த்தியான தியாகராஜர் இடபம், பூதம், யானை, குதிரை முதலிய வாகனங்களில் வலம் வரும் வழக்கமில்லை. அவர் மணித்தண்டிலும், ஆழித் தேரிலும் மட்டுமே வலம் வருகிறார். பெருந் திருவிழாவில் வாகனங்களில் இறைவனை வைத்து வலம் வரச் செய்வது தத்துவவிளக்கமாக அமைவதால் அது அவசியமாகும். எனவே தியாகராஜத்தலங்களில் தியாகராஜரின் வாகனங்களில் வலம் வரும் உரிமையைச் சந்திரசேகருக்கு அளித்து அவரை வாகனங்களில் எழுந்தருளிவைத்து உலாவரச்செய்கின்றனர். இப்படிச் சந்திரசேகரரை முதன்மைப்படுத்தி உரிமை அளிக்கும் நிகழ்ச்சியை "சந்திரசேகர பட்டம் கட்டுதல்" என்றழைக்கின்றனர். திருவா ரூரில் இதற்குப் "பட்டோற்சவம்" என்று பெயர். இத்தகைய பட்டோற்சவம் வேதாரண்யமான திருமறைக் காட்டிலும் சிறப்பாக நடைபெறுகிறது.

திருவாரூரில் தனிச்சந்நிதியில் சந்திரசேகரர் அழகிய விமானத்தில் எழுந்தருளியுள்ளார். இவருக்குத் "த்ருணேந்து சங்கரர்" என்பது பெயர்.

தியாகராஜதலங்களான சப்தவிடங்கத் தலங்களிலும் திருவான்மியூர், திருஒற்றியூர், திருக்கச்சூர் ஆகிய தலங் களிலும் சந்திரசேகரர் தனிச்சிறப்புடன் அமைத்திருக்கக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரபிறை வாகனம்

அனைத்துத் தென்னிந்திய ஆலயப்பெருந் திருவிழாவிலும் இரண்டாம் நாள் இரவு இறை உருவங் களைச் சந்திரபிறை வாகனத்தில் வைத்து உலாவரச் செய்வது வழக்கமாகும். இது மூன்றாம் பிறைச் சந்திரனைப் போலவோ அல்லது முழுவட்டமாகவோ அமைக்கப்பட்டு அதன் மையத்தில் அழகிய பீடத்தைக் கொண்டுள்ளது.

சந்திரன் மூலிகைகளின் தலைவன். பூமியிலுள்ள மூலிகைகள் அவனுடைய அமுதக்கிரணங்களால் வளர் கின்றன.

எனவே உலகில் மூலிகைகள் பெருகவும் நோய் நொடிகள் நீங்கவும் சந்திரமண்டல மத்தியில் இறைவனை வைத்து வழிபடும் வழக்கம் இருந்து வருகித்தின்றது.

சந்திரப்பிறையை வெள்ளியாலும், சூரியபிறையைத் தங்கமுலாம் பூசியும் அமைக்கின்றனர்.

பெருந்திருவிழா நடைபெறும் அனைத்து சிவாலயங் களிலும் சந்திரபிறை வாகனம் இருக்கிறது. சிவபெரு மானின் எட்டு வடிவங்களில் சந்திரனும் ஒருவனாவன். அவனுடைய இருதய மத்தியில் இருந்து அவனை இயக்குவித்து அதன் மூலம் உலகில் ஒஷதிகளைப் பெருகச் செய்பவன் சிவபெருமான். சந்திரனை இயக்குவோனாக இருக்கும் சிவபெருமானுக்கு மகாதேவன் என்பது பெயர். சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவின் இரண்டாம்நாள் இரவில் சந்திரபிறை வாகனத்தில் சோமாஸ்கந்தரை எழுந்தருளிவைத்து விழாகாண்கின் றனர்.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரை நடராஜர் கோலத்தில் அலங்கரித்து சந்திரபிறையில் அமர்த்தி உலா வரச் செய்கின்றனர்.



சந்திரபிறை வாகனத்தில் சந்திரசேகரர் உலாவருதல்

தும்பை சூடிய திங்கள் வேணியன்

சோமாஸ்கந்த மூர்த்தியைச் செவ்வந்தி மலர்களாலும், செங்கழுநீர்ப் பூக்களாலும் அலங்கரித்து, அர்ச்சித்துப் பூசனை புரிவர். திருவாரூர் தியாகராஜரான சோமாஸ்கந்தமூர்த்திக்கு செவ்வந்தித் தோடழகர், செங்கழுநீர் மாலையழகர் என்ற பெயர்கள் வழங்குவது இங்கே நினைத்தக்கதாகும்.

இதுபோன்றே சிவலிங்கங்களுக்குக் கொன்றையைச் சூட்டுவது மரபாகும்.

இந்த அடிப்படையில் சந்திரனால் வழிபடப்பட்டு அவனுக்கு அருள்செய்து அவன் பெயராலேயே விளங்கும் சந்திரசேகரமூர்த்திக்கு வெள்ளையான மலர்களைக் கொண்டு அர்ச்சிப்பது சிறந்த பலனைத்தரும் குறிப்பாக நந்தியாவர்த்தம், தும்பை ஆகிய மலர்களைக் கொண்டு அர்ச்சித்தல் அதிகமான பலன் தரும் என்பர்.

சந்திரசேகரத்தலமான திருக்கழிப்பாலையில் இறைவருக்கு தும்பைப்பூகொண்டு அர்ச்சித்ததை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. தினமும் ஒருநாழி தும்பைமலர் கொண்டு வந்து தருவதற்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தச் செய்தி அக்கல்வெட்டிலிலிருந்து தெரிகிறது. காஞ்சிபுரத்தில் சிவாலயத்திற்கு வேண்டிய பூக்களைப்பெற தும்பை வனம் அமைத்து போற்றப்பட்டதை அறிகிறோம். அப்பகுதி இப்போதும் தும்பைவனம் என்று அப்பெயரி லேயே உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாலயங்களில் சந்திரனின் சந்நிதி

சந்திரன் சிவபெருமானின் திருமுடியில் வீற்றிருக்கும் பெருமையைப் பெற்றிருந்தாலும், சிவாலயங்களில் சூரியனுக்குக் கொடுக்கப்படும் சிறப்பினை நோக்கச் சந்திரனுக்கு அளிக்கப்படும் சிறப்புகள் குறைவேயாகும். இதுபோலவே நித்திய சிவபூசையிலும் சூரியனைப் பூசிப்பதுபோல் சந்திரனைத் தனிச்சிறப்புடன் பூசிப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிவாலயங்களில் சூரியனை அஷ்ட பரிவாரங் களில் ஒருவனாகச் சேர்த்து அவனுக்கு தனிச்சந்நிதி அமைக்கப்படவேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் வலியுறுத்துகின்றன. அவனிடமிருந்தே காலைசந்தி பூசையைத் துவங்க வேண்டுமென்றும் கூறப்பட்டு உள்ளது. இதுபோன்று சந்திரனின் வழிபாட்டிற்குச் சிறப்பு அளிக்கப்படவில்லை என்றாலும் சந்திரகுல அரசர்களான பாண்டியர் அரசாண்ட பாண்டிய மண்ட லம் முழுவதும் அமைந்துள்ள சிவாலயங்களில் சந்திர னை அவனுடைய பிரியதேவிகளான கார்த்திகை, ரோகிணி, ஆகிய இருபெருந் தேவியருடன் எழுந்த ருளிவைத்திருக்கக் காணலாம். (சில நூல்களில் கார்த்திகை ரோகிணிக்குப் பதிலாக காந்தி, சோபை என்ற இரண்டு தேவியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் இந்தத் தேவியர்களைக் காணமுடியவில்லை)

சிவாலயங்களில் இவருக்கு உரிய இடம் வடகிழக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் அமைந்த பகுதியாகும். இதில் சந்திரன் மேற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். பௌர்ணமியன்று இவருக்குத் தனி வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

சந்திரன் நான்கு கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின்றார். மேற்கரங்களில் நீலோற்பல மலர்களை ஏந்தியுள்ளார். (சிலர் செவ்வல்லி, வெள் ளைஅல்லி மலர்களை ஏந்தியிருப்பதாகக் கூறுவர்). தலையின் பின்புறம் பிறை வடிவம் செதுக்கப் பட்டுள்ளது. முன்னிரு கரங்களில் அபய, வரதமுத் திரைகளை ஏந்தியுள்ளார். இருபுறமும் நிற்கும் தேவி யர் ஒருகரத்தில் மலர் ஏந்தி மறு கரத்தைத் தொங்க விட்டவாறும் காட்சியளிக்கின்றனர்.

சில சிலைகளில் இவருடைய தேரினைப் பத்து குதிரைகள் இழுப்பது போலவும் செய்யப்பட்டுள்ளது.

★ கேரள சிவாலயங்களில் பதினாறு சந்திரப்பிறைகளைச் சிவலிங்கத்தின் தலைப்பகுதியில் ஒன்றன்மேல் ஒன்றாக அமைப்பது வழக்கம். இப்படி அமைக்கும் சந்திரபிறைகளில் கீழே இருப்பது பெரியதாகவும் மேலே செல்லச்செல்ல படிப்படியாக அவை சிறியதாகிக் கொண்டே வரும்படியும் செய்யப்பட்டுள்ளன.

★ தியாகராஜராக விளங்கும் சிவபெருமானின் முன் உச்சியில் இரண்டு பிறை சந்திரனைப் போன்ற அமைப்புகள் இருக்கக் காணலாம். இதில் ஒன்று கங்கை மற்றது வெண்பிறையாகும்.

★ சிவபெருமானின் எட்டுவடிவங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எண்பொருளில் சந்திரனும் ஒருவர். சிவபெருமான் பிரகிருதிச் சந்திரனான நிலவின் ஆதாரசக்தியாக அதன் இருதயத்தில் இருந்து அதனை இயக்குகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திர கணை



சிவபெருமானுடைய முதன்மைபெற்ற ஆயுதம் திரிசூலம் என்றாலும் அவர் தாம் எடுக்கும் ஒவ்வொரு திருக் கோலத்திற்கேற்பப் பற்பல ஆயுதங்களை தாங்குகிறார். எடுத்துக்காட்டாக திரி புராந்தகர் கோலத்தில் வில்லம்பு ஏந்திய வராகவும், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் வடிவங்களில் மான், மழு ஏந்தியவராக வும் அருள்பாலிக்கின்றார்.

அலங்காரக் கலைஞர்கள் திரு விழாக்களில் செய்யும் சிறப்பு அலங் காரங்களில் சிவபெருமான், சந்திர கணை என்ற ஆயுதத்தை ஏந்தியவராக அலங்கரிக்கின்றனர். சந்திரகணை என்பது உச்சியில் பிறைச்சந்திரன் போன்ற அமைப்பைக் கொண்ட நீண்ட தண்டமாகும். இது அமுதம் நிறைந்த இறைவனின் அருளாற்றலைக் குறிப்பதாகும்.

சந்திரனின் ஒளி தண்மையையும், இன்பத்தையும் அளிப்பது போலவே இறைவனின் அருள் உயிர் களுக்கு இன்பத்தையும், அருளையும் தருகின்றது என்பதைக் குறிக்கவே அவர் சந்திரகணையை ஏந்தியவராகக் காட்சியளிக்கின்றார் என்பர்.

சந்திரகாந்தக்கல் கொண்ட விமானம்

கும்பகோணம் – திருக்கருகாவூர் சாலையில் உள்ள (திட்டை என்று அழைக்கப்படும்) தென்குடித் திட்டை தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். இத்தலத் தில் கருவறையின்மீது அமைந்துள்ள விமானத்தின் உச்சிக்கல் (கபாலக்கல் இதனை பிரமரந்திரக்கல் என்பர் உண்டு) சந்திரகாந்தக்கல்லால் அமைக்கப் பட்டுள்ளது.

இது காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சித் தண்ணி ராக்கிச் சொட்டுசொட்டாகச் சுவாமியின்மீது சொட்டும்படிச் செய்கிறது. கால்மணி நேரத்திற்கு ஒருமுறை ஒருசில சொட்டு நீர்த்துளிகள் சிவலிங்கத்தின்மீது விழுகின்றன. இது வேறெங்கும் காணமுடியாத அதிசயமாகும்.

சந்திரகாந்தக்கல் லிங்கம்

சந்திரகாந்தக்கல் என்ற ஒருவகை அபூர்வமான கல் மிகவும் குளிர்ச்சி மிக்கதாகும். வெய்யில் மிகுந்த உச்சிவேளைகளில் இது தனது குளிர்ச்சியைக் காத்துக்கொள்ள காற்றிலுள்ள ஈரப்பதத்தை ஈர்த்து தன்மீது நீர்த்திவலைகளாக வைத்துக்கொள்ளும் இயல் புடையது. (எவர்சில்வர் பாத்திரங்களில் ஐஸ் தண்ணீரை யோ ஐஸையோ வைத்திருந்தால் அப்பாத்திரத்தின் வெளிப்பரப்பில் தண்ணீர்த் திவலைகள் படர்வதைக் காணலாம். இத்தண்ணீர்த் திவலைகள் காற்றிலுள்ள ஈரப்பதம் குளிர்ந்து அப்பாத்திரத்தில் படிவதாகும். இதைப் போலவே சந்திரகாந்தக் கல்லிலும் தண்ணீர் படிகிறது)

இது பார்ப்பதற்குச் சந்திரகாந்தக்கல் வெய்யில் மிகுந்த நேரத்தில் அந்த வெப்பத்தைத் தாங்காது வியர்வை விடுவதைப் போன்றிருக்கும்.

இத்தகைய சந்திரகாந்தக் கல்லாலாகிய அரியலிங்க மொன்று கோவை, பேரூர் அரச அம்பலவாணர் ஆலயத்தில் இருந்ததென்று கூறுவர். இதனை இந் நாளில் இக்கோயிலில் காணமுடிய வில்லை.

கொங்குமண்டல சதகம் இந்த லிங்கத்தை.

நீலங்கொள்மேனித் திருமால்
அயனன்று நின்றிருந்து
காலம் பலகண்ட பேரூரில்
மேவுங் கனக மன்றில்
ஆலம் பருகி நடராய
ராட அரசவன
மாலிங்கமேனி வெயர் வூற்றுதல்
கொங்குமண்டலமே

என்று குறிக்கின்றது.

இதன்பொருள் : நீலநிறத்தினைக் கொண்ட திருமாலும், பிரமனும் நின்று பலகாலம் போற்றிய பேரூர் அரசம்பலமாகிய கனகசபையினில் விஷத்தைப்பருகிய நடராசன் ஆட அந்த ஆட்டத்தின் காரணமாக அவரது திருமேனியாகிய லிங்கத்தில் வியர்வை விடும் பெருமை கொண்டது கொங்கு மண்டலம்.

★ ஸ்படிகக் கற்களிலும் வெய்யில் நேரத்தில் குளிர்ந்த தன்மைகொண்ட கற்கள் உள்ளன. இவற் றிலும் சிவலிங்கங்களை அமைத்து வழிபடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீசந்திரமௌளீசுவர லிங்கங்கள்

பெரிய சிவாலயங்களிலுள்ள நடராசர், சோமாஸ்கந்தர் சந்நிதிகளிலும், சிறப்புமிக்க மடாலயங்களிலும் ஸ்படிக லிங்கங்கள் எழுந்தருளி வைக்கப்பட்டு தினமும் பூசிக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவற்றிற்குச் சுந்திரமௌலிச்சுவரர் என்பது பெயராகும். தில்லையிலும், ஸ்ரீசங்கரமடங்களிலும் அமைந்துள்ள ஸ்படிகலிங்கங்கள் சந்திரமௌலிச்சுவர லிங்கங்கள் அழைக்கப்படுகின்றன.

தில்லை அழகிய சிற்றம்பலமுடையான்

தில்லைச் சிற்றம்பலத்துள் நடராசர் திருமேனி சிறப்பான அலங்காரத்துடன் திகழ்கிறது. அவருக்கு ஆண்டிற்கு ஆறுமுறை மட்டுமே அபிஷேகம் நடைபெறுகின்றது. தினப்படி நடைபெறவேண்டிய ஆறுகால பூசை அபிஷேகங்களும், நடராசரின் பீடத்தில் பெட்டகத்துள் எழுந்தருளியிருக்கும் ஸ்படிக லிங்கத்திற்கே நடத்தப்படுகின்றன. இந்தச் சிவலிங்கமூர்த்திக்கு "அழகிய சிற்றம்பலமுடையார்" என்றும் சந்திரமௌலீசுவரர் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

தில்லையில் பெருமானின் திருக்கூத்து தரிசனம் கண்ட பதஞ்சலி முனிவரிடம் தில்லைவாழ் அந்தணர்கள் நித்திய பூசை அபிஷேக அலங்காரங்களை நடராசப் பெருமானுக்கு எவ்வாறு செய்வது என்று கேட்டனர். அப்போது அவர் நடராஜரைத் துதிக்கச் சிவபெருமான் தனது ஜடையில் ஒளிரும் சந்திரனின் அமுத கிரணங்களின் துளிகளைச் சேர்த்து லிங்கமாக அமைத்து அவர்களிடம் கொடுத்தார். அதை அவர் தில்லைவாழ் அந்தணர்களிடம் கொடுத்துப் பூசித்து வருமாறு கூறினார். அன்று முதல் அவர்கள் அந்த லிங்கத்திற்குச் சந்திரமௌலீசுவரர் என்று பெயரிட்டுப் பூசித்து வருகின்றனர். எத்தனையோ இடர்பாடுகள் வந்த போதும் சந்திரமௌலீசுவரர் பூசை மட்டும் ஆயிரமாயிரமாண்டுகளாக இடையறாது நிகழ்ந்து வருகின்றது.

ஆதிசங்கரர் எழுந்தருளிவைத்த சந்திரமௌளீசுவரர்கள்

ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதர் கயிலைமலைக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்து அவரிடமிருந்து ஐந்து சிவலிங்கங்களைப் பெற்று வந்தார். இவை ஐந்திற்கும் சந்திரமௌளீசுவரர் என்பது பொதுப்பெயராகும். மேலும் இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே அமைந்த சிறப்புப் பெயர்களும் உண்டு. பிரம்மாண்ட புராணத்திலுள்ள மார்க்கண்டேய சம்ஹிதை ஐந்து லிங்கங்களின் சிறப்புப்பெயர்களையும் அவை அமைக்கப்பட்ட திருத்தலங்களையும் கூறுகின்றது. இதன்படி பத்ரிகாச்சிரமத்தல் முத்திலிங்கமும், நேபாளத்திலுள்ள நீலகண்ட க்ஷேத்திரத்தில் வரலிங்கமும், சிதம்பரத்தில் மோட்சலிங்கமும், சிருங்ககிரியில் போகலிங்கமும் காஞ்சிபுரத்தில் யோகலிங்கமும் அவரால் அமைக்கப்பட்டன என்று நளனின் கதையை நைஷதம் என்ற நூலாகப் படைத்த மகாகவியான ஸ்ரீஹர்ஷர் குறிப்பிடுகிறார். இதில் காஞ்சியிலுள்ள லிங்கம் "யோகேசுவரர்" என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஸ்ரீசங்கர மடத்தில் எழுந்தருளியுள்ள சந்திரமௌளீசுவரரை ஸ்ரீகாஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகளும் சிருங்ககிரி சாரதாபீடத்தில் அமைந்துள்ள சந்திரமௌளீசுவரரை சிருங்ககிரி சங்காரச்சாரிய சுவாமிகளும் தினந்தோறும் சிறப்பாக அபிஷேகங்களும் பூசைகளும் செய்து வழிபடுகின்றனர்.

★ சந்திரமௌளீசுவர ஸ்தோத்திரம் : வடமொழியில் அமைந்துள்ள இந்த தோத்திர நூலில் ஐந்து பாடல்கள் உள்ளன. இவற்றின் முதலெழுத்துக்களைச் சேர்த்தால் ஸ்ரீசந்திரமௌளீசுவரர் என்ற சொல் வருகின்றது. இதில் சந்திரமௌளீசுவரர் யோகிகளின் மனத்தில் இருப்பவராகவும் சந்திரகலைகளைச் சூடி சந்திரனைப் போன்று வெண்மையாகப் பிரகாசிக்கும் மங்கலமுடையவராகவும் போற்றப்படுகிறார்.

★ சந்திரமௌளீச்சுவரி : சிவபெருமானுக்குச் சந்திரமௌளீசுவரர் என்ற பெயர் இருப்பதைப் போலவே அம்பிகைக்கும் சந்திரமௌளீச்சுவரி என்ற பெயர் வழங்குகின்றது. காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள காமாட்சியம்பிகை திருமுடியில் சந்திரனைத் தரித்துள்ளதைக் காணலாம். சந்திரமௌளியான சிவபெருமானுக்குத் ஐச்வர்யமாக அம்பிகை விளங்குவதால் அவளுக்குச் சந்திரமௌளீச்சுவரி என்பது பெயராயிற்று என்று மூககவி பாடுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முளைப்பாலிகை விடுதலும் சந்திர வழிபாடும்

சிவாலயங்களிலும் அன்பர்களின் ஆன்மார்த்த பூசைகளிலும் சந்திரன் தினமும் வழிபடப்படா விட்டாலும் சிறப்புத் தினங்களில் தனியே வழிபடப்படுகின்றான். கும்பாபிஷேகம், பெருந்திருவிழா முதலியவற்றின் ஓர் அங்கமாக அங்குரார்ப்பணம் எனப்படும் முளைப்பாலிகை விடும் சமயச்சடங்கு நடைபெறுகின்றது. இதில் சந்திரன் முதன்மையானவனாகப் போற்றப்படுகின்றான்.

அனைத்து சமயச் சடங்குகளிலும் முளைப் பாலிகை விடுதல் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. முளைப்பாலிகை விடாது செய்யும் செயல்கள் பயனற்றவை என்று பூசாபத்ததி நூல்கள் கூறுகின்றன. தேவர்கள் நமது பூசைக்கு வருவதையும் நாம் செய்யும் பூசைகளை ஏற்றுக்கொண்டு அருள் புரிவதையும் நமது ஊனக் கண்களால் அறிந்து கொள்ள முடியாது. இந்த முளைகள் நன்கு செழிப்புடன் வளர்ந்தால் தேவர்கள் நாம் செய்த பூசைகளை ஏற்றுக் கொண்டார்கள் என்றும், சரியாக முளைக்காமலும் அல்லது செழித்து வளராமலும் இருந்தால் பூசைகளில் தேவர்கள் கலந்து கொண்டாலும் அவர்கள் சரியாக திருப்தி அடையவில்லை என்றும். முளைக்காமல் கருகிப் போய்விட்டால் தேவர்கள் வருகை தரவில்லை. பூதராட்சச கணங்கள் நமது செயலுக்கு இடையூறு செய்து விட்டன என்றும் நம்பப்படுகின்றது.



இதற்கு உரிய பிராயச் சித்தங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும். நமது பூசையின் பயனைத் தெரிவிக்கும் ஒரு அமைப்பாக இருப்பதால் அங்குரார்ப்பணம் என்னும் முளைவிடுதல் நிகழ்ச்சி அனைத்துச் சமயச் சடங்குகளிலும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

முளைவிடும் நிகழ்ச்சி மூன்று அங்கங்களைக் கொண்டதாகும். முதலாவது மிருத்சங்கிரகணம் எனும் மண் சேகரித்துக் கொண்டு வருதலும் அதை சாணம் புற்றுமண் முதலியவற்றுடன் கலந்து பாலிகைக் கிண்ணங்களில் இடுதல் இரண்டாவது அந்தப் பாலிகையில் நிறைக்கப்பட்ட மண்ணில் முளைகளைப் பாலில் நனைத்து விடுதல் (அங்குரம் – தானியங்கள் – அர்ப்பணம் – விடுதல்)

மூன்றாவது நிகழ்ச்சி சந்திரனைக் குறித்த சோம ஒஷதி யாகங்களைச் செய்தலாகும்.

யாகசாலையின் வடமேற்கில் (அல்லது வட மேற்கிற்கும்–மேற்கிற்கும் நடுவில்) ஒரு மேடை அமைக்கப்படுகிறது. அதன் மீது நடுவில் சந்திரனைக் குறிக்கும் பூரணகும்பம் வைக்கப்படும். அதன் இரு புறமும் சந்திரனின் மனைவியரான ரோகிணி, கார்த்திகை ஆகியோரைக் குறிக்கும் இரண்டு கலசங்கள் வைக்கப்பட்டுகின்றன. இதனைச் சுற்றிலும் எட்டு, பன்னிரண்டு, பதினாறு, இருபத்தியொன்று என்ற எண்ணிக்கைகளில் பாலிகைக் கிண்ணங்கள் வைக்கப்படுகின்றன. இந்த (மண்ணால் உடுக்கைவடிவில் செய்யப்பட்டுள்ள) பாலிகைக் கிண்ணங்களில் சாணம் கலந்த மண்ணை நிரப்பி நவதானியங்களை பாலில் நனைத்து முளைகளாக இடுவர். இவை எட்டாக இருக்கும் போது எட்டுகிரகங்களும் (பன்னிரண்டாக இருக்கும்போது பன்னிரண்டு ஆதித்தியர்களும், பதினாறாக இருக்கும்போது திதிதேவியர்களான பதினாறு பேர்களும் இருபத்தைந்தாக இருக்கும் போது அசுவினி உள்ளிட்ட இருபத்தோரு நட்சத்திர தேவியர் களும் உரிய மந்திரங்களால் பூசிக்கப்படுகின்றனர்)

பிறகு (ஒஷதி) மூலிகைகளின் தலைவனும், அமிர்தமயமானவனும், மனஅமைதிக்குக் காரணமானவனுமான சந்திரனையும் அவனுடைய மனைவியரையும் பரிவாரத் தெய்வங்களையும் பூசிப்பர். இதனைத் தொடர்ந்து ஒஷதி ஹோமம் நடைபெறும். பிறகு பாலிகைகள் தர்பையால் மூடப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரன் இரவில் சஞ்சரிப்பவன் ஆதலால் இந்த அங்குரார்ப்பண நிகழ்ச்சியை முன்னிரவில் நடத்த வேண்டும். விழாவின் மூன்று ஐந்து அல்லது ஏழுநாட் களுக்கு முன்பாகவே அங்குரார்ப்பணம் நடத்தப் படுவதுண்டு. இங்கு வைக்கப்படும் சந்திர கலசத் திற்கு வெள்ளைத் துணியை அணிவித்து வெண் மலர்களால் பூசிக்கவேண்டும். விழாவின் இறுதியில் இந்த சந்திர கும்பத்தில் வைத்திருந்த நீரைப் பருகினால் வியாதிகள் தீரும், சஞ்சலமுடைய மனம் நிம்மதி பெறும் என்று நம்புகின்றனர். எனவே இதனைத் தீர்த்தப் பிரசாதமாகத் தருகின்றனர்.

பெருங்கோயில் சமயச் சடங்குகளியன்றி. திருமணம் முதலிய மங்கல விழாக்களிலும். மாரியம் மன் முதலான நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டிலும் முளைப்பாலிகை விடுதல் சிறப்பாக நடத்தப் படுகிறது.

சோம மண்டலத்தில் விளங்கும் அர்த்தநாரீசுவரர் தரிசனம்

சிவபெருமான் சூரிய மண்டலத்தின் மத்தியில் அர்த்தநாரீசுவரராகக் காட்சியளிப்பதைச் சிவமகா புராணம் கூறுகிறது. அதனை சிவமஞ்சரி 12வது மலரில் காணலாம். இது போன்றே சிவ பெருமான் உமையுடன்கூடி சோமமண்டலமாகிய சந்திர மண்டலத்தில் காட்சியளிப்பதையும் சிவமகாபுராணம் கூறுகிறது. ஆனால் இந்தச் சந்திரமண்டலம் வெளி உலகில் இல்லாமல் சாதகனின் உடலுக்குள்ளேயே இருப்பதாகும்.

ஒரு சமயம் துருவாச முனிவர் சிவபெருமானிடம், நீங்கள் முன்பு "சோமமண்டல மத்தியில் தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று கூறினீர்கள். அதனை இப்பொழுது எனக்கு விவரமாக விளக்கியருள வேண்டுகின்றேன்" என்றார்.

சிவபெருமான் அவரை நோக்கி, "அன்பரே, உடலில் பத்து விதமான வாயுக்கள் செயல்படுகின்றன. இவற்றின் இயக்கத்தால் தான் இந்த உடல் செயலாற்றுகின்றது. இந்த வாயுக்கள் 1. பிராணன், 2. அபானன், 3. வியானன், 4. நாகன், 5. கூர்மன், 6. கிருகரன், 7. தேவதத்தன், 8. தனஞ்ஜயன், 9. சமானன், 10. உதானன் என்பனவாகும்.

இதயத்தில் பிராணனும், கபாலத்தில் கந்த, ரசக், குமிச்சத்தில் சமானனும், நாபியில் உதானனும், உடல்முழுவதிலும் வியானனும், வாக்குத் துவாரத்தில் நாகனும், இமைத்தல் மயிர்க் கூச்செறிதலில் கூர்மனும், தும்மல் கோபம் வெம்மை ஆகியவற்றில் கிருகரனும், ஒட்டம் இளைப்பு, வியர்த்தல் முதலியவற்றில் தேவதத்தனும் செயலாற்று கின்றன. உயிர்வெளியேறி யதும் தனஞ்செயன் என்ற வாயுவைத் தவிர மற்ற ஒன்பது வாயுக்களும் வெளியேறிவிடும்.

தனஞ்செயன் என்ற வாயுமட்டும் உயிர் பிரிந்தாலும் உடலைவிட்டு நீங்காதிருந்து உடலை வீங்கவைத்து, தலையைக் கிழித்துக் கொண்டு வெளியேறும். இந்த பத்து வாயுக்களின் செயல்பாட்டின் விளைவினால் உடலுக்கு நோய், துன்பம், இன்பம், மகிழ்ச்சி முதலிய யாவும் உண்டாகின்றன. வாயுக்களின் பயணத்தால் ஏற்படும் துடிப்பே நாடியாகும்.

பத்து வாயுக்களும் உடலில் தனக்குரிய இடத்தில் மட்டுமல்லாது, உடலில் தேவைக்கு ஏற்ப பிற இடங்களுக்கும் சென்று அவற்றையும் இயக்குகின்றன. அந்த வாயுக்களை ஒடுக்கி அங்கங்கேயே நிலைபெறச் செய்தால் உடலில் சந்திரமண்டலம் தோன்றும்.

நாடிகளின் முடிச்சாகிய இருதயமத்தியில் அனேக ஒளிநிரம்பிய நிற மாலைகளோடு, கோடி சூரியப்பிரகாச மாகவும், அதிக அழகாகவும் விளங்கும். சந்திர மண்ட லத்தின் மத்தியில் எலும்பு, நரம்பு, மாமிசம், முதலியன இல்லாமல் சூரியதேஜசுக்குச் சமமான ஒளியுடன் ஈசுவரன் விளங்குகின்றார். அவரே பவன், பரமார்த்தா, சுத்தபடிகம் போன்றுப் பிரகாசமாக விளங்குகின்றார். விளையாட்டாகப் பிரபஞ்ச சிருஷ்டியைச் செய்கின்றார். இவரைக் காண்பது எளிதல்ல இவர் நமது இதயத்துள்ளே நிறைவாக இருந்தாலும் இவரை எளிதாகத்தரிசனம் செய்துவிடமுடியாது. கடுமையான யோக சாதனைகளாலேயே அறியமுடியும்.

மேற்சொன்ன பிராணன் முதலான பத்துவாயுக்கள் நமது உடலில் இருந்து செயல்படும் ஆதாரத்தானமாக இருப்பது 72,000 நாடிகளாகும். நாடிகளின் தன்மை யையும் அதில் செயல்படும் வாயுக்களின் தன்மை யையும் உணர்ந்து அவற்றை முறைப்படுத்தி இருதய மத்தியில் சோம மண்டலத்தையும் அதன் மத்தியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானையும் தியானிக்க வேண்டும். குற்றமற்ற ஸ்படிகமயமாகவும் நிரந்தரமாகவும், நிரஞ்சனமாகவும், குணமிலியாகவும், குறைவற்ற வராகவும் விளங்கும் சிவபெருமானைத் தியானிக்கவேண்டும்.

கடுமையான யோக தவங்களைச் செய்யமுடியாதவர்கள் அன்பின் மிகுதியினால் ஆர்வம் மேலிட்டு தீர்த்தத்தின் வடிவான சிவனே! நீயேயாவும் அளிப்பவன், நீயே பெறுபவன், புகழுள்ளவன், அறிவின் அறிவாக அதனுள் ஒளிர்பவன்! நீயே படைப்பவன்! நீயே காப்பவன்! நீயே சங்கரிப்பவன்! நீயே தர்மன்! அக்கினி! ஆதித்தன் முதலியனயாவும் நீயே, நீயே என்னுள்ளத்தில் சந்திரமண்டலத்தில் வீற்றிருந்து காட்சியளிப்பாய் என்று மனதாரப் பிரார்த்திக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இருதய மத்தியில் சோமமண்டலம் விளங்கும். தோன்றும் அந்த மண்டலத்தின் நடுவில் அர்த்தநாரீசப் பெருமான் எப்போதும் நடம்புரிவார். அவருடைய வலது காலில் உள்ள வீரக்கழலும் இடதுபாதத்திலுள்ள அம்பிகையின் சிலம்பும் ஆர்க்கும் என்றார்.

திருவீழிமிழலைத் திருத்தலத்தில் மூலத்தானத்தில் பெருமான் சந்திரசேகரராக எழுந்தருளியுள்ளார் என்றாலும் அவருடைய மானசீகமான சந்திரமண்டல தாண்டவ தரிசனத்தை உணர்த்தும் வகையில்

செறியார் கழலும் சிலம்பும் ஆர்க்க
நெறியார் குழலா ளொடு நின்றான்
வெறியார் பொழில் வீழின் மிழலையுள்
அறிவார் அவலம் அறியாரே.

என்று தேவாரத்துள் அருளிச்செய்யப் பெற்றுள்ளது. (திருவாரூர் மூலாதாரத் தலமாக விளங்குவதுபோன்று திருவீழிமிழலை இருதய சோமமண்டலத் தலமாகச் சித்தர்களால் போற்றப்படுகிறது).

தென்னகத்துச் சோமநாதங்கள்

ஆற்றூர் சோமாநாதீசுவரர்

திருச்செந்தூருக்கும் – தூத்துக்குடிக்கும் இடையில் ஆத்தூர் என்ற கிராமம் உள்ளது. இங்கு இறைவன் சோமநாத சுவாமி என்றும் அம்பிகை சோமசுந்தரி என்றும் அழைக்கப்படுகிறார்கள். தலமரம் ஆலமரமாகும். தாமிரபரணி ஆற்றங்கரையில் சிறப்புடன் விளங்குவதால் ஆற்றூர் என்றழைக்கப்படுகிறதென்பர். இதனை இலக்கியங்கள் ஆறை என்றும் குறிக்கின்றன. சந்திரன் பூசித்துப் பேறு பெற்றதால் இங்கு சந்திரனுக்குத் தனி சந்நிதி அமைந்துள்ளது.

சோமங்கலம் சோமநாதர்

சென்னையை அடுத்த குன்றத்தூர் – திருப்பெரும்பூதூர் சாலையில் சற்று உள்ளடங்கியவாறு அமைந்துள்ள தலம் சோமங்கலமாகும். இது சோமனாகிய சந்திரன் தட்சனின் சாபத்தால் கூடிய ரோகத்திற்கு ஆளாகி, அது தீரும் பொருட்டுச் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்த இடமாகும். அவன் பெயரால் இறைவர் சோமாண்டார் என்றும், சோமநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்த ஊர் சோமனுக்கு மங்கலம் தந்ததால் சோமமங்கலம் ஆகிஇப்பொழுது சோமங்கலம் என்றழைக்கப் பெறுகின்றது.

சோழர்காலத்திய தூங்கானைமாட கட்டிடக் கலைச் சிறப்புடன் இந்த சோமநாதர் கோயில் அமைந் துள்ளது. இதனுள் பெருமான் பெரிய லிங்க வடிவில் காட்சியளிக்கிறார்.

சந்திரனுக்கு அருள்செய்து அவன் காணும்படி ஆடி அருளிய நடராசர் சதுரதாண்டவர் எனும் பெயரில் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

இவ்வூருக்கு மேற்கில் சந்திரன் அமைத்தகுளம் உள்ளது. அதில் மூழ்கிச் சந்திரன் தனது சாப வினையாகிய க்ஷய நோயைப் போக்கிக் கொண்டதால் அது வினைதீர்த்தான் குளம் என அழைக்கப் பெற்று வந்துள்ளது. இவ்வூரிலுள்ள சோமாஸ்கந்தர் திருமேனி கலையழகு நிரம்பியதாகும்.

இங்குச் சந்திரன் சிவபூசையைச் செய்யத் தொடங்கியதும் தட்சனுடைய சாபம் ஒரு கோரமான பேய் வடிவில் அவனைத் துரத்திவந்தது. அதனை நந்திதேவர் தனது ஓங்காரத் தொனியால் ஓட்டி அழித்ததாக வரலாறு. எனவே நந்திதேவர் கருவறையை நோக்காமல் கிழக்குநோக்கித் திரும்பி அமர்ந்துள்ளார். அம்பிகையின் ஆலயம் மகா மண்டபத்திற்கு வெளியே வடகிழக்குமுனையில் தெற்கு நோக்கிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாறு தனியே உள்ளது. அவள், காமாட்சி என்ற பெயரில் நான்கு கரங்களுடன் நின்ற நிலையில் அருள்பாலிக்கின்றாள். மகா மண்டபத்தில் சூரியன், விநாயகர், பாலசுப்பிரமணியர் ஆகிய திருமேனிகள் உள்ளன.

நவகோள்கள் சந்நிதியும் விநாயகர் சந்நிதியும் தனித்தனியே அமைந்துள்ளன. இக்கோயிலில் இரண்டுகால பூசை சிவாச்சாரியாரால் சிறப்புடன் நடத்தப்படுகிறது. இந்துசமய அறநிலையத் துறை யினரின் நிர்வாக அதிகாரியால் துணைக் கோயி லாக ஏற்கப்பட்டு செயலாற்றப்படுகின்றது. காணும் பொங்கல் விழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. சிவராத்திரி, நவராத்திரி, முதலிய விழாக்கள் சிறப்பா கக் கொண்டாடப்படுகின்றன.

இங்கு பொறிக்கப்பட்டுள்ள ஏராளமான கல் வெட்டுகள் சோழர்கால அரசியலைப் பறைசாற்று கின்றன. (இக்கோயிலுக்குத் தென்மேற்கில் வல்லம் என்ற தலம் உள்ளது. சோமங்கலத்தில் வழிபட்டுப் பேறுபெற்ற சந்திரனை இவ்வூர்ப் பெருமான் தனது சடைமீது சூட்டிக் கொண்டார். இதனால் இவருக்குத் திருச்சடைநாதர், சடையீசுவரர் என்ற பெயர்கள் உண்டாயின).

குளத்தூர்ச் சோமநாதம்

சென்னையை அடுத்த குளத்தூரில் சோமநாதர் ஆலயம் சிறப்புடன் அமைந்துள்ளது. இவர் பேரில் சோமேசர் முதுமொழி வெண்பாவும், அன்னை அமுதாம்பிகையின் பேரில் பிள்ளைத்தமிழ் நூலும் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீமத் மாதவச் சிவஞான முனிவரால் பாடப்பெற்றுள்ளன.

அதிகைச் சோமநாதம்

பண்ருட்டியில் சோமேசர் கோயில், தெருவிலுள்ள சோமநாதர் ஆலயம் தனிச்சிறப்புடன் திகழ்கின்றது. இது சித்தாந்த சாத்திர நூலான உண்மை விளக் கத்தை இயற்றி அதிகை மனவாசகங் கடந்தாரால் வழிபாடு செய்யப்பெற்ற தலம். இங்கு இறைவன் சோமநாதர் என்றும் அம்பிகை அமுதாம்பிகை என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சோமநாதரும் - அமுதாம்பிகையும்

சிவபெருமானின் எட்டு மூர்த்தங்களில் ஒருவனாகச் சந்திரன் விளங்குகின்றான் என்பதை முன்பே கண்டோம். சந்திரகலா ஞான வடிவமாக யோகியர்களுக்குக் காட்சிதரும்போது சிவபெருமான் சோமேசுவரர் என்று பெயர் பெறுகின்றார். அப்போது அவருடைய அருளாற்றலாக வெளிப்பட்டு யோகியர்களுக்கு அருளும் அன்னை அமுதாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள். சந்திரனில் அமுதம் நிறைந்திருப்பதாகவும் அவனுடைய கதிர்களின் மூலம் பூமியிலுள்ள பயிர்கள் செழிக்கின்றன என்றும் புராணங்கள் கூறுவது இங்கு எண்ணத்தக்கதாகும். இப்படி இறைவன் சோமேசுவரராகவும் அம்பிகை அமுதாம்பிகையாகவும் பெயர் பூண்டு அருளாட்சி செய்யும் தலங்கள் பல உள்ளன. இவற்றில் சென்னையை அடுத்த குளத்தூரும் பண்ருட்டி நகரும் சிறப்புடையனவாகும்.

மேலும் சோமேசரின் வேறுபெயரான சந்திரசேகரர் என்ற பெயரில் சிவபெருமானும் அமுதாம்பிகை என்ற பெயரில் அம்பிகையும் காமக்கூரில் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம்.

சோமேசர் - சோமநாயகி - சோமதீர்த்தம்

சிவபெருமான், அம்பிகை, தீர்த்தம் ஆகிய மூன்று பெயர்களும் சோமனாகிய சந்திரன் வழிபட்டதால் முறையே சோமேசுவரர், சோமகலாம்பிகை, சோம தீர்த்தம் என்ற பெயர்களில் வழங்குவது தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. தேவாரத்துள் குடந்தைக் காரோகணம் என்று போற்றப்படும் கும்பகோணம் சோமேசுவரர் ஆலயம். நெல்லை மாவட்டத்தில் உள்ள ஆற்றூர் சோமநாதீசுவரர் ஆலயம் தஞ்சை மாவட்டப் பழையாறை சோமநாதர் ஆலயம் ஆகியவற்றில் இந்த முப்பெரும் பெயர் அமைப்பைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரன் பெயர் கொண்ட சிவலிங்கங்கள்

(சந்திரன் வழிபட்ட லிங்கங்கள்)

சந்திரன் தானே சிவலிங்கம் நிறுவி வழிபட்ட தலங்கள், பிறர் நிறுவிய சிவலிங்கங்களைச் சந்திரன் சிறப்புடன் பூசித்த தலங்கள் என்று சந்திரனோடு தொடர்புடைய சிவத்தலங்கள் பலவாறு விளங்குகின்றன. இப்பகுதிகளில் சந்திரனின் பெயரால் வழங்கப்படும் சிவலிங்கங்கள் அமைந்த திருக்கோயில்களைக் காணலாம்.

திருவக்கரைச் சந்திரமௌலீசுவரர்

சென்னை—விழுப்புரம் சாலையிலுள்ள திண்டி வனத்திலிருந்து மயிலம் வழியாக பாண்டிச்சேரி செல்லும் வழியில் பெரும்பாக்கம் என்ற ஊர் உள்ளது. இங்கிருந்து தெற்கே செல்லும் சாலையில் 5 கி.மீ. சென்று சங்கராபரணி ஆற்றைக் கடந்து அதன் தென்கரையில் அமைந்துள்ள திருவக் கரையை அடையலாம்.

இவ்வூர் சோழர்காலத்தில் மிகச் சிறப்புமிக்க ஊராக இருந்தது. அவர்கள் இங்கிருந்த சிவாலயத் தினை விரிவுபடுத்தித் திருப்பணி செய்துள்ளனர்.

கருவறையில் மூன்று முகலிங்கம் அமைந்து உள்ளது. பெருமான் சந்திரசேகரர் என்று திருமுறை யிலும். சந்திரமௌலீசுவரர் என்று நடைமுறையிலும் அழைக்கப்படுகிறார்.

இவர் வடக்குநோக்கியுள்ள முகத்தால் சூரியனுக் கும், தெற்கு முகத்தால் அக்னிக்கும் கிழக்கு நோக் கிய முகத்தால் சந்திரனுக்கும் அருள் செய்தார் என்பர். அப்படி ஞாயிறு, திங்கள், தீ ஆகிய வற்றிற்கு அருள்செய்த நிலையில் மும்முக லிங்கமாகக் காட்சி யளிக்கிறார்.

கிழக்கில் நம்மைநோக்கியுள்ள முகம் சந்திரனுக்கு அருள்செய்த நிலையில் அமுதம் நிறைந்த அருள் பொழிவதாகவும், வடக்கில் உள்ள முகம் சூரிய னுக்கு ஞானயோகத்தை அருளும் சாந்த நிலையில் விளங்குவதாகவும் தெற்கு அக்னிக்கு அருளும் வேகத்தில் மகா உக்கிரமாக இருப்பது போலவும் வடிக்கப்பட்டிருப்பது கண்டு மகிழத்தக்க தாகும்.

இங்கு, சந்திரன் பூசித்துப் பேறுபெற்றதையும் சந்திரன் வழிபட்டதால் பெருமானுக்குச் சந்திரசேகரர் என்ற பெயர் உண்டானதையும் விளக்கும் வகையில் தேவாரத்தில் பெருமான் சந்திரசேகரன் என்று குறிக்கப்படுகின்றார். அந்த தேவாரப்பாடலைக் காணலாம்.

"சந்திர சேகரனே" அருளாயென்று
தண்விசும்பில்
இந்திரனும் முதலா இமையோர்கள்
தொழுது இறைஞ்ச
அந்தர மூவெயிலும் அனலாய்
விழ ஓரம்பினால்
மந்திர மேருவில்லா வளைத்தா
னிடம் வக்கரையே.

— திருஞானசம்பந்தர்.

செந்துறைச் சந்திரசேகரர்

செந்துறை காவிரிக்குத் தென்கரையில் உள்ள வைப்புத்தலங்களில் ஒன்றாகும் திருஞான சம்பந்தரால் குறிக்கப்பட்டுள்ள போற்றப்பட்ட திருப்பதி.

இறைவர் சந்திரசேகரர் என்றும் அம்பிகை மானேந்துவல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர். சந்திரனில் மான் ஒன்று உள்ளதாக இலக்கியங்கள் கூறுகின்றன. இங்குச் சந்திரனைப் பெருமான் தலை யில் சூடியபோது மான் அம்பிகையின் கரத்தில் தாவி அமர்ந்ததாம் அதைக்குறிக்கும் வகையில் அம்பிகை (மழுவுடன்) மான் ஏந்தியுள்ளாள். ஆதலின் அவ ளுக்கு மானேந்து வல்லி என்பது பெயராயிற்று.

காமக்கூர் சந்திரசேகரர்

வேலூரை அடுத்த ஆரணிக்கு அருகில் அமைந் துள்ள தலம் காமக்கூர். தலபுராணம் இதனை காம நகர் என்று குறிக்கிறது. இறைவன் சந்திரசேகரர் என்றும் அம்பிகை அமுதவல்லி (அமிர்தவல்லி) என்றும் அழைக்கப்படுகின்றனர். பெரிய சிவாலயம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது.

தட்ச சாபத்தால் வருந்திய சந்திரன் வழிபட்ட தலங்களில் ஒன்று. அவன் அமைத்த தீர்த்தம் பாபம்தீர்த்தக் குண்டம் என்று புராணத்தில் கூறப்படுகிறது. இந்நாளில் இது பாப்பாத்தி குட்டை என்று வழங்குகின்றது. இளம்பிறையாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரனைத் தலையில் அணிந்ததால் இறைவர் புராணங்களின்படி இளம்பிறை நாயனார் என்று அழைக்கப்பெற்றார். அதுவே இந்நாளில் சந்திரசேகரர் என வழங்குகின்றது.

சந்திரன் திருநீடுரில் மகிழமரத்தடியில் பூசித்தது போலவே இங்கும் மகிழமரத்தடியில் பூசித்தான் என்பர். கோயிலின் பிரகாரத்தில் செழித்து வளர்ந்த மகிழமரம் உள்ளது. மேலும் நான்கு தீர்த்தங்கள் உள்ளன. இங்கு சந்திரன் சிவபெருமானுக்கும் உமா தேவியாருக்கும் பங்குனி உத்திரத்தில் திருமண விழாவும் பெருந்திருவிழாவும் நடத்தி மகிழ்ந்தான் என்பர். அவனும் உமையவளும் காண சிவபெருமான் அமுததாண்டவத்தை நிகழ்த்தினார். தாண்டவக் கோலத்தை உணர்த்தும் நடராஜ மூர்த்தம். சதுர தாண்டவர் என்ற பெயரில் இக்கோயிலில் சிறப்பாக உள்ளது.

இலம்பையங்கோட்டூர் சந்திரசேகரர்

இலம்பையங்கோட்டூர் என்ற தலம் திருவள்ளூருக்கு மேற்கில் உள்ள கூவம் என்ற தலத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இறைவர் இந்நாளில் அரம்பேசுவரர் என்று அழைக்கப் படுகின்றார். புராணங்களில் இறைவன் சந்திரசேகரர் என்றும், அம்பிகை கோடேந்து முலையம்மை என்றும் போற்றப்படுகின்றனர். திருவாரூரில் சிவபெருமானைத் தியாகராஜராகப் பூசித்த ரம்பை இங்கு சந்திரசேகரராகப் பூசித்தாள் என்பர். அதனால் பெருமானுக்கு அரம்பேசுவரர் என்பது பெயராயிற்று. இங்கு சந்திரன் தனக்குப் பிரியமான மல்லிகைக் கொடியின் அடியில் இறைவனை எழுந்தருளவைத்து வழிபட்டுப் பேறுபெற்றான். இங்கு மல்லிகை தலவிருட்சமாக உள்ளது. தீர்த்தம் மல்லிகை தீர்த்தம்.

சந்திரசேகர ஆலயவகை

காமிகாகமத்தில் 16 வகையான சிவாலயங்களின் அமைப்புகள் சொல்லப்பட்டுள்ளன. இவை 1) மேரு, 2) ரம்மியம், 3) மந்தரம், 4) ருக்ஷமாலி, 5) தியுமணி, 6) சந்திரசேகரம், 7) மாலியவான், 8) பஞ்சகோசம், 9) தாதுமான் என்று பெயர் பெறுகின்றன. இவற்றில் ஆறாவதாக "சந்திரசேகரம்" என்று பெயர் கொண்டுள்ள ஆலய அமைப்பைக் காண்கிறோம்.

சோமவார விரதம்

சோமவார விரதமிருப்போர் கார்த்திகை மாத திங்கட்கிழமைகளில் அதிகாலையில் நீராடி சந்திரசேகரரைப் பூசிக்கவேண்டும். சிவலிங்கத்தைத் தரிசனம் செய்து அபிஷேக ஆராதனைகள் நடத்த வேண்டும். நல்ல சைவ ஒழுக்கம் நிறைந்த தம்பதியரைச் சிவபார்வதியராகப் பாவித்து அவர்களைப் பூசித்து அவர்களுக்கு அன்னம் படைத்து ஆசிபெறவேண்டும். அன்று முழுவதும் உபவாசம் இருந்து சிவமூர்த்தியைத் தியானிக்க வேண்டும். இந்த விரதத்தைச் சந்திரன் கடைபிடித்து சோமன் என்ற பெயரையும், அவருடைய சடையில் இருந்து நீங்காது இருக்கும் பெருவாழ்வையும் அடைந்தான். சீமந்தினி முதலானோர் கடைப்பிடித்து பெருஞ்செல்வ வாழ்க்கைப் பெற்றதைப் புராணங்களால் அறியலாம்.

சந்திர பிறை வடிவில் அமைந்த விபூதிமடல்

இறைவனின் அருள்வடிவமாகத் திகழ்வது திருநீறு. சிவபெருமானின் அருளாக வெளிப்படும் பராசக்தியின் வடிவமும் அதுவே. திருஞானசம்பந்தர் திருநீற்றுப்பதிகத்தில் பராவணமாவது நீறு என்று அருளிச் செய்துள்ளார் (பராவணம் – பரையின் வண்ணம் – பராசக்தியின் வடிவமாக இருப்பது) எனவே விபூதியைப் பராசக்தியின் இயற்கை வடிவமான சந்திரபிறை வடிவில் அவளுக்குரிய உலோகமான வெள்ளியினால் செய்யப்பட்ட பாத்திரத்தில் வைத்து அன்பர்களுக்கு அளிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உயிருக்கு அமுதமான திருநீற்றை அமிழ்தம் தங்கும் மூன்றாம் பிறைச் சந்திரனின் வடிவாக அமைந்த விபூதி மடலில் வைத்து வழங்கப்பட வேண்டியதே முறையாகும். அனேக சிவத்தலங்களில் கலைச்சிறப்புடன் பிறைவடிவில் அமைந்த விபூதி மடல்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திர தீர்த்தங்கள்

சந்திரன் சிவாலயங்களை அமைத்து சிவவழிபாடு செய்தபொழுது தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும். தனக்குப் பின்வரும் சந்ததியர் பயன்பெறவும் சிவாலயங்களையொட்டி அமைத்த தீர்த்தங்கள். சந்திர தீர்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சந்திரன் அமுதத்தைப் பெற்றிருப்பவன் எனவே அவனால் உண்டாக்கப்பட்டு அவன்பெயரால் திகழும் தீர்த்தங்கள் உடல் நோய்களைத் தீர்க்கும் என்று நம்புகின்றனர். ஜோதிட சாத்திரங்களின்படி சந்திரன் மனம் செயல்படும் விதத்தின் அதிபதி, எனவே இந்த தீர்த்தங்களில் மூழ்கி சிவபெருமானை வழிபடுவதால் மனசஞ்சலங்கள் நீங்கி மனோதிடம் பெறலாம் என்பர். சந்திரன் அமைத்த தீர்த்தங்களையும் அவை அமைந்த தலங்களின் பெருமைகளையும் கீழே காணலாம்.

திருவெண்காட்டுச் சந்திரதீர்த்தம்

சிவாலயங்களில் உள்ள சந்திர தீர்த்தங்களிலேயே முதன்மை பெற்றது, திருவெண்காட்டில் உள்ள சந்திரதீர்த்தமாகும். (இதன் தனிச்சிறப்புகள் தீர்த்தீசுவரர் எனும் தலைப்பில் வெளிவரவுள்ளதால் இப்பொழுது சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.) இதனைச் சிலப்பதிகார காலத்தில் "சோமகுண்டம்" என்று அழைத்தனர்.

கோவலன் மாதவியின்பால் பற்றுக்கொண்டு கண்ணகியைப் பிரிந்து சென்றபோது கண்ணகியின் தோழி அவளிடம் சூரிய, சோமகுண்டத்தில் மூழ்கி வழிபட்டால் கோவலன் திரும்பி அவளிடமே வருவான் என்று தெரிவிப்பதாக ஒரு குறிப்பு வருகின்றது. இந்தச் சந்திரதீர்த்தத்தின் கரையில் சந்திரனால் அமைக்கப்பெற்று வழிபடப்பட்ட லிங்கம் சந்திர ரேசுவரர் எனும் பெயரில் உள்ளது. இந்தத் தீர்த்தம் திருவெண்காட்டு ஸ்ரீசுவேதவனேஸ்வர சுவாமி ஆலயத்தில் பிரம்ம வித்யாம்பிகையின் சந்நிதிக்கு முன்புறம் அமைந்துள்ளது. இதன் மேற்குக்கரையில் சந்திரனின் மகனாகிய புதனின் ஆலயம் உள்ளது.

காஞ்சீபுரத்துச் சந்திரதீர்த்தமும் – சந்திரேசுவரரும்

காஞ்சீபுரத்தில் வெள்ளைக்குளம் எனும் பெயரில் ஒரு பெரியகுளம் தென்பகுதியில் அமைந்துள்ளது. இதன் கிழக்குக்கரையில் கிழக்குநோக்கியவாறு சிறு சிவாலயம் உள்ளது. இதில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்திற்குச் சந்திரரேசுவரர் என்பது பெயராகும். மேலும் காஞ்சிபுரத்தில் சந்திரனின் இன்னொரு பெயரான சோமன் என்பதன் அடிப்படையில் சோமேசுவரர் என்ற வேறொரு ஆலயமும் உள்ளது.

சாத்தமங்கைச் சந்திரதீர்த்தம்

இந்நாளில் சீயாத்தமங்கை என்று அழைக்கப் படும் இந்த சோழநாட்டுப் பாடல் பெற்ற தலத்தில் ஆலயத்திற்கு அருகில் ஒரு தீர்த்தக்குளம் உள்ளது. இதன் மேல்பாதி சந்திரதீர்த்தம் என்றும் கீழ்ப்பாதி சூர்யதீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. இப்படி ஒரே குளம் இரண்டு தீர்த்தங்களாக இருப்பது பொது வாகக் காணக் கிடைக்காததாகும்.

பருதிநியமத்துச் சூரிய, சந்திர தீர்த்தங்கள்

ஒரே குளத்தின் மேல்கீழ்பகுதிகள் சூரிய சந்திர தீர்த்தங்களாக இருப்பதைக் கண்டோம். அல்லவா? பருதி நியமத்திலுள்ள கோயிலின் கீழ்ப்புறம் சூரிய தீர்த்தமும் மேல்புறம் சந்திரதீர்த்தமும் தனித்தனியே திருக்குளங்களாக உள்ளன.

அவளிவள் நல்லூர், இலம்பயங்கோட்டூர், திருப் பாசூர், நாலூர் மயானம், திருவக்கரை, வேட்டகுடி முதலான பல தலங்களில் சந்திரன் அமைத்த தீர்த் தங்கள் சந்திரதீர்த்தம், சோமதீர்த்தம் என்று பல பெயர்களில் இருக்கக் காண்கிறோம்.

சந்திரசேகரர் சிறப்பாக எழுந்தருளியுள்ள திருக் கழிப்பாலையில் பிராகாரத்தின் வடகிழக்கு முனையில் ஒரு கிணறு உள்ளது. இதன் நிறம் பால் போன்று வெண்நிறமாக உள்ளது. இது சந்திரதீர்த்தம் என்றும் பால் கிணறு என்றும் அழைக்கப்படுகின்றது. இது பின்னாளில் இயற்கையாகவே உண்டான தென்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாலயங்களில் சந்திரசேகரர் சந்நிதி

நடராஜர் சோமாஸ்கந்தர் தட்சிணாமூர்த்தி முதலிய சிறப்பு மூர்த்திகளுக்குச் சிவாலயங்களில் ஒவ்வொரு இடம் தனியாக ஒதுக்கப்பெற்றுச் சிற்றாலயங்கள் கட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இதுபோன்றே சந்திரசேகரமூர்த்திக்கு உரிய இடம் பிரகாரத்தின் வடகிழக்கு முனையாகிய ஈசான மூலையாகும். இங்குச் சந்திரசேகரர் மேற்கு அல்லது தெற்குநோக்கியவாறு அமைகின்றார்.

இவருக்கு நேர் எதிரில் அந்த தலத்தில் முத்திபெற்ற நாயன் மார்களின் வடிவத்தை எழுந்தருளிவைத்தல் மரபாகும். எடுத்துக் காட்டாக இந்தளூரில் சந்திரனும் திருஒற்றியூரில் கலியநாயனாரும் ஆக்கூரில் கோட்புலி நாயனாரும் இப்படி சந்திரசேகருக்கு முன்பாக எழுந்தருளியுள்ளனர்.

பெருமான் பிறை சூடிய வரலாறு

சந்திரன் தட்சனின்சாபத்தால் வருந்திப் பிரபாச பட்டினமாகிய சோமநாதபுரத்தில் லிங்கம் அமைத்து வழிபட்டான். அவனுக்குக் காட்சியளித்த சிவபெருமான் பல வரங்களைக் கொடுத்ததுடன் அவனுடைய கலையொன்றைத் தனது சடையில் சூட்டிக் கொண்டார் என்பதையும் பக்கம் 485–ல் கண்டோம். சிவமகாபுராணத்தில் சிவன் பிறைசூடியது வேறு மாதிரியாகவும் கூறப் பட்டுள்ளது. இது சிவபெருமான் இரண்டாவது வகையில் சந்திரனுக்கு அருள்புரிந்த நிலையாகும்.

தட்சன் ஒரு சமயம் பெரிய யாகம் செய்தான். அதற்குச் சிவபெருமானை அழைக்காமலும் அவருக்கு உரிய வேள்விப் பங்கைத்தராமலும் அவரை அவமதித்தான். அதனால் வெகுண்ட பார்வதியாகிய தாட்சாயணி அவனிடம் சென்று, சிவனை அழைத்து உரிய சிறப்புகளைச் செய்யு மாறு கூறினாள். தட்சன் அவளைத் தனது மகள் என்றும் பாராமல் பலவாறு இகழ்ந்தான். இதனால் வருந்திய அவள், அந்த யாகத் தீயிலேயே வீழ்ந்து உடலைத் தகித்துக் கொண்டாள். இதனை அறிந்த சிவபெருமான் வீரபத்திரர், பத்திரகாளி ஆகி யோரை ஏவி அந்த யாகத்தை அழித்தார். கோபத் தால் ஜ்வலித்த அவர் தனியாக வனங்களிலும், மலைகளிலும் சஞ்சரித்தார். கோபத்தாலும் தேவியைப் பிரிந்து தனித்து நின்றதாலும் அவரு டைய உடலில் தோன்றிய வெப்பம் அதி கரித்து. இதனால் அவர் சென்ற வனங்களும், சோலைகளும் வெந்து, அழிந்து புகைந்து சாம்பலாயின. அவரை அணுகமுடியாமல் தேவர்களும், முனிவர்களும் கலங் கினர். பிரமன், திருமால் முதலியோர் கூடி அவருக்கு அபிஷேகம் செய்து அவருடைய கோபத்தையும் உடல் வெப்பத்தையும் குறைக்க முடிவு செய்தனர். அவரைப் பலவாறு போற்றிப் புகழ்ந்தனர். உயர்ந்த பீடத்தில் அமர்த்தி அமிர்தக் குடங்களால் அவரை நீராட்டினார். பிறகு சந்திரனை அவருடைய முடியின் மீது இருத்தி அவனிடமிருந்து பெருகும் அமிர்ததாரை களை அவர் மீது ஒயாது பொழியச் செய்தனர். இதனால் பெருமானின் கோபம் ஒருவாறு தணிந்தது. அவருடைய உடலில் வெம்மையும் குறைந்தது. அதனால் மகிழ்ந்த அவர் தேவர்களுக்குப் பல வரங் களைத் தந்து அருள்பாலித்தார். பூசனையின் நினை வாகச் சந்திரனைத் தமது சடையின் மீதே எப்போதும் இருக்குபடி அருள்புரிந்தார். அன்றுமுதல் சந்திரன் மூன்றாம் பிறைவடிவில் அவருடைய சடையில் தங்கி ஒயாது அமுததாரைகளைப் பொழியலானான். இதனால் பெருமானுக்குச் சந்திரசூடன், சந்திரமௌலி சுவரர் என்ற பெயர்கள் உண்டாயின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரனுக்கு அருள்செய்த நாகூர் நாகநாதன்

நாகப்பட்டினத்திற்கு வடக்கே 5 கி.மீ. தொலைவிலுள்ள தலம் நாகூர் ஆகும். இங்கு ஆதியில் சந்திரனும் அவனையடுத்து சிவராத்திரியில் நாகராஜனும் நாகங்களும் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளனர்.

சந்திரன் இங்கு தீர்த்தமுண்டாக்கி ஆலயம் அமைத்து வழிபட்டான். சந்திரனால் உண்டாக்கப் பெற்ற தீர்த்தம் ஆலயத்தின் தென்பகுதியில் சந்திர தீர்த்தம் என்ற பெயரில் பரந்து சிறந்துள்ளது.

சந்திரன் இங்கு, சிவபெருமானுக்கு ஆனி மாதத்தில் பெருந்திருவிழா செய்து மகிழ்ந்தான் இதனால் பெருமானுக்குச் சந்திரசேகரர் என்பதும் பெயராயிற்று. ஆனிப்பெருந்திருவிழாவின் பதினோராவதுநாள் தியாகராஜப் பெருமான் சந்திரன், சமுத்திரராஜன், இந்திரன் ஆகிய மூவருக்கும் பக்தகாட்சி அருளும் ஐதீகவிழா நடைபெறுகின்றது.

இங்கு முன்னாளில் தியாகராஜருக்கு நேர் எதிரில் நாகராஜன், சந்திரன் சமுத்திரராஜன் (ஆகிய மூவரும் அவரை வணங்கும் வகையில்) அமைந்த சந்நிதி இருந்ததென்கின்றார். இப்போது அச்சந்நிதி வெறுமையாக உள்ளது. அன்பர்கள் அத்திரு உருவங்களை மீண்டும் அங்கு எழுந்தருளிவைக்க முயற்சிப்பது நல்லது).

சந்திரன் பூசை செய்து பேறு பெற்றதை நாகூர்ப்புராணம் விரிவாக்க கூறுகின்றது. அதில் அமைந்துள்ள ஒரு பாடல்

சந்திரன் முன்னம் இயற்றிய பூசை
தனக்கு மகிழ்வாகிச்
சந்திரலிங்கம் எனப்பெயர் கொண்ட
தயாபர தற்பரனே
சந்திரன் ஆதபன் அங்கி யுறுந்திரி
யம்பக சங்கரனே
சந்திர சேகர புன்னை வனேச
சதாசிவ நின் சரணம் (சரணம்)

இதில் நான்கு முறை சந்திரன் என்ற பெயர் வருவது காண்க. நாகூர் என்ற இத்தலத்தில் இந்நாளில் இறைவர் நாகநாதர் என்றும் அம்பிகை நாகவல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ரோகிணிச் சந்திரசேகரர் விரதம்

திங்கட்கிழமையன்று பௌர்ணமி வந்தாலும் மிருகசீரிட நட்சத்திரத்துடன் கூடி பௌர்ணமி வந்தாலும் அது சிறப்புடையதாகப் போற்றப்படுகின்றது. இந்நாளில் மாலையில் சந்திரபூஜையைச் செய்து சந்திரசேகர மூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து நோன்பிருப்பர். இதற்கு ரோகிணிச் சந்திரசேகர விரதம் என்று பெயர். இதனை நாரதருக்கு உருத்திரர் சொன்னதாக நாரதபுராணம் கூறுகிறது.

காசிநகர் சந்திரசேகரர்

காசிநகரில் சந்திரன் தன் மனைவியருடன் கூடி சிவபூஜை செய்தான். அவன் வழிபட்டலிங்கம் சந்திரேசுவரர் என்று அழைக்கப்படுகிறது. அவனது மனைவியரான நட்சத்திரப் பெண்கள் கூடி வழிபட்ட லிங்கத்திற்கு நட்சத்திரேசுவரர் என்பது பெயராகும். அங்கு அமைத்த தீர்த்தம் சந்திரதீர்த்தம் ஆகும். இங்கு ஆதியில் சித்தயோக சுவரி பீடம் இருந்ததென்றும் அதன்மீது சந்திரன் லிங்கத்தை வழிபட்டான் என்று கூறுகின்றனர். யோகஸ்வரர் சந்திரனை பெரிய பிறை வடிவில் தலையில் சூடியுள்ளார். அவனோடு விளங்கும் அம்பிகை சித்தேஸ்வரி என்று அழைக்கப்படுகிறாள்.

சந்திர சூடாமணி தாண்டவர்

சூடாமணி என்பது தலையில் அணியும் அணிகலனாகும். சிவபெருமான் சந்திரனை தலையில் அணிகலனாகச் சூடியுள்ளதால் பிறை சூடன், சந்திர சூடாமணி, சந்திர சூடன் எனப் பலவாறு அழைக்கப்படுகிறார். திருத்துறைப் பூண்டியில் உள்ள நடராசருக்குச் சந்திரசூடாமணி தாண்டவர் என்பது பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமுத தாண்டவம்



தொண்டை மண்டலத்தில் சந்திரன் வழிபட்டுப் பேறு பெற்ற பல தலங்கள் உள்ளன. இவற்றில் மூன்று தலங்கள் குறிப்பிடத்தக்கதாகும். இவை சோமங்கலம், காமக்கூர், திருவக்கரை என்பனவாகும். இங்குள்ள நடராச வடிவங்கள் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. இவை பிறதலங்களில் உள்ளது போன்று ஆனந்தத் தாண்டவ மூர்த்தமாக அமையவில்லை அதிரவீசி ஆடாமல் அமைதியாக ஆடத் துவங்கும் நிலையில் உள்ளன. இவற்றைச் சதுரதாண்டவம் என்று சிற்பநூலார் கூறுவர். ஆனால் பௌராணிகர் சந்திரனுக்கு அருள்புரிய ஆடிய அமுததாண்டவம் என்று குறிக்கின்றனர். இதன் விரிவைப் பின்வரும் மலரில் காணலாம். இங்குக் காமக்கூர் அமுததாண்டவ நடராஜப் பெருமானின் திருவுருவத்தைக் காணலாம்.

சந்திரசேகரபுரத்துச் சந்திரசேகரர்

சந்திரனுக்கு அருள்பாலித்த இறைவனான சந்திரசேகரன் எழுந்தருளியிருப்பதால் ஒரு ஊருக்குச் சந்திரசேகரபுரம் என்ற பெயரே அமைந்துள்ளது. இந்தச் சந்திரசேகரபுரம் தஞ்சைமாவட்டத்தில் வலங்கைமானிலிருந்து பாபநாசம் செல்லும் சாலையில் 4வது கி.மீட்டரில் உள்ளது. ஆதியில் இப்பகுதி மந்தாரவனமாக இருந்ததென்றும் அதில் சந்திரன் சிவபூசை செய்தான் என்றும் கூறுவர். கருவறையில் ஒரு அடி உயரமுள்ள கருங்கல் மேடையின்மீது சந்திரசேகரர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். உள்மண்டபத்தில் வடக்குச் சுவரில் தெற்கு நோக்கியவாறு ரோகிணி கார்த்திகை உடனாய சந்திரன் புடைப்புச் சிற்பமாக எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் சந்திரனுக்கே சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன.

பொதுவாக சிவாலயங்களில் சூரியனுக்குத் தனியாக ஒரு சந்நிதி அமைத்துக் காலைப்பூசையை அவரிடமிருந்து ஆரம்பிப்பதே வழக்கமாகும். இங்குச் சந்திரனை முதன்மை பரிவாரமாக அமைத்திருப்பதால் சூரிய னுக்கு ஆலயம் அமைக்கவில்லை. பூசைகள் சந்திர னிடமிருந்து தொடங்குகின்றன.

மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு சௌந்தராம்பிகை கோயில் கொண்டுள்ளார். அதற்கு இணையாக இடப்புறத்தில் நடராஜர் சந்நிதியுள்ளது. இதில் கல்லா லாகிய மூலத்திருமேனியாக நடராஜர் எழுந்தருளியுள்ளார்.

இக்கோயிலில் நெய்விளக்கிட சோழர்காலத்தில் அளிக்கப்பெற்ற நிபந்தங்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் அமைந்திருந்தன. அவற்றைத் திருப்பணி செய்தவர்கள் இடம்மாற்றி வைத்துள்ளனர்.

பஞ்ச கோட்டங்களில் விநாயகர், தென்முகக் கடவுள், திருமால், பிரம்மா, எட்டுக்கரங்கள் கொண்ட துர்க்கை ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

சந்தர தசையிலும் புத்தியிலும் வருந்துபவர்களும் மனச்சோர்வினால் துன்புறுபவர்களும் இங்கு வழிபட்டால் நன்மை கிடைக்கும். அழகிய பிராகாரத்துடன் கூடிய ஆலயம் இரண்டு நிலை விமானத்துடன் சிறப்பாக உள்ளது.

பிரகாரத்தில் சந்திரன் அமைத்து வழிபட்ட சங்கடஹர விநாயகர் தனிச்சந்நிதியில் கொலு வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

அருள்நிறை அமுதாம்பிகை உடனாய சோமசேகரப் பெருமான் அருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வாழ்க!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

அக்னீசுவரர்

உலகின் ஆக்கசக்திக்கு ஆதாரமாக இருப்பது "தீ" என்ற நெருப்பாகும். உயிர்கள் தோன்றி இன்பமடைதல் பொருட்டுப், பரசிவத்தால் முதலில் ஆகாசமும் அதனுள் வளிமண்டலமும், அதிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் படிப்படியாகத் தோற்றுவிக்கப்பட்டன. இந்த ஐந்து பொருட்களின் கூட்டுச்சேர்க்கையால் உலகமும் அதில் உயிர்த்தொகுதியும் மண், கல், மலை முதலான சடப்பொருள்களும் தோன்றியுள்ளன. மேற்குறித்த ஐந்து மூலப்பொருள்களான ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் ஆகியவற்றுள் "தீ" ஒன்றாக இருந்தாலும் அது மற்றைய நான்கு பொருட்களிலும் மறைந்து நின்று அவற்றைத் தொழிற்படுத்தும் சக்தியாகவும் விளங்குகிறது. எடுத்துக்காட்டாகத் "தீ" வானில் மின்னல் இடியாகவும், நிலத்தின் உள்ளே எரிமலை யாகவும், கடலுக்குள் வடவைத் தீயாகவும், காற்றுக் குள் உரசற்தீயாகவும் மறைந்து நின்று செயல்படுகின்றது.

அக்னி புறவெளியில் கண்ணுக்குத் தோன் றும் வகையில் யாககுண்டங்களில் நின்று தேவ காரியங்களைச் செய்து ஞானம் பெறவும், அடுப்பில் நின்று உணவு முதலியவற்றைச் சமைக்க உதவி உடல் வளர்க்கவும், தேவையற்றவைகளை எரித்துப் பிரபஞ்சத்தில் கலக்கச் செய்யவும், என்று பலவாறு உலகிற்குத் துணையாக உள்ளது.

கண்ணுக்குப் புலனாகாத வகையில் விளங் கும் நிலத்திலுள்ள வெம்மையானது பயிர்களின் விதைகளைக் காத்து அவற்றை முளைக்க வைக் கின்றது. பறவைகளின் உடற்சூட்டால் முட்டைகள் குஞ்சுகளாகின்றன. இது போன்றே எல்லா உயிர் களின் இனவிருத்திக்கும் அக்னியே மூலகாரண மாகின்றது.

மேலும் அக்னி, யோகியரிடத்தில் யோகத் தீயாகவும், ஞானியரிடத்தில் மூலாதாரத்தீயாகவும் அறிவுத்தீயாகவும் ஒளிர்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு உலகின் ஒவ்வொரு செயல் பாட்டிலும் உள்ளும் புறமும் அக்னி விரவிநின்று அதனை நன்கு செயல்பட வைக்கின்றது. இதனால் அக்னி இல்லையேல் உலகில் இயக்கமே இல்லை என்று சொல்லவேண்டிய நிலை உள்ளது.

சிவபெருமானின் எட்டு பேருருக்களில் ஒன்று "தீ" ஆகும். அத்தீவடிவாக விளங்கும் சிவபெருமானைப் புராணங்கள் "பசுபதி" என்றும், அவருடன் வீற்றிருக்கும் உமாதேவியாரை "ஸ்வாகா" என்றும் இவர்களுடைய குமாரனை "ஷண்முகன்" என்றும் அழைக்கின்றன. இவர்களிடமிருந்து தோன்றிய பல்வேறு அக்கினிகள் உலகிலுள்ள அனைத்துப் பொருள்களின் உள்ளும், புறமும் நீங்காது நின்று அவற்றை இயக்குகின்றன என்று புராணங்கள் கூறுகின்றன. அவற்றின் இயல்புகளையும் உருவ வர்ணனைகளையும் அப்புராணங்களில் காண்கிறோம்.

சிவபெருமானைத் தீயின் வடிவமாகப் போற்றி அவருக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்யும் மரபை அன்பர்கள் உருவாக்கியுள்ளனர். அவர்கள் அமைத்த ஆலயங்கள் அக்னீச்சரங்கள் என்றும், அதில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அக்னீச்சுவரர் என்பதும் பெயராயிற்று.

பதினேழு என்ற சொல் மேலோட்டமாகப் பொருள் தருகையில் பதினேழு என்ற எண்ணையும், நுண்பொருளாகப் பிரித்துப் பொருள் காணும்போது (பதிந்+எழு என்று பிரிந்து) பதிந்து எழுதல் என்ற பொருளையும் தருகின்றது. ஒரு பொருளைப் பற்றி நின்று ஓங்கி எரிவதால் பதிந்தெழுதல் என்ற குணம் அக்னிக்கு உரியதாகிறது. எனவே சிவமஞ்சரியின் இந்தப் பதினேழாவது மலர் "அக்னீசுவரர்" எனும் பெயரில் மலர்கின்றது. இதில் ஓங்கெரியாக நின்று அருள்பாலிக்கும் சிவாக்னியைப் பற்றியும், அவரிடமிருந்து தோன்றி உலகினைச் செயல்பட வைக்கின்ற பலவேறு வகையான அக்னிகளைப் பற்றியும், அக்னியின் பெயரால் அமைந்த சிவாலயங்களான அக்னீச்சரங்கள், அக்கினி தீர்த்தங்கள் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து மகிழலாம்.

அக்னியே அனைத்தும்...

இந்திர உலகத்திற்கு மேலே மங்களம் நிரம்பியதான அக்னிலோகம் அமைந்துள்ளது. இது ஜோதிஷ்மதி, அர்ச்சிஷ்மதி என்று பலபெயர்களால் அழைக்கப்படுகிறது. இதில் அக்னி பகவான் சித்ரபானு என்ற பெயருடன் வசிக்கின்றார்.

வேதமறிந்த எவனும் அக்னியைத் தவிர்த்து வேறு இடத்தில் தனது கவனத்தை வைப்பானாகில் அவன் உண்மையில் வேதமறிந்தவனல்ல.

அக்னியே உண்மையான அந்தராத்மா, அவனே நம்முடைய வயிற்றுள் அமர்ந்து, அசைவ உணவைக்கூடச் செரிக்கச்செய்து அதனைச் சக்தியாக மாற்றி நமக்கு அளிக்கின்றான்.

அப்படி அவன் கருவுற்ற பெண்ணின் வயிற்றுக்குள் இருக்கும் போதிலும் கருவில், உள்ள குழந்தைக்கு எந்தத் தீங்கையும் செய்வதில்லை. மாறாக அதனை நன்கு வளர்க்கின்றான். இவனே கண்கண்ட சம்காரமூர்த்தி. இவன் சிவபெருமானிடம் ஒளியாக இருப்பவன். இவனே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற ஐந்தொழிலையும் ஆற்றுகின்றான். இவனில்லாமல் உலகில் வேறு எதுவுமே இல்லை.

இந்தச் சித்ரபானுவே மகாதேவனுடைய நெற்றிக்கண்ணாக இருந்து கொடிய இருளில் பிரகாசிக்கின்றான். இவனை விட்டால் பிரகாசமான ஒளியை அளிப்பதற்கு யார் இருக்கின்றார்கள்? சுவர்க்கத்திலுள்ள எல்லாதேவர்களும் இந்த அக்னியின் மூலமாகவே (பூவுலகத்தினரால்) அளிக்கப்படும் தூபம், தீபம், பால், தயிர், நெய் கரும்புரசம், நிவேதனம் ஆகியவற்றை உண்டு மகிழ்கின்றார்கள்.

இந்த அக்னியே, குரு, தேவதை, விரதம், தீர்த்தம், முதலியயாவுமாக இருக்கின்றான். புனிதமற்ற பொருள்கள்கூட அக்னியின் சம்பந்தத்தினால் புனிதமடைகின்றன. இதனால் அக்னிதேவன் 'பகவான்' என்று அழைக்கப்படுகின்றான்.

– காசிக்கண்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னியின் தோற்றமும் அவன்செய்த சிவபூஜையும்

பலவகையான அக்னிகள் உலகெங்கிலும் நிறைந்து நின்று அதனைச் செயல்பட வைத்தாலும் அக்னி என்றதும் நமது நினைவுக்கு உடனே வருவது திசை காவலனாக நிற்கும் அக்னியேயாகும். ஆதலின் முதலில் திக்பாலகனான அக்னி தோன்றிச் சிவனருளால் அப்பதவியைப் பெற்றதையும் பிறகு வாயுவின் சாபத்தால் வருந்திச் சிவபூசை செய்து மேன்மை பெற்றதையும் காணலாம்.

....

ஒரு சமயம் சிவபெருமானிடமிருந்து அவருடைய அம்சமாகப் பெரிய அக்னியொன்று தோன்றியது. அந்த அக்னி, சிவனருள் பெற்றுக் கயிலைமலையின் ஒருபகுதியில் தங்கியது.

ஒரு சமயம் விசுவாநரன்-சாண்டிலி என்பவர்கள் நெடுநாட்களாகக் குழந்தைப் பேறு இல்லாமையால் வருந்திச் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்தனர். அவர்களுக்குச் சிவபெருமான் காட்சியளித்து கயிலையில் நிற்கும் தனது அம்சமான அக்னியை அவர்களுக்கு மகனாகப் பிறக்குமாறு செய்தார். அதன்படியே அந்த அக்னி அவர்களுக்கு மகனாகத் தோன்றியது.

அதற்கு அவர்கள் கிருகபதி என்று பெயர்சூட்டினார். அவன் உரிய வயதில் அனைத்து கல்விகளையும் கற்றுத்தேர்ந்தான். சிவபிரானிடத்தில் நிறைந்த எல்லையற்ற பக்தி பூண்டிருந்தான். ஒருநாள் அவனுடைய ஜாதகத்தை ஆராய்ந்த முனிவர்கள் அவன் தனது பன்னிரண்டாவது வயதில் இறப்பான் என்று கூறினர். இதைக் கேட்ட கிருகபதி சிவபெருமானை அதிதீவிரத்துடன் பூசித்தான். உரியநாளில் அவன் விதிமுடிந்ததால் யமதருமன் அவனைப் பற்றிச் செல்ல வந்தான். அதைக் கண்ட அவன் தான் வழிபடும் சிவலிங்கத்தை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான்.

யமன் வீசிய பாசக்கயிறு அவன் மீதும் அவன் தழுவிநின்ற சிவலிங்கத்தின் மீதும் விழுந்தது. அப்பொழுது சிவபெருமான் அந்த லிங்கத்தினின்று வெளிப்பட்டு யமனை உதைத்து கிருகபதிக்கு அருள்புரிந்தார். அதன்பிறகு அவன் முன்னிலும் அதிக பக்தி உடையவனாகிச் சிவனைப் பூசிக்கலானான்.

ஒருமுறை கிருகபதி சிவபூசைசெய்து கொண்டிருக்கும் போது சிவபெருமான் அவன் முன்னே இந்திரனைப் போல் தோன்றி, அவனை நோக்கி, "அன்பனே சிவ வழிபாடு செய்வதால் என்னபயன் கிடைக்கும்? என்னை வழிபடு, உனக்கு எனது ஒப்பற்ற வஜ்ஜிராயுதத்தைத் தருகின்றேன். அத்துடன் அளவற்ற இந்திரபோகங்களையும் உனக்குக் கிடைக்கச் செய்கின்றேன்" என்றார்.

அதற்கு கிருகபதி, "இந்திரனே உன்னிடம் வேண்டுவது எனக்கு எதுவும் இல்லை. அதனால் விலகிச்செல் நான் சிவபெருமானையன்றி எவரையும் வணங்கமாட்டேன் என்றான். பலவாறு சோதித்தும் அவனுடைய சிவபக்தியை மாற்றமுடியவில்லை. அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கு உமாதேவியுடன் காட்சியளித்து அக்னிதேவன் என்ற பெயர் சூட்டி எல்லையற்ற வரங்களையும் தந்தார். அவன் இரண்டுமுகம், மூன்றுகால்கள், ஏழுகரங்கள், நான்குகொம்புகள் கொண்ட மகாக்கினி தேவவடிவம் கொண்டான். அவனுக்குத் தேவர்கள் செய்த யாகத்தியிலிருந்து தோன்றிய ஆடு வாகனமாகவும், புகை கொடியாகவும் ஆயின. விசுவாநரனின் மகனாதலின் அவன் வைசுவாநரன் எனவும் பெயர் பெற்றான்.



★ அக்னி பகவான் - திருப்புகலூர்

சிவபெருமான் அவனைத் தென்கிழக்குத் திசையின் அதிபதியாக்கித் திசைபாலகனாக்கினார். அவனுக்கு உண்டாக்கித் தரப்பெற்ற பட்டினம் தேஜோமய பட்டினம் என்று அழைக்கப் பெறுகின்றது. பின்னாளில் அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தட்சனுடைய மகளான சுவாகா தேவியை மணந்து கொண்டான். அவர்களுக்குத் தக்ஷிணாக்கினி, கார்ஹபத்தியம், ஆஹவனீயம் என்ற மூன்று அக்னி குமாரர்கள் தோன்றினர். இவர்கள் முனிவர்களின் யாகசாலையில் சென்று தங்கினர். அவர்களுடைய வழிபாட்டை ஏற்று, அவர்களுக்கு வளத்தையும், மேன்மையையும் தந்தனர்.

அக்னிதேவன் தனது மண்டலத்தில் "பசுபதி"யாகிய மகாசிவாக்னி தேவரையும் உமா தேவியாரையும் ஷண்முகனையும் அமைத்துப் பூசித்துக் கொண்டிருக்கின்றான் என்பர்.

(இந்தக்கதை சற்று மாறுபட்ட முறையில் காசி கண்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கத்தைக் காசிநகர் அக்னீசுவரர் என்ற கட்டுரையில் காண்க பக்கம் 538.

\- 2 -

மேலே சொல்லப்பட்டது, கயிலையில் தோன்றிய அக்னி விசுவாநரனுக்கு மகனாகித் தவம் புரிந்து திக்பாலகனாகப் பதவிபெற்ற கதையாகும். இனி அவன் வாயுதேவனிடம் சாபம் பெற்று, அது நீங்க வேண்டிச் சிவபூசை செய்து, சிவனருள் பெற்ற வரலாற்றைக் காணலாம்.

ஒரு காலத்தில் அக்னிதேவனுக்கும், வாயு தேவனுக்கும் சண்டை மூண்டது. அப்பொழுது அக்னிதேவன், நான் ஒருவனே சர்வவல்லமை படைத்தவன். எவர் என்னை எதிர்த்தாலும் அவரைச் சுட்டுச் சாம்பலாக்கி விடுவேன். நான் தாக்கத் தொடங்கினால் மலையானாலும் வெடித்துச் சிதைந்து பொடிப்பொடியாகிவிடும். அப்படியிருக்கையில் மரஞ்செடி கொடிகளைப் பற்றிக் கூற வேண்டுமோ? இதனாலன்றோ சர்வயுக சங்கார காலத்திலும், இடையிலே உண்டாகின்ற சங்கார காலங்களிலும் பரமசிவன் என்னையே துணையாகக் கொண்டு அவற்றை அழிக்க ஏவுகின்றார், என்னைப்போல எதனையும் சுட்டுத் தூய்மையாக்குகிறவர் உலகில் எவரும் இல்லை. என்னால் தூய்மைபெற்றத் திருநீற்றையே பெருமான் விபூதியாகத் தனது திருமேனியில் அணிகின்றார். சிவனடியார்களும் அதனையே போற்றி அணிந்து வருகின்றனர் என்று பலவாறு கர்வத்துடன் அகங்காரம் கொண்டு கூறினான்.

அதைக்கேட்ட வாயுதேவன், "ஓ அக்னி தேவனே! பிரபஞ்ச உற்பத்தியின் போது நீ என்னிடமிருந்து தோற்றுவிக்கப் பெற்றவனல்லவா? அதனால் நீ எனக்கும் மகனாவாய். என்னுடைய உதவியாலன்றோ எதையும் எரித்துச் சாம்பலாக்கு கின்றாய்? என்னிடம் நிரம்பியுள்ள அடக்க உணர்வு ஏன் உன்னிடம் இல்லாது போய்விட்டது?

நீ நல்லது, கெட்டது என்ற எதையும் விடாது எதைப் பற்றினாலும் அதை எரித்து உண்டு விடுகின்றாய். தீயவற்றை உண்பதால் உனக்குத் தீயஉணர்வு மேலோங்கி விட்டது போலும்! அதனால்தான் இப்பொழுது முறை கெட்டு வீணாகப் போரிட்டு என்னை அவமதிக்கின்றாய்.

"ஆதலால் நீ என் ஆற்றலுக்கு முன்னே நிற்காது அவிந்து போவாய். உனக்கு என்றென்றும் தணியாத யானைத்தீ என்ற பசி உண்டாகட்டும்" என்று சாபமிட்டார்.

இதனால் தேவர்கள் அக்னிதேவனைப் புனிதமானவன் என்று போற்றினாலும், அவன் இறந்த உடல்களையும் புனிதமற்றவைகளையும் உண்பவன் என்று இகழ்ந்தும் பேசினார். அவன் எவ்வளவு தீனி தின்றாலும் அவை ஒரு நொடியில் ஜீரணமாகிவிட்டன. மேலும் வாயுதேவன் தந்த சாபத்தால் அவனால் ஓங்கி எரியமுடியவில்லை. அடிக்கடிக் குளிர்ந்து போனான்.

முனிவர்கள் வளர்க்கும் வேள்வியில் உண்டாகும் அக்னி அடிக்கடி அடங்கிப் போனதால் அவர்களும் அக்னியின் மீது கோபங்கொண்டு அவனைச் சபித்தனர். இப்படிப் பல விதங்களிலும் அக்னி ஓயாது துன்புற்றான். அக்னி பகவான் பல இடங்களில் அலைந்து துன்புற்று, இறுதியில் குலகுருவான வியாழ பகவானைச் சரணடைந்தான்.

அவர் அவனை நோக்கி, "அக்னி தேவனே தந்தையின் சாபம் பொல்லாதது. நீ வீணாக உனது அகங்காரத்தால் உன் தந்தை முறையுடைய வாயு தேவனின் சாபத்தைப் பெற்றுக் கொண்டாய். அது நீங்கவேண்டுமானால் சிவபூசை செய்ய வேண்டும். சிவபூசையொன்றே எல்லா குற்றங்களையும் சாபங்களையும் நீக்கவல்லதாகும்.

எனவே நீ, சோழமண்டலத்தில் புன்னாக வனத்தில் எழுந்தருளி யுள்ள கோணப்பிரான் என்ற சிவலிங்கத்தை வழிபடு. அதனால் உனக்குற்ற இடர் நீங்கும் என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதன்படியே அக்னி பகவான் பூமிக்கு வந்து திருப்புகலூரில் புன்னாக வனத்தில் சுயம்பு மூர்த்தி யாக எழுந்தருளியிருக்கும் கோணப்பிரானைக் கண்டான். அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான். அன்பினால் மலர்கள் கொண்டு அர்ச்சித்தான். அங்கு நெடுநாட்கள் தங்கித் தவம் இயற்றினான்.

அவனுடைய இடையறாத பக்தியால் மகிழ்ந்த சிவபெருமான் அந்த லிங்கத்தினின்று அவன் முன்பு வெளிப்பட்டு அவனுக்கு அருள்பாலித்தார். அவன் அவரைக் கண்ணீர் மல்கத் தொழுதான். அவருடைய திருவடிகளில் வீழ்ந்து, "பெருமானே நான் எதைத் தீண்டினாலும், எதை உண்டாலும் எனது சிறப்புக் குறையாதிருக்கவேண்டும். என்னிடமிருந்து எனது புனிதத்தன்மை என்றும் நீங்காதிருக்க வேண்டும். இந்தத்தலம் எனக்குப் புகலளித்ததால் புகலூர் என்றும், எனது பெயரால் தாங்கள் அக்னீசுவரர் என்று அழைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். அதன்படியே திருப்புகலூர்ப்பெருமான் அக்னீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

சிவபூசையின் அருமையை உணர்ந்த அக்னி மேலும் பலவேறு தலங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறுபெற்றான். இதனைக் கஞ்சனூர், திருஆவினன்குடி, திருவண்ணாமலை முதலான அனேக தலங்களின் புராணங்களால் அறியலாம்.

திருப்புகலூர் அக்னீச்சரம்

அக்னி சிவவழிபாடு செய்து அருள் பெற்ற தலங்களில் உயர்ந்ததாகப் போற்றப்படும் "திருப்புகலூர்" திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம் - நாகபட்டினம் சாலையில் உள்ளதாகும். ஊரின் மையத்தில் பெரிய அளவில் திருக்கோயிலும் அதனைச் சுற்றிலும் 135 அடி அகலமுள்ள அகழியும் உள்ளன. அகழியைத் தென்கிழக்கில் தூர்த்து, கோயிலுக்குப் பாதை அமைத்துள்ளனர். இந்த அகழியே அக்னி தீர்த்தம் என்றழைக்கப் படுகின்றது.

அக்னி இங்குப் புன்னைவனத்தில் புகல டைந்து சிவனை வழிபட்டதால் இது புன்னாகவனம் எனவும் திருப்புகலூர் எனவும், பெருமானின் பெயர் அக்னீசுவரர் என்றும் வழங்குவதாயிற்று. இங்கு பெருமான் அக்னிக்குச் சந்திரசேகரர் வடிவில் காட்சி கொடுத்ததால் அந்த மூர்த்தியே முதன்மை மூர்த்தியாக விளங்குகிறது. அவருக்கு நேர் எதிரில் சிவாக்னியாக சாரூபநிலை பெற்ற அக்னிபகவான் மூலவராக எழுந்தருளியுள்ளார். அக்னியின் பெரிய உலாவடிவமும் உள்ளது. மூலவர் உற்சவர் ஆகிய இரண்டு அக்னி வடிவங்களும் கலைச்சிறப்பு மிக்கனவாக விளங்குகின்றன. இவ்விரண்டு வடிவங்களிலும் அக்னி இரண்டு முகங்கள், நான்கு கொம்புகள், மூன்று கால்கள், ஏழு கரங்கள் கொண்டவராக விளங்குகின்றார். அவர் இங்கு அஞ்சிப், புகலடைந்திருப்பதால் தனது முன்னிரு கரங்களைக் கூப்பிக்கொண்டும், மற்ற கரங்களைத் தொங்க விட்டுக் கொண்டும் உள்ளார்.

பெருந்திருவிழாவின் இறுதிநாளில் அக்னிக்கு அருளும் வகையில் பக்த காட்சி உற்சவம் நடைபெறுகின்றது. இந்நாளில் அக்னி முன்னே செல்ல சந்திரசேகரர் நடனமாடியபடியே அவனுக் குப் பக்தகாட்சி வழங்குகின்றார்.

இந்த ஆலய ராஜகோபுரத்தில், அக்னி வழிபட்டுப் பேறுபெற்ற தலவரலாற்றுக் காட்சிகள் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டு ள்ளன. இதில் வாயுவும் அக்னியும் வாதிடல், அக்னி சோர்ந்து விழுதல், அக்னி குலகுருவினை வழிபடுதல், அக்னி சிவபூசைசெய்தல், சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்தல் ஆகியன இடம் பெற்றுள்ளன. திருப் புகலூர் புராணவரலாறு அக்னி இங்கு வழிபட்டுப் பேறு பெற்றதைத் தனிச்சிறப்புடன் கூறுகின்றது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலவிதமான அக்னிதேவர்கள்

சமய உலகிலும், இலக்கிய உலகிலும் பலவேறு அக்னிகளும் அவற்றின் இயல்புகளும் பேசப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

திக்பாலக அக்னி - தருமபுரி

திக்பாலக அக்னி

உலகினை எட்டு திசைகளில் இருந்தும் காத்துவரும் அஷ்டதிக் பாலகர்களில் ஒருவனாக விளங்கும் அக்னியின் திசை தென்கிழக்காகும். இவன் இரண்டுமுகமும் நான்கு கொம்புகளும், நான்கு கரங்களும் கொண்டவன். தலையின் மீது ஏழுசுடர்கள் விளங்குகின்றன. இவன் நெய்பாத்திரம், சிருக், சுருவம், விசிறி ஆகியவற்றை ஏந்தியவனாகக் காட்சியளிக்கின்றான். இவனுடைய மனைவி ஸ்வாகாதேவி என்றழைக்கப்படுகின்றாள். இவனுக்கு ஆடு வாகனமாகும்.

சிவபூஜாதுரந்தரர்கள் பஞ்சாவரண பூஜையிலும் திருவிழா நாட்களில் நடைபெறும் திக்பந்தன பூஜையிலும் இந்தத் திசைபாலக அக்னியைச் சிறப்புடன் பூசிக்கின்றனர்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் அஷ்டதிக்பாலகர்களுக்கான உலாத்திருமேனிகள் உள்ளன. அதில் திக்பாலக அக்னியின் உருவமும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. கஞ்சனூர் முதலிய திருத்தலங்களிலும் அக்னிதேவனின் உலாத்திரு மேனியைக் காண்கிறோம்.

வேதம் கூறும் மகா அக்னி

அக்னி தேவர்களில் இவரே தலைசிறந்த அக்னியாகப் போற்றப்படுகின்றார். இவர் இரண்டு முகமும், நான்கு கொம்புகளும், ஏழு தீ நாக்குகளும் ஜ்வாலா முடியும், ஏழு கரங்களும், மூன்று திருவடிகளும் கொண்டவராகத் திகழ்கின்றார். இத்தகைய அழகிய திருமேனியை மூலவராகவும் உற்சவராகவும் திருப்புகலூர் அக்னீசுவரர் ஆலயத்தில் கண்டு மகிழலாம்.

இவருக்கு ஆடு வாகனமாகும். இவருடைய மனைவி ஸ்வாகாதேவி ஆவாள். வேதங்களில் சொல்லப்படும் அக்னி இவரே.

வேதங்களில் சொல்லப்பட்டுள்ள இந்த அக்னி உலகெங்கும் பரந்திருந்தாலும் அவர் வசிக்குமிடம் அக்னி மண்டலம் எனப்படும். இங்கு இவரும், இவருடைய கணங்களும் அநலர் என்று அழைக்கப்படுகின்றனர். இங்கு இவர் அபிமானன் என்ற பெயருடன் விளங்குகின்றார். இவருக்குப் பவமானன், பாவகன், சுசி என்ற மூன்று குமாரர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் பதினைந்து புதல்வர்கள் உள்ளனர். அபிமானன், அவனுடைய மூன்று குமாரர்கள் அவனுடைய பேரர்கள் நாற்பத் தைந்து பேர்கள் ஆக அநலர்கள் நாற்பத்தொன் பதின்மராவர். இவர்கள் தனது கணங்களுடன் இங்கு வசிக்கின்றனர். (அனல்-அநலன்=நெருப்புக்கடவுள்).

வேதங்களில் சொல்லப்பட்டுள்ளபடி வளர்க்கப்படும் அக்னிக்கு "வைத்க அக்னி" என்பது பெயர்.

காலாக்னி உருத்திர வடிவம்

இந்த வடிவம் யுகசங்கார காலத்தில் சிவ பெருமான் கொள்ளும் வடிவம். இந்த வடிவத்தின் வர்ணனையை அனேக புராணங்கள் சிறப்புடன் விளக்குகின்றன. இதன்படி காலாக்னி தேவரின் உருத்திரலோகம் அண்டகடாகத்தின் கீழே விளங்குகின்றது. அதனைச் சுற்றி ஐந்துயோசனை தூரம் புகை மண்டலம் விளங்குகின்றது. யுக சங்கார

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலத்தில் இங்கிருந்து அக்னி எழுந்து பூமியின்மீது மழையாகப் பொழியும். அதில் சங்காரதேவரான சிவபெருமான் தீயாடி மகிழ்வார். எங்கும் நெருப்பு வெள்ளம் சூழ்ந்து உலகம் ஒடுங்கும்.

சிவாக்னி

சிவாகம சம்பந்தமான வேள்விச் சாலைகளில் வளர்க்கப்படும் வேள்வித்தீயே சிவாக்னி எனப்படும். இந்தத் தீயை உண்டாக்கிப் பூசிக்க வேண்டிய முறைகளைச் சைவசமய பூஜாபத்ததி நூல்கள் சிறப்பாகக் கூறுகின்றன. இந்த அக்னியைச் சிவவடிவமாகவே போற்றுகின்றனர்.

சிவாக்னிதேவர் சிவந்தவண்ணம், கொண்டவர் இவருக்கு ஐந்து முகங்கள், பதினைந்து கண்கள், ஏழு நாக்குகள், பத்து கரங்கள் உள்ளன. சிவப்பு ஆடை அணிந்து சிவப்பு நிறம் கொண்ட ஆபரணங்களைப் பூண்டு பத்மாசனத்தில், இடபவாகனத்தின் மீது வீற்றிருக்கின்றார்.

சிவாக்னி தேவரின் நான்கு திசை நோக்கிய நான்கு முகங்களில் நான்கு நாக்குகளும் மேன் முகத்தில் மூன்று நாக்குகளுமாக ஏழுநாக்குகள் அமைகின்றன. இவை ஹ்ரண்யை, கனகை, ரக்தை, கிருஷ்ணை, சுப்பிரபை, அதிரக்தை, பகுருபை என்று பெயர் பெறுகின்றன.

இந்த அக்னி பாலாக்னி, தருணாக்னி, விருத்தாக்னி என்ற பலவேறு வடிவங்களில் காட்சியளிக்கின்றார். மிகவும் உயர்ந்த முறையில் செய்யப்படும். சிவயாகசாலையில் வளர்க்கப்படும் அறுபத்துநான்கு யாககுண்டங்களில் இவர் அறுபத்து நான்கு பெயர்களில் (வடிவங்களில்) இருப்பார் என்று தியானச் சுலோகங்கள் கூறுகின்றன.

சிவாக்னிக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. பிறதெய்வங்களைத் தியானித்து உடனே அழைத்து அவர்களைப் பூசிக்கின்றோம். ஆனால் சிவாக்னியை மட்டும் அவருடைய தாய் தந்தையரான ★வாக்சுவரர் வாக்சுவரியின் திருமணம் தொடங்கி அவர்களிடம் அக்னி கருவாக தோன்றி வளர்தல், சிவாக்னி என்று பெயர் பெறுதல் என்று படிப்படியாக மந்திர முறைப்படிக் கூறி வழிபடுகிறோம்.

★ வாக்சுவரர் - வாக்சுவரி விவரங்களைத் தனிக்கட்டுரையில் காண்க. பக்கம் எண். 539

சிவாக்கினி - தேவா

ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளபடி படிப்படியாக வளர்ந்து நலம்தரும் சிவாக்னியைப் பூசிக்கும் முறையைத் தொடர்ந்து காணலாம்.

சிவசம்பந்தமான யாகத்தின் ஆரம்பத்தில் ஐந்து முகங்களும், பதினைந்து கண்களும், வெண்மையான நிறமும், நான்கு கரங்களும், அவற்றில் வரம், அபயம், அட்சமாலை, தாமரை ஆகியவற்றைக் கொண்டவரான வாக்சுவரரைத் தியானிக்க வேண்டும். அதன்பிறகு அவருடைய தேவியாகிய வாக்சுவரியைத் தியானிக்க வேண்டும்.

பிறகு அந்த தேவியின் கர்ப்பத்தில் அக்னி தேவர் உருவாகி இருப்பதாகப் பாவித்து யாககுண்டத்தில் நன்கு கனன்ற நெருப்புத்துண்டை வைக்க வேண்டும். பிறகு கருவுற்றுள்ள வாக்சுவரிக்கு ஒரு தர்ப்பையாலாகிய கங்கணத்தை அணிவிப்பதாக எண்ணி யாககுண்டத்தில் அதனைப் போட வேண்டும்.

பிறகு அவள் வயிற்றில் கருவளர்வதாகப் பாவனை செய்து, மூன்றாம் மாதத்தில் ஜீவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாதல், ஆறாம் மாதம் சீமந்தம் என்கிற பூச்சூட்டல், பிறகு அந்த கருவில் இருக்கும் அக்னிக்கு முகம், கை, கால் ஆகியன நன்குவளர மந்திரங்களைச் சொல்லி எள்ளால் ஹோமம் செய்ய வேண்டும்.

பத்தாம் மாதம் முடிந்து, அக்னிக் குழந்தை பிறந்ததாகப் பாவனை செய்து, வாக்சுவரி தேவியின் கரத்தில் அணிவிக்கப்பெற்ற தர்பைக் கங்கணத்தை நீக்கி வலது கையில் அக்னிபாலகன் நன்கு வளர பொற்கங்கணம் கட்டியதாகப் பாவிக்கவேண்டும்.

யாககுண்டத்திலுள்ள அக்னியை (விசிறியால் விசிறி) ஜொலிக்க வைத்தபிறகு அந்த அக்னிக் குழந்தையைக் காக்கவேண்டும் என்று கூறிப் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், அனந்தர் முதலான தேவர்களையும், அஷ்டதிக்பாலகர்களையும் பிரார்த்திக்கவேண்டும். இந்த அக்னி பாலகனின் திருவுருவம் மூன்று முகங்களையும், ஆறுகண் களையும், ஆறுகரங்களையும், கொண்டு அதில் சுருவம், விசிறி, நெய்பாத்திரம், சக்தி, அட்சமாலை, கூரிய தோமரம் ஆகியவற்றை ஏந்தியவராகத் தியானிக்கப்படும். இவர் "பாலாக்னி" என்று அழைக்கப்படுகின்றார்.

பிறகு காதணிவித்தல், அன்னமூட்டல் முதலான பலவித கிரியைகளைத் தொடர்ந்து அக்னிக்கு நாக்குகள் உண்டாவதற்கானப் பூசை செய்யப்படுகிறது. இப்படி உண்டாகும் ஏழு நாக்கு களுக்கு ஹிரண்யை, கனகை, ரக்தை, கிருஷ்ணை, சுப்பிரபை, அதிரக்தை, பகுருபை என்பன பெயர் களாகும். பிறகு இந்த ஏழு நாக்குகளையும் ஒன்றாக்கி அதில் பூர்ணாகுதி செய்ய வேண்டும்.

பிறகு, வித்யாரம்பம், திருமணம் முதலா னவை நடந்ததாகப் பாவிக்கவேண்டும். தொடர்ந்து அவரைக் குமரப்பருவம் கொண்டவராகப் பூசிக்க வேண்டும். பிறகு அக்னியை விருத்த வடிவம் கொண்டவராகத் தியானிக்க வேண்டும்.

விருத்தாக்கினி தேவர் பிங்கள வண்ண முடையவராய் ஜடாமகுடம் தாங்கி மூன்று கண் களுடன் வலதுகரத்தில் கமண்டலம், அட்ச மாலை யும் இடதுகையில் சுருவம், தோமரம் தரித்தவராய் இடபவாகனத்தில் வீற்றிருப்பவராய் வெண்மையான பூணூலையும், புலித்தோலையும் அணிந்து வயோதிக தோற்றமுடையவராய் நித்யாக்னி என்று பெயர் கொண்டவராய் தியானிக்கப்படுகின்றார். பிறகு அனைத்து தேவர்களுக்கும் பலி நமஸ்காரம் முதலியவற்றைச் செய்யவேண்டும்.

இதன்படி சிவாக்னி, (பாலாக்னி என்ற) குழந்தைவடிவான அக்னி, (யௌவனாக்னி என்ற) குமாரப்பருவத்தில் உள்ள அக்னி, (விருத்தாக்னி என்ற) வயது முதிர்ந்த அக்னி என்ற மூன்றாகவும் காட்சியளிப்பது தெரிய வருகின்றது.

வடநாட்டு ஓவியங்கள் பலவற்றில் அக்னி நீண்ட செம்பட்டையான தாடியை உடையவராகவே காட்டப்பட்டுள்ளார். சிவாகமங்களில் சிவாக்னிக்கு இடபவாகனம் சொல்லப்பட்டிருந்தாலும் ஆட்டு வாகனமே நடைமுறையில் இருந்து வருகின்றது.

வடவாமுகாக்கினி

பரமேசுவரனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றி மன்மதனை அழித்தத் தீயானது கயிலாயத் திலுள்ளவர்களை நடுங்கச் செய்தது. அப்போது பிரமதேவன் அந்தத் தீயை ஒரு பெண்குதிரை வடிவம் கொள்ளச் செய்து, வடகடலின் அடியில் தங்கவைத்தார். ஊழிக்காலத்தில் அந்தத் தீ வெளிப்பட்டு உலகினை அழிக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன இதுவே வடவைத் தீயாகும்.

இந்த வடவைத்தீயைப் பற்றிய வேறுசில கதைகளும் உள்ளன. 1. பகன் என்பவன் தான் செய்த தவம் ஒரு அக்னியாகமாற அதை அவன் பிதுர்களின் கட்டளைப்படி கடலுக்கடியில் வைத்தான். அது பெண்குதிரை வடிவம் கொண்டு அங்கேயே தங்கியது. 2. ஒரு சமயம் சூரியனின் வெப்பத்தைத் தாளமாட்டாது உயிர்கள் வருந்த அவனுடைய மாமனான விசுவகர்மா அவனைச் சாணைபிடித்தான். அப்போது அவனிட மிருந்து தெறித்த தீப்பொறிகள் ஒன்று சேர்ந்து குதிரைமுகம் கொண்டதாகமாறியது. அதனை அவன் கடல்நீரானது பெருகிவிடாதிருக்கும் பொருட்டுக் கடலுக்கடியில் வைத்தான் என்பர். இன்னும் பல கதைகளும் உள்ளன. கதைகள் பலவாக இருந்தாலும் இந்தத் தீ குதிரைமுகம் கொண்டது அது ஊழிக்காலத்தில் கடலிலிருந்து வெளிப்பட்டு உலகினை அழிக்கும் என்பதில் கருத்து வேறுபாடுகள் இல்லை.

சிவபெருமானின் கரத்தில் திகழும் நெருப்பும் வடவாமுகாக்கினியாகும். இதனை திருஞானசம்பந்தப் பெருமான் முகிழ் மலி கனி வடமுகம் உறை தருகரன் என்று திருமறைக்காட்டுப் பதிகத்தில் குறித்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரிபாதமூர்த்தி என்ற அக்னி சிவம்

சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளபடி சிவசம்பந்தமான வேள்விச் சாலைகளில் தோன்றி அருள்பாலிக்கும் சிவாக்னி தேவரை முன்பு கண்டோம். அது அவர் வேள்விச்சாலையில் யாககுண்டத்தில் அக்னி வடிவில் விளங்கும் போது கொள்ளும் மந்திரவடிவமாகும். அது இல்லாமல் சிவபெருமான் முனிவர்களுக்குத் தானே ஒரு பெரிய மகாக்னி தேவராகக் காட்சியளித்ததைப் புராணங்கள் குறிக்கின்றன. அதனை சிவபராக்கிரமும் லிங்கபுராணமும் சிறப்பாகக் குறிக்கின்றன. அதனை அடியொற்றிக் கருவூர்த்தேவர் தனது சாட்டியக்குடி திருவிசைப் பாவில் இந்த அக்னி சிவத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். மேற்கண்ட நூல்களில் உள்ள அக்னி சிவத்தைப் போற்றும் பாடலையும் அதன் பொருளையும் தொடர்ந்து காணலாம்:-

பஞ்சவிம்சதி மூர்த்தித் தியானம்

சிவபெருமானின் இருபத்தைந்து மூர்த்தங்களைத் துதிக்கும் பஞ்சவிம்சதி மூர்த்தித் தியானம் என்ற நூலில் பத்தொன்பதாவதாக அக்னிசிவ மூர்த்தியின் தியானம் சொல்லப்பட்டுள்ளது. இதன்படி சிவபெருமானின் அக்னி மயமான திருக்கோலம் ஸ்ரீகைலாசகிரியில் அக்னி கோணத்தில் அக்னிசிவமாக எழுந்தருளியுள்ளது. இந்த மூர்த்தியைத் திரிபாத மூர்த்தி எனவும் கூறுவர். இந்நூல் இந்த மூர்த்தத்தை

இருதலையும் எழுகையும் மூன்றுதாளு(ம்)
இலங்கிய நாற்கொம்பும் இறைவன் தன்னை
கருதலை நீ உறுவைஎனிற் தாதமாதி
கரைமூன்று பாதமுனக் கெய்தும் என்னத்
தருதலையோர் நான்குடைய பிரமன் வாயிற்
சார்வாணி கூறுதலால் அத்தகுதி யாக
மருதலையில் உடைய வகுளாதி யான்
மலர்தூவி அலரடிகள் மன்னி வாழ்வாம்.

என்று கூறித்துதிக்கின்றது.

இதன் பொருள்:- இரண்டு தலைகளும், மூன்று கால்களும், நான்கு கொம்புகளும், உடைய அக்னி சிவத்தை நினைந்து வழிபட்டால் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் எளிதில் சித்தியடையும் என்று நான்முகனாகிய பிரமதேவனின் வாக்கில் வசிப்பவளாகிய வாணி சரஸ்வதி கூறுகின்றாள். ஆதலின் அத்தகைய ஆதியருட் பிரகாசமான அக்னி

சிவத்தின் திருவடிகளில் மலரிட்டு வழிபட்டு அருள்பெற்றுச் சிறந்து வாழ்வோமாக என்பதாகும்.

லிங்கபுராணம் காட்டும் அக்னிசிவம்

பதினெட்டு மகாபுராணங்களில் ஒன்றாகிய லிங்கபுராணத்தின் தமிழ்மொழி பெயர்ப்பில் அமைந்துள்ள அக்னி சிவத்தைக் குறிக்கும் பாடல் :-

தீங்கில் உயர் கொம்பு திகழ் சென்னிகளிரண்டும்
வீங்கு புயமேழு மெழில் மேவு பதமூன்று
மாங்குடைய வெச்ச முதற்றே வினையமைத்தோர்
வாங்கு திரை மண்புரத்து வானுலகில் வாழ்வார்.

என்பதாகும். இதன் பொருள்:-

நன்மையைச் செய்கின்ற உயர்ந்த நான்கு கொம்புகளுடன் கூடிய இரண்டு முகங்களும், ஏழு தோள்களையும் மூன்று திருவடிகளையும் உடைய முதன்மைபெற்ற அக்னிசிவத்தை வழிபடுவோர் கடல் சூழ்ந்த மண்ணுலகில் பலசுகங்களையும் பெற்று, வானுலகில் சிறந்த சுகத்துடன் நெடிது நாள் வாழ்வர் என்பதாகும்.

திருவிசைப்பா கூறும் அக்னிசிவம்

திருவிசைப்பாவில் கருவூர்த்தேவர் சிவபெருமானைத் தீயின் வடிவமாகவே போற்றுகின்றார். திருச்சாட்டியக்குடிக்கு அருளிய திருவிசைப்பாவில் திருமகள் என்று தொடங்கும் பாடலில் சிவபெருமானுக்கு திருமகன் முருகன்; தேவி-உமையவள்; தமக்கை திருமகள்; மருமகன் மன்மதன்; மாமன் இமவான்; தோழன் குபேரன்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்படி சொந்தங்களோடு வீற்றிருக்கும் அவருக்குப் புதுமை வடிவம் ஒன்று விளங்குகிறது. இந்த வடிவம் இரண்டு முகமும், ஏழு கரங்களும், ஏழு நாக்குகளும் கொண்ட பெருந்தீயின் வடிவமாக விளங்குகிறது என்று குறிக்கின்றார். அப்பாடல் :

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகன் மருமகன் தாயாம்
மருமகன் மதனன், மாமனேல் இமவான்
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனாம், சிவபுரான் தோழன்
தனபதி, சாட்டியக்குடியார்
இருமுகம், கழல்மூன்று, ஏழுகைத் தலமேழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே.

என்று கூறித் துதிக்கின்றது.

மேலும் பலநூல்களில் இந்த வடிவத்தைப் பற்றிய சிறப்பான விளக்கங்களைக் காண்கிறோம்.

வேதாக்னி - ஆகமாக்னி

சிவபெருமானின் "அக்னிமயமான அக்னிசிவம்" என்ற கோலம் தனிச்சிறப்புடையதாகும். வேதங்களும் புராணங்களும் இதனைச் சிறப்புடன் போற்றுகின்றன. ரிக்வேதத்தில் இந்த அக்னி சிவத்தைப் பற்றிய ஒரு ரிக் உள்ளது. (மந்திரம்) அதனை கீழே காண்க. இதனை அடியொற்றிப் புராணங்களும், திருமந்திரம், திருவிசைப்பா முதலிய நூல்களும் அக்னியைப் பாடிப் பரவுகின்றன.

திக்பாலகனான அக்னி திருப்புகலூரில் சிவபெருமானை வழிபட்டு இந்த சிவாக்கினிரூபத்தின் வடிவைப் பெற்றான். அதனால் அவனுக்கு அவரைப் போலவே ஏழு கரங்களும், மூன்று கால்களும், இரண்டு முகங்களும், அமைந்துள்ளன. இதுவே அதிக அளவில் நடைமுறையில் இருந்து வரும் அக்னியின் வடிவமாகும். இதற்கு முற்றிலும் மாறாக சிவாகமங்கள் சிவாக்கினிதேவரைச் சதாசிவதேவராகப் போற்றுகின்றன. அதன்படி அவர் ஐந்து முகங்கள் பத்து கரங்கள் பதினைந்து கண்கள் கொண்டு தாமரையாசனத்தில் இடபத்தின் மீது வீற்றிருக்க காண்கிறோம். மேலும் இவர் குழந்தையாகவும் காளைப் பருவத்தினனாகவும் வயோதிகனாகவும் மூன்று வடிவங்களில் விளங்குகின்றார். திருமூலர் திருமந்திரத்தில் வேதம் கூறும் அக்னியையும் ஆகமங்கள் கூறும் அக்னியையும் விளக்குவதுடன் மேலும் பல அக்னியின் மந்திர திருமேனிகளையும் விளக்குகின்றார் (பார்க்க பக்கம் 542).

வேதம் கூறும் உருத்திராக்கினி

வேதங்களில் அக்னி பல இடங்களில் புகழப் படுகிறார். பெரும்பாலான இடங்களில் அக்னி என்ற சொல் நெருப்புக்கடவுளைக் குறித்தாலும் பல இடங்களில் உருத்திரனைக் குறிக்கின்றது. சில இடங்களில் சூரியனையும், சில இடங்களில் பிராமண ஸ்பதியையும் குறிக்கின்றது. ரிக்வேதத்தில்,

சத்வாரி ச்ருங்காத்யோ அஸ்ய பாதாத்வே
சீர்ஷே ஸப்த ஹஸ்தசோ அஸ்ய
திருதா பத்தோ வ்ருஷபோ ரோரவீதி
மஹோ தேவோ மர்த்யா னவிவேச் ||

என்ற ஒரு மந்திரம் உள்ளது. இதன் பொருள் நான்கு கொம்புகளைக் கொண்ட இரண்டு தலைகளையும், ஏழுகைளையும் உடையதாய் மூன்று விதமாகக் கட்டப்பட்ட ரிஷபம் கர்ஜிக்கின்றது. இவ்வாறு கடவுள் மனித சரீரத்தில் புகுந்தார் என்பதாகும். இது மகாதேவனான உருத்திரனைக் குறிக்குமென்பர். இந்த மந்திரத்திற்கு தேவதை அக்னி என்றும், சூரியன் என்றும், சப்தப்பிரம்மம் என்றும் பலவாறு கூறப்பட்டு அதற்கேற்றவாறு விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இதனையொத்த வடமொழி மந்திரம் ஒன்று உள்ளது. அது :-

ஸப்தஹஸ்தம் சதுச்ருங்கம்
ஸப்த ஜிஹ்வோஹி சீர்ஷகம் |
த்ருபாத்ப்ரஸ்நநவதன
சுகாஸீனஷ்சுசிஸ்மித ||

என்பதாகும். இவற்றை நோக்க ரிக்வேத காலத்திற்கு முன்பே இரண்டுமுகம், நான்கு கொம்புகள், மூன்று கால்கள் முதலியவற்றுடன் கூடிய உருவமுடையதாக அக்னி வழிபாடு சிறப்புப் பெற்றிருந்ததை உணரமுடிகின்றது. இதைத் தொடர்ந்து எழுந்த பல வடமொழி நூல்களும், திருமந்திரம் முதலான தமிழ் நூல்களும் இந்த அக்னி சிவத்தைப் போற்றுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த அக்னி வழிபாடு

சிவபெருமான் என்ற மகாக்னியிடமிருந்து எண்ணில்லாத அக்னி தேவர்கள் தோன்றி உலகத்தைச் செயல்படுத்துகின்றனர். இவர்களில் சிலரை மேன்மைப்படுத்தி வழிபடுகின்றோம். இவர்கள் அனைவரும் தீயின் வடிவமாகவே இருந்தாலும் தனக்கென தனித்தனிப் பெயர்களும் தன்மைகளும் கொண்டவர்களாவர்.

மகாக்னியான சிவபெருமான் நித்யாக்னி வடிவில் ஆலயங்களில் ஒரே குண்டத்தில் பூசிக்கப்படுகின்றார். அந்தணர்கள் மூன்று சந்திகளிலும் மூன்று தீக்குண்டங்களில் மூன்று தீயினை வழிபடுகின்றனர். தவசீலர்கள் ஐந்து தீக்களின் மத்தியில் நின்று தவம் புரிகின்றனர். சிவ பூஜாதுரந்தரர்கள் கும்பாபிஷேகம் முதலிய சிறப்பு நிகழ்சிகளில் ஒன்பது வகையான குண்டங்களில் ஒன்பது பெயர்களில் சிவபெருமானைப் பூசிக்கின்றனர். மேலும் அறுபத்து நான்கு குண்டங்களை அமைத்து அறுபத்து நான்கு பெயர்களால் வழிபடுவதும் உண்டு. இப்படி ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது, பதினொன்று, நாற்பத்தொன்பது, அறுபத்துநான்கு என்று பலவேறு எண்ணிக்கையில் அமைந்த அக்னியின் வடிவங்களையும் அதன் சிறப்புக்களையும் காணலாம்.

முத்தீ

இந்திய மரபில் நீண்ட நெடுங்காலமாகப் போற்றப்பட்டுவரும் "தீ" வழிபாடுகளில் முதன்மை பெற்றது முத்தீவழிபாடாகும்.

சிவபெருமான் தீயில் மூன்று வடிவமாக இருக்கின்றான். இது,

விண்ணத்தில் ஒன்றாய்
மிக்கு வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்
செந்தீ தன்னுருவில் மூன்றாய்
தாழ்புனலில் நான்காய்
தரணிகலத்து அஞ்சாகி
எஞ்சாத்தஞ்சமண் உருவை என்றும் "செந்தீ தன்னுருவில் மூன்றாய்" என்றும் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றில் அந்தணர்கள் வளர்க்கும் இந்த முத்தீ இமயமலையிலும், பொதிகைமலையிலும் விளக்குகள் போல் பிரகாசிக்கின்றன என்று குறிக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இந்த முத்தீயை அந்தணர்களின் செல்வம் என்று கூறுகின்றது. சமயவழிபாட்டிலுள்ள இந்த முத்தீக்குப் பலவகையான பெயர்கள் உள்ளன.

-: 1 :-

அந்தணர்கள் மூன்று சந்திகளிலும் இந்த செந்தீயை வேட்டுச் சிவாக்னி காரியமான வேள்விகளைச் செய்து உலக நன்மைக்காகச் சிவபூசை செய்கின்றார்கள். சிவபெருமான் இவர்களுடைய வேள்விக் குண்டத்தில் முத்தீயின் வடிவமாக விளங்குகின்றார்.

ஞானசம்பந்தப்பெருமான் சிவபுரப்பதிகத்தில் "முத்தன்காண் முத்தீயும் ஆயினான் காண்" என்றும் ஒன்றிய இருபிறப்பர் முத்தீ ஓம்பும் உயர்புகழ் நான்மறை ஓமமாம் புலியூர் என்றும் குறிக்கின்றார். மேலும் சிவபெருமான் இந்த வேள்வியில் உள்ள செந்தீயின் வடிவமாக இருப்பதை

"அந்தியோடு உதயம், அந்தணாளர்
ஆநெய்யால் வேட்கும் "செந்தழல் உருவர்" என்றும் குறிக்கின்றார்.

இந்த முத்தீயின் வடிவமாக விளங்கும் சிவபெருமானைப் பலநூல்கள் பலவேறு வடிவமாகக் குறிக்கின்றன. முதல்வகையில் இது பாலாக்கினி, யௌவனாக்கினி, விருத்தாக்கினி என்று அழைக்கப்படும்.

அக்னி இருள் கரைந்து பொழுது புலரும் வேளையாகிய காலை சந்தியில் பாலகன் வடிவில் விளங்குகின்றது. உலகின் செழிப்பு கருதி இந்த சிவாக்னி பாலகன் வணங்கப்படுகின்றான். (காசியில் அக்னியின் தந்தையாகிய விசுவாநரனுக்கு சிவபெருமான் எட்டு வயதுப் பாலகனாகக் காட்சி தந்தது இங்கு நினைவு கொள்ளத்தக்கது).

முற்பகலும், பிற்பகலும் சந்திக்கும் உச்சிப் பொழுதாகிய நண்பகல் உச்சிப்போதில் வளரும் அக்னி "யௌவனாக்கினி" எனப்படும். இது உக்கிரமயமானது. உலகத்தைக் காக்கும் பொருட்டு இது வணங்கப்படுகின்றது.

பகல் முடிந்து இரவு தொடங்கும் மாலைக் காலமான அந்திப்பொழுதில் வணங்கப்படும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னி வயோதிக வடிவம் கொண்டவராக விளங்குகின்றார். இவரை "விருத்தாக்னி" என அழைப்பர். உலகில் சாந்தியும் அமைதியும் நிலவ இவர் பூசிக்கப்படுகின்றார்.

இப்படி நாள்தோறும் பாலகனாகவும், இளையவனாகவும், விருத்தனாகவும் சிவாக்னி பூசிக்கப்படுவதால் "விருத்தனாய்ப் பாலனாகி" என்று தமிழ்மறையில் பலநூறு இடங்களில் சிவபெருமான் போற்றப்படுகின்றார்.

-: 2 :-

வேதங்களில் கூறியுள்ளபடி அந்தணர்கள் மூன்று சந்திகளிலும் மூன்று தீயை வளர்த்தனர். இவைகளுக்குத் தக்ஷிணாக்னி, காருகபத்யம், ஆஹவனீயம் என்று பெயர். இது உண்டானதற்கான கதையைப் பலநூல்கள் குறிக்கின்றன.

ஒரு சமயம் அக்னிக்குக் கொளுத்தும் சக்தி இல்லாமல் போய்விட்டது. எனவே பிரமன் உள்ளிட்ட தேவர்கள் "சுவாகா" என்ற தேவியை அவனுக்கு மணம் செய்து கொடுத்து, தேவர்களுக்குரிய ஹவிசைப் பெறுக என்று கூறினர். அவள் அக்னிதேவனோடு சேர்ந்து பன்னிரண்டு தேவ வருஷம் கருவைத் தாங்கி மூன்று பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களே தக்ஷிணாக்னி, காருகபத்தியம், ஆஹவனீயம் என்று பெயர் பெற்றனர்.

இதில் காருகபத்தியம், வீடுகளில் வழிபாட்டிற்கு வளர்க்கப்படும் தீயாகும். இது பிரம்மனின் அருளால் உண்டானது. ப்ருதிவி இதன் அதிதேவதையாகும். இது வட்டவடிவமானது. இதனை வணங்குவதால் இல்லத்தில் செழிப்பு உண்டாகும்.

ஆஹவனீயம் என்பது திருமாலின் அருளால் உண்டானது எல்லா ஹவிசையும் சுமந்து சென்று தேவர்களுக்கு அளிப்பது. இதுவே சுவர்க்கமாகவும் அதனைத் தருவதாகவும் உள்ளது. சுவர்க்கம் நான்கு கோணங்களுள்ள சதுரமாகக் கருதப்பட்ட தால் இது நாற்கோணமான சதுரகுண்டத்தில் வளர்க்கப்பெற்று பூசிக்கப்படுகின்றது. நிர்மலமானது, அமைதியையும் மகிழ்சியையும் தருவது, வியாதிகளை நீக்குவது.

மூன்றாவதான தட்சணாக்கினி, தன்னை வளர்த்து வழிபடுபவனைச் சுகமாகத் தென் திசையில் இன்பமுடன் இருக்கச்செய்வது. இது உருத்திர வடிவானது. மேன்மையுடன் மேலே இருப்பது. கோப வடிவானது. அரை வட்டவடிவில் (அர்த்தசந்திர வடிவில்) உள்ள குண்டத்தில் பூசிக்கப்படுவதாகும்.

-: 3 :-

உயிர்களின் உடலில் மூவகையான அக்னிகளும் உள்ளன. சிவாசாரியார், சிவபூசையில் வளர்க்கப்படும் யாகத்தீயுடன் இந்த மூன்று அக்னி தன்னுடலில் இருந்து எழுந்து கலப்பதாகப் பாவனை செய்து அதற்கான மந்திரங்களை ஓதுவதைக் காணலாம். இது பூதாக்கினி, பிந்துவாக்கினி, ஜடராக்கினி எனப்படும்.

பூதாக்கினி என்பது பஞ்சபூதங்களின் சேர்க்கையாலான உடலில் நிறைந்து நின்று அதனைச் செயல்படவைப்பதாகும். இதனால் குருதியோட்டம், மூளைசெயல்படுதல் முதலியன நன்கு நடைபெறுகின்றன. இதில் மாறுபாடு உண்டானால் உடலில் நோய்கள் உண்டாகும்.

பிந்துவாக்கினி என்பது உயிருடன் இணைந்து நிற்பது. இதனால் உயிர் செயல்படுகின்றது. எண்ணத்திலும், உணர்ச்சியிலும் உண்டாகும் மாறுபாடுகளுக்கு இதுவே காரணம். இதில் மாறுபாடு உண்டானால் ஆவி சோர்ந்து மனஉளைச்சல் உண்டாகும்.

ஜாடராக்கினி என்பது வயிற்றுக்குள் இருப்பது. இது நாம் உண்ணும் உணவை நன்கு ஜீரணிக்கச் செய்து அதன் சக்தியை, உடலோடு கலக்கச் செய்வதாகும். இதனில் மாறுபாடு உண்டானால் ஜீரணசக்தி மந்தமாகிச் சக்தி குறைந்து போகும்.

உயிர் உடலில் தங்கி வாழ இந்த மூன்று அக்னிகள் அவசியமாதலின் இதனை உயிர்த்தீ எனவும் ஜீவாக்கினி எனவும் கூறுவர். இவை சிவனருளால் உடலில் நின்று உடலையும் உயிரையும் ஓம்புவதாகும்.

-: 4 :-

இலிங்கபுராணம் முதலான சில புராணங்களில் அக்னிக்கும் அவனுடைய மனைவியான சுவாகா தேவிக்கும் பிறந்த மூன்று அக்னிகள் கூறப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பாவகன், பவமானன், சுசி என்பன பெயர்களாகும். இவர்களில் முதலாம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வனான பாவகன் அரணிக்கட்டைகளின் இடையே அமர்ந்துள்ளான். வேள்விச் சாலைகளில் அரணி களைக் கடைந்து உண்டாக்கப்படும் (தீயான) இத்தீ பாலகன் வேள்விகளைச் செய்ய உதவுகின்றான்.

இரண்டாமவனான பவமானன் மின்னல் களில் அமாந்திருந்து உலக நன்மைக்காக மழையைப் பொழிவிக்கின்றான். மூன்றாமவனான சுசி குதிரை முகம் கொண்ட வனாவான். இவன் கடலின் அடியில் இருந்து கொண்டு கடல் நீர் பெருகிவிடாமல் பார்த்து கொள்ளுகின்றான்.

இந்த மூன்று பேர்களுக்கும் பதினைந்து பதினைந்து புதல்வர்கள் உண்டு. இவர்கள் 45 பேருடன் தந்தையும் பாட்டனுமான நால்வரையும் சேர்த்து அக்கினி 49 வகையில் காட்சியளிக்கின்றார் என்பர்.

இப்படிப் பல்வேறு நிலைகளில் முத்தீ வழிபாடு நடைபெறுகின்றது. இப்படி இது பல நிலையில் பேசப்பட்டாலும் இந்த முத்தீ சிவனின் வடிவம் என்பதிலும் அது அனைத்து செல்வங்களை யும் அருளவல்லது என்பதிலும் மாற்றமில்லை.

நவாக்னி (எ) ஒன்பான் தீ

– 1 –

சிவாலயங்களில் பெருஞ்சாந்திக்காகச் செய்யப்படும் யாக சாலைகளில் அக்னியின் ஒன்பது வடிவங்கள் பூசிக்கப்படுகின்றன. இவை கார்ஹபத்யாக்கினி, தக்ஷிணாக்கினி, ஆஹ்வனீயம், பாலாக்கினி, யௌவனாக்கினி, விருத்தாக்கினி, கேவலாக்னி, சாமான்யாக்கினி, காலாக்கினி, என்பனவாகும்.

இவற்றில் பாலாக்கினி, யௌவனாக்கினி, விருத்தாக்கினி என்ற மூன்றும் முதல்வகை முத்தீயாகும், இரண்டாவது வகையில் ஆஹவனீயம், கார்ஹபத்னியம், தக்ஷிணாக்னி ஆகிய மூன்றும் முத்தீயாக அமைகின்றன. மூன்றாவதான முத்தீ சாமான்யாக்கினி, கேவலாக்கினி, காலாக்னி ஆகிய மூன்றுமாகும்.

இந்த மூவகையான முத்தீக்களுடன் சிவாக்கினி, சூட்சமாக்னி என்ற இரண்டையும் சேர்த்து மொத்தம் பதினோரு அக்னிகளாகும். இதில் சூட்சமாக்னி என்பது யாகாசார்யனின் உடலில் மூலாதாரத்தீயாக இருந்து வெளிவந்து யாகாக்கினி யில் கலப்பதாகும். சிவாக்னி என்பது மூவகையான முத்தீக்களின் உள்ளே ஆன்மாவாக இருந்து அவற்றை மேன்மைப்படுத்தி இயக்குவதாகும்.

– 2 –

சில நூல்களில் இந்த நவாக்கினியின் பெயர்கள் வேறு விதமாகச் சொல்லப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதிலும் தீயானது மூன்றுவகையான தீக்களாகச் சொல்லப்பட்டுள்ளது. இதன்படி இது முதல்வகையில் சிவாக்னியின் மூவகை உருவங்களான பாலன், யௌவனன், விருத்தன் ஆகியவற்றையும், இரண்டாவது வகையில் மூன்று குணங்களான கேவலம் (தனித்து நிற்றல்) சாமான்யம் (எளிவந்த நிலை) காலம் (முதலும் முடிவும் அற்றநிலை) ஆகியவற்றையும், மூன்றாவது வகையில் மூவகை அருள் நிலையான இல்லற செழிப்பு, தவமருள் செழிப்பு, சுவர்க்கச்சிறப்பு ஆகியவற்றையும் குறிக்கின்றன என்பர். இவை முக்கோணம், சதுரம், ஐங்கோணம், அறுகோணம், எண்கோணம், யோனி, தாமரை, வட்டம், சந்திரன் ஆகிய ஒன்பது வகையான வடிவம் கொண்ட குண்டங்களில் பூசிக்கப்படுகின்றன.

– 3 –

சிவாலயக் கும்பாபிஷேக வேள்விச் சாலை களில் சிவாகமங்களில் கூறியுள்ளபடி அமையும் ஒன்பது விதமான யாககுண்டங்கள் அமைக்கப் படுகின்றன. இவற்றில் வளரும் ஒன்பது வகையான தீயினுக்கு ஆகமப்படியான விளக்கம் கூறப்பட் டுள்ளது. இதன்படி யாகவேதிகையின் எட்டுதிக்கில் அமைந்த எட்டு குண்டங்களில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்று எட்டு இடங்களிலும் வீற்றிருக்கும் சிவனின் அஷ்ட மூர்த்தங்களாவும், கிழக்கிற்கும் வடகிழகிற்கும் இடையே அமைத்த ஒன்பதாவது குண்டத்தில் சதாசிவமூர்த்தியாகவும் ஆக ஒன்பது வகையான அக்னிகளாகச் சிவபெருமான் பூசிக்கப்படுகின்றார்.

ஆக இதன் மூலம் நவாக்னி என்கின்ற ஒன்பது வகைத் தீவழிபாட்டிற்கும் மூன்று வகையான பெயர் விளக்கங்கள் உள்ளதை அறிய முடிகிறது. பெயர்கள் பலவாக இருந்தாலும் குண்டத்தின் வடிவமும், அதனை அமைக்கும் முறையும் அதனால் பெறப்படும் பயனும் ஒன்றேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சிவபெருமானின்" தகன பராக்கிரம மூர்த்தங்கள்

பண்டைக்காலத்தில் அரசர்கள் தமது பகைவர்களை வென்றபின் அவர்களுடைய நகரங்களைத் தீக்கிரையாக்கி விடுவது வழக்கம். இதனால் பகைவர்களின் குலம் நசிந்து அவர்கள் மீண்டும் தலையெடுக்கமாட்டார்கள் என்பது நம்பிக்கையாகும். அனுமன் இலங்கையைத் தீக்கிரையாக்கினான். கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கினாள், பல்லவஅரசனான நரசிம்மவர்ம பல்லவன் வாதாபியைத் தீக்கிரையாக்கினான். இப்படி அனேக எடுத்துக் காட்டுகள் வரலாற்றின் நெடுகில் காண்கிறோம். இதனை தமிழ் இலக்கியங்கள் 'உழிபுலவஞ்சி' என்றும் 'எரிபரந்தெடுத்தல்' என்றும் கூறுகின்றன. இவற்றை ஒத்ததாகச் சிவபெருமான் பகைவர்களை எரித்து அழித்த வரலாறுகளும் நிறையவே உள்ளன. இவை சிவபெருமானின் "தகனபராக்கிரமங்கள்" என்று போற்றப்படுகின்றன.

சிவபெருமான் பகைவர்களைத் தனது உடலிலிருக்கும் நெருப்பின் ஆற்றலாலேயே கொளுத்தித் தகனம் செய்தார். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய தீப்பிழம்பு மன்மதனைச் சுட்டுப் பொசுக்கியது. அதனால் அவருக்குக் காமதகன மூர்த்தி என்பது பெயராயிற்று.

இது போன்றே அவர் தனது புன்சிரிப்பால் முப்புரங்களை எரித்தார். அவை வெந்து நீறாகின. இதனால் சிவபெருமானுக்குத் திரிபுரதகனன் என்பது பெயராயிற்று. இதனையொட்டி சங்க இலக்கியங்கள் சிவபெருமானைத் "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்" என்று குறிக்கின்றன.

தேவாரத்தில் இது "திரிபுரம் எரியுண்ண நகை செய்த பரமன்" என்றும் "அரணம் அனலாக விழித்தவனே" என்றும் "மூவெயில் எரியெழ முனிந்த முக்கண்ணன்" என்றும் பலவாறு பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

திருவெண்காட்டில் உருத்திரனாகிய சிவபெருமான் மருத்து என்ற அசுரனைக் கோபாக்கினியால் தகனம் செய்தார். வால்மீகி ராமாயணத்தில் இராமன் கரனை அழித்ததைக் கூறவந்த வால்மீகி "சுவேதவனத்தில் (திருவெண்காட்டில்) உருத்திரன் தனது கோபாக்கினியால் மருத்துவனை தகித்ததுபோன்று" அழித்தான் என்று கூறுகின்றார். சிவபராக்கிரமம் என்ற நூல் கோதகனமூர்த்தி, அனலாசுரதகனர் அரிஅய துர்க்குண தகனர், அரிஅயதகனர், என்ற பலவேறு சிவபெருமானின் தகன பராக்கிரமங்களைக் குறிப்பிடுகின்றது.

கோதகன பராக்கிரமம்

உலகிலுள்ள பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் பசுக்களைக் கொல்லுதலாகும். என்றாலும் அவை அடாத செயல் செய்யும்போது சிவாக்கினி அதையும் கொளுத்தும் சக்தி படைத்தது. சிவபெருமான் பாவங்களுக்கு உட்படாதவர் ஆதலின் பசுக்களை கொன்றபாவம் அவரைத் தீண்டாது என்பர். ஒரு சமயம் அடாது செயல் செய்த பசு கூட்டங்களைச் சிவபெருமான் தனது கோபாக்னியால் எரித்தார் என்று புராணங்களில கூறுகின்றன. அந்தச் சிவமூர்த்திக்குக் கோதக்ன பராக்கிரமர் என்பது பெயராகும். அதனை விளக்கும் வகையில் சிவ பராக்கிரமத்தில் ஒரு வரலாறு சொல்லப்பட்டுள்ளது:-

ஒரு சமயம் பிரம்ம புத்திரராகிய காசியபரிடம் அவருடைய மனைவிகளான திதி, அதிதி என்பவர்கள், நாங்கள் பாலருந்தி மகிழ வேண்டும். ஆசிரமத்தில் நல்ல பசுக்கள் இல்லை. தாங்கள் நல்லபசுக்களை உண்டாக்கி எமக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

பல நாட்கள் அவர்கள் தொடர்ந்து தன்னிடம் இப்படி வேண்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்றதால் அம்முனிவர் தனது மகனாகிய வருணனிடம், "மகனே, உனது தாய்மார்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது உன்கடன். ஆதலின் அவர்களுக்கு வேண்டிய பசுக்களை அளிப்பாயாக என்றார்". வருணனும் பாற்கடலி டத்தே முன்பு கடைந்தபோது உண்டான காமதேனு வைப் போன்ற எண்ணற்ற பசுக்களை உற்பத்தி செய்து அவற்றை அவர்களிடம் கொடுத்தான்.

முனிவனும் அவனுடைய தேவியரும் அப்பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டு வானவீதி யில் தன்ஆசிரமத்திற்குத் திரும்பினர். அப்பசுக் கூட்டம் அவர்களுடைய கட்டுக்கு அகப்படாது வானவெளியில் அங்குமிங்கும் ஓடி அவர்களை அலைக்கழித்தன. அத்துடன் நில்லாது பாலை மழை போலப் பொழிந்தன. இதனால் பூமண்டலமெங்கும் பால் நிறைந்தது. அது பாற்கடல் பொங்கி உலகத்தை அழிப்பது போன்று இருந்தது. அவை மேலும் மேலும் பெருகியது.

அப்பசுக்கள் மந்திரமலையின் மீது பாலைச் சொரிந்தன. அங்கு கௌரிதேவியுடன் வீற்றிருந்த சிவபெருமான் மீதும் அருவிபோல பால் வழிந்து ஓடியது. அலட்சியமாகத் தன்மீது பாலைப்பொழி வதுடன் உலகனைத்தையும் துன்புறுத்தும் அப்பசுக் கூட்டங்களைப் பெருமான் தனது நெற்றிக் கண்ணால் விழித்து நோக்கினார் நொடிப் பொழுதில் அந்தப் பசுக்கள் அனைத்தும் எரிந்துச் சாம்பலாகிவிட்டன. உயிர்கள் இன்பமடைந்தன.

அன்று முதல் பெருமானுக்குக் கோதகனர் என்பது பெயராயிற்று. தனது பசுக்கூட்டத்தால் உலக உயிர்களுக்கு உண்டான துயரங்களைக் கண்டு வருந்திய காசிபமுனிவரும் அவருடைய மனைவி யரும் சிவபெருமானிடம் மன்னிப்பு வேண்டிப் பணிந்து அவருடைய அருள் பெற்றுத் தமதிருப் பிடம் சேர்ந்தனர். (இதன் பொருள் சிவபெருமான் பால் அபிஷேகத்தை விரும்புபவர் என்றாலும் அளவுக் கதிகமான பாலினை அலட்சியமாக ஊற்றுதல். அலட்சியமாகத் தேவையற்ற வீண்உபசாரங்களைச் செய்தல் போன்றவற்றை வெறுப்பார் என்பதுடன் அவற்றைச் செய்பவரைத் தண்டிப்பார் என்பதும் பெறப்படும்.)

அனலாசுர தகனர்

ஒருசமயம் சிவபெருமனுக்கு எதிராக தாருகாவனத்து முனிவர்கள் பெரிய வேள்வியைச் செய்தனர். அதிலிருந்து நெருப்பு வடிவில் "அனலன்" என்று ஒரு அசுரன் தோன்றினான். அவனை முனிவர்கள் மந்திரித்துச் சிவபெருமானின் மீது ஏவி அவரைக் கொளுத்திச் சாம்பலாக்கும்படிக் கூறி அனுப்பினர். அவன் பெரிய கொடிய அனலை வீசிக்கொண்டு திருக்கயிலையை அடைந்தான் அவனுடைய வெப்பத்தால் உலக உயிர்கள் வருந்திச் சோர்ந்தன. தேவர்கள் வெப்பத்தைத் தாங்கமாட்டாது சிவபெருமானின் திருவடிகளில் வீழ்ந்தனர். சிவபெருமான் தன் சடையிலிருக்கும் சந்திரஒளியி னாலும், கங்கையின் குளிர்ச்சியாலும் அவர்களு டைய சோகத்தை மாற்றினார். அனலாசுரன், சிவபெருமானின் முன்புவந்து நின்றான். கொடிய வெப்பத்தை வீசி அவரைக் கொளுத்த முயன்றான். பெருமான் தனது நெற்றிக் கண்ணால் அவனை நோக்கினார். அக்கண் வீசிய நெருப்பில் அவன் வெந்து சாம்பலாகி விட்டான். அன்று முதல் சிவபெருமானுக்கு "அனலாசுர தகனர்" என்பது பெயராயிற்று. எத்தகைய கொடிய நெருப்பையும் அழிக்கும் நெருப்பாகச் சிவபெருமான் இருப்பதை இந்நிகழ்ச்சி அறிவிக்கின்றது.

அக்னியை அணிந்த பிரான்

சிவபெருமான் எரிஅகலை ஏந்தியதற்கான ஒரு புராணக்கதையே சிவபராக்கிரமம் கூறுகின்றது. ஒரு சமயம் தாருகாவனத்து முனிவர்கள் சிவபெருமான் மீது கோபங்கொண்டு தமது யாகத்தீயினின்று விஷம் போன்றதும், அதி உக்ர பயங்கரமானதுமான நெருப்புக்கோளத்தை உண்டாக்கி அதனைச் சிவபெருமான் மீது ஏவி அவரைக் கொளுத்திவரும்படி ஆணையிட்டனர். சிவபெருமான் அந்த நெருப்புக் கோளத்தைச் சிறு தீப்பந்தாக்கி தம் இடது கையில் தரித்துக் கொண்டார். அன்று முதல் அச்செயல் "அக்னி தாரண பராக்கிரமம்" என்று போற்றப்படுகின்றது. அக்னிக்கு மழு என்பது பெயர் அக்னியைப் படைக்கலமாக ஏந்தியிருப்பதால் சிவபெருமானுக்கு மழுப்படையாளன் என்பதும் பெயராயிற்று. (மழுப்படை பற்றிய விளக்கத்தைப் பக்கம் 535ல் காண்க).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எரிஏந்தி எரியுள் ஆடும் பிரான்

அக்னியைக் கரத்தில் ஏந்தி வலம் வருதல், அக்னியைப் பரப்பி அதன்மீது நடனமாடுதல் முதலியன சிறப்புமிக்கத் தென்னிந்திய சமயச் சடங்குகள் ஆகும். கிராமிய தெய்வக் கோயில்களில் நெருப்பு மிதித்தல் அக்னி சட்டி எடுத்தல், அக்னிக் காவடி எடுத்தல் போன்ற பலநூறு சடங்குகள் இன்றும் நடைபெற்று வருவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

சிவபெருமான் எரியும் தீ அகலை ஏந்தியுள்ளார். இதற்கே மழு என்பது பெயர். பெரும் நெருப்பைக் கக்கி அதனைத் தன் வடிவமாக்கிக் கொண்டு நெருப்பாக ஜொலிக்கும் பொருளே மழு எனப்படும்.

பெருமான் பற்றி எரியும் காட்டில் தீயின்மீது நின்று ஆடுகின்றான். இதற்கு மழு நடனம் என்றும் எரியாடல் என்றும் பெயர். இதனால் பெருமானுக்குத் தீயாடியப்பர் என்பது பெயராயிற்று. மேலைக்காட்டுப் பள்ளி என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குத் தீயாடியப்பர் என்பது பெயராகும்.

சிவபெருமான் தீயுகந்து அதனுள் நின்று நடனமாடியது. திருமுறைகளில் பலநூறு இடங்களில் சிறப்புடன் பேசப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பெருமான் தீயுள் நின்று நடனமாடுவதை விளக்க அவருடைய பிரபாமண்டலத்தில் தீச்சுடர்களை அமைத்துள்ளனர். நடராஜரைச் சுற்றி அமையும் பிரபாமண்டலத்தில் இருபத்தேழு சுடர்களை அமைத்திருப்பதைக் காணலாம். (காலப் போக்கில் சுடர் அமைந்த பிரபையை எல்லா தெய்வங்களுக்கும் அமைக்கும் வழக்கம் வந்து விட்டது.)

சிவபெருமான் பிணங்கள் எரியும் காட்டில் அத்தீயின் மத்தியில் எரிஅகலையும், (தீச்சட்டி) தீயுமிழும் கண்களை உடைய பாம்புகளையும், ஏந்தி, நெருப்பைக்கக்கும் பூதங்கள் பண்பாட அக்னி தாண்டவம் ஆடுவதாகப் பைரவ சமய நூல்கள் கூறுகின்றன. தேவாரத்தில் எரியாடல், எரியேந்தியாடல், முதலியன "அங்கையில் அனலேந்திஆடுவார்" என்றும், "அனலேந்தி விளையாடும் அழகர்" என்றும் குறிக்கப்பட்டுள்ளன. நெருப்பிடை நின்று பெருமான் "ஆடும் நடனம், அழகார் கனலாடல், அனலாடல், அனலாடு நட்டம் என்று குறிக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் தீயுள் மகிழ்ந்து ஆடுவதை அப்பர் ஒரு பெரும் பதிகமாகவே பாடியுள்ளார். இதில் தில்லைக்கூத்தன் தீயுள் நின்றாடுதல் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், நீண்டெரி ஆடுமாறே, துளங்கெரி ஆடுமாறே, கனலெரியாடு மாறே என்று பலவாறு பாடுதலைக் காணலாம். இதில் அக்னி பாலனாகவும் விருத்தனாகவும் இருப்பதை ஒன்பதவது பாடலிலும் இந்த அனலாடல் அதிசயமாக இருக்கிறதென்பதைப் பத்தாவது பாடலிலும் குறித்துள்ளது கண்டு மகிழத்தக்கதாகும்.

ஊழித்தீயால் உவந்த பிரான்

சிவபெருமான் அபிஷேகப் பிரியன். அன்பர்கள் அவனுக்குப் பால், தயிர், நெய் முதலான அனேக பொருட்களால் நீராட்டி மகிழ்கின்றனர். இதற்கு நேர்மாறாக யுகசங்கார காலத்தில் அவன் நெருப்பு மழையில் குளித்து மகிழ்கின்றான். ஊழிக்காலத்தில் கடல் பொங்குகின்றது. அதிலிருந்து வடவைத் என்ற பெருந்தீ ஜ்வாலைகளை வீசி எழுகின்றது. அண்டசராசரங்கள் வெடித்துச் சிதறி நெருப்பாகப்பற்றி எரிகின்றது. விண்ணிலிருந்து நெருப்புமழை பெருத்த ஓசையுடன் விழுகின்றது. அந்த நெருப்பு மழையில் பெருமான் நீராடுகின்றான். இதனைத் தக்கயாகப் பரணி "ஊழியில் ஆடும் மஞ்சனமும் கிளர்ந்து கனன்றதே" என்றும் "ஊழித்தீ உவந்து ஆடுவது ஓர்ந்ததோ" என்றும் குறிக்கின்றது.

எரியுகந்து ஆடுதல், தீயுகந்து ஆடுதல், அனலாடுதல், அங்கியாடுதல் என்று பலவாறாகக் குறிக்கப்படும் செயல் யுகசங்கார காலத்தில் பெருமான் ஊழித்தீ மழையில் நின்று மகிழ்ந்து ஆடுதலையே குறிக்கும் என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணாமலை அக்னிலிங்கம்

சிவபெருமான் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்று ஐந்து பஞ்சபூதங்களின் வடிவாக விளங்குவதை உணர்த்தும் வகையில் அவரை ஐந்து தலங்களில் ஐந்துவகைச் சிவலிங்கமாக வழிபடுகின்றோம். காஞ்சீபுரத்தில் பார்வதிதேவி மண்ணால் லிங்கமமைத்து வழிபட்டதால் அந்தச் சிவலிங்கம் மண்லிங்கம் என்று அழைக்கப்படுகின்றது. அவளே திருவானைக்காவில் காவிரி நீரினைத்திரட்டி சிவலிங்கமாகச் செய்து வழிபட்டாள். அதனால் அந்த லிங்கம் தண்ணீர் லிங்கமென்றும் அப்புலிங்கமென்றும் அழைக்கப்படுகிறது. இதுபோன்றே திருக்காளத்திலிங்கம் காற்று (வாயு) லிங்கம் என்று அழைக்கப்படுகின்றது.

திருவண்ணாமலையில் உள்ளது அக்னி லிங்கமாகும். ஒரு யுகத்தில் பார்வதி சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தாள். அந்த உக்ரமான தவத்தால் அவள் அக்னியின் வடிவமாகவே பிரகாசித்தாள். அவளுக்கு அருள்பாலிக்கப் பெருமான் பெருந்தழல் வடிவம் கொண்டுவந்தார். இருவரும் சேர்ந்து அர்த்தநாரீசுவரர் ஆகி அக்னிமண்டலத்தின் நடுவில் திருநடம் புரிந்தனர். (இதனை எமது கேதாரகௌரீசுவரர் நூலில் பக்கம் 670-ல் பார்க்க) பின்பு யாவரும் காணச் சிவலிங்கமாக எழுந்தருளினர்.

மீண்டும் ஒரு யுகத்தில் பிரமனும் விஷ்ணுவும் தம்முள் யார் பெரியவர் என்று போரிட்டுக் கொண்டபோது அவர்களிடையே பெருமான் நெருப்புமலையாக நின்று அவர்களுக்குத் தானே பெரியவன் என்ற உண்மையை உணர்த்தினார். அவர்கள் சிவபெருமானின் ஆற்றலை உணர்ந்து அவரே யாவரினும் பெரியவர் என்பதை அறிந்து கொண்டனர். அவர்கள் அவரை நோக்கி இத்தகைய பெரிய நெருப்பு மலையாக நின்றால் தங்களை யார் அர்ச்சித்துப் போற்றமுடியும். ஆகவே நாங்கள் பூசித்து மகிழும் வண்ணம் சிவலிங்கமாக மாற வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதன்படியே அவர் நெருப்பு மலையைப் பொன்மலையாகவும் அடுத்த யுகத்தில் வெள்ளிமலையாகவும் இப்போது கல்மலையாகவும் இருக்க அருள்பாலித்தார். அம்மலையின் அடிவாரத்தில் அவர்கள் பூசித்து மகிழ அழகிய சிவலிங்கத்தையும் உருவாக்கி, அதில் தான் அமர்ந்தார். அன்றுமுதல் அந்த அண்ணாமலை லிங்கம் அக்னிலிங்கம் என்று போற்றப்படுகின்றது.



பின்னர், அன்பர்கள் நீராடத், தானே ஒரு திருக்குளமாகவும் மாறினார். அந்தத் திருக்குளமே மல்லசுற்றும்பாதையில் அக்னி மூலையான தென் கிழக்கில் அமைந்துள்ள அக்னி தீர்த்தமாகும். இதில் நீராடிய பிறகே மலையை வலம் வரவேண்டும். திருவண்ணாமலை, மலையைச் சுற்றும் பாதை, அக்னி தீர்த்தம் ஆகிய மூன்றுமே சிவபெருமானின் திருவடிவங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆரழலாகி நின்ற அண்ணாமலையாரும்
சொக்கப்பனைத் தீ வழிபாடும்

சிவபெருமான் மகா அக்னியின் வடிவமாக விளங்குகின்றார். விண்ணிற்கும், பாதாளத்திலும் பரந்து நிற்கும் பெரிய நெருப்புத் தூணாகச் சிவபெருமான் நின்றதைப் பலவேறு புராணங்கள் சிறப்புடன் கூறுகின்றன. திருவண்ணாமலைத் தலபுராணம் இதனைத் தனிச்சிறப்புடன் குறிக்கின்றது. இதன்படி,

ஒருசமயம் பிரமனும், திருமாலும் தங்களுக்குள் யார் பெரியவர் என்று போட்டியிட்டுப் போர் செய்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்கிடையே சிவபெருமான் பெரிய நெருப்புத் தூணாக நின்றார். அந்தத் தூணின் உச்சி வானுலக எல்லையைக் கடந்தும், அதன் அடி பாதாளத்தை ஊடுருவியும் நின்றது. புதியதாகத் தோன்றிய அந்த நெருப்புத் தூணைக் கண்டதும் திருமாலும் பிரமனும் எல்லையற்ற ஆச்சர்யம் அடைந்தனர். தம்முள் நடைபெற்ற சண்டையை நிறுத்திவிட்டு ஏதும் பேசாது நின்றனர். பிறகு நம்முள் சண்டையிட வேண்டாம். இதன் அடியையும் முடியையும் தேடுவோம். யார் முதலில் அதைக் காண்கின்றாரோ அவரே பெரியவர் என்று ஏற்றுக் கொள்வோம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர். பின்னர் பிரமன் பெரிய அன்னத்தின் வடிவம் தாங்கி பெருத்த ஆரவாரத்துடன் விண்ணில் பறந்து முடியைத் தேடப்புறப்பட்டான். திருமால் பன்றி உருக்கெண்டு பூமியை அகழ்ந்து அதன் அடியைத் தேடிச் சென்றார். காலங்கள் பல கழிந்தன. இறுதியில் அயர்ந்து தளர்ந்துபோய் பிரமனும், திருமாலும் அந்த நெருப்புத் தூணின் அடியையும் முடியையும் காணாது சோர்ந்து வீழ்ந்தனர். அந்தத் தூணினின்று சிவபெருமான் வெளிப்பட்டு இருவரையும் நோக்கினார். அவர்கள் தங்கள் உண்மைநிலையை உணர்ந்தனர். சிவபெருமானே பெருந்தலைவன் என்று அறிந்து அவரைத் துதித்தனர். பின்னர் சிவபெருமான் நெருப்பு மலையாக இருந்தத் தனது நிலையைமாற்றிப் பொன்மயமான மலையாக மாறி அவர்களுக்குக் காட்சிதந்தார்.

இதனை நினைவுகூறும் வகையில் கார்த்திகை தீபநாளில் சொக்கப்பனை கொளுத்துதல் என்ற வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 10 முதல் 20 அடி உயரம் வரையுள்ள ★ பனை மரத்தினை நட்டு அதனைச் சுற்றிலும் பனையோலைகளைக் கட்டி கூம்புவடிவில் அமைப்பர். பொதுவாக ஒற்றைக்கூம்பே அமைப்பது வழக்கம். சிலதலங்களில் சுவாமி அம்பிகை ஆகிய இருவரையும் நினைவூட்டும் வகையில் இரண்டு கூம்புகளை அமைக்கின்றனர்.

கார்த்திகை தீபத் திருநாளன்று மாலையில் சூரியன் அஸ்தமித்த ஒரு நாழிகைக்குள் (சுமார் 6 மணி அளவில்) சிவமூர்த்தியைப் பரிவாரங்களுடன் இதன் முன்னே எழுந்தருளவைத்து இந்தக் கூம்புவடிவச் சொக்கப்பனைகளைச் சிவமாகவே பூசிப்பர். பின்பு அவை கொளுத்தப்படும். அந்நிலையில் அவை ஓங்கி, கொழுந்து விட்டு எரியும். அந்தத் தீயை வானுக்கும் மண்ணுக்கும் இடையே தழல் வடிவாய் நின்ற சிவபெருமானாகவே போற்றி வழிபடுவர். பின்னர் அத்தீயின் எஞ்சிய சாம்பலைப் பிரசாதமாகக் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தச் சாம்பலை வயலில் தெளித்தால் அது நன்கு விளையும் என்று நம்புகின்றனர். இந்தக் கரியில் இருந்து செய்யப்படும் சாந்தினை அணிந்து கொள்வதும் உண்டு.

சிவாலயங்கள் அனைத்திலும் கார்த்திகை மாதத்துக் கிருத்திகை நாளில் இந்த சொக்கப்பனை

★ (பொதுவாக இதற்குப்பனைமரமே உபயோகிக்கப்படுகின்றது. தென்னை, சண்பகம், கருங்காலி, திலகம், மருதமரம் ஆகியவற்றையும் உபயோகிக்கலாம்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களைக் கொளுத்தி அப்பொழுது எரியும் அக்னியைச் சிவவடிவமாகப் பூசித்து விழா கொண்டாட வேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

மலைநாடுகளில் உள்ள பழங்குடியினரிடத்தில் கார்த்திகை விழாவும் சொக்கப்பனை கொளுத்துதலும் தனிச்சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. நெருப்பு வடிவமாக மலை போலவும் நெடுந்தூண் போலவும் நின்ற சிவபெருமானைத் தேவாரம் திருவாசகம் முதலியன சிறப்புடன் பேசுகின்றன.

✿ திருவண்ணாமலைத் தலபுராணத்தினையொட்டியமைந்த லிங்கோற்பவ வடிவங்களில் சிவபெருமானைச் சுற்றி நெருப்புச் சுடர்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்தகைய சிற்பங்களில் குறிப்பிடத்தக்கது பிள்ளையார்பட்டியில்உள்ள குடைவரைக்கோயில் லிங்கோற்பவர் சிற்பமாகும்.

✿ மாங்காட்டில் உள்ள வெள்ளீச்சுவரர் ஆலயத்தில் சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட லிங்கோற்பவர் உள்ளார். இதில் லிங்கத்தின் பகுதியில் அனேக இடங்களில் தீச்சுடர்கள் காட்டப் பட்டிருப்பதைக் காணலாம். திருஞானசம்பந்தப்பெருமான் தாம் அருளிய திருப்பதிகங்களின் ஒவ்வொரு ஒன்பதாவது பாடலிலும் பெருமான் தழல்வடிவமாகி நின்றதையும் அதன் அடியையும் முடியையும் பிரமனும், திருமாலும் காணமுடியாது மயங்கிச் சோர்ந்து நின்றதையும் குறித்துள்ளார். குறிப்பாக திருவண்ணாமலையில் அருளிய பாடலில் சிவபெருமானை அளந்து அறிய முடியாத (அழல்) தீயாக நிற்கும் பெருமான் என்று பாடுகின்றார். அப்பாடல்,

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதந்
கிளர்தாமரை மலர்மேல் உறை கேடில் புகழோனும்
அளவா வணம் அழலாகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன் அடி சரணே.

என்பதாகும். இதன் பொருள் :- விளாமரத்தின் கனிகள் வீழுமாறு அதை பொருத கடல் வண்ணனாகிய திருமாலும், வேதங்களை விரிவுபடுத்து பவனும், தாமரை மேல் உறைபவனுமாகிய குற்றமற்ற புகழினை உடைய பிரமனும் அளவிட்டு அறிய முடியாத வண்ணம் அழல் (தீயின்) வடிவமாகி நின்ற அண்ணாமலை அண்ணலும் சரியாத முலையையும், புன்னகையையும் உடையவளாகிய உமையம்மையின் தலைவனும் ஆகிய சிவபெருமானின் திருவடிகளைச் சரணடைகின்றேன் என்பதாகும்.

உலைக்கண்ணர்

சிவபெருமானின் நெற்றியிலுள்ள மூன்றாவது கண் அக்னிக்கண் என்று போற்றப்படுவதாகும். அது தீயை உமிழும் தன்மையுடையது அது உமிழ்ந்த தீயால் படைத்தல், காத்தல் அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஆகிய ஐந்தொழிலும் நடைபெறுகின்றது. நெற்றிக்கண்ணினின்று தோன்றிய ஆறு தீப்பொறிகளால் முருகன் அவதரித்தான். அதே கண்ணினின்று தோன்றிய தீயால் மன்மதன் எரிந்து சாம்பலானான். நெற்றிக்கண்ணைச் சிவபெருமான் காட்டியபோது, நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்று கூறிய நக்கீரனைச் சுட்டதும் அக்கண்ணேயாகும்.

சிவபெருமானின் நெற்றிக்கண் உலைக்கண் எனவும் அழைக்கப்படும். உலை என்பது கனன்று பொறியுடன் புகையின்றி ஜொலிக்கும் நெருப்பாகும். உலோகங்களை எளிதில் உருக வைக்கும் ஆற்றல் கொண்டது. இத்தகைய தீயின் வடிவாக இருப்பதால் நெற்றிக்கண்ணை உலைக்கண் என்றழைக்கின்றோம்.

மாமல்லபுரத்தில் பழைய கலங்கரை விளக்கம் என்ற பெயரில் இருப்பது உலைக்கண்ணீசுவரருக்கு கட்டப்பட்ட கோயிலாகும். இதில் சிவலிங்கம் அமைந்துள்ளது. முன்னாளில் இதன்மீது பெரிய விளக்கை ஏற்றிக் கடலில் செல்லும் மரக்கலங்களுக்குத் திசை காட்டுவது வழக்கம் என்று கூறுகின்றனர்.



உலைக்கண்ணீசுவரம் - மாமல்லபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னியும் - புறாவும்

இந்திய சமயக் கொள்கைகளில் சில விலங்கு களையும் சில பறவைகளையும் குறிப்பிட்ட சில கடவுளரோடுத் தொடர்புபடுத்தி வணங்கி வருகின் றதைக் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக, விநாயகர், கௌமாரி, சரஸ்வதி, முருகன் ஆகிய நால்வருக்கும் மயில் வாகனமாக இருந்தாலும் மயில் வாகனம் என்றதும் நமக்கு முருகனின் மயில் வாகனம் மட்டுமே நினை வுக்கு வருகின்றது.

சிவபெருமான் பன்றியாக வடிவம் தாங்கித் தாய்மையின் பெருமையை விளக்கும் வகையில் மதுரையில் பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டித் திரு விளையாடலைப் புரிந்த போதிலும் பன்றி அவதா ரத்தை எண்ணும்போது திருமாலின் வராக அவதா ரமே நம் நினைவில் தோன்றுகின்றது. இதுபோன்றே இந்திரன், விநாயகர், சிவபெருமான் ஆகியோருக்கு யானை வாகனமாக இருந்தாலும் தெய்வ உலகில் யானை என்றதுமே பாற்கடலில் பிறந்து இந்திரனுக்கு வாகனமாகிய ஐராவதமே எண்ணத்தில் வருகின்றது.

இது போன்றே அக்னியை எண்ணும்போது விலங்குகளில் ஆடும் பறவைகளில் புறாவும், சேவலுமே நமது எண்ணத்திற்கு வருகின்றன.

அக்னி அனேக சமயங்களில் புறா வடிவம் எடுத்துப் பக்தர்களைச் சோதித்ததையும், ★ புறா வடிவுடன் சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றதையும் பலகதைகளால் அறியமுடிகின்றது.

அக்னி திருப்புகலூரில் சிவவழிபாடு செய்த போது அவன் தனது பர்ணசாலையை அமைத் திருந்த இடம் இந்நாளில் புறாக்குடி என்று வழங்கு கின்றது. அவன் புறாவடிவத்துடன் இங்கு தங்கி யிருந்தான் என்பர். இந்த ஊரை ஒட்டி அரசிலி ஆறு ஓடுகிறது. அந்த ஆறு இங்கே வடக்குநோக்கி ஓடுவதால் இத்தலம் காசிக்குச் சமமான இடமென்பர். திருப்புகலூர் அக்னீசுவரர் இங்குள்ள மண்டபத்திற்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பது வழக்கமாகும். அப்பொழுது இங்கே அக்னிக்கு அருளும் ஐதீகமும் நடைபெறுகின்றது.

மேலும் அக்னி புறாவடிவம் கொண்டு சிபிச்சக்ரவர்த்தியைச் சோதித்த கதையும் உண்டு. அந்த மன்னனைச் சோதித்துத் துன்பமேற்படுத்திய பாவம் தீரச் சிவலிங்கம் அமைத்து அக்னி வழிபட்ட தலங்களும் உள்ளன. சீர்காழிக்கு உரிய பன்னிரண்டு பெயர்களில் புறவம் என்பதும் ஒன்றாகும். அக்கினிதேவன் புறாவடிவம் கொண்டு இங்கு சிவபெருமானை வழிபட்டதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று என்பர்.

குறிப்பு : அக்னிதேவன் புறாவடிவம் கொண்டதற்குப் பலவேறு காரணங்கள் புராணநூல்களில் சொல்லப்பட்டுள்ளன. 1. ஒரு சமயம் பார்வதியும் பரமேசுவரனும் ஓர் இடத்தில் தனித்திருந்தபோது, தேவர்களின் தூண்டுதலால் அக்னி, புறாவடிவம் கொண்டு அங்கு சென்றான். அதை அறிந்த பார்வதி அக்னியைப் புறாவாக இருந்துக், கல்லைத்தின்னும்படியும் உடன்பிறப்பைச் சேரும்படியும் சபித்தாள். அதனால் வருந்திய அவன் சிவனைப்பணிந்தான். சிவசக்தி வடிவமாகத் தோன்றிய நெருப்பை சிவன் அவனிடம் கொடுத்தார். புறாவடிவுடனே அவன், அந்த நெருப்பைச் சரவணத்தில் கொண்டு விடுத்தான் அதிலிருந்து முருகன் தோன்றினார். பிறகு தனது புறாவடிவம் நீங்காமையால் சிவபூசைசெய்து முன்னைய வடிவு பெற்றான். (பூவாளூர் புராணம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிபிச்சக்ரவர்த்தி கதை

தமிழகத்துத் தொன்மைக் கதைகளில், சிறப்பாகப் போற்றப்பட்டுவரும் கதைகளில் ஒன்று சிபிச்சக்ரவர்த்தியின் கதையாகும். அது தன்னிடம் அடைக்கலம் புகுந்தவர்க்குத் தன்னுடைய உயிரைக் கொடுத்தேனும் நன்மை செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லும் வரலாறு ஆகும்.

சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையில் கண்ணகி தான் பிறந்த சோழநாட்டின் பெருமை களையும் சோழ மன்னர்களின் சிறப்புக்களையும் பாண்டிய மன்னனுக்குத் கூறும் போது இந்த வர லாறும் ஒன்றாகச் சுட்டிக்காட்டப்படுவது எண்ணத் தக்கதாகும். சீர்காழிப்புராணத்தில் பதினேழாவது அத்தியாயமாக சிபிச்சக்கரவர்த்தியின் கதை இடம் பெற்றுள்ளது அது:-

ஒரு சமயம் சிபிச்சக்கரவர்த்தி பெரிய வேள்வியினை செய்யக்கருதி சீர்காழியை அடைந் தான் அவன் அங்கு வீற்றிருக்கும் பிரம்மபுரீசு வரரையும் தோணிபுரப்பெருமானையும் சட்டநாத ரையும் மனம், மொழி, மெய்களால் வணங்கி மகிழ் ந்தான். அவ்வூருக்கு வடக்கில் ஒரு பெரிய வேள்விச் சாலையை அமைத்து யாகம் செய்ய ஆரம்பித்தான்.

இயல்பாகவே இரக்ககுணமும், அன்பும், ஈகைத்தன்மையும் நிறையப்பெற்ற அந்த மன்னன் யாகசாலையில் வீற்றிருந்து தன்னை நாடி வந்தவர்களுக்கெல்லாம், அவர்கள் வேண்டியதைக் கேட்டதற்கும் மேலாகவே கொடுத்து உபசரித்தான்.

சிவபெருமான் அவனுடைய ஈகைத்தன்மை யும் உயிர்கள்பால் கொண்டுள்ள அன்பையும் உலகிற்கு உணர்த்த எண்ணினார். இந்திரனையும் அக்னியையும் அழைத்து நீங்கள் சென்று சிபியைச் சோதித்து அதன்மூலம் அவனுடைய சிறப்புக்களை உலகிற்கு உணர்த்துங்கள் என்றார். அவர்கள் அவருடைய அடிபணிந்து விடைபெற்றுக் கொண்டுச் சீர்காழியை அடைந்தனர்.

அக்கினி புறாவடிவம் கொண்டான். இந்திரன் பருந்து வடிவம் கொண்டான். புறா முன்னே செல்லப் பருந்து துரத்தியது. புறா களைத்து உயிர் தளர்ந்து அலறுகின்ற சப்தத்துடன் சிபியிடம் வந்து "நீயே சரண்" என்று வீழ்ந்தது.

சிபி மன்னன் அப்புறாவை எடுத்து, "புறாவே உனக்கு அடைக்கலம் தந்தேன் அஞ்சாதே" என்று கூறி அதனைத் தன் மடிமீது வைத்தான்.

அப்போது பருந்து விரைந்து அவன்முன்னே வந்து அமர்ந்தது. "அரசே", இப்புறா நான் உண்ணும் பொருட்டு நெடுந்தொலைவிலிருந்து துரத்திக் கொண்டு வந்ததாகும். ஆதலின் பசியாலும் வழிக்களைப்பாலும் வருந்தும் எனக்கு இதனை இப்பொழுதே கொடுத்துவிடு' என்றது.

அரசன்,' பருந்தே இது என்னிடம் அடைக் கலமாக வந்த பொருள், என்னுயிரைத் தந்தேனும் இதனைக் காப்பேன். ஆதலின் இதனை உண்ணும் ஆசையை நீ ஒழி" என்றான்.

அதைக்கேட்ட பருந்து, "அரசே உனக்கு எத்தனையோ புறாக்கள் கிடைக்கலாம். ஆனால் பசியால் களைத்து நிற்கும் எனக்கு இதுவே உணவு. பசியால் உயிர்விடும் நிலையில் உள்ளேன். நான் பசியால் வருந்தி வயிறு எரியும்படிப் பார்த்திருப்பது மட்டும் முறையா? என்றது.

"பருந்தே, உனக்கு வேண்டியது உணவு தானே அதை நான் தருகின்றேன். இந்தப் புறாவை விட்டுவிட்டு, நான் தரும் உணவை விரும்பிய மட்டும் உண்பாய்" என்றான்.

பருந்து, "அரசே நான் சோற்றை உண்டு வாழ்பவனல்ல. எனக்கு மாமிசம் வேண்டும் அதுவும் புதிய மாமிசம்" என்றது.

அரசன், பருந்தே உனக்கு, நீ வேண்டிய படியே மாமிசத்தைத் தருவேன் அதற்காகப் பிற உயிர்களைக் கொல்லமாட்டேன். என் உடலில் இருந்து தேவையான மாமிசத்தை அறுத்துத் தருகின் றேன் பெறுக, என்றான்.

அவ்வார்த்தைகளைக்கேட்ட பருந்து, "அரசே அப்படியே தருக ஆனால் எனக்குப் புறா வின் எடை அளவு மாமிசமே போதும். அதற்குக் கூடுதலும் வேண்டாம் குறைவாகவும் வேண்டாம்" என்றது.

அரசன் அங்கு ஒரு துலாக்கோலைக் கொண்டுவரச் செய்து ஒரு தட்டில் புறாவை அமர்த்தினான். பிறகு தன் கைவாளால் கொஞ்சம் மாமிசத்தைத் தனது உடலிலிருந்து வெட்டி தராசில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்தான். இப்படிப் பலமுறைவைத்தும் அந்த எடை புறாவின் எடைக்குச் சமமாகவில்லை. இறுதியில் தானே தட்டில் ஏறி அமர்ந்தான், தட்டு சமமானது.

அரசன் 'ஓ பருந்தே நீ என்னை உண்டு மகிழ்வாய்", என்று கூறிக் கண்களைமூடிக் கொண்டு இறைவனைத் தியானித்தான்.

கூடியிருந்தவர்கள், அடைக்கலமாக வந்த புறாவுக்காகத் தன் உயிரையே ஈந்த அவனுடைய அன்பையும், பரிவையும் தயாளகுணத்தையும் கண்டு அதிசயித்தனர். இந்திரனும் அக்னியும் தங்கள் இயல்பான வடிவுடன் அங்கு தோன்றினர். 'அரசே, இறைவன் திருவருளால் உனது பெருமையை உலகிற்கு உணர்த்தவே இவ்வாறு செய்தோம். நீ உமது தயாள குணத்தால் பெருஞ்சிறப்பைப் பெற்றாய். உன்னுடைய அறுபட்ட அங்கம் முன் போலவே புதுமையாய் பொலியும்' என்றனர். அப்போது அரசன் எனக்கு மிகவும் தாகமாய் இருக்கின்றது என்றான். உடனே இந்திரன் புறாவடிவம் கொண்டு பறந்துசென்று காவிரியை அழைத்து வந்தான். அரசன் அதைப்பருகிப் புத்துயிர் பெற்றான்.

அவர்களுக்குச் சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சியளித்து அருள்பாலித்து, சிபிக்கு அவன் செய்த யாகத்தின் பலனையும் உடனே அளித்தார். இறைவன் ஆணைப்படியே அக்னி புறாவாகிச் சிபியைச் சோதித்தான் என்றாலும் இத்தகைய பெரிய பரோபகாரியைச் சோதித்துத் துன்பமளித்து விட்டோமே என்று வருந்தி அதற்குக் கழுவாயாகப் புறாவடிவத்துடன் பல இடங்களுக்குச் சென்று சிவலிங்கம் அமைத்து வழிபட்டான்.

புறநானூறு, இராஜராஜ சோழனுலா, குலோத்துங்க சோழனுலா போன்ற அனேக நூல்களில் இந்தக்கதைக் குறிப்பைக் காணலாம். திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் "அன்பிலார் எல்லாம்" என்ற குறளுக்கு இதனை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

சீர்காழியைப் புறவம் என்ற தலப்பெயரால் பாடிய திருஞானசம்பந்தப்பெருமான் சிபி சக்கரவர்த்தியின் வரலாற்றைக் குறித்து "புறவன் எதிர் நிறைநிலவு பொறையின் உடல்பெற அருள் புறவம் அதுவே" என்று அருளிச் செய்துள்ளார்.

இக்கதையை இராமாயணத்தில் அயோத்தியா காண்டம் 12வது சருக்கத்திலும் மகாபாரதத்திலும் காணலாம்.

அக்னி அளித்த தேர்

ரிக் வேதத்தில் உள்ள அக்னியைப் போற்றும் பல மந்திரங்கள் உருத்திரனுக்கே உரியது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அதனால் அக்னியின் குறிப்பிடத்தக்க மேன்மையான நற்செயல்கள்யாவும் உருத்திரமூர்த்தியாகிய சிவபெருமானால் செய்யப்பட்டதாகவே கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக மகாபாரதத்தில் அருச்சுனனுக்கு அக்னிதேவன் பெரியதேரையும் கொடியையும் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது.

அப்படித் தேரானது அருச்சுனனுக்கு அக்னியால் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது அக்னியின் அந்தராத்மாவாக இருக்கும் சிவபெருமான் கொடுத்தார் என்றே கொள்ளப்படும். இதனைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் "அருச்சுனர்க்கு தூயமந்திரங்கள் சொல்லிக் கொடி நெடுந் தேர்கொடுத்தார் குறுக்கை வீரட்டனாரே" என்று அருளிச் செய்துள்ளார்.

நன்றி ! இக்குறிப்பு. டாக்டர். உவே. சாமிநாத ஐயர் நூலக உடனாளர் திரு. சாய்ராம் அவர்கள் அளித்ததாகும்.

அக்னி நட்சத்திர வழிபாடு

சூரியன் மேஷராசியில் உள்ள சித்திரை மாதத்தில் பரணி நான்காம் பாதந் தொடங்கி பதினான்கு நாட்கள் அக்னி நட்சத்திரம் என்று அழைக்கப்படும். இந்நாளில் சூரியனின் வெப்பம் மிகமிக அதிகமாக இருக்கும். இதனைக் கத்திரி என்பர். இந்நாளில் உச்சிவேளையில் சிவலிங்கத்திற்கு மேலே தாராபத்திரம் அமைத்து அதன் மூலம் சிவலிங்கத்தின் மீது நீர்தாரையாக விழச் செய்வர். அப்போது ஸ்ரீருத்திரம் சமக்கம் கூட்டமாக இருந்து ஓதப்படும் நீர்மோர், பானகம் இவற்றுடன் தயிர்சாதம் நிவேதிக்கப்படும ஆரூரில் தியாகராஜசுவாமிக்கு வெள்ளிப்பிஞ்சுகள் முதலான குளிர்ச்சியைத் தரும் பொருட்கள் நிவேதிக்கப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்ளிக்காடர்

ஒருமுனையில் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் கட்டைக்குக் கொள்ளிக்கட்டை என்று பெயர். எதனையும் பற்றி எரித்துத் தன்வயமாக்கிக் கொள்ளுவதால் "காரணப் பெயராகத் தீயினுக்குக் "கொள்ளி" என்பதும் பெயராயிற்று. உயர்ந்ததும் வேள்விகளில் வளர்வதுமான தீக்கு அக்னி என்ற பெயர் வழங்குவதுபோல அச்சத்தை தருகின்றதும் பாதுகாப்பு அற்றதுமான தீக்கு நடைமுறையில் கொள்ளி என்பது பெயராகும்.

சிவபெருமான் சுடலைகளில் ஓயாது நடனம் புரிகின்றார். அவருக்கு வெளிச்சம்காட்டப் பேய்கள் கொள்ளிக்கட்டைகளை விளக்காகப் பிடிக்கின்றன. இதனை திருஞானசம்பந்தப்பெருமான் "பேய் உயர் கொள்ளி கைவிளக்காகப் பெருமானார் தீயுகந்தாட" என்று திருச்சிராப்பள்ளி தேவாரத்தில் குறிக்கின்றார். இதனையொத்ததாகத் தேவாரத்துள் பலநூறு இடங்களில் பூதங்களும் பேய்களும் கொள்ளிக் கட்டைகளை ஏந்தி வெளிச்சம்காட்டப் பெருமான் ஆடுவது குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிவ பெருமானின் மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண் நெருப்பின் வடிவமாக இருப்பதாலும், அச்சம்தரும் நெருப்பை உமிழ்வதாலும் அது கொள்ளிக்கண் எனப்பட்டது. அதனால் அவருக்குக் கொள்ளிக் கண்ணன் என்பதும் பெயராயிற்று. அக்னி வழி பட்டுப் பேறுபெற்ற திருமுறைத் தலங்களில் ஒன்று 'கொள்ளிக்காடு" ஆகும். அங்கு சிவபெருமான் அக்னீசுவரர், தீவண்ணர் என்ற பெயர்களில் எழுந்தருளியுள்ளார்.

மழுப்படை



சிவபெருமானின் ஆயுதங்களில் சிறப்புடையது மழுவாகும். மழு என்பது தீயின் வடிவமென்றாலும் சிற்பம் ஓவியங்களில் அது கோடாரி, தீச்சட்டி, கட்டங்கம் முதலிய பலவேறு வடிவங்களில் அமைக்கப்படுகின்றது. இது நெருப்பைக் கக்கும் இயல்புடையது. இருளை ஓட்டும்படியான ஒளிபொருந்தியதாகவும் நெருப்பையும் சுட்டுச் சாம்ப லாக்கிவிடும் பெரிய அழல்போன்றதாகவும் விளங்குகின்றது. தேவாரம் இதனை "எரிமழு" என்றும் "கூரிருள் கிழிய நின்ற கொடு மழு" என்றும் பலவாறாகக் கூறுகின்றது. இதனைக் கணிச்சி என்றும் கூறுவர். சங்க இலக்கியங்களில் இப்பெயரால் சிவபெருமான் கணிச்சிப்படையான் என்று அழைக்கப்படுகின்றார். "அவிர்சடை மாற்றாங் கணிச்சி மணிமிடற்றோனும்" என்று வருதல் காண்க.

இது பரசு எனவும் அழைக்கப்படும். இதனை ஏந்தி நிற்பதால் பெருமானுக்குப் பரசுபாணியர் என்பது பெயராயிற்று. பரசுராமன் என்பதும் சிவபெருமானுக்கு உரியபெயராகும். இதற்கு பரசுவாகிய மழுப்படையை ஏந்திய அழகன் என்பது பொருள் காஞ்சீபுரத்தை அடுத்துள்ள வேகாமங்கலம் எனும் ஊரில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குப் பரசுராமலிங்கேசுவரர் என்பது பெயராகும். பெருமான் தீயகலை ஏந்தி நிற்பது அவர் தீமைகளை அழித்து நன்மைகளைப் பெருக வைப்பவர் என்பதை உணர்த்துகின்றதென்பர். இதனை வடவாமுகத்தீ எனவும் கூறுவர். ஊழிக்காலத்தில் பெருமான் இத்னை ஏவியே உலகத்தினைச் சங்கரிப்பார். ஊழிக்காலத்தில் உலகினையே அழிக்க வல்லதாயினும் அது பெருமானின் கரத்தில் அடங்கி ஒடுங்கி நிற்கின்றது. இது பெருமானுடைய அளவற்ற ஆற்றலைக் குறிப்பதாகும். பெருமான் மழுவாயுதத்தை வலக்கரத்தில் ஏந்தி நிற்பதால் மழுவலான் என்றும், மழுவாள் அங்கையன் என்றும் அழைக்கப்படுகின்றார். தீயைத் தன்னுள் மறைத்துக்கொண்டு கோடாரி வடிவில் காட்சியளிக்கும் நிலையுள்ள மழுவாயுதத்தைச் சந்திரசேகரர், சோமாஸ் கந்தர் முதலிய வடிவங்களில் வலது மேற்கரத்தில் அமைப்பர். கொழுந்து விட்டு எரியும் நிலையிலுள்ள மழுவா யுதத்தை தட்சணாமூர்த்தி, நடராஜர் முதலிய திருமேனிகளின் இடது மேற்கரத்தில் தீயகலாக அமைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னீச்சரங்கள்

சிவபெருமான் அக்னி வடிவானவர். அதைப் போலவே அவ்ரால் படைக்கப்பட்ட உயிர்களும் அக்னிமயமானவை. (எனவேதான் உடலில் இருந்து உயிர்பிரிந்த பின் உடல் குளிந்து போகின்றது) ஆகவே (உயிர்களாகிய) கேவல அக்னியையும் பதியாகிய சிவபெருமான் என்ற மகா அக்கினியையும் இணைத்து அதன்மூலம் முடிவற்ற இன்பத்தைப் பெற சில பக்தர்கள் முனைந்தனர். இவர்கள் தீயின் வடிவாகவே இறைவனை வழிபட்டனர். இவர்களே அகத்தியர் (அகத்தில் தீவளர்க்கும் ஞானமார்க்கத்தினர்) என்றும் புலத்தியர் (வெளியில் தீவளர்த்து வேள்வி செய்து வழிபடுபவர்) என்றும் அழைக்கப் பட்டனர்.

இவர்கள் உடலில் உள்ளேயுள்ள மூன்று தீயையும் தமது தவயோக சாதனையால் எழுப்பி அதனைப் புருவமத்தியில் நிலைபெறச் செய்து அங்கு உண்டாகும் அக்னி மண்டலத்தின் மையத்தில் இறைவனை தரிசிப்பர் என்று கூறப்படுகின்றது.

இவர்கள் தங்கள் கூட்டத்தினர் தங்கியிருந்த இடங்களில் சிவாலயங்களை அமைத்தனர். அவை அக்னீச்சரங்கள் என்று அழைக்கப்பெற்றன. அங்கிருந்த தீர்த்தங்களும், அக்கினி தீர்த்தங்கள் என்றே அழைக்கப்பெற்றன. இவர்களுக்கு அக்னியே ஞான குருவாக இருக்கின்றார் என்பர்.

இத்தகைய அக்னீச்சரங்கள் தவிர சிவனருள் பெற்று அக்னி மண்டலத்தில் தேவர்களாக விளங்கும் அக்னிதேவர்கள் பூமண்டலத்திற்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலங்களும் உள்ளன. அவையும் அக்னீச்சரங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

இவை யாவற்றிற்கும்மேலாக சிவனருளால் தோன்றி உலகினைக் காத்துவரும் அக்னிபகவான், புறாவடிவம் கொண்டு மகாசிவபக்தனான சிபியைச் சோதித்த பாவம் தீரவும், தட்சனுடைய யாகத்தில் கலந்து கொண்டு வீரபத்திரரால் நாக்குகளும், கரங் களும் வெட்டப்பட்டு வருந்திச் சோர்ந்த நிலை தீரவும், இன்னும் அனேக காரணங்களுக்காகவும் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். அவன் வழிபட்ட லிங்கங்கள் அக்னீச்சுவரர்கள் என்றும் அவன் உண்டாக்கிய தீர்த்தங்கள் அக்னி தீர்த்தங்கள் என்றும் அவன் வழிபட்ட அக்னீசுவரருக்கு அமைக்கப்பட்ட ஆலயங்கள் அக்னீச்சரங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன. தேவாரப்பாடல் பெற்ற தலங்களான மேலைக்காட்டுப்பள்ளி வன்னியூர், கொள்ளிக்காடு, அன்னியூர், கஞ்சனூர் முதலிய தலங்கள் அக்னி சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற அக்னீசுவரத் தலங்களாகும்.

மேலும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடலூர் (கிராமம்) நல்லடை, திருவண்ணாமலை அடுத்துள்ள கடலாடி முதலிய தலங்களிலும் அக்னி அமைத்து வழிபட்ட அக்னீசுவரர் எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

தமிழ்மறைகூறும் அக்னி செய்த சிவபூசை

பல வழிகளில் தனக்கு ஏற்பட்ட துன்பம் தீர அக்னி தேவன் அனேக தலங்களில் சிவலிங்கமைத்து வழிபட்டான். தேவாரத்தில் அக்கினிதேவன் சிவபெருமானை வழிபட்ட செய்தி அப்பர்பெருமானால் பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளத்தை காண்கிறோம்.

ஸ்ரீ வாஞ்சியம் தேவாரமான படையும் பூதமும் என்று தொடங்கும் பதிகத்தின் இறுதிப் பாடலில் "அருக்கனொடு அங்கி யமனோடு போற்றி சைத்தார்" என்று அக்னி அத்தலத்தில் சிவவழிபாடு செய்தது குறிக்கப்பட்டுள்ளது.

திருப்பழனம் தேவாரமான "ஆடினார் ஒருவர் போலும்" என்று தொடங்கும் பதிகத்தில் சூரியன் சந்திரனுடன் அக்னியும் சேர்ந்து வழிபட்டதை உணர்த்தும் வகையில "ஆதித்தன் அங்கி சோமன் போற்றிசைத்தார்" என்று குறித்துள்ளார்.

யாவுக்கும் மேலாக ஓமமாம் புலியூரில் அருளிச் செய்த "ஆராரும் மூவிலைமேல்" என்று தொடங்கும் பதிகத்தின் ஐந்தாம் பாடலில் அக்னி சிவபூசை செய்ததை விரிவாகக் குறிக்கும் வகையில்,

"பாங்குடை எழில் அங்கி அருச்சனை முன்விரும்ப
பரிந்தவனுக்கு அருள் செய்த பரமன்"

என்று பாடியுள்ளார்.

இதன் பொருள்: பணிவையும் அடக்கத்தையும் அழகையும் உடைய அக்கினிதேவன் அர்ச்சனைகளைச் சொல்லித்துதித்தபோது அவனுக்காக மனம் இரங்கி அருள் செய்த இறைவர் என்பதாகும். இப்பதிகத்தின் இறுதிப்பாடலில் சிவபெருமானே ஒரு பெரிய நெருப்பு வடிவமாக இருப்பததைத் "தன் ஒப்பாரில்லாத் தழலுருவைத் தலைமகன்" என்றும் குறிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காசிநகர் அக்னீசுவரர்



ஒரு காலத்தில் மிகுந்த சீலம் மிகுந்த விசுவாநரன் என்பவன் வாழ்ந்துவந்தான். அவனுடைய மனைவி சுசிஷ்மதியாவாள். அவர்களுக்கு நெடுநாட்கள் பிள்ளைப்பேறு இல்லை. சுசிஷ்மதி தன் கணவனிடம் தனக்கு நல்ல குழந்தை பிறக்க வேண்டும் என்றாள். விசுவாநரன் அனேக தர்மகாரியங்களைச் செய்தபின் காசி நகருக்குச் சென்று வீரேசுவரர் என்ற லிங்கத்தைப் பூசித்தார். அங்கு கடுந்தவம் மேற்கொண்டு "அபிலாஷ்டகம்" என்ற தோத்திரத்தை இடைவிடாது பாராயணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய பக்தியினால் மகிழ்ந்த சிவபெருமான் எட்டுவயதுச் சிறுவனுடைய கோலத்தில் அந்த வீரேசுவர லிங்கத்தினின்று வெளிப்பட்டு அவருக்குக் காட்சியளித்தார். அவரிடம், "அன்பனே, நீ விரும்பிய படியே எனது அம்சமாக உனக்கு மகன் பிறப்பான் என்று அருள்புரிந்தார்.

அதன்படியே விசுவநரமுனிவருக்கும் சுசிஷ்மதிக்கும் அழகிய குமாரன் பிறந்தான். தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு அந்தக் குழந்தையை வாழ்த்தினர். அதற்குக் "கிருபதி" என்று பெயரிட்டனர்.

ஒரு சமயம் நாரத மகாமுனி அவர்களுடைய வீட்டிற்கு வந்தார். கிருகபதியினுடைய அங்க லட்சணங்களை ஆராய்ந்து சிறந்த பலன்களைக் கூறினார். என்றாலும் அவன் தனது பன்னிரண்டாவது வயதில் இடி, மின்னலால் தாக்குண்டு இறப்பான் என்றார். அதைக்கேட்டு விசுவாநரனும் அவனுடைய மனைவியும் மிகுந்த துன்பம் அடைந்தனர். கிருகபதி தன்விதியை மாற்றிக் கொள்வேன் என்று உறுதிபூண்டு காசி நகரை அடைந்தான். அங்கு மணிகர்ணிகை முதலான தீர்த்தங்களில் நீராடி விசுவேசர் முதலான அனேக லிங்கங்களை வழிபட்டான். பிறகு கங்கைக் கரையில் ஒரு சிவலிங்கத்தை அமைத்துக் கடுமையான விரதத்தை ஏற்றுச் சிவபூசையைச் செய்யத் தொடங்கினான்.

அவனுடைய பக்தியைக் கண்டு இன்பமடைந்த சிவபெருமான் அவனைச் சோதிக்க எண்ணினார். இந்திரனைப்போல உருவம் தாங்கி அவன் முன்னே தோன்றி, "பாலனே, நீ ஏன் கடுந்தவங்களைச் செய்து உன்னை, நீயே துன்புறுத்திக் கொள்கிறாய். உனக்கு என்னவேண்டுமோ கேள், உனக்கு இந்திரசுகங்களையும், ஏன். என்னுடைய அளவற்ற சக்தி படைத்த இந்த வச்சிராயுதத்தைக் கூட உனக்குத் தருகின்றேன் என்றார்.

கிருகபதி அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சிவபெருமான் அவன் மீது கோபம் கொண்டவர் போல் நடித்து "வச்சிராயுதத்தால் உன்னைச் கொல்வேன்" என்று கூறினார்.

அவன் அவரைநோக்கி, "இந்திரனே, நீ எதனை அளித்தாலும் ஏற்கமாட்டேன் தூரவிலகிச் செல். சிவனருளைத் தவிர எனக்கு வேண்டுவது எதுவுமில்லை என்று கூறிச் சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டான்.

அவனுடைய செயலால் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கு உமாதேவியுடன் காட்சியளித்து அவனைத் திக்பாலகனாக்கினார். அவனுக்கு உண்டாக்கித்தரப்பட்ட உலகம் அக்னி லோகம் எனப்பட்டது.

காசி நகரில் அக்னி பூசித்த லிங்கம் "அக்னீசுவரர்" என்ற பெயரில் விளங்குகின்றது. அதனை அன்புடன் பூசிப்பவர்க்கு இடி, மழை, மின்னல், தீ முதலியவற்றால் மரண முண்டாகாது. சிறந்த செல்வம் உண்டாகும் என்று காசிக்கண்டம் கூறுகின்றது. காசிக்கண்டம் அக்னி லோகத்தின் வர்ணனையையும் அக்னி அருள்பெற்று மண்டலாதிபனான கதையையும் விரிவாகக் கூறுகிறது.

★ அக்னி தோன்றியது கார்த்திகை மாதத்திலாகும். கார்த்திகைமாதக் கிருத்திகை நாளில் அவன் வளிமண்டலத்தின் மையப்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்பட்டான். அதனால் கார்த்திகைமாதக் கிருத்திகை நாளில் அக்னியையும், தீபங்களையும் வழிபடுகின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னி தீர்த்தங்கள்

பலதலங்களில் வழிபாடு செய்த அக்னி தேவன், அந்த இடங்களில் சிவபூஜை செய்வதற்கு முன்பு தன்னைத் தூய்மை செய்து கொள்ளவும், தனக்குப் பின்வரும் சந்ததியர் மூழ்கிப் பேறு பெறவும் பலதீர்த்தங்களை உண்டாக்கினான். அவை அவன் பெயரால் அக்னி தீர்த்தங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் மேலைக்காட்டுப்பள்ளி, திருவெண்காடு, இராமேசு வரம், கீழ்வேளூர், கூவம் முதலிய தலங்களில் அமைந்துள்ள தீர்த்தங்கள் அக்னிதீர்த்தங்கள் என்று பெயர் பெற்றுள்ளன. இவற்றில் கிருத்திகை நட்சத்திரத்தில் நீராடினால் உஷ்ணரோகங்கள் தீரும் என்பர்.

பெரியதலங்களில் அதனைச் சுற்றி எட்டு திக்குகளிலும் திக்குப்பாலகர்களின் பெயரால் எட்டு தீர்த்தங்கள் அமைந்திருக்கக் காணலாம். அவற்றில் தென்கிழக்கு முனையில் அமைந்தவை அக்னி தீர்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மேலும் சிவபெருமான் தானே அக்னிதீர்த்த வடிவாக இருந்து அன்பர்களுக்கு அருள் புரியும் நிலையையும் காண்கிறோம். இதில் குறிப்பிடத் தக்கது திருவண்ணாமலை அக்னி தீர்த்தமாகும்.

திருவண்ணாமலையில் மலைக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள அக்னிதீர்த்தம் தனிச் சிறப்புமிக்கதாகும். அது சிவபெருமானின் வடிவமேயாகும். பெருமான் தீர்த்தமாக விளங்குவதை மணிவாசகர் தீர்த்தன் நல்தில்லை சிற்றம்பலத்தில் தீயாடுங் கூத்தன்" என்று அருளிச் செய்துள்ளார்.

இந்த அக்னிதீர்த்தத்தில் தமது வேண்டு கோளைச் சொல்லி நீராடிய பிறகே மலையை வலம் செய்யவேண்டும். இது அனேக முனிவர்களும் தேவர்களும் மூழ்கிப் பேறுபெற்ற தீர்த்தமாகும்.

இது அக்னிதேவன் மூழ்கி வழிபட்டதாலும் இதற்கு அக்னி தீர்த்தம் என்பது பெயராயிற்று. இதில் பங்குனிமாதப் பௌர்ணமியில் நீராடினால் பெண் களால் ஏற்பட்ட சாபங்களும், குற்றங்களும் நீங்கும் என்பர். பௌர்ணமிகளிலும் கிருத்திகை நட்சத்திரங் களிலும் நீராடினால் சகல சுகபோகங்களும் கிடைக்கும் என்று அருணாசலபுராணம் கூறுகின்றது.

ஒரு சமயம் அக்னி, சப்தரிஷிகளின் மனைவியர்களின் அழகைக் கண்டு மோகங்கொண்டு மயங்கினான். அதைவெளியில் கூறினால் ரிஷிகளின் கோபத்திற்கு ஆளாகி அழியநேரிடும் என்பதனால் அஞ்சியிருந்தான். இந்த மனஉளச்சலினால் அவனுடைய உடல் மெலிந்தது. அதனை அறிந்த அவனுடைய மனைவி ஸ்வாகாதேவி அந்த முனிவர்களின் மனைவியரைப்போல (அருந்த தியைத் தவிர மற்றவர்களைப்போல) தன்னை உருமாற்றிக் கொண்டு அக்னியிடம் வந்து அவனோடு இன்பம் துய்த்தாள். அக்கினி இதனால் மகிழ்வடைந்தான். இச்செய்தி முனிவர்களுக்குத் தெரிந்துவிட்டது. கோபம்கொண்ட முனிவர்கள் மோகத்தால் அறிவிழந்த அக்னிதேவனையும் அவனுடைய மோகத்தைத் தணிக்க சுவாகாதேவி மேற்கொண்ட அடாத செயலையும் கண்டித்து அவர்களைக் கடுமையாகச் சபித்தனர். அஞ்சிய அவர்கள் முனிவர்களின் காலடியில் வீழ்ந்து கதறினர். இரக்கப்பட்டமுனிவர்கள் அவர்களைத் திருவண்ணா மலைக்குச் சென்று அக்னி தீர்த்தத்தில் நீராடி அண்ணாமலையாரை வழிபடும்படிக் கூறினர். அதன்படியே அவர்கள் இங்குவழிபட்டுத் தனது சாபத்தைப் போக்கிக் கொண்டனர் என்று புராணங்கள் கூறுகின்றது.

இதுபோன்றே சந்திரனும் தன் குருபத்தினி யான தாரையுடன் கூடியதால் உண்டான பாவம் தீர இங்கு மூழ்கி வழிபட்டான் என்பர்.

இந்நாளிலும் பல குடும்பங்களில் பெண் சாபம் இருப்பதால் அக்குடும்பங்கள் மனவேதனை களாலும், நஷ்டங்களாலும் துன்பமடைந்து மெலிகின்றன. பெண்சாபம் என்பது தவறு செய்தவனை மட்டுமல்லாது அவனுடைய வம்சத்தில் வந்தவர்களை யும் வாட்டும். ஆதலால் நம்மை அறியாமலேயே நாம் பல துன்பங்களுக்கு ஆளாகி அல்லல்படுகின்றோம். இத்தீர்த்தத்தில் மூழ்கி அண்ணாமலையை வலம் வருவதால் அத்தகைய பாவங்கள் தொலைந்து வாழ்வில் மகிழ்ச்சியுண்டாகும் என்பது பெரியோர் கண்ட உண்மையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாக்னியின் தாய் தந்தையரான

வாகீசுவரர் - வாகீசுவரி

சிவாகமங்கள் சிவாக்னி தேவரின் தாய், தந்தையரை வாக்சுவரர் - வாக்சுவரி என்று குறிக்கின்றன. மகேசுவரரான சிவபெருமானும், பார்வதியாகிய கௌரிதேவியுமே வாக்சுவரரும் வாக்சுவரியும் ஆவர். இவர்களைப் பூசித்து இவர்களிடமிருந்தே சிவாக்கினி உற்பத்தியாகி வேள்விக் குண்டத்தில் வளர்வதாக ஆகமங்கள் கூறுகின்றன.

கும்பாபிஷேகம் முதலிய பெருவிழாக்களில் அமைக்கப்படும் வேள்விச் சாலையில் வாக்சுவரர் - வாக்சுவரிக் கென தனியே இரண்டு பூரண கும்பங்கள் அமைத்து அவை சிறப்பாகப் பூசிக்கப்படுகின்றன.

இவர்களுடைய திருவுருவத்தைக் குறிக்கும் தியானசுலோகங்கள் பூஜாபத்ததி நூல்களில் உள்ளன.

இதன்படி வாக்சுவரருக்கு ஐந்து முகங்கள், முகந்தோறும் மூன்றுகண்களாகப் பதினைந்து கண்கள் வெண்மையான நிறம் ❑ நான்கு கைகள் அவற்றில் அபயம், வரதம், அட்சமாலை தாமரை ஆகியவற்றை ஏந்தியவாறு தாமரை மலரில் வீற்றிருக்கின்றார். வாக்சுவரி, கரியநிறத்தை உடையவளாய், இளமையாக எழிலுடன் சந்திரனையும் பூமாலைகளையும் கூந்தலில் அணிந்து கொண்டு புஷ்பவதியாகக் காட்சியளிக்கின்றாள்.

தென்னகத்தில் பல்லவர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன்பே பரவியிருந்த லகுலீச பாசுபதர்கள் எனும் சைவப் பிரிவினர் சிவபெருமானைச் சதாசிவ மூர்த்தியாகத் தனிச் சிறப்புடன் போற்றினர். சதாசிவ மூர்த்தியின் வடிவ பேதங்களில் ஒன்றான வாக்சரரையும் வாக்சுவரியையும் போற்றி அம்மூர்த்தங்களுக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்தனர். அந்தச் சமயத்தின் குருமார்களைப் போற்றிய பல்லவ மன்னர்களும் அவர்களை தொடர்ந்து வந்த சோழப் பேரரசர்களும் வாக்சுவர வழிபாட்டைச் சிறப்புடன் ஏற்றுப் போற்றினர். இவர்கள் காலத்தில் வாக்சுவரருக்கெனத் தனிக் கோயில்கள் பல கட்டப்பட்டன. இவை வாக்சுவரமுடையார் கோயில் என்றே அழைக்கப்பட்டன.

பாசுபதச் சமயக் குருமார்களில் பலர் வாக்சர என்ற பெயரைச் சூட்டிக்கொண்டிருந்தனர். தனது வழியொழுகும் அன்பர்களுக்கும் அப் பெயரைச் சூட்டினர். எடுத்துக்காட்டாகத் தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் வடக்குப் பிராகரத்தில் அமைக்கப்பட்டுள்ள 108 சிவாசாரியர்களின் புடைப்புச் சிற்பங்களில் ★ஒன்று வாக்ச பண்டிதரைக் குறிப்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.

வாக்சுரருக்கு ஐந்து முகங்கள் என்றாலும் கலைஞர்கள் நான்கு திசைகளை நோக்கியவாறு நான்கு முகங்களை மட்டுமே அமைத்துள்ளனர். ஐந்தாவது முகம் மந்திரப்பூர்வமாக மட்டுமே வழிபடப்படும். எனவே இவரை நான்கு முகமுடையவர் என்று பொருள்பட சதுரானனன் என்றும் அழைப்பர். இப்பெயரால் சதுரானன பண்டிதர் என்ற ஒருவர் திருவொற்றியூரில் இருந்ததைச் சோழர்காலக் கல்வெட்டு குறிக்கின்றது.

வாக்சுவரரும் வாக்சுவரியும் உலகின் ஈசானமாகிய வடகிழக்குத் திசையில் அக்னி மண்டலத்தின் நடுவில் இருப்பதாகக் கருதப்பட்டது. எனவே வாக்சுவரர் ஈசானத்துப் பெருந்தேவர் என்றும் அழைக்கப்பட்டார். இதனையொட்டி லகுலீச பாசுபதக் குருமார்கள் ஈசானச்சிவனார், ஈசான பண்டிதர் என்னும் பெயர்களையும் பெற்றிருந்தனர். எடுத்துக் காட்டாக இராஜராஜசோழனுடைய குலகுருவின் பெயர் ஈசான பண்டிதர் என்பதேயாகும். இவர் நெடுங்காலம் வாழ்ந்தவர். இராஜராஜனின் மகனான ராஜேந்திர சோழனுக்கும் குலகுருவாகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வாக்சுவரரைக் குருவடிவில் தட்சணா மூர்த்தியாகவும் போற்றினர். அந்நிலையில் அவர் இடது கீழ்க்கரத்தில் ஓலைசுவடியைத் தாங்கியவராக அமைக்கப்பட்டார். திருவையாற்றுத் தென்கயிலாயம் திருநெய்த்தானம் முதலிய இடங்களில் குருவடிவாக விளங்கும் வாக்சுவரரைக் காண்கிறோம். காலப் போக்கில் இந்நிலைமாறியது லகுலீச பாசுபதர்கள் தனது தனித்தன்மைகளை இழந்து பொதுவான சைவத்தில் கலந்து ஒன்றிவிட்டனர். அவர்களால்

❑ (கிரியா கிரமத்ஜோதி என்ற நூலில் இவர் செந்நிறம் கொண்டவராகவும், தாமரை அட்சமாலைக்குப் பதில் சூலம் பாசம் ஏந்தியவர் என்றும் குறிக்கின்றது)

★ 103வது சிற்பத்தின் மேல் குடவாயில்கிழார் உமாபதி ஆழ்வாரான வாக்சுவரர் என்று எழுதப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கட்டப்பட்ட கோயில்களும் கால வெள்ளத்தால் மறைந்து விட்டன. அங்கிருந்த வாக்சுவர வாக்சுவரி வடிவங்கள் ★ பல இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுக் காட்சிபொருளாகிவிட்டன. ஒரு நிலையில் வாக்சுவர வழிபாடு என்பதே மறந்து போய் விட்டதால் நான்கு முகங்களுடன் அட்சமாலையும் புத்தகமும் ஏந்தித் தாமரை மலரில் வீற்றிருக்கும் இச்சிற்பங்களைப் பல ஆராய்ச்சியாளர்கள் பிரமன் என்றே குறித்தனர். தேவாரப்பாடல் பெற்ற தலமான கண்டியூரில் உள்ள வாக்சர் திருமேனி இந்நாளில் பிரமன் என்று அழைக்கப்படுவது இங்கு எண்ணத் தக்கதாகும்.

தலையில் ஜடா மகுடமும் அதில் இளம்பிறை, சந்திரனுடன் பாம்புகள் இருப்பதையும், முகங்கள் தோறும் நெற்றியில் மூன்றாவது கண் இருப்பதையும் (சில வடிவங்களில் மேற்கரத்தில் சூலம் பாசம் இருப்பதையும்) ஆராய்ச்சியாளர்கள் கவனிக்க வில்லை என்று தோன்றுகிறது.

பின்னாளில் வாக்ச வழிபாடு முற்றிலுமாக மறைந்துவிட்டபோதிலும் அபூர்வமாக ஒரிரு கலைஞர்கள் வாக்சுவரரை மறக்காமல் அவருக்குச் சிற்பம் அமைத்திருப்பதைக் காண்கிறோம். எடுத்துக் காட்டாக அக்னிலிங்கத்தலமான திருவண்ணாமலை யில் வல்லாளமகாராஜன் கோபுரம் என்கிற பெரிய ராஜகோபுரத்தின் அதிஷ்டானத்தில் ஈசான முலையில் ஒரு மாடத்தில் வாக்சுவரை அமைத்துள்ளதைக் காண்கிறோம்

நெடுங்காலம் உன்னதநிலையில் இருந்த இவ்வழிபாடு சுவடுகூட தெரியாமல் மறந்து விட்டபோதிலும் ஆகம முறைப்படியான வேள்விச் சாலையில் மந்திரப்பூர்வமாகத் தொடர்ந்து நடை பெற்றுவருகின்றது.

அப்பரும் அக்னியும்

இலங்கை வேந்தனான இராவணன் கயிலையைத் தூக்க முயன்று அதன் கீழ் அகப்பட்டுக்கொண்டு தவித்தபோது "வாக்சர்" என்ற முனிவர் அவனிடம் நீ "சிவபெருமானைச் சாமகானம் பாடி மகிழ்வித்து அருள்பெருவாய்" என்று கூறியதாகச் சிவபுராணத்தில் குறிப்புள்ளது. அந்த வாக்சரே அப்பர் அடிகளாகப் பிறந்து சைவம் வளர்த்தார் என்று கூறுவர். அப்பருடைய இயற்பெயர் வாக்சர் என்பதே ஆகும். சிவபெருமானை வாக்சராகப் போற்றி வழிபட்ட லகுலீச பாசுபதத்தின் பால் பற்றுக்கொண்டவர் என்பதை இவர் பாடியுள்ள அனேக தேவாரப் பாடல்களால் அறியலாம். இவருக்கும் அக்னி வழிபாட்டிற்கும் மிகுந்த தொடர்பு இருக்கிறது. இவர் சிவனருள் பெற்றது, சிவபெருமான் அக்னி அம்புகளைப் பூட்டி முப்புரங்களை எரித்த திருவதிகையாகும். முத்திப் பெற்றது அக்னி பகவான் பூசித்துப் பேறு பெற்ற திருப்புகலூர் ஆகும். இதனால்தான் இவர் சிவபெருமான் எரிஏந்தி ஆடுதலையும் எரி தழலாக விளங்குவதையும் பல நூறு பாடல்களில் பாடி மகிழ்கின்றார் என்பர்.

★ தஞ்சாவூரை அடுத்த கரந்தையில் வாக்சுவருக்கான தனிக்கோயில் இருந்தது. அக்கோயில் இடிந்து போகவே அங்கிருந்து வாக்சமூர்த்தியின் திருவுருவம் தஞ்சாவூர் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் இருந்து அழிந்துபட்ட மூன்று வாக்சர் கோயில்களில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட மூன்று வாக்சர் சிலைகள் அமெரிக்க நாட்டிலுள்ள ஆல்பெர்ட் நகரத்து பப்பலோனாக்ஸ் கலைக்கூடத்திலும் பாஸ்டன் நகரிலுள்ள மியூசியம் ஆப் பைன் ஆர்ட்ஸிலும் மும்பையிலுள்ள தனியார் கலைக்கூடமொன்றிலும் உள்ளன.

வாக்சுவரர் வழிபாட்டை ஆராய்ச்சி செய்து வாக்சர், வாக்சுவரி சிற்பங்களைக் கண்டறிந்து முதன்முதலாக வெளிப்படுத்தியவர் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் மேனாள் இயக்குனர். டாக்டர். நாகசாமி அவர்கள் ஆவார். இக்கட்டுரைக்குப் படங்கள் தந்துஉதவிய அவருக்கு நமது நன்றி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங் காட்டும் வாகீசர் -வாகீசுவரி

சிவாமங்களிலும், பூஜாபத்தி நூல்களிலும் வாக்சுவரர் வாக்சுவரியின் திருஉருவத்தை விளக்கும் தியான சுலோகங்கள் கூறப்பட்டுள்ளன. அஜிதாக மத்தில் வாக்சுவர வாக்சுவரியின் ஆவாகன மந்திரம் சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருள்:-

நன்கு அமைக்கப்பட்டுச் சமஸ்காரங்கள் செய்து பூசிக்கப்பட்ட குண்டத்தில் அக்னியின் மாதாவான வாக்சுவரியையும், தந்தையான வாக்சுவரரையும் அழைத்து நிலைப் படுத்தி அர்ச்சிக்கவேண்டும் ஹ்ராம் என்ற மந்திரத்தால் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் பூசிக்கவேண்டும்.

கௌரிதேவியே அக்னிமாதாவான வாக்சுவரியாகவும், பரமேஸ்வரனே பிதாவான வாக்சுவரராக வும் இருக்கின்றனர். வாக்சுவரர் மூன்று கண்களும் நான்கு தோள்களும் பத்மராகம் போன்ற ஒளியையும் கொண்டவராக வரதம், அபயம் ஆகிய முத்திரைகளுடன் சூலத்தையும், பாசத்தையும் தாங்கியுள்ளார்.

வாக்சுவரி தாமரைபோன்ற நிறத்தை உடையவளாய் கனத்த ஸ்தனங்களுடன் அறிவை விவரிக்கும் புத்தகம், கமண்டலம், அட்சமாலை (வரதமுத்திரை) ஆகியவற்றைத் தாங்கியுள்ளாள் என்பதாகும்.

மேலும் காரணாகமத்தின் முதற்பகுதி வாக்சுவரரை (முகம் தோறும்) மூன்று கண்களைக் கொண்ட ஐந்து முகங்களையும் சூலம், கபாலம், அபயவரத முத்திரைகளைத் தரித்த நான்கு கரங்களையும் பாம்புகளும் சந்திரனும் அலங்கரிக்கும் ஜடாமகுடமும் கொண்டவராய்க் கூறுகிறது.



● வாக்சுவரர் ● வாக்சுவரி

தொடர்ந்து ஸ்யாமள நிறத்துடன் கூடிய வளான வாக்சுவரியை வெண்பட்டாடைகளைத் தரித்து பருவமடைந்து இளமை ததும்புபவளாய் பலவிதமான அணிமணிகளைப்பூண்டு அபயவரத முத்திரைகளைத் தரித்துள்ளாள் என்று கூறிப் போற்றுகின்றது.

இதனையொத்தே அனைத்து ஆகம நூல்களும் பிரபஞ்சசாரசங்கிரகம், கிரியாகிரமஜோதி முதலான பூஜாபத்ததி நூல்களும் வாக்சுவர- வாக்சுவரியையும் அவர்களிடமிருந்து உண்டாகும் அக்னியின் தோற்றம் வளர்ச்சி ஆகியவற்றையும் விளக்கமாகக் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமூலர் கூறும் அக்னி வழிபாடு

தமிழ் வேதமான பன்னிரு திருமுறைகளில் ஒன்றான திருமந்திரத்தில் திருமூலர் அக்னி வடிவமாக விளங்கும் சிவபெருமானின் வழிபாட்டையும் அதனால் பெறப்படும் பயனையும் விரிவாகக் கூறுகின்றார்.

முதல் தந்திரத்தில் அக்னி காரியம் என்ற தலைப்பில் சிவபெருமான் அழல்வடிவமாக விளங்குவதைக் குறித்த அவர் நான்காம் தந்திரத்துள் நவகுண்டம் என்ற தலைப்பில் சிவபெருமானை அக்னியின் வடிவமாகப் போற்றி வழிபடவேண்டிய தையும் அதனால் உண்டாகும் அருட்பயனையும் முப்பது பாடல்களில் அருளிச்செய்கின்றார்.

இதன் கருத்தாவது:- நாற்கோணம், பிறை, முக்கோணம் வட்டம், தாமரை, யோனி, ஐங்கோணம், அறுகோணம், எண்கோணம் ஆகிய ஒன்பது வகையான குண்டங்களில் தீயின் வடிவாக பெருமான் விளங்குகின்றான்.

இந்த அக்னிகுண்ட வழிபாட்டை முறை யாகக் கடைப்பிடிப்பதால் ஈரேழு பதினான்கு உலகங்களையும் ஆக்கி அழிக்கலாம் என்று எல்லையற்று பரந்து கிடக்கும் அனைத்துச் சமய நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது.

சாதகன் வெளியே கனல் வழிபாடு செய்வதைப் போலவே தன் உடலுக்குள்ளேயுள்ள பதினாறு இடங்களில் அக்னியைத் தியானிக்கப் பதினாறு பிரசாதகலைகளும் நமக்கு உள்ளருள் வழங்கும். இதனால் சாதகனின் வினைகள் நீங்கும்.

இந்த குண்டங்களில் பன்னிரண்டு ராசிகளையும் பாவித்து வழிபட எல்லா தேவர்களும், கோள்களும் மகிழ்கின்றார்கள்.

இக்குண்டத்தில் வளரும் தீயின் சுடர்களே சிவபெருமானுக்குச் சிரமாகும், வட்டமிட்டுநிற்பது முகமாகும். பக்கவாட்டில் நீளும் தீப்பிழம்புகள் கரங்களாகும். பசியநீலமாக உள்ள நடுப்பகுதி உடலாகும். இதுவே சிவலிங்கம் என்று பார்வதி எனக்குக் கூறினாள் என்று கூறுகின்றார்.

பராசக்தியே இந்த வேள்வியில் சொல்லப்படும் மந்திரங்களாக இருக்கின்றாள். அவளை அறிவதே இந்த சாதனையை அறிந்ததாகும்.

வேள்வித் தீ நடராஜரின் வடிவமாகவும் இருக்கின்றது. இதுவே முருகனின் வடிவான குகாக்கினியாகவும் இருக்கின்றது. உயிரின் உள்ளே ஆன்மத் தீயாகவும், உலகில் வேள்வித்தீயாகவும் விளங்கும் சிவபெருமானே கோயில்களில் உள்ள திருஉருவங்களிலும் கலந்து நிற்கின்றான். இதனால் தினமும் கோயில்களில் அக்னி வழிபாடு செய்ய வேண்டியது அவசியமாகும்.

சிவாக்கினியின் திருவுருவம் மூன்று திருவடிகளையும் கருத்துக் கோபிக்கும் இரண்டு முகங்களையும், வலிய நான்கு கொம்புகளையும், விரிந்த ஆறு, கண்களையும் ஏழுநாக்குகளையும் ஏழுகரங்களையும் கொண்டு விசித்திரமாக அமைகின்றது.

இந்தச் சிவாக்கினியைத் தம்முள் அடக்கித் கொள்ளத்தக்க பொருளில்லை, அதனை அளந்து அளவிட முடியாது. அதற்குக் கால எல்லை இல்லை எனவே அதனை நமது அகத்துள் உணர்ந்து அறிவதே அறிவுடைமையாகும்.

மேலும் சிவாக்கினி தேவனுக்கு ஒரு வடிவம் உள்ளது. அதன்படி அவர் ஐந்துமுகங்கள், இருபது கரங்கள், பதினைந்து கண்கள், ஐந்து வாய், பத்து காதுகள், இரண்டு திருவடிகள் கொண்டவராய் அர்த்த நாரீசுவரராக விளங்குகின்றார். சதாசிவ மூர்த்தியையொத்த இந்த மூர்த்தியினின்று இருபத்தைந்து மகாகேசுவர மூர்த்தங்கள் தோன்றி உலகினைக் காத்து அருள்புரிகின்றன.

சிவவேள்வியினால் முத்தியின்பம் கூடுகின்றது. ஏழுலக மக்களுக்கும் வேள்வித் தீ வழிபாடு ஒன்றே சிறந்த பலனளிக்கவல்லது.

வேள்வித்தீயுள் சிவபெருமான் பாலகனாக வும், காளைப்பருவத்தினனாகவும் விளங்குகின்றான்.

புலத்தில் வளர்க்கின்ற நவகுண்ட வேள்வியைப் போலவே ஞானி யோகத்துடன் தனது உடலுக்குள் அதனை வளர்ப்பானாகில், அவனுக்கு காலங்காலமாக அழிவு உண்டாவதில்லை.

தீயின் வடிவமாக ஒன்பது குண்டங்களில் விளங்கும் சிவபெருமானை வழிபடுவதால் சிறந்த பயன்கள் கிடைக்கின்றன என்று கூறுவதுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒவ்வொரு வகையான குண்டத்தில் வளரும் தீயினை வழிபடுவதால் கிடைக்கும் சிறப்புப் பயனையும் கூறுகின்றார். இதன்படி யோனி குண்ட வழிபாட்டைச் செய்வதால் சக்தியருள் கிடைப்பதுடன், காயசித்தி, மாறாஇளமை முதலிய கிடைக்கின்றன. இதுபோன்றே, நாற்கோண குண்டத்தினை வழிபடுவதால் அரிய சாதனைகளை நிகழ்த்தலாம். முக்கோண குண்டவழிபாடு நாம் வாழ்வில் செய்ய வேண்டிய வேள்விக் கடன்களின் பயனை நல்குவதாகும். வில் போன்ற சந்திரவடிவமான குண்டம் வெற்றிகளையும், வட்டமான குண்டத்து அழல் துன்பங்களை நீக்கிச் சுகத்தையும் தருகின்றது. அனைத்து நற்பயன்களை அறுகோண குண்டமும், நிலைபேற்றிற்கு எண்கோண குண்டமும் ஆசிரிய னாகி கற்பிக்கும் தகுதிபெற பத்மகுண்டத்தையும் அரசபோகத்தை அடைந்து அனுபவிக்க பஞ்சகோண குண்டத்தையும் பூசிக்கவேண்டும் என்று கூறுகின்றார்.

இதில் வேதம் ஆகமம் ஆகிய இரண்டிலும் கூறப்பட்டுள்ள அக்னிவடிவங்கள் கூறப்பட்டுள்ளது நோக்கத்தக்கதாகும்.

அக்கினி சோமாத்மகம்

அக்னியிலிருந்து அமுதம் தோன்றுகின்றது என்றும் அதுவே உலகினை வளர்க்கின்றது என்றும் சிவபுராணம் கூறுகின்றது. சிவபுராணத்தில் "அக்னி சோமாத்மகம்" என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள செய்திகளை இங்கு காணலாம், "அக்னி சோமாத் மகம்" என்றால் அக்னியானது சோமமயமான அமிர்தத்தின் ஆத்மாவில் உள்ளது என்றும், அமிர்தமும் அக்னியும் உயிர்களின் ஆத்மாவின் உள்ளே இருக்கின்றது என்பதும் ஆகிய இரண்டு விதமான பொருள் உள்ளன.

இந்தப் பிரபஞ்சம் சோமாத்மகமாகவும், சப்தார்த்த ஸ்வரூபமாகவும் உள்ளது. சிவனிட்ட கட்டளையே சிவசக்தியாக உள்ளதென்று வாயு தேவன் முனிவர்களுக்குக் கூறினான்.

அக்னி என்பது சிவசம்பந்தமான கோரவடிவ மான ஒளிவடிவம். சோமம் என்பது சிவசக்தியரின் அருள்வடிவமாகிய அமுதரசம்.

அக்னியிலிருந்து அமுதம் உண்டாகி அந்த அக்கினியை வளர்க்கின்றது. அந்த அக்கினியை வளர்த்து அவியைச் சொரிவதால் பயிர்கள் செழிக்க மேகமும் அதன் மூலம் மழையும் உண்டாகின்றன. மழையால் உலகம் செழிக்கின்றது. இந்த காரணங் களால் அக்னி சோமாத்மகம் ஆகும்.

அக்கினியானது அமிர்தத்துடன் கூடி நுண்மையாகவும், பருமையாகவும் ஐந்து பூதங்களில் விரவி நிற்கும். அதுவே ஒளியாகவும், உயிரின் சாரமாகவும் இருக்கும். அக்கினியே ஒளியும் சூரியனுமாகும். அமிர்தம் சந்திரனாகவும், அலைகள் வீசும் தண்ணீராகவும் இருக்கின்றது.

இவை உலகிற்கு ஆதாரமாகவும், சக்தி யாகவும் விளங்குகின்றன. அக்கினியே சிவ வடிவம், அமிர்தம் சக்திமயம். இந்த அக்னி, சோமாத்மக மாகவே உலகம் விளங்குகின்றது. அக்கினியில் அமுதம் தோன்றி அந்த அக்கினியிலேயே ஒழுகி அதனை வளர்க்கும். இதனால் உலகம் சிவசக்தி மயமாக விளங்குகின்றது.

தன் உடலில் தோன்றும் அக்கினியால் பற்றுகளைக் கொளுத்தி அப்போது பெருகும் அமுதத்தால் அச்சாம்பலை நனைத்து அதனை அணிபவர்கள் பாவங்களை ஒழித்து சிவமயமாகின் றனர். அவர்கள் மரணத்தை ஒழித்து சிவமுக்தியை அடைகின்றனர்.

யோகப்பயிற்சியை உடைய பெரியோர்கள் தங்கள் யோக வல்லமையால் சூரியகலை சந்திர கலை என்ற இரண்டையும் அக்னிகலையில் ஒடுக்கி அந்த அக்னியில் தோன்றும் அமுதத்தைப் பருகி நித்தியானந்த மோட்சத்தை அடைகின்றனர்.

நல்லடை அக்னீசுவரர் - தஞ்சை மாவட்டத்தில் நல்லடை என்ற திருத்தலம் உள்ளது. இங்குள்ள பெருமான் கல்வெட்டில் அக்னீசுவரர் என்று குறிக்கப்படுகின்றார். மிருகண்டு முனிவர் ஒருசமயம் பெரிய வேள்வி செய்தார். அரசன் தனக்கு அளித்த புதிய ஆடைகளை அந்த வேள்வியில் இட்டு சிவனுக்காகுக என்றார். அதைக் கண்ட அரசன் வருந்தினான். மறுநாள் அரசன் கோயிலுக்குச் சென்று பார்த்தபோது அவன் அளித்து அக்னியில் இடப்பட்ட புதிய ஆடைகள் சிவலிங்கத்தின் மீது இருக்கக்கண்டான். வேள்விக் குண்டத்தில் யாகத்தியாக இருப்பது சிவபெருமானே என்பதை அறிந்தான். அன்று முதல் அப்பெருமானுக்கு அக்னீசுவரர் என்றும் நல்லாடைநாதர் என்றும் பெயர்கள் வழங்குவதாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னி கண்ட நடன தரிசனம்



★ அக்னி மண்டலத்தில் அர்த்தநாரீசுவரர் நடனம் ★

சிவபெருமானின் தாண்டவ தரிசனத்தைக் காண முனிவர்களும் தேவர்களும், மனிதர்களும் பெருவிருப்பம் கொண்டு தவம் செய்ததைப் புராணங்கள் குறிக்கின்றன. அக்னி பகவானும் சிவதாண்டவத்தைக் காணப் பலதலங்களில் தவம் செய்துள்ளான். அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த பெருமான் அவனுக்குக்காக அத்தலங்களில் திருநடனம் புரிந்துள்ளார். அவற்றுள் இரண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் முதலாவது தலம் நெல்லை மாவட்டத் திலுள்ள செப்பறையாகும். இதன் அருகிலுள்ள ராசவல்லிபுரத்தில் அக்னி தவம் செய்து வழிபட்ட சிவலிங்கம் அக்னீசுவரர், என்ற பெயரில் அமைந் துள்ளது. அந்த லிங்கத்திலிருந்து பெருமான் வெளிப்பட்டு அவனுக்குக் காட்சியளித்ததுடன் அருகில் உள்ள தாமிரபரணி ஆற்றின் கரையில் உள்ள சோலையின் நடுவில் பெரிய செப்பு மன்றத்தில் திருநடனம் புரிந்து அருள்பாலித்தார். அந்த நடனத்தினை அக்னிதேவனுடன் தேவர்கள் அனைவரும் கண்டு மகிழ்ந்தனர். அந்த இடமே செப்பறை அழகிய கூத்தர் ஆலயமாகும். ஆற்றின் வெள்ளப்பெருக்கால் அந்த இடம் பாதிக்கப்படவே சற்றுத்தள்ளி, புதியதாகச் செப்பறை ஆலயத்தை அமைத்துள்ளனர். இந்த ஆலயத்தில் செப்புத் தகடுவேய்ந்த நடராஜசபை உள்ளது. இதன் மகாமண்டபத்தூணில் பதஞ்சலி வியாக்ரபாதர் பிரம்மா, திருமால், ஆகிய திருஉருவங்களுடன் அக்னியின் திருஉருவமும் பெரியதாக அமைக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இரண்டாவதானது, கொங்கு மண்டலத்தில் பழனிக்கு அருகில் கொழுமம் என்ற தலமாகும். இங்கு நடராஜர் சிறப்புடன் வழிபடப்படுகின்றார். இவரை இக்கோயில் கல்வெட்டொன்று "நித்தம் நின்றாடுவார்" என்றுகுறிக்கின்றது. இவர் அக்னிக்கு அருளிய நடராஜராவார். இங்கு பிரகாரத்தில் அக்னி வழிபட்ட லிங்கம் அக்னீசுவரர் என்ற பெயரில் தனிச்சந்நிதியில் அமைந்துள்ளதைக் காணலாம்.

திருப்புகலூரில் பக்தகாட்சியின் போது அக்னிக்கு முன்னே சந்திரசேகரர் நடனமாடியபடியே காட்சி வழங்குவது குறிக்கத்தக்கதாகும்.

சிவபெருமானும் உமாதேவியாரும், அக்னி மண்டலத்தின் நடுவில் அர்த்தநாரீசுவரர் வடிவில் நின்று திருநடம்புரிகின்றார்கள். (இதன் விளக்கத்தை சிவமஞ்சரி 21வது மலரில் காண்க). இதனையொட்டி திருவண்ணாமலையில் கார்த்திகை தீபநாளில் தீபம் ஏற்றும் போது அர்த்தநாரீசுவரரின் நடனம் நடை பெறுகின்றது.

அக்னி புராணம் : பதினென்புராணங்களில் பத்தாவதாக விளங்குவது அக்னிபுராணமாகும். அக்னி வசிட்டருக்கு இதனை 383 அத்தியாயங்களில் 15000 சுலோகங்கள் கொண்டதாகக் கூறினார். இதில் சிவனும் திருமாலும் சமமாகவே அனேக இடங்களில் கூறப்பட்டுள்ளனர். இதில் சண்டீசர் பூசை, சண்டீசருக்கான நிர்மால்ய பூஜை, சண்டேசலோகம், சிவப்பிரதிஷ்டை, சிவபூஜை, சிவார்ச்சனை, கௌரி பிரதிஷ்டாவிதி ஆகியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சித்தீசுவரர்

உலகெங்கிலுமுள்ள அனைத்துச் சமயங்களிலும், இறையருளால் அபூர்வ சித்திகளையடைந்து நிகரில்லாத ஆற்றல்களுடன் விளங்கும் சித்தர்கள், சிறப்புடன் போற்றப்படுவதைக் காண்கிறோம். குறிப்பாக இந்திய சமயங்களில் சித்தர்களுக்குத் தனித்த உயர்ந்த நிலை அளிக்கப்பட்டுள்ளது. இந்து சமயத்தினை யொத்ததாகிய பௌத்த, சமண சமயங்களிலும் சித்தர்கள் வழிபாடு சிறப்பாகப் போற்றப்படுகின்றது.

தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் சித்தர் வழிபாடும், சித்தர் இலக்கியங்களும் உயர்வாகப் போற்றப்படுகின்றன. இங்கு ஏராளமான சித்தர்கள் வாழ்ந்து சமயத்தொண்டும் சமுதாயத் தொண்டும் புரிந்துள்ளனர். இவர்களுடைய கூட்டம் "சித்தகணம்" என்று அழைக்கப்பட்டது.

இவர்கள் முழுமுதற்கடவுளான சிவபெருமானைத் தமது ஆதி குருவாக ஏற்றுக் கொண்டு வழிபடுபவர்கள். சித்தமரபை உருவாக்கியவர் சிவபெருமானே என்பது இவர்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இதனால் சிவபெருமானை ஆதிசித்தன், மகாசித்தன், எல்லாம்வல்ல சித்தன் முதலான பெயர்களால் அழைத்தனர்.

சித்தர் மரபை உண்டாக்கியதாலும் சித்தர்களால் வழிபடப்பெறுவதாலும் சிவபெருமான் சித்தீசுவரன் என்றும், அவனுடைய ஆலயங்கள் சித்தீச்சரங்கள் என்றும் அழைக்கப்பட்டன.

சித்தர்கள் சிவபூஜையின் மேன்மையையும், சிவமந்திரமான ஐந்தெழுத்து மந்திரத்தையும் உணர்ந்து கடைப்பிடிப்பவர்கள். சிவதீட்சையை உரிய மாணவர்களுக்கு வழங்கி, சித்தநெறியும் சிவநெறியும் தழைத்தோங்க வகைசெய்பவர்கள்.

சித்தர்கள் விஞ்ஞானிகளுக்கும் மேலான மெய்ஞ்ஞானிகள். மனித சமுதாயம் துன்பம் நோய் நொடிகளில் இருந்து விடுபட்டு மேன்மை பெற உழைப்பவர்கள். இவர்கள் இயற்கையின் இரகசியங்களை அறிய முயன்று வெற்றிகண்டவர்கள். உலகிலுள்ள அனைத்துச் செடி, கொடி, மரம், மண்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாதுக்கள், பாஷாணங்கள் முதலியவற்றின் இயல்புகளையும் மருத்துவக் குணங்களையும் அறிந்து அவற்றின் மூலம் மனமும், உடலும் மேன்மைபெற அவற்றைப் பல்வேறு வகைப்படுத்தி மக்கள் சமுதாயம் பயன்பெற வழி வகுத்தவர்கள்.

சித்தர்கள் எண்ணிலாதவர்கள். குரு சீடபரம்பரையில் உலகம் தோன்றிய காலம் முதல் வழிவழியாக வந்து கொண்டிருப்பவர்கள் என்றாலும் சித்தர்களைப் பதினெட்டு பேர்கள் என்று கூறுவது ஒரு மரபு. பல நூல்களில் பதினெண்சித்தர் துதி என்ற பாடல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

எந்தக் காரணத்தால் இவர்களைப் பதினெட்டு பேர்களாகக் கூறுகின்றனர் என்பது தெரியவில்லை என்றாலும் பதினெட்டு என்ற எண்ணுக்கு நுண்பொருள் அளிப்பவர்கள் பதியை எட்டிப்பிடித்து அவருடைய ஆற்றல்களைப் பெற்றவர்கள் என்பதைக் குறிக்கவே, சித்தர்கள் தொகையைப் பதினெட்டு என்ற எண்ணால் குறித்தனர் என்கின்றனர்.

மேலும் பதினெண் சித்தர்கள் என்பதற்குப் "பதியினை எண்ணத்தில் ஓயாது சிந்தித்துச் சிந்தனையில் தேக்கி, அறிவானந்தத்துள் அமிழ்ந்திருப்பவர்கள்" என்றும் பொருள் கூறுவர்.

தென்னக மரபில் சித்தர்களைப் பதினெண்மராகச் சொல்லுவதால் சிவமஞ்சரியின் இந்தப் பதினெட்டாவது மலர் "சித்தீச்சுவரர்" என்ற பெயரில் மலர்கின்றது. இதில் சித்தர்கள் சித்திகள் பற்றிய விளக்கம், சித்தீச்சரங்கள், சித்த தீர்த்தங்கள் முதலிய அனேக செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

மதுரையம்பதியில் அங்கயற்கண்ணியுடன் வீற்றிருந்தருளும் எல்லாம்வல்ல சித்தனான சோமசுந்தரப்பெருமான், அன்பர்கள் அனைவருக்கும் சித்திகள் நிறைந்த சீரிய வளமான வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவனுடைய பொன்னார் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

-- சிவசுந்தரி

சித்தி என்பதின் விளக்கம்

சித்தி என்பதற்குச் சித்தர்கள் பல வகையான விளக்கங்களை அருளியுள்ளனர். பொதுவாக இச்சொல்லுக்கு "அருந்திறலால் எளிதாகச் செய்து முடிக்கும் செயல்" என்பது பொருளாகும். சித்திகளைக் கரும சித்தி, யோகசித்தி, ஞானசித்தி என்று மூன்றாக வகைப்படுத்துகின்றனர். இதில் ஞானசித்தியே முதன்மை பெற்றதாகும். இதனைக் கலைஅறிவு, ஆன்ம விசாரணை, அகமுக பாவனை, பிரமானுபவம் பெறுதல் முதலியவற்றால் அடைகின்றார்கள். இந்தச் சித்திகளைப் பெற்றவர்களுக்கு 647 கோடிசித்திகள் ஏவல் செய்யக் காத்திருக்கின்றனர்.

இரண்டாம் நிலை சித்தி, யோகசித்தி எனப்படும். இது யோகநெறிகளைக் கடைப்பிடிப்பதாலும் மூலதாரத்தை விழிப்பித்து ஆறாதாரங்களைக் கடந்து சித்தி அனுபவம் பெறுதலாகும். இது 64 சித்திகளைச் சுதந்திரத்தால் நடத்துவதாகும். இதனை அடைவதனாலும் அரிய சித்திகளைச் செய்கின்றனர்.

மூன்றாம் நிலைசித்தி "கருமசித்தி" எனப்படும் இது கடைநிலையானதாகும் பெரியோர்கள் இதனைப் போற்றுவதில்லை.

சித்தநிலையை "அருள்சேர் அனுபவம்" என்று வள்ளலார் குறிக்கின்றார்.

சித்தி என்பதற்குச் சிவநிலையாகிய முத்தியின்பம் என்பதும் பொருளாகும். இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "சொல்லடி, நெருக்கித் திறம்பாது செய்பவர்க்கே சித்தி செய்வானை" என்று குறிப்பதால் அறியலாம்.

யோகம் - விளக்கம்

யோகம் என்பதற்கு "ஆன்மாவை இறைவனோடு ஒன்றவைத்தல்" என்பது பொருளாகும். இவை மந்திரயோகம், ஸ்பரிசயோகம், பாவ யோகம், ஞானயோகம், மகாயோகம் எனப் பலவகைப்படும். இறைவனை மனத்துள் எண்ணி மந்திரங்களை ஓதி வழிபடுதல் மந்திரயோகமாகும். மாசின்றி தூய உள்ளத்துடன் ரேசகபூரகம் செய்து கும்பகத்தில் ஆன்மாவைத் தியானித்தல் ஸ்பரிசயோகம் எனப்படும். உலகம் அனைத்தையும் மறந்து உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி இறைவனை உள்ளத்துள் காண்பதே பாவயோகம் எனப்படும். தான் வேறு; உலகம் வேறு என்று பேதம் உணராமல் உள்ளும் புறமும் தன்னையே காண்பதற்கு ஞானயோகம் என்பது பொருள். ஜோதியாய், நிர்மலமாய், ஆனந்தமயமாய் குற்றமற்ற ஆதியாம் பொருளை அறிவதே மகாயோகம். இந்த மகாயோகத்தை அடைந்தவர்கள் அட்ட மகாசித்திகளும் கைவரப் பெற்றவராவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தீச்சரங்கள்

சிவபெருமான் தானேயொரு சித்தனாகத் தோன்றி அன்பர்களுக்கு அருள்பாலித்த பிறகு சிவ லிங்கத்துள் கலந்த இடங்களே ஆதிநாளில் சித்தீச் சரங்கள் என்று அழைக்கப்பட்டன. இவை முதல் நிலை சித்தீச்சரங்களாகும்.

பின்னாளில் சித்தர்கள் தாங்கள் பெற்ற சித்தி களினால் மணி, மந்திர, ஔஷதங்களைக் கொண்டு சிவலிங்கங்களை அமைத்துக் கோயில்களைக் கட்டியுள்ளனர். இவைகளும் சித்தீச்சரங்கள் என்றே பெயர் பெறுகின்றன. இவை இரண்டாம் நிலையின வாகும்.

சித்தீச்சரம் என்பதற்கு ஒப்பற்ற ஆற்றலைப் பெறுமிடம் என்பது பொருள். "சித்" என்பதற்கு "ஒரு பொருளைப் பற்றிய ஆழ்ந்து, அகன்று, பரந்துபட்ட நுண்ணறிவு" என்பது பொருள். ஒருவனுக்குத்தான் விரும்பும் ஒரு பொருளினைப்பற்றிய இத்தகைய நுண்ணறிவு எங்கு கிடைக்கின்றதோ அதுவே சித்தர் பீடம் அல்லது சித்தீச்சரம் ஆகும்.

எடுத்துக்காட்டாக, தருமத்தைப் பற்றிய நுண்ண றிவு சித்திக்குமிடம் தருமசித்தீச்சரம் ஆகும். வேதத் தினைப் பற்றியும் அது தன்னுள்அடக்கிக்கொண்டுள்ள மறை பொருட்களையும் விளக்குமிடம் வேதசித்தீச்சரம் ஆகும். இவ்வாறே, யோகசித்தீச்சரம், ஞானசித்தீச்சரம், இஷ்ட சித்தீச்சரம் என்று பலவகையான சித்தீச்சரங்கள் தென்னகமெங்கும் காணப்படுகின்றன.

கற்றல் என்பதற்கு ஒருவன் ஒரு பொருளை ஒரு உருவில் ஆக்கக்கற்றுக் கொள்ளுதல் என்பது பொருள். அது அவன் கற்கக்கற்க விரிவுபடும். படித்தல் என்பதற்கு ஒன்றைப் பயன்பெறுவதற்காக அதனைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பது பொருள். இவையெல்லாம் ஒரு எல்லைக்குள் நிற்பன. சித்தி என்பதற்கு ஒருவன் ஒன்றை நன்றாகப் பயின்று, அதில் உண்டாகும் தடைகளுக்கு விடைகளைக் கண்டுபிடித்து அப்பொருளில் சந்தேகமே இல்லாமல் தெளிவடைந்து அதனால் அடையத்தக்க முழுப் பயனையும் அடைந்து இன்புறுதலாகும். அது மட்டுமின்றி அப்பொருளின் பயனை அடுத்தவர்கள் எளிதில் அடைய்த்தக்க வகையில் உணர்வித்து, துணை செய்வதும் ஆகும்.

சித்தர்கள் என்பவர்கள் தமது அரிய ஒழுக்கங் களினாலும், சாதனைகளாலும் பெற்ற அரிய அறிவுத் திறனை உரியவர்களுக்கு விளக்கிக் கூறவும் அதில் பயிற்சி தரவும் அமைக்கப்பட்ட இடங்களே சித்தீச்ச ரங்கள் எனப்பட்டன என்பர். இங்கு அவர்கள் அமைத்து வழிபட்ட ஆலயங்களே பின்னாளில் சித்தீச்சரங்கள் என்று புகழ் பெறலாயின என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தென்னகத்திலும் வடநாட்டிலும் பலநூறு சித்தீச்சரங்கள் அமைந்துள்ளன. இங்கு இந்நாளில் சித்தர்கள் வசிப்பது நமக்கு புறத்தே தெரியவில்லை என்றாலும் அவர்கள் சூட்சும தேகத்துடன் வந்து இங்கு வழிபடுவதுடன் அருளாற்றலை அன்பர் களுக்கும் வழங்குகின்றனர் என்று நம்பப் படுகின்றது. இதனால் சித்தீச்சரங்கள் என்று அழைக்கப்படும் ஆலயங்களில் அதிவிடியற் காலையில் தூயநீராடி விபூதியணிந்து அந்த லிங்கத்தின் முன்பு அமர்ந்து மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்து வந்தால் நமக்குச் சித்தர்கள் வெளிப்பட்டு அருள்புரிவார்கள் என்பது கண்கண்ட உண்மையாகும்.

மேலும் சித்தர் எனப்படும் ஒரு சைவசமயப் பிரிவினர் சித்தர்களின் அருட்காட்சியைப் பெற்று அனேக சித்தீச்சரங்களை அமைத்துள்ளனர். இந்தச் சித்தர் கணத்தினர் பல தலங்களில் வழிபட்டதைத் தமிழ் மறைகளாலும், புராணங்களாலும் அறிகிறோம். காஞ்சிபுரத்தில் இஷ்டசித்தீச்சரம், தருமசித்தீச்சரம், யோக சித்தீச்சரம் ஞானசித்தீச்சரம் என்ற பெயர்களில் பல சிற்றாலயங்கள் இருக்கக் காண்கிறோம். (அதனைத் தொடர்ந்து வரும் கட்டுரையில் காணலாம்).

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் பல வற்றில் சித்தர்கள் வந்து வழிபடுவது குறிக்கப்பட் டுள்ளது. தேவாரத்தலம் ஒன்று சித்தீச்சரம் என்ற பெயரிலேயே விளங்குகின்றது. நறையூர்ச் சித்தீச்சரம் என்றழைக்கப்படும் அத்தலத்து இறைவரும் சித்த நாதேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். உஜ்ஜ யினியின் எண்பத்து நான்கு திருத்தளிகளில் சித்தீச் சரமும் ஒன்றாகும்.

சித்திச்ரங்களை வணங்குவதால் சித்தர்களின் அருளும் சிவனருளும் நிறைவாகக் கிடைக்கும் என்பது அனுபவத்திற் கண்ட உண்மையாகும்.

> சித்தர்களின் பெருமை கருதற் கரிதாம் அவர்கள் சிவனுக்கினையவர்; சிவரூபர்; வரங்கள் அருளும் திறத்தினர். -ரமணகீதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சீபுரத்துச் சித்தீச்சுரங்கள்

காஞ்சீபுரத்தில் சித்தர் கணங்கள் நிலையாகத் தங்கிச் சமயப் பணிகளையும் சமுதாயத் தொண்டுகளையும் செய்து வந்ததை வரலாறுகளும், புராணங்களும் விரிவாகக் கூறுகின்றன. இத்தலத்தில் தரும சித்தீச்சரம், ஞான சித்தீச்சரம், யோகசித்தீச்சரம், இஷ்டசித்தீச்சரம் என்ற பலபெயர்களில் சித்தர்கள் அமைத்த பல சிவாலயங்கள் இருக்க காண்கிறோம். இவற்றில் இஷ்டசித்தீச்சரமும் அதனை அடுத்துள்ள இஷ்டசித்திதீர்த்தமும் தனிச்சிறப்பு பெற்றவைகளாகும். மேலும் சித்தர்கள் கூடி வழிபட்ட சித்தீச்சரம் என்ற தனிபெரும் கோயிலும் உள்ளது. இங்கு சித்தர்களுக்குச் சிவபெருமான் தனது திருநடன தரிசனத்தை அளித்தார். என்று கூறப்படுகிறது. இந்த சித்தீச்சரங்களைக் காஞ்சிபுராணங்கள் தனிச்சிறப்புடன் போற்றுகின்றன. இவைதவிர காலவெள்ளத்தால் இத்தலத்திலிருந்து பல சித்தீச்சரங்கள் அழிந்துபட்டன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

சித்தீச்சரம்

காஞ்சீபுரத்தில் காமராஜர் சாலையில் கிழக்கு நோக்கியவாறு மஞ்சள் நீராற்றின் கரையில் அமைந்துள்ளது சித்தீச்சரமாகும். தலைவாயிலை அழகிய சிறிய ராஜகோபுரம் அணி செய்கின்றது. இதனுட் சென்று விசாலமான பிராகாரத்தில் வலம் வருகின்றோம். இதில் விநாயகர், முருகர், சண்டீசர் ஆகியோருக்குத் தனிச்சந்நிதிகள் அமைந்துள் ளதைக் காண்கிறோம். கருவறைச் சுவரில் பஞ்ச கோட்டங்கள் அமைய அதில் விநாயகர், தென் முகக்கடவுள், திருமால், துர்க்கை பிரமன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். கருவறையுள் சுமார் எட்டடி உயரமும் 12அடி சுற்றளவும் கொண்ட பெரியலிங்க



▼சததசுவரா ஆலயம் காஞ்ச்புரம்

மாகச் சித்தீசுவரர் எழுந்தருளியுள்ளார். இதில் ஆவுடையார் இல்லை உருத்திரபாகம் மட்டும் சுயம்பு லிங்கமாக உள்ளது. இது இடிகல்லால் ஆனதென்று கூறுவர்.

கருவறைக்கு முன்பாக உள்மண்டபம், மகா மண்டபம், பெரிய திண்ணைகளுடன் கூடிய முக மண்டபம் ஆகியன உள்ளன. இத்திண்ணைகளில் அமர்ந்து சித்தர்கள் சிவயோகம் பயில்வதுடன், மருத்துவச் சேவைகளையும் செய்து வந்தனர் என்று கூறுகின்றனர். இந்த மண்டபத்திற்கு முன்புறம் சிறிய நந்திமண்டபம் அமைந்துள்ளது. இக்கோயிலில் இரு வேளைகளிலும் பூசைகள் சிறப்பாக நடைபெறு கின்றன. இக்கோயில் உண்டானதற்கான புராண வரலாறு வருமாறு :-

ஒரு சமயம் காஞ்சீபுரத்தில் கம்பையாற்றின் கரையில் தவம் செய்து வந்த உமாதேவியார், மஞ்சள் காப்பை அணிந்து உடலும் உள்ளமும் குளிருமாறு நீராடினாள். அந்நீரானது மஞ்சள் நிறத்துடன் மிகுந்த நறுமணம் கொண்டதாகப் பெருகி ஓடியது. அதற்கு மஞ்சளாறு என்பதும் பெயராயிற்று. சிவபெருமான் அம்பிகையின் உடலில் தவழ்ந்து அவளுடைய அன்பையும், பக்தியையும் அருளையும் ஏற்றுக் கொண்டு ஓடும் அந்த ஆற்றினை விருப்புடன் நோக்கினார். அதில் நீராடி மகிழும் விருப்புடன் அதனிடையில் பெரிய சிவலிங்கமாக எழுந்த ருளினார். பிறகு விருப்புடன் மகிழ்ச்சி பொங்கத் திருநடனமாடினார். அதனால் அவருக்கு "மஞ்சள் நீர்க்கூத்தர்" என்பது பெயராயிற்று.

சித்தர்கள் சிவபெருமான் ஆடும் அந்தத் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்து அவரை அர்ச் சித்துப் போற்றி மகிழ்ந்தனர். சிவபெருமான் அவர் களுக்கு அட்டமாசித்திகளை அருளிச்செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனால் அவருக்குச் சித்தீசர் என்பது பெயராயிற்று. இவரை வணங்குவதால் உடற்பிணியும், மனப் பிணியும், பிற பிணிகளும் நீங்கும் என்பது உறுதி யாகும்.

இங்குத் தீர்த்தக் கிணறு ஒன்று உள்ளது. அதற்குச் சித்ததீர்த்தம் என்பது பெயராகும்

இஷ்ட சித்தீச்சரம்

காஞ்சீபுரத்தில் புகழ்பெற்று விளங்கும் கச்சபேசுவரர் ஆலயத்தின் உள்ளே வடமேற்கு மூலையில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ள தனித்தலம் இஷ்டசித்தீச்சரம் ஆகும். இதன் தென் கிழக்கில் பரந்து விரிந்துள்ள திருக்குளமே இஷ்ட சித்தித் தீர்த்தமாகும்.

இங்கு அசுரகுருவான சுக்கிராச்சாரியார் தவம் செய்துஅஷ்டமாசித்திகளைஅடைந்தார். அதனாலும் இதற்கு இட்டசித்தீச்சரம் என்பது பெயராயிற்று. பின்னாளில் அவன் சொற்படி ததீசி என்ற முனிவன் இங்கு வழிபட்டு வச்சிரதேகத்தினைப் பெற்றான். அவன் வழிபட்டுப் பேறுபெற்றதைத் தலபுராணம் விரிவாக கூறுகின்றது. அது வருமாறு :-

பிருகு முனிவரின். வழிவந்தவர் சியவன முனிவர். அவனுடைய புதல்வர் ததீசி. அவர் சிய வனரின் புதல்வராதலின் சாவனி என்றும் அழைக் கப்பட்டார்.

அத்தகைய சிறப்புமிக்க முனிவர் பிரம்ம தேவனின் தும்மலில் இருந்து பிறந்த குபன் என்ற அரசனோடு நட்புகொண்டிருந்தார். இருவரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தனர்.

ஒருநாள் அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது ததீசி உலகில் சிறந்தவர்கள் கல்விமான்களான பிராமணர்களே என்றார். அரசன் அந்தணர்களைக் குடிமக்களோடு சேர்த்துக் காப்பவன் அரசனே ஆத லால் அரசனே எல்லோரினும் மேம்பட்டவன் என் றான். வாய்ச்சண்டை முற்றி அது கைச்சண்டையாக முடிந்தது. கோபம் கொண்ட ததீசி முனிவன் அந்த அரசனை ஓங்கி அறைந்தான். கோபங்கொண்ட

●இஷ்டசித்தீச்சுவரர் ஆலயமும் இஷ்டசித்தி தீர்த்தமும் – காஞ்சீபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசன் தனது வச்சிராயுதத்தால் ததீசி முனிவனை இரண்டு துண்டாகும்படி வெட்டி வீழ்த்தினான்.

ததீசி முனிவன் தனது குலமுதல்வனான சுக்கிரனை நினைத்து அழைத்தவாறே பூமியில் வீழ்ந்து உயிரை விட்டான். அதையறிந்த சுக்கிரன் அவ் விடத்திற்கு வந்து இறந்து பட்ட முனிவனின் உடலைச் சேர்த்து அதற்கு உயிரூட்டி அவனை எழுப்பினான். பின்னர் ததீசியை நோக்கி, அன்பனே! "நான் காஞ்சீபுரத்திலுள்ள இட்டசித்தி தீர்த்தத்தில் மூழ்கி இட்டசித்தீசரான சிவபெருமானை வழிபட்டு இறந்த எவற்றையும் எவரையும் உயிரூட்டும் மிருதசஞ்சீவினி மந்திரத்தை பெற்றேன்.எனக்குமுன்னால் இத்தலத்தில் ஆதிநாளில் பார்வதிதேவியார், திருமால், பிரமன், சூரியன் ஆகியோர் இதில் நீராடிப் சிவபெருமானை வழிபட்டுப்பேறு பெற்றுள்ளனர். அதுபோன்றே எந்நாளும் அழியாதிருக்க வேண்டுமாயின் நீயும் காஞ்சீபுரத்திற்குச் சென்று இட்டசித்தீச்சரத்தில் சிவபெருமானை வழிபடுக என்றான்.

அதன்படியே ததீசி முனிவன் காஞ்சீபுரத்திற்கு வந்து இட்டசித்தி தீர்த்தத்தில் மூழ்கி இட்டசித்தீச்சரப்பெருமானை வழிபட்டான். அவனுடைய விருப்பங்கள் யாவும் நிறைவேறின.

● வேதசித்தீச்சுவரர் - ஆரணவல்லி
கச்சபேசுவரர் ஆலயம் - காஞ்சீபுரம்

இதையறிந்த அனேக சித்தர்கள் கூடி வந்து அங்கு வழிபட்டுப் பேறுபெற்றனர்.அதனால் அத்தலம் இட்டசித்தீச்சரம் என்று சிறப்புடன் விளங்குகின்றது.

கச்சபேசுரர் ஆலயத்தில் ராஜகோபுரத்திற்கு மேற்கில் ஆலய மதிலுக்குள்ளேயே இக்கோயில் அமைந்துள்ளது. இது தெற்கு நோக்கிய தலைவாயிலையும், விசாலமான பிரகாரத்தையும் கொண்டதாகும். பெரிய வட்டமான விமானம் கருவறையை அணிசெய்கிறது. கருவறையில் மேற்கு நோக்கியவாறு இட்டசித்தீச்சரப் பெருமான் சிவலிங்கத் திருமேனியாக எழுந்தருளியுள்ளார். முன்னேயுள்ள முற்றத்தில் அழகிய மேடையின் மீது நந்திதேவர் எழுந்தருளியுள்ள மண்டபமும் பலிபீடமும் உள்ளன. ஒருகால பூசை சிறப்புடன் நடைபெறுகின்றது.

இக்கோயிலுக்குத் தெற்கில் பெரிய தீர்த்தக்குளமாக இட்டசித்தி தீர்த்தம் விளங்குகின்றது. இதன் நான்கு கரைகளிலும் தர்மசித்தீச்சரம், அர்த்த சித்தீச்சரம், கர்மசித்தீச்சரம், மோட்ச சித்தீச்சரம் என்ற சிறு சிவாலயங்கள் இருந்தனவென்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இந்நாளில் இவை இடம் பெயர்ந்துகச்சபேசத்துள் தனித்தனியே உள்ளன.

வேதசித்தீச்சரம்

கச்சபேசுவரர் ஆலயத்தில் உள்கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் வலப்புரத்தில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள பெரிய மண்டபத்தின் மையத்தில் அமைந்திருப்பது வேத சித்தீச்சரமாகும். சிவபெருமான் நான்கு வேதங்களையும் தனது நான்கு முகத்தால் அருளிச் செய்ததால் இந்தலிங்கம் நான்கு முகலிங்கமாக அமைக்கப்பட்டுள்ளது. வேதத்தை ஒருவன் படிப்பதால் அதனை அறிந்து மனனம் செய்தவனாகிறான். அதன் பயனை அடைந்து இறையின்பத்தைத் துய்ப்பதற்கு இறைவனின் அருள் வேண்டும். அத்தகைய அருளைச் சித்திக்கச் செய்வதால் இது வேதசித்தீச்சரம் என்று பெயர் பெற்றது. இங்குள்ள உள்மண்டபத்தில் வேதவல்லி என்கின்ற ஆரணவல்லி நான்கு கரங்களுடன் எழுந்தருளியுள்ளாள். இத்திருமேனியை சதுர்யுகேசர் எனவும் அழைப்பர்.இந்தச் சித்தீச்சரத்தினை அடுத்து நடராசர் சபை உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞான சித்தீச்சரம்

மேற்சொன்ன வேதசித்தீச்சரம்அமைந்துள்ள மண்டபத்தின் தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள ஆலயமே ஞானசித்தீச்சரமாகும். தனது தளராத முயற்சியால் ஞானத்தை அடைந்தவர்களுக்கு அதன் பயனை அனுபவித்து ஆனந்தம்பெறச் இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் அருள்புரிவதால் அவருக்கு ஞானசித்தீச்சுவரர் என்பது பெயராயிற்று.

யோக சித்தீச்சரம்

அஷ்டமாசித்திகளை அடைய யோகப் பயிற்சி இன்றியமையாததாகும். யோகம் பயில்பவர்களுக்கு அவற்றைச் சித்திக்கச் செய்து அருள் புரிவதால் சிவபெருமானுக்கு யோகசித்தீச்சரர் என்பது பெயராயிற்று. கச்சபேசர் ஆலயத்துள் சோமாஸ்கந்தர் சந்நிதியில் பெரிய சிவலிங்கமூர்த்தியாகயோக சித்தீச்சுவரர் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்.

காஞ்சீபுரத்தில் இன்னும் அனேக வகையான சித்தீச்சரங்கள் இருந்ததென்பதைச் செவிவழிச் செய்திகள் குறிக்கின்றன. காலப்போக்கில் இவற்றின் பெயர்கள் மாறிவிட்டன என்றும் பல இடம்பெயர்ந்துவிட்டனஎன்றும் கூறுகின்றனர்.

திருவாரூர் சித்தீச்சரம்

ஒரு சமயம் அட்டமாசித்திகளைப் பெற்ற ஒரு அரசன் இருந்தான். அவன் அனேக சித்திகளைப் பெற்றிருந்ததால் 'சித்தன்' என்றே அழைக்கப்பட்டான். அரிய சித்திக்களைப் பெற்றிருந்த போதும் அவனுக்குப் புத்திரபேறு வாய்க்கவில்லை. அவன் தேவகுருவாகிய பிரகஸ்பதியைப் பணிந்து, தனக்குப் புத்திரப்பேறு உண்டாக உரிய வழியைக் காட்டுமாறு வேண்டினான்.

பிரகஸ்பதி "அரசனே! புத்திரசெல்வத்தை அளிக்கும் தலம் திருவாரூரேயாகும். நீ திருவாருருக்குச் சென்று கமலாலயத்தில் நீராடிப் புற்றிடங் கொண்ட பெருமானை வழிபடு. அங்கு உன் பெயரால் ஒரு சிவலிங்கத்தையும் அமைத்து பூசை செய்க என்றார். அதன்படியே சித்தன் திருவாரூருக்கு வந்து 'சித்தீசுவரரை" அமைத்துப் பல விரதங்களை மேற்கொண்டு சிறந்த தவத்தைச் செய்து வந்தான்.

அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவ பெருமான் உமையவளோடு விடைவாகனத்தில் கணங்களுடன் காட்சிதந்தார். அவன் அவரைப் பலவாறு துதித்து மகிழ்ந்தான். சிவபெருமான் அவன் விரும்பியவாறே ஒப்பற்ற புதல்வனை அளித்தார். அத்தலத்தில் சித்தர்கள் கூடி வழிபாடு செய்ததாலும் அத்தலம் சித்தீச்சரம் என்று பெயர் பெற்றது. இதனைக் கமலைச்சித்தீச்சரம் எனவும் அழைக்கின்றனர்.

இந்தச் சித்தீச்சரத்தில் அனேக சித்தர்கள் வந்து வழிபட்டுப் பேறுபெற்றனர் என்பதைப் பல வரலாறுகள் தெரிவிக்கின்றன.

ஒருசமயம் இங்கு நடைபெற்ற திருவிழாவிற்கு அளவற்ற முனிவர்கள் வந்து கூடியிருந்தனர். அப்போது ஒரு பார்ப்பன இளைஞன் ஒரு நீர்ப்பாம்பினைக் கொண்டு வந்து அங்கு விட்டான். அது அங்கு யோகத்தில் வீற்றிருந்த ஒரு முனிவன் மீது வீழ்ந்தது. அதைக் கண்ட மற்றொரு முனிவன் அப்பார்ப்பன இளைஞனைக் கோபித்து, "நீ பாம்பாகுக" என்று சாபமிட்டான். அதன்படி உடனே அவன் பாம்பாகி விட்டான்.



● கமலை சித்தீச்சுவரம் திருவாரூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோகத்தினின்று எழுந்த முனிவன் நடந்ததை அறிந்தான். சபித்த முனிவனைக் கோபித்தான். பாம்பு வடிவம் கொண்ட அந்த இளைஞனை அழைத்துஅவனுக்குச் சிவபெருமானுடைய சடாட்சர மந்திரத்தினை உபதேசித்து இங்குள்ள தேவதீர்த்த நீருட் படிந்து இதனை ஓதி வருக. பின்னர் வத்ஸ முனி என்பவர் இங்கு வரும்போது நீ அவரை வணங்கிடு உனக்கு நல்ல கதி உண்டாகும் என்றார். அதன்படியே அவன் இங்குவசித்து வந்தான்.

ஒருநாள் வத்ச முனிவர் இங்கு வந்து நீராடக்கண்டு அந்த புண்ணியத்தால் அவன் சுவர்க்கம்புகுந்தான்.தன்கண்முன்னே ஒரு பாம்பு தேவஉடல் பெற்றுச் சுவர்க்கம் புகுதலைக் கண்டு வியந்துநின்ற அம் முனிவனுக்கு அந்தணகுமாரன் சித்த்ச்சரத்தின் பெருமைகளை விளக்கினான். வத்சமுனி தேவ தீர்த்தத்தில் மூழ்கி சித்தீசரை வழிபட்டு அட்டமா சித்திகளைப் பெற்றான். இதனைத் திருவாரூர்த் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலயத்தினுள்ளே வடகிழக்குமுனையில் மேற்குநோக்கியவாறு தனிக்கோயிலாக கமலைசித்தீசுவரம் உள்ளது. கருவறை உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றுடன் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை யின் மீது இரண்டு தளவிமானம் அணி செய்கின்றது. கருவறை மாடங்களில் விநாயகர், துர்க்கை, பிரமன், தென்முகக்கடவுள் திருமால் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இதிலுள்ள தென் முகக்கடவுள் திரு வுருவம் தனிச்சிறப்பு மிக்கதாகும். அதனை மையப்படுத்திச் சிற்றாலயம் அமைக்கப் பட்டுள்ளது. இச்சந்நிதியில் வழிபட்டு அருள் பெற்றவர் கமலை ஞானப்பிரகாசசுவாமிகளாவார். அவருடைய சீடராக இருந்த குருஞானசம்பந்தரே மாபெரும் சைவமடலாயமான தருமையாதீனத்தைத் தோற்றுவித்தவராவார்.

நவகோடி சித்தீச்சரமான திருவாவடுதுறை

● திருமாளிகைத் தேவர்

திருவாவடுதுறைக்கு நவகோடி சித்தர்புரம் என்பது ஒரு பெயராகும். இத்தலத்தில் ஒன்பது கோடி சித்தர்கள் வாழ்ந்தனர் என்று கூறப்படுகின்றது. அவர்கள் இந்தத்தலத்தைச் சுற்றிலும் ஒன்பது லிங்கங்களை அமைத்து வழிபட்டனர் என்பர். இங்கு வாழ்ந்த பெருஞ்சித்தர் திருமூலராவார். இவருக்குப் பிறகு இங்கு வாழ்ந்த மற்றொரு சித்தர் "சித்தர் சிவப்பிரகாசராவார்" இவரே திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமுதல்வரான நமசிவாயதேசிகருக்குச் சிவஞானத்தெளிவைப் போதித்து ஆதீனத்தை அமைக்கச் செய்தவராவார்.

மேலும் இங்கு நெடுங்காலம் வாழ்ந்து பல சித்தாடல்களைப் புரிந்தவர் திருமாளிகைத் தேவராவார். இவர் போகநாதரின் மாணவர். இவருடைய ஆலயம், திருஆவடுதுறை ஆதீன மடத்தின் அமைந்துள்ளது. இவர் பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

சித்துக்கலையைப் பயில்பவர்கள் இங்குள்ள கோமுத்த்சரப் பெருமானை வழிபடுவதால் அக்கலையில் மிகுந்த தேர்ச்சி பெறலாம் என நம்புகின்றனர்.

திருப்புகலூர் சித்தீச்சரம்

அப்பர் சுவாமிகள் சிவனடிக்கீழ் சேர்ந்த திருப்புகலூரில் அக்னிதீர்த்தக்கரையில் ஒரு சிவாலயம் உள்ளது. இதனைச் சித்தர் கோயில் என்று அழைக்கின்றனர். பதினெட்டுச் சித்தர்கள் இங்குப் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார்கள் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. கருவறையில் சிவலிங்கமும் அதன்பின்னணியில் பெரிய வளைவுக்குள் உமாமகேசுவரரின் சுதைத்திருமேனியும் உள்ளன. இந்தக்கோயில் திருப்பணி செய்யப்பெற்றுப் பொலிவுடன் விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நறையூர் சித்தீச்சுவரம்

திருமுறைகளில் சித்தர்கள்கூடிச் சிவவழி பாடு செய்கின்ற பல இடங்கள் சொல்லப்பட்டிருந்த போதிலும் சிவபெருமான் "சித்தீச்சரன்" என்ற பெயரிலேயே எழுந்தருளியுள்ள தலம் நறையூர் ஆகும். இக்கோயில் தேவாரத்துள் "சித்தீச்சரம்" என்றே அழைக்கப்படுகின்றது.

கும்பகோணத்திலிருந்து 8கி.மீ தொலைவில் உள்ள புகழ்பெற்ற வைணவத் தலமான நாச்சியார் கோயிலின் ஒரு பகுதியே நறையூர் ஆகும். ஆலயம் மேற்கு நோக்கியுள்ளது. பெரிய அளவிலானது. சாலையோரத்திலேயே அமைந்துள்ளது. தலைவாயி லின் மீது ஐந்து நிலை கோபுரம் அணிசெய்கின்றது.

அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இதில் அழகாம்பிகை எனும் பெயரில் நெடிய உருவத்துடன் அம்பிகை விளங்குகின்றாள்.

திருஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடிய திருத்தலம். ஞானசம்பந்தர் மூன்று பதிகங்களையும் சுந்தரர் ஒரு பதிகத்தையும் அருளியுள்ளனர்.

திருஞானசம்பந்தருக்கு இறைவன் பிட்சாடன கோலத்தில் காட்சி கொடுத்ததால் "நேரியன்" என்று தொடங்கும் பதிகத்தில் அக்கோலத்தைச் சிறப்பித் துப்பாடுகின்றார். "ஊருலாவு" என்று தொடங்கும் முதல் பாடலிலும் இக்குறிப்பைக் காண்கிறோம். இப்பதிகத்தில் சித்தீச்சரமான ஆலயம் பல அடைமொழிகளும் குறிக்கப்பட்டுள்ளது. இறுதிப் பாடலில் "சித்தன் சித்தீச்சரம்" என்றும் பாடிப்பரவு கின்றார். இந்தப்பதிகம் முழுவதும் சித்தீச்சரத்தை புகழ்கின்றது. அடுத்ததான "பிறைகொள்" எனத் தொடங்கும்பாடல் சித்தீச்சரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானான சித்தீச்சரரைப் போற்றுவதாக அமைகின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நீரும் மலரும்" என்று தொடங்கும் பதிகத்தில் இத்தலத்தை நறையூர் சித்தீச்சரம் என்று பாடுகின்றார். நெறியில் வழுவா நியமத்தவர்களான (சித்தர்கள்) நிறைந்து வழிபாடு செய்யும் நறையூர் சித்தீச்சரம் என்று பாடுவது குறிக்கத்தக்கதாகும்.

கல்வெட்டில் இறைவன் சித்தீச்சுவரமுடைய மகாதேவர் எனவும் சித்தீச்சுவரமுடைய கங்காள தேவர் என்றும் குறிக்கப்படுகின்றார். திருஞான சம்பந்தருக்கும். சுந்தரருக்கும் இறைவன் இத் தலத்தில் பிட்சாடனராகக் காட்சியளித்ததால் அக் கோலத்தின் பெயரான கங்காளதேவர் என்பது இவ்வூர் இறைவனுக்குப் பெயராயிற்று. கல்வெட்டில் இப்பெயர் இடம் பெற்றிருப்பதுடன் இவருடைய பூசைக்கு வேண்டி நிபந்தமளிக்கப் பெற்ற செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது.

சித்தீசுவரி

சிவபெருமான் நடராஜ கோலத்தில் விளங்கும் போது தேவியான பராசக்தி சிவகாமி என்று பெயர் பெறுகின்றாள். அவ்வாறே அவர் விசுவநாதராக இருக்கும்போது விசாலாட்சியாகவும், சோமசுந்தராக இருக்கும்போது மீனாட்சியாகவும், ஏகம்பராக இருக்கும்போது காமாட்சி யாகவும் இன்னும் அனேக பெயர்களில் வணங்கப்படுகின்றாள். இதனை யொத்த தாகச் சிவபெருமான் சித்தனாக விளங்கும்போது அம்பிகை சித்தீசுவரி என்று பெயர் பெறுகின்றாள். சிவபெருமான் அடியவர்களுக்கு எந்தப்பொருளை அளித்தாலும் அவற்றின் பயனைச் சித்திக்கச் செய் பவள் பராசக்தியே. அதனால் சித்தேசுவரி என்பது அவளுக்கு இயல்பான பெயராயிற்று.

இவளைப் பிங்களா என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கின்றனர். மேலும் இவளை சித்தமாதா, ஹரசித்தி, சித்தகண சேவிதா, சித்தி என்று பல பெயர் களால் சமய நூற்கள் அழைக்கின்றன. இவளுடைய வாயிலில் அஷ்டமாசித்திகளின் அதிதேவதைகள் காவல் காத்து நிற்கின் றனர். வடநாட்டில் பல இடங்களில் சித்தேசு வரிக்குத் தனி ஆலயங்கள் அமைந்துள்ளன. உஜ்ஜயினியில் விக்கிரமாதித்தனுக்கு அருளிய ஹர சித்திமாதா தனி ஆலயங்கொண்டு விளங்குகின்றாள். உருத்திரப்பிரயாகையில் அகஸ்தியர் பூசித்த சித்தேசு வரி ஆலயம் உள்ளது. காசியில் சித்தேசுவரருடன் சித்தேசுவரி வீற்றிருக்கும் ஸ்ரீபீடம் உள்ளது. இது இந் நாளில் சந்திரேசுவரர் ஆலயம் என்று அழைக்கப் படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சித்தலிங்கங்கள்"

சிவாலயங்களில் எழுந்தருளியுள்ள சிவலிங்கங்கள் பலவகைப்படுகின்றன. ஒருவருடைய முயற்சியின்றித் தானே அன்பர்களுக்கு இயற்கையாகத் தோன்றி அருள் பாலிக்க, சிவபெருமான் வெளிப்பட்ட லிங்கங்கள் "சுயம்புலிங்கங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

பார்வதிதேவி, தேவர்கள், ரிஷிகள், அரசர்கள், ராட்சதர்கள் முதலியோர் சிவபூஜைசெய்ய அமைத்த லிங்கங்கள் "பிரதிஷ்டாலிங்கங்கள்" எனப்படும். இவை அமைத்தவர்களின் பெயரையொட்டி முறையே, தேவிலிங்கம், தைவிகலிங்கம், காணலிங்கம், ஆரிஷலிங்கம், ராஜ லிங்கம், ஆசுரலிங்கம் எனப் பலவாறு பெயர் பெறுகின்றன. இவையனைத்தும் பூமியில் கிடைக்கும் உயர்ந்தவகைக் கற்கள், மருந்துகள், மரம், சுதை, முதலியவற்றால் செய்யப்பட்டனவாகும்.

இதற்கு முற்றிலும் மாறானவை சித்தலிங்கங்களாகும். சித்தர்கள் மூலிகைகள், ரசங்கள், பாஷாணங்கள் இவற்றைத் தங்கள் அரியமுயற்சியில் கண்டுபிடித்து சித்த நெறிமுறையால் ஒன்று கூட்டி அதனைச் சிவலிங்கங்களாக அமைத்துள்ளனர். இந்த லிங்கங்களின் மீது காற்றின் சேர்க்கைக் காரணமாக படியும் ஒரு வகையான மருந்துப்படிவு நாம் இவற்றிற்குச் செய்யும் பால் அபிஷேம், பஞ்சாமிர்த அபிஷேகம் நீர் முதலியவற்றில் கலந்துவிடும். அவற்றை உண்பதாலும் பருகுவதாலும் உடலிலுள்ள தீராத வியாதிகளும், மன உளைச்சல்களும் தீரும் என்பது கண்கூடான நம்பிக்கையாகும்.

சிலதலங்களில் சித்தர்கள் இடிகற்களைப் பயன்படுத்திச் சிவலிங்கங்களை அமைத்துள்ளனர். இடிகற்கள் என்பவை. விண்ணில் சுற்றும் கற்கள்: இடியால் தாக்குண்ட பின் பூமியில் விழுவனவாகும். இவை அபூர்வ சக்திகளையுடையன என்று நம்புகின்றனர். சித்தர்கள் இக்கற்களைத் தேடிக்கண்டுபிடித்து அதில் லிங்கம் செய்து அதற்குக் கோயில் அமைத்துள்ளர். காஞ்சீபுரத்தில் இடிக்கல்லால் அமைந்த சிவலிங்கம் சித்தீசுவரர் என்ற பெயரில் அமைந்திருக்கக் காணலாம்.

சிதம்பரத்தையடுத்த திருக்கழிப்பாலையில் சித்தமருந்துகளால் செய்யப்பட்ட லிங்கம் உள்ளது. இந்த லிங்கத்தை அமைத்தபிறகு இதன் தலைப்பகுதி உடைந்துவிட்டது. அதனால் அதன் உள்ளே இறுகாமலிருந்த மருந்துப்பொருள் வழிந்து வெளியே வந்துவிட்டது. பிறகு அந்த மருந்துக்கலவை படிப்படியாகக் குளிர்ந்துக் கெட்டியாக இருப்பதைக் காணலாம். இது கபிலர் என்ற சித்தரால் அமைக்கப்பெற்ற சிவலிங்கமாகும்.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருப்பாசூர் கூவம் முதலான அனேக தலங்களில் இருப்பன இத்தகைய சித்த மருந்துவ முறையில் அமைந்த லிங்கங்களேயாகும்..

இவை சித்தர்களின் அனுபவஞானத்திற்கேற்ப மூவகைப்படும். இவை சூரியகலை ஞானம், சந்திர கலை ஞானம், அக்னிகலை ஞானம் என்ற மூன்று கலைகளின் மூலமாகச் செய்யப்படுகின்றன.

சூரியகலையில் செய்யப்பட்ட லிங்கங்கள் செம்மைநிறம் படைத்தவை. சந்திர கலையில் படைக்கப் பெற்றவை வெண்மை நிறம் கொண்டவை. அக்னி கலையில் செய்தவை கருஞ்சிவப்பு அல்லது நிறம் மாறும் தன்மை கொண்டவை. திருக்கழிப் பாலையிலுள்ள லிங்கம் சந்திரகலை ஞானத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதாகும், இதைக் குறிக்கவே மூலத்தானத்தில் சந்திரசேகரரின் வடிவம் காட்டப்பட்டுள்ளது என்பர்.

திருவிற்கோலம் எனும் தலத்தில் அமைக்கப்பட்டுள்ள லிங்கம் அக்னி கலைஞானத்ததால் செய்யப்பட்டதாகும். இது நிறம் மாறும் தன்மையுடையது. நாட்டிலுள்ள மக்களின் ஒட்டுமொத்த மனோ நிலைக்கேற்ப இதன் வண்ணமும் மாறும் என்று நம்புகின்றனர். நாட்டில் போர்நிலவும்போது இது சிவந்த நிறத்தைப் பெறும் என்று கூறுகின்றனர். (இரண்டாம் உலகயுத்தத்தின் போது இப்படி வண்ணம் மாறியது என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.)

சித்தர்கள் ஆதியில் சித்த மருந்துக் கட்டுகளைக் கொண்டு சிவலிங்கங்களை மட்டுமே அமைத்தனர். பின்னாளில் பலவேறு தெய்வத் திருவுருவங்களையும் அவ்வாறு அமைத்து வழிபட வகை செய்தனர். பழனியில் போகர் பழனியாண்டவரையும், பதினெண் சித்தர்கள் திருச்செங்கோட்டில் அர்த்த நாரீசுவரரையும் அமைத்துள்ளதைக் காணலாம். இந்த அர்த்தநாரீசுவரர் வெள்ளைப்பாஷாணத்தால் செய்யப்பட்டுள்ளார். இது சூரியகலை, சந்திரகலை என்ற இரண்டு கலைஞானங்களின் அடிப்படையில் செய்யப்பட்டதென்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலசமயம் சித்தர்கள் அமைத்த லிங்கங்களின் கட்டமைப்பு இயற்கையின் மாறுதலால் எதிர் விளைவுகளை உண்டக்கி விடுவதும் உண்டு. இந்த வகையில் அமைந்த லிங்கங்களுக்கு அபிஷேகம் செய்து அந்தப் பொருட்களை உண்டு வந்தால் நோய்கள் நீங்கும். ஆனால் இந்தலிங்கங்களை நேரடியாகத் தொடர்ந்து தொட்டு அபிஷேகம் செய்து வந்தால் அப்படிச் செய்பவர்களுக்கு உடலில் தோல் நோய்கள் உண்டாகின்றன.

ஆகவே, இவற்றின் சிறப்பையும் மருத்துவக் குணங்களையும் கருத்திற் கொண்டு அவற்றை இடம் பெயர்க்காமல் தொடாம லேயே பூசிக்கின்றனர். இவை "தீண்டாத்திருமேனிகள்" என்று அழைக்கப்படுகின்றன. அபூர்வ மாகச் சிலதலங்களில் இத்தகைய தீண்டாத் திருமேனி லிங்கங்களைக் காண்கிறோம்.

மேலே சொன்ன திருவிற்கோலத்தில் (கூவம்) உள்ள திரிபுராந்தகலிங்கம் தீண்டாத்திருமேனியே யாகும். இந்த லிங்கத்தைத் தொடர்ந்து தொட்டு வந்தால் தோலில் உஷ்ணரோகங்கள் உண்டாகும் என்று கூறுகின்றனர். இதனால் இதனைத் தொடுவதில்லை. இடுக்கி அல்லது கோலின் துணை கொண்டே இதற்கு ஆடைகள், சந்தனம், பூக்கள் முதலியன அணிவிக்கப்படுகின்றன.

மேலும் சித்தர்கள், மக்கள் நலம் கருதி நிறுவப்பட்ட இத்தகைய லிங்கங்களுக்கு யந்திரத்தாபனம் செய்தும், மந்திர உச்சாடனம் செய்தும் அபூர்வ சக்திகளைக் கூட்டியுள்ளனர். இவற்றைத் தேடிச் சென்று மனத்தை ஒருமுகப்படுத்தி வணங்கிவரும் மக்களுக்கு இவை இப்பொழுதும் நல்ல பயன்களைத் தந்து அருள்பாலிப்பது கண்கண்ட உண்மையாகும்.

விஷலிங்கம்

சித்த மருந்துகளின் கலப்புத் தன்மை மாறும் போது அது மனித உடலின் ஆயுளை நீட்டிப்பதற்குப் பதிலாக மரணத்தை அளித்து விடுகிறது. விழுப்புரம் மாவட்டதிலுள்ள தேவபாண்டலம் என்ற ஊருக்கு அருகில் இராவுத்த நல்லூர் என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூரின் மேற்கில் ஏரிக்கரையில் வியாக்ரபுரீசுவரர் ஆலயம் (சோழீசுவரர்) தனித்த நிலையில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் முன்னாளில் சித்தலிங்கம் ஒன்று இருந்தது. சிவராத்திரியன்று நான்கு காலங்களிலும் இதனைத் தொட்டு அபிஷேகம் செய்பவர் அதன் பிறகு ஓரிரு நாட்களில் மரணமடைந்து விட்டனர். முதலில் இதன் காரணம் புரியாது தவித்தனர். ஒரு சமயம் ஒரு சித்தர் இத்தலத்திற்கு வந்து இந்த லிங்கத்தை ஆராய்ந்து பார்த்து இது விஷலிங்கமாக மாறிவிட்டதென்றும் சிவராத்திரியின்போது நெடுநேரம் இதனைத் தொட்டு பூசிப்பதால் பூசிப்பவரின் உடலில் விஷம் பரவி மரணம் ஏற்படுத்துகிறது என்றும் கண்டுபிடித்தார். ஆனாலும் இது அபூர்வ சக்திகளை உடையது என்றும் கூறி இதனை பூமியின் அடியில் வைத்துவிட்டு அதன்மீது புதிய லிங்கத்தை அமைத்து வழிபாடு செய்யும் வழக்கத்தை உண்டாக்கினார். இப்போது புதியலிங்கம் வழிபாட்டில் உள்ளது. இங்குள்ள அமைதியான சூழலில் யோகம் பயில்பவர்களுக்குச் யோக சாதனை எளிதில் சித்தியாகும் என்று பலர் அனுபவத்தில் குறித்துள்ளனர்.

● அமுதலிங்கம் - திருக்கடையூர்

அமுதலிங்கம்

சித்தர்கள் உயிருக்கும், உடலுக்கும் நன்மை பயக்கத்தக்க பல அரிய சித்த மருந்துப் பொருட்களைக் கொண்டு (பூமியில் உள்ள தாதுக்கள், உப்புக்கள், உலோகங்கள், பாஷாணங்கள், மரங்களின் அவர்கள், பட்டைகள், பிசின், இலைகள், பாறைகள் முதலியன) உரிய முறையில் (புடமிடுதல், அரைத்தல், சுத்திகரித்தல், சேர்த்தல், சாபங்களை நிவர்த்தித்தல்) முதலியனவற்றைச் செய்து இணைத்துச் சிவலிங்கங்களை அமைத்துள்ளனர். இவை உயிருக்கு நன்மை பயக்கும்அமுதம் போன்றவைகலாதலின் அமுதலிங்கங்கள் என்று அழைக்கப்பெறுகின்றன. திருவான்மியூரிலுள்ள மருந்தீசர், திருக்கடையூர், அமுதகடேசுவரர், முதலியன சிவலிங்கங்கள் இத்தகைய அமுதலிங்கங்களே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்ததீர்த்தங்கள்

மக்கள் வழிபட்டுப் பேறுபெறவும். இயற்கையின் அற்புத மருத்துவ குணங்களை எளிதில் பெறவும் சித்தநெறியில் சித்தர்கள் சிவலிங்கங்களை அமைத்தது போலவே, இயற்கையின் நுண்சக்திகள் அடங்கிய நீரூற்றுக்களைத் தேடிக்கண்டுபிடித்து அங்கே குளம் அல்லது கிணறுகளை அமைத்து அவற்றிற்குச் சித்ததீர்த்தம் என்ற பெய்யரைச் சூட்டினர்.

இவை உடல் நலனைக் காப்பவை, மனநலனைக் காப்பவை என்ற இருவகைப்படும். முதல்வகை தீர்த்தங்களில் உஷ்ணரோகம் தோல் வியாதிகள் முதலியன உள்ளவர்கள் தொடர்ந்து நீராடி வந்தால் அவர்களின் நோய்கள் நீங்கும். இரண்டாம் வகை தீர்த்தங்களில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்ந்து குளிக்க வைத்தால் அவர்கள் மனம் சமநிலையடைந்து சாதாரண மக்களைப் போல ஆவர்..

சில சித்த தீர்த்தங்கள் மனத்தில் எண்ணியதைச் சித்திக்க வைப்பதாகும். எடுத்துக்காட்டாக, சிலப் பதிகாரத்தில் கோவலனைப்பிரிந்து வாடும் கண்ணகியிடம் அவளுடைய தோழி காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற தீர்த்தங்களில் மூழ்கிவழிபட்டால் உனது கணவன் திரும்பி உன்னிடம் வருவான் என்று கூறியதாக ஒரு குறிப்பு வருகிறது. இதன் மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய நம்பிக்கைகளும், அதனால் பயன்பெறுதலும் உண்டென்பது அறியப் படுகின்றது.

● சித்தாமிர்த தீர்த்தம் - வைத்தீசுவரன்கோயில்

இந்த சூரியசோமகுண்டங்களே இந்நாளில் திருவெண்காட்டில் (சுவேதாரண்யேசுவரர் ஆலயம்) சூரிய தீர்த்தம், சந்திரதீர்த்தம் என்ற பெயரில் உள்ளன. இவற்றுடன் அக்கினி குண்டம் எனப்படும் அக்னி தீர்த்தமும் உள்ளது. இவை மூன்றையும் சேர்த்து முக் குளம் என்று வழங்குகின்றனர். திருஞானசம்பந்தப் பெருமான் இந்த வெண்காட்டு முக்குளநீரில் மூழ்கிக் குளித்துத் திருவெண்காடரை வழிபட்டால் பேய் விலகும், நல்ல புதல்வரைப் பெறுவர், விரும்பிய வற்றைப் பெறலாம் என்று குறிக்கின்றார். இப்படி நீரில் மூழ்கி விரதமிருந்ததால் பிறந்த பிள்ளைகள் பலரை வரலாற்றில் காண்கிறோம். (எ.கா, மெய்கண்ட தேவர்)

காஞ்சிபுரத்தில் இஷ்டசித்தி என்னும் தீர்த்தம் உள்ளது. அதன் கரையில் இஷ்ட சித்தீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்தத் தீர்த்தத்தில் மூழ்கிப் பஞ்ச சந்திக் கடவுளரையும், இஷ்டசித்தீசப் பெருமானையும் வழிபட்டால் எண்ணிய எண்ணம் ஈடேறும் என்பது நம்பிக்கையாகும். இது சூரியன் மூழ்கிப் பேறுபெற்றதால் சூர்யதீர்த்தம் எனவும் அழைக்கப்படுகிறது.

ஒரு சமயம் வடநாட்டு மன்னனான மயூர வர்மன் என்ப வன் பகைவரின் கொடுமையால் கண்களை இழந்து வருந்தினான். இந்தத் தீர்த்தத்தின் மகிமையைக் கேள்வியுற்று இங்குத் தங்கி இதில் மூழ்கிச் சூரியனையும் இஷ்ட சித்தீசரையும் வணங்கி வந்தான். இதனால் அவன் கண்கள் ஒளிபெற்றன. அவன் கண்ணொளிப்பெற்றதும் சூரியனின்மீது பாடிய மயூகசதகத்தின் பாடல்களில் சில இக் கோயிலில் கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளன.

இந்த இஷ்டசித்தி தீர்த்தத்தின் நான்கு படித்துறைகளும் தர்மசித்திதீர்த்தம், அர்த்தசித்தி தீர்த்தம், காமசித்திதீர்த்தம், மோட்சசித்திதீர்த்தம் என்று நான்கு பெயர்களைப் பெறுகின்றன. மையப்பகுதி சூரியனின் பெயரால் சூரிய தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. இதில் கார்த்திகை மாதத்து ஞாயிற்றுகிழமைகளின் மூன்று சந்திகளிலும் நீராடுபவர்கள் சிவனருளால் எண்ணியதைப் பெற்று இன்பமாக வாழ்வர் என்பது கண்கண்ட உண்மையாகும்.

வைத்தீசுவரன் கோயில் என்ற புள்ளிருக்கு வேளூரில் சித்தாமிர்த தீர்த்தம் என்ற தீர்த்தம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதில் நீராடி, இங்கே தயாரிக்கப்படும் மருந்தை உண்டால் தீராத வியாதிகளும் தீரும் என்பது நம்பிக்கையாகும். புள்ளிருக்குவேளூர் என்ற இத்தலத்தில் சிவபெருமான் சித்தனாகவும் அம்பிகை சித்தேசுவரியாகவும் இருந்து பலருடைய உடற்பிணிகளைத் தீர்த்ததாகத் தலவரலாறு கூறும். பெருமான் வைத்தியம் செய்து அருள்பாலித்த தால் வைத்தியநாதரென்றும் அம்பிகை தைலங்களை அளித்ததால் தைலநாயகி என்றும் அழைக்கப்பட்டனர். அதனாலேயே இவ்வூருக்கு வைத்தீசுவரன் கோயில் என்பது பெயராயிற்று.

கொங்குநாட்டுப் பதியான திருமுருகன் பூண்டியில் ஆலயத்தின் வடபுறம் பிரம்மதீர்த்தம் என்ற தீர்த்தம் உள்ளது. இது பிரமமுனி என்கின்ற சித்தனால் அமைக்கப்பட்டதாகும். இதில் தொடர்ந்து நீராடி வந்தால் சித்தப்பிரமையாகிய மனநோய் நீங்கும். இன்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட பலர் அங்குத் தங்கித் தொடர்ந்து நீராடிவழிப்படுவதைக் காணலாம்.

இத்தகைய சித்ததீர்த்தங்கள் பல தீர்த்தங்கள் தென்னகமெங்கும் உள்ளன. இவற்றில் பலவற்றிற்குப் இப்போது பெயர் மாறியுள்ளது.

சித்தன் வாழ்வு

சித்தர்களின் மரபு வாழையடி வாழையென வருவதாகும். சித்தக்கலைகளான யோகம், வைத்தியம், ஜோதிடம், மந்திரம், பூஜாவிதிகள் முதலியன பயிற்சியாளர்களுக்கு ஒரே நாளில் வந்து விடுவதில்லை. அவற்றைச் சித்தி பெற்ற ஒருவரிடமிருந்து மாணவன் படிப்படியாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால் சித்தர்கள் பலரைத் தமக்குச் சீடர்களாக ஏற்றுக் கொண்டு முறையாகப் பயிற்சியளித்தனர். அப்படிச் சித்தர்களும் அவர்களுடைய சீடர்களும் தங்கியிருந்த இடங்கள் அவர்கள் பெயராலேயே சித்தன் வாழ்வு, சித்தர் காடு, சித்தவனம் என்று பல பெயர்களைப் பெற்றன. இப்பெயர்களையுடைய ஊர்களைத் தமிழகமெங்கும் காணலாம்.

பழனிக்குச் "சித்தன் வாழ்வு" என்பது ஒரு பெயராகும். போகர் முதலான சித்தர்கள் அங்கு நிலையாகத் தங்கி வழிபாடு செய்ததால் அதற்கு அப்பெயர் உண்டாயிற்று.

திருவாவடுதுறைக்கு நவகோடி சித்தபுரம் என்பது ஒருபெயராகும். ஒன்பது சித்தர்கள் தமது கோடி சித்தப் பயிற்சியாளர்களுடன் வாழ்ந்த இடமாதலின் இப்பெயர்பெற்றது. திருவாவடுதுறையினைச் சுற்றி ஒன்பது லிங்கங்களுக்கான கோயில்கள் இருந்தன என்றும் காலப் போக்கில் அவை அழிந்து விட்டன எனவும் கூறுவர். அவற்றில் சிலலிங்கங்கள் இப்போதும் வெட்ட வெளியில் காணப்படுகின்றன.

சித்தர்காடு என்ற பெயரில் பலதலங்கள் உள்ளன. மயிலாடுதுறையை அடுத்து ஒரு சித்தர்காடு உள்ளது. சென்னை பூந்தமல்லியை அடுத்த திருமணம் என்ற ஊரின் ஒரு பகுதி சித்தர்காடு என்று அழைக்கப்படுகிறது. இது பாலி (கூவம்) ஆற்றங் கரையில் உள்ளது. இங்கு ஆற்றங்கரையில் சித்தர்கள் வழிபட்ட பல லிங்கங்கள் வெட்ட வெளியில் உள்ளன. இவ்வூரிலுள்ள திருமால், சிவன் ஆலயத் தூண்களில் பல சித்தர்களின் வடிவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

வேதாரண்யத்தையடுத்த கோடிக்கரையில் சித்தர்காடு எனுமிடம் உள்ளது. இது திருவாவடுதுறை ஆதீனத்தின் குரு முதல்வரான நமசிவாய மூர்த்திகளின் குருவான சித்தர் சிவப்பிரகாசர் அருவ நிலையில் வாழ்ந்து வரும் இடமாகும். இந்த ஆதீனத்தில் மகாசந்நிதானமாகப் பட்டம் ஏற்றவுடன் சித்தர் காட்டிற்குச் சென்று மூன்று இரவுகள் தங்கியிருப்பது வழக்கமென்றும் அந்நிலையில் அவர்களுக்கு சித்தர் சிவப்பிரகாசரின் அருள் அருவநிலையில் கிட்டுமென்றும் கூறப்படுகின்றது.

சித்தர்களோடு அதிகம் தொடர்புள்ள கொங்கு மண்டலத்தில் ஈரோடுக்கு அருகில் சித்தோடு என்கிற தலம் உள்ளது.

சித்தர்கள் மலர்ச்சோலைகளில் தங்கினர் என்பதை முன்பே கண்டோம். அத்தகைய இடங்கள் சித்தர் சோலை எனவும், சித்தர்காவு (சித்தக்காவு) எனவும் அழைக்கப்படுகின்றன.

கேரள மாநிலத்தில் பல சித்தர் காவுகளைக் காண்கிறோம். இன்னும் அனேக ஊர்களைத் தென்னக மெங்கும் சித்தர்களின் பெயரால் வழங்கி வருகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதினெண் சித்தர்கள் யார்?

உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டே மனிதமனம் விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஓயாது தேடி ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கின்றது. ஒரு சாரரின் விஞ்ஞானத் தேடலின் பயனாக அபரிமிதமான விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு மக்களின் வாழ்வு செழித்துள்ளது.

மற்றொரு சாரார் மெய் ஞானத்தையும் வாழ்க்கையின் குறிக்கோளையும் தேடியலைந்து இயற்கையின் ரகசியங்களை உணர்ந்து அதில் வெற்றியும் பெற்றனர். சித்தமாகிய அறிவின் அற்புதத்தை அறிந்து இயற்கையை வென்றவர்களே சித்தர்கள் எனப்பட்டனர். அவர்கள் காயசித்தி பெற்ற உடலுடன். இறவா வரமும் பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் தாம் அறிந்த ரகசியங்களையெல்லாம் அவற்றைப் பெற உரிய சீடனுக்கு உபதேசமுறையில் அளித்துள்ளனர். ஆக சித்தமரபுஎன்பது வாழையடி வாழையென வந்து கொண்டேயிருக்கின்றது.

இதன்படி உலகில் தோன்றிய எண்ணிலாத சித்தர்கள் மக்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து அருள்புரிந்து வருகின்றனர். அப்படியிருக்க அவர்களைப் பதினெட்டுபேர்கள் சொல்வதன் காரணமென்ன? பதினெட்டிற்கும் சித்தர்களுக்கும் என்ன தொடர்பு போன்ற பலப்பல கேள்விகள் எழுகின்றன. ஆனால் இதற்கான விவரம் எதுவும் சித்தர் நூல்களில் காணப்படவில்லை.

யோகநெறிக்கு பதினெட்டுபடிகள் உண்டு இவையனைத்தையும் தனது யோகசாதனையால் கடந்தவர்களே சித்தர் என்னும் தகுதியை அடைய முடியும். இந்த பதினெட்டையும் சாதகன் தனியே கடந்துவிட முடியாது. யோகசாதகனுக்கு (இதற்கு முன்னால்) சித்திபெற்றுள்ள முன்னோர்களின் உதவி அவசியமாகும். ஆதலின் பதினெட்டு படிகளைக் கடக்கப் பதினெட்டு சித்தர்களின் உதவியை நாடினர். அதுவே காலப்போக்கில் பதினெட்டு சித்தர்களைச் சேர்த்து ஒன்றாக வழிபடும் வழக்கமாக மாறியது என்கின்றனர்.

அதனையொட்டியே பதினெட்டுச் சித்தர்கள் என்றும் கூறும் மரபு உருவாயிற்று. அதுவே காலப் போக்கில் பதினெண் சித்தர்கள் வழிபாடாக மலர்ந்தது என்பர். அதனையொட்டிப் பதினெட்டு சித்தர்களைப் போற்றும் துதிப்பாடல் இயற்றப்பட்டு சித்தர் இலக்கியங்களில் சேர்க்கப்பட்டதென்றும் கூறுகின்றனர்.

யோகக்கலையை உணர்த்தும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பனும் கீழ்வேளூரில் யோகராஜவித்தையின் தலைவனாக விளங்கும் தியாகேசப்பபெருமானும் பதினெட்டுபடிகளின் மீது அமர்ந்திருப்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.

யோகக்கலையே சித்தர்களின் வெற்றிக்கான அடிப்படையாகுமென்பதால் இந்தகலை சித்தர்களால் சிறப்புடன் போற்றப்பட்டது.

இதனை நோக்கச் சித்தர்கள் என்பவர்கள் பதினெட்டுப் பேர்களோடு நின்றுவிடவில்லை. அவர்கள் எண்ணிலாதவர்கள். அவர்கள் சிவ பெருமானை முழுமுதற்கடவுளாகவும் சக்தியைத் தலைவியாகவும் ஏற்று வழிபட்டுள்ளனர்.

பதினெட்டுச் சித்தர்களின் திருப்பெயர்களை வரி சைப்படுத்திக் கூறும் துதிப்பாடலைப் பலர் பாடியுள்ளனர். அவற்றுள் ஒன்றை இப்போது காணலாம்.

நந்தி, அகத்தியர் மூலர் புண்ணாக்கீசர்
நல்தவத்துப் புலத்தியரும் பூணைக்கண்ணர்
கந்து இடைக்காடரும் போகர் புலிக்கையீசர்
கருவூரார் கொங்கணவர், காலாங்கி அன்பின்
சிந்தில் அழுகண்ணார் அகப்பையர் பாம்பாட்டி
தேரையரும் குதம்பையரும் சட்டைநாதர்
செந்தமிழ்ச்சீர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தையிலுன்னி சிரந்தாழ்த்தி சேர்ந்து துதிப்போமே.

❑ கோவை மாவட்டம் வெள்ளக் கோயில் குமாரசுவாமி கோயிலில் பதினெட்டு சித்தர்கள் வரிசையாக அமர்ந்து பூசை செய்வது போல சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காட்சி கண்ணைக் கவருவதாக உள்ளது.

❑ மேல்மருவத்தூர் சித்தர் பீடம் ஆதிபராசக்தி ஆலயத்தின் முன்மண்டபத்தின் மீது பதினெட்டு சித்தர்களின் திருவுருவங்கள் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

❑ பதினெண் சித்தர்களுடன் வாலை மனோன்மணியையும் சேர்த்து வரையப்பட்ட படம் அனேகருடைய பூஜை அறையில் வழிபாட்டில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாம் வல்ல சித்தர்

எல்லாம் வல்ல சிவபெருமான் தானே ஒருபெருஞ் சித்தராகத் தோன்றி அடியவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைந்து அருள்புரிந்த வரலாற்றைப் பலநூல்களில் காண்கிறோம். இதில் குறிப்பிடத்தக்கது மதுரையில் பெருமான் எல்லாம் வல்ல சித்தராக எழுந்தருளி ஆடிய திருவிளையாடலாகும். அதனைச் சற்று விளக்கமாகத் தொடர்ந்து காணலாம். திருவானைக்காவில் சிவபெருமான் சித்தராக எழுந்தருளியிருந்து கூலிக்குப் பதிலாகத் திருநீற்றையே அளித்து ஒரு பெரிய மதிலைக் கட்டுவித்ததாகவும் வரலாறு உள்ளது. அம்மதிலுக்கு நீறிட்டான் மதில் என்ற பெயரே வழங்குகின்றது. அதையும் இப்பகுதியில் காணலாம்.

மதுரை எல்லாம் வல்ல சித்தர்

(மதுரையம்பதியின் சிவபெருமான் ஆடிய திருவிளையாடல்கள் அறுபத்துநான்காகும். இவற்றுள் சித்தராக வந்து புரிந்த திருவிளையாடல்களை எல்லாம்வல்ல சித்தரான படலம், கல்யானைக்குக் கரும்பு அருந்தியது அட்டமாசித்தி . உபதேசித்தது. இரசவாதம் செய்தது. கரிக்குருவிக்கு உபதேசித்தது. என்ற தனிப்பகுதிகளில் புராணங்கள் பாடிமகிழ்கின்றன. இவையன்றி பல சித்தாடல்கள் செய்ததை இந்நூலின் வேறுபகுதிகளிலும் காண்கிறோம். நரியைப் பரியாக்கியது, வைகையைப் பெருக வைத்தது முதலானவையும் சித்தாடல்களேயாகும். எல்லாம் வல்ல சித்தராகப் பெருமான் மதுரையில் புரிந்த திருவிளையாடல்களை இங்குச் சிந்திக்கலாம்.)

நெடுங்காலத்திற்கு முன்னர் அபிஷேக பாண்டியன் என்ற மன்னன் பாண்டியநாட்டை ஆண்டு வந்தான். அந்நாளில் பாண்டியமன்னனும், நாட்டு மக்களும் எல்லாநலனையும் அடைந்து உய்யும் பொருட்டுச் சோமசுந்தரப் பெருமான் எல்லாம் வல்ல சித்தராக வேடம்பூண்டு வெளிப்பட்டார். சிவபெருமான் தனது நீண்டசடையை வட்டமாகக் கட்டி அலங்கரித்து, நெற்றிநிறையத் திருநீற்றைப்பூசி, அதன்மேல் திலகமண்டலமும் தீட்டிக்கொண்டார். காதுகளில் கனத்த குண்டலங்கள் அசைந்து மின்னின. கழுத்தினில் படிகமாலையும், மார்பில் பூணூலும் விளங்க வலது தோளில் நீற்றுப் பொக்கணமும் இடதுதோளில் யோகபட்டயத்தையும் தரித்திருந்தார். கரங்களில் மழுப் படையும் பொன்கட்டிய பிரம்பும் இருந்தன. புலித் தோலினாலான அரைஞாண், கௌபீனம், ஆடை அணிந்து உதரபந்தனம்கட்டி கால்களில் வேதமயமான கிண்கிணிகளும் சிலம்பும் ஆர்ப்ப அழகிய பாதுகைகளை . அணிந்து ஞானத்தேன் பொழியும் மலர்ந்த திருமுகத்துடன் மதுரையம்பதியின் வீதிகளிலே நடந்துவந்தார்.

கடைவீதி, சித்திரசாலை, நாற்சந்தி, முச்சந்தி, நிலாமுற்றம், உப்பரிகை, மாளிகை, மலைகள் திண்ணைகள் ஆகிய அனைத்து இடங்களிலும் ஒரேநேரத்தில் தோன்றினார். ஒருசமயம் தெற்கில் இருப்பார். கணப்பொழுதில் வடக்குப்பக்கம் சென்றிருப்பார். இந்திரஜால வித்தைபோல் அன்பர்களுக்குக்

●எல்லாம் வல்ல சித்தர் (மூலவர்)-மதுரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சியளித்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து வேறிடத்தில் தோன்றுவார்.

தூரத்திலுள்ள மலைகளை அருகில் வரச் செய்வார். அருகில் உள்ள மலையைத் தூரத்தே செல்லச் செய்வார். குழந்தைகளைக் கிழவனாக்குவார். முதியவரை இளைஞனாக்குவார், ஆணைப்பெண்ணாக்குவார், பெண்ணை ஆணாக்குவார், மலடிக்குப் மகப்பேறு தருவார். கூன் செவிடு, ஊமை, முடம் ஆகிய குறைகளை யாவரும் காண ஒரு நொடியில் போக்குவார். உலோகங்களைப் பொன்னாக்குவார். செல்வமுடையார்களின் செல்வமனைத்தையும் இல்லாதவர்கள் வீட்டில் இட்டு நிரப்புவார். நண்பர்களுக்குள்ளே பகைத்துப் போரிடச் செய்வார். எட்டி மரத்தில் இனிய பழங்களைப் பழுக்க வைப்பார், வறண்டு கிடக்கும் வைகையாற்றில் வெள்ளம் பொங்கிவரச் செய்வார். மீண்டும் அதனை வற்றச் செய்வார். இனிய சுவையான நீர் நிறைந்த ஓடைகளையும் பொய்கைகளையும் உவர் நீராக்குவார். கடல் நீரைச் சுவையுள்ள குடிநீராக்குவார்.

தனது மந்திரக்கோலை அந்தரத்தில் வீசி நிற்கவைத்து அதன் மீது ஊசியை நாட்டி அதன்மீது தலையை வைத்துக்கொண்டு கால்களை மேலே தூக்கிகொண்டுச் சுழன்று ஆடுவார். வானில் கருடனைப்போல் பறந்து மேகங்களைப் பிடித்துப் பிழிந்து இடியோடு நீரைக் காட்டிப் பார்ப்பவர்களை அதிசயப் படவைப்பார். இரவில் சூரியனையும், பகலில் சந்திரனையும் காட்டுவார். நீர் நெருப்பு இவற்றின் தன்மையை அழிப்பார். மலரும் காயும் கனியும் இல்லாத நாளில் மரஞ்செடி கொடிகளை மலர்ந்து மணக்கச் செய்வார்.

மூத்து வயதால் உடல்தளர்ந்தவர்களை உறுதிமிக்க காளைப்பருவத்தினராய் மாற்றுவார். அவர்களுக்கு ஏற்ப அவர்களுடைய முதிய மனைவியரையும் இளமையுடையவராய்ச் செய்து அவர்கள் கருவுற்றுப் பிள்ளைபெற விபூதி அளிப்பார்.

ஆக்ருஷணம்..அதிரிச்சியம், அஞ்சனம், வசியம், பேதனம், வயத்தம்பனம் ஆகியவற்றை எளிதில் செய்வார். கல்வியறிவு இல்லாதவர்களுக்கு விபூதி தந்து அவர்களைப் பண்டிதராக்குவார். பாண்டியன் தன் காதல் மகளிரோடு விளையாடும்போது அங்குள்ள தென்னை மரங்களைப் பனைமரங்களாகவும், பறவைகளையும், விலங்குகளையும் ஒன்றுக்கொன்று மாறும்படியும் பார்த்தருள்வார்.

கன்னியர்கள் காமுற்று மயங்கும்படிப் பேரழகு கொண்டவராகச் சிவபெருமான் சித்தராகத் திரிந்து பல அற்புதங்களை அங்கு ஓயாது செய்தார். பாதாள லோகத்திலுள்ள பொன்னும், மணியும் மதுரையில் தோன்றுமாறு செய்தார்.

மதுரைநகர மக்கள் சித்தரின் அழகாலும் அளவற்ற ஆற்றலாலும் கவரப்பெற்று அவரை வைத்த கண்வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருந்து தமது தொழில் முயற்சிகளை மறந்தனர். அவர்களுடைய நினைவிலும் நெஞ்சிலும் சித்தரின் விளையாட்டே நிறைந்திருந்தது.

பாண்டியன் அந்த சித்தரின் ஆற்றலைக் கேள்விப்பட்டான். அரண்மனையில் நிகழ்ந்த அதிசயங்களாலும் அவற்றை உணர்ந்தான்.

ஏவலர்களை அனுப்பி, "அந்த வித்தகச் சித்தனை நம்முன்னே அழைத்து வாருங்கள்" என்று ஆணையிட்டான்.

ஏவலர்கள் சித்தரைத் தேடித்திரிந்து ஓரிடத்தில் கண்டனர். அவருடைய திருவிளையாட்டலில் தம்மை மறந்தே விட்டனர். மன்னன் நெடுநேரம் காத்திருந்தும் அவர்கள் வராததால் மேலும் சிலரைச் சித்தரை அழைத்துவர அனுப்பினான். முன்பு வந்தவர்களைப் போலவே அவர்களும் தம்மை மறந்து சித்தரின் சந்நிதியில் இருந்துவிட்டனர். இறுதியில் மன்னன் அமைச்சர்களை அனுப்பினான். அவர்கள் சித்தரைப் பலமுறை வணங்கி, தாங்கள் "அரண்மனைக்கு வந்து அரசனுக்கு அருள்புரிய வேண்டும்" என்றார்.

சித்தர், அமைச்சர்களை நோக்கி, "எமக்கு உம் மன்னனால் ஆகவேண்டியது என்ன? என்று வினவினார். அமைச்சர்கள் மன்னனிடம் சென்று அவர் கூறியதை அப்படியே சொல்லிவிட்டு அவன் பதிலை எதிர்பார்த்து நின்றிருந்தனர்.

பாண்டியன் அமைச்சர்களிடம், "இறைவன் திரு வருளைப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த யோகிகள் இந்திரன் பிரம்மன், திருமால் முதலியவர்களையே மதிப்பதில்லை. அப்படியிருக்க இந்தப் பூமியைஆளும் மன்னனையா மதிக்கப் போகிறார்கள்?", என்று கூறிவிட்டு மௌனமாக நின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



●எல்லாம் வல்ல சித்தர் உலாத்திருமேனி - மதுரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் மனத்திலே அச்சமும், அன்பும் பெருகின. சித்தரை, "நான் சென்று வணங்கி அருள்பெறாது அவரை இங்கு வந்து என்னைக் காணும்படிக் கூறியது குற்றமுடையதேயாகும். என் அறியாமையை என்னென்பது? நாளை நானே சென்று அவரைக் காண்பேன்." என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பொழுது விடிந்தது. அன்று தைத்திங்கள் முதல் நாளாகிய மகர சங்கராந்தி தினம், மன்னன் காலையில் மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயத்திற்குச் சென்று வழிபட்ட பின்னர் சித்தரைக் கண்டு அருள்பெற விரும்பினான்.

சித்தராக வந்த சிவபெருமானும் அவனுக்கு அருள்புரிய எண்ணினார். அவர் (தமது) சோமசுந்தரப் பெருமான் ஆலயக் கருவறையின் வடமேற்கு முனையில் இருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தார். புலித்தோல் ஆசனத்தின் மீது ஐம்புலன்களையும் வென்ற திருவேடத்தைத் தாங்கி யோகபட்டயம் அணிந்து மழுப்படைமீது கையை ஊன்றி இருமாப்பு தோன்றும்படியாக அமர்ந்திருந்தார். அவருடைய தோற்றம் காண்பார்வர்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

மன்னன் ஆலயத்திற்குள் சென்று அங்குச் சிவலிங்கமாக விளங்கும் சோமசுந்தரப் பெருமானை வணங்கினான். பின்னர் வலம் செய்யும் போது சித்தர் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தான். அவனுக்கு முன்னே சென்று கொண்டிருந்த சேவகர்கள் சித்தரை நோக்கி "இந்த இடத்தை விட்டு எழுந்து அப்பால் செல்லுங்கள்" என்று தமது கைப்பிரம்பை நீட்டிக் கட்டளையிட்டனர். அவர் அசையாது அங்கேயே வீற்றிருந்தார்.

பாண்டிய மன்னன் சித்தரிடம் வந்து வணங்கினான். பின்னர் அவரை நோக்கி, "நீங்கள் யார், எந்த நாட்டில் எந்த ஊரைச் சேர்ந்தவர், தங்களுக்கு வேண்டியது என்ன?" என்று கேட்டனர்.

சித்தர், " மன்னனே நாம் எந்த நாட்டிலும் எந்த ஊரிலும் இருப்போம். ஆயினும் நாம் இப்போது இருப்பது காசிமாநகரம். ஒரு பற்றும் இல்லாதவராய்ப் பிச்சைப் பெருவாழ்வு மேற்கொண்ட அடியவர்களே எமது அருஞ்சுற்றம். நாம் எல்லாம் வல்ல சித்தர். இங்குள்ள சிவத்தலங்களைக் கண்டு மகிழ வந்தோம். நல்லொளி பரப்பும் இந்த மதுரை நகரினை இப்போது நண்ணி வந்துள்ளோம். நாம் வேதாகமங்களின் கரையைக் கடந்து அறுபத்து நான்கு கலைஞானங்களும் கைவரப்பெற்று எல்லாம் வல்ல சித்தனாக விளங்குகின்றோம். எமக்கு உம்மால் ஆகவேண்டியது எதுவுமில்லை", என்று கூறிப் புன்னகை பூத்தார்.

சித்தர் சொன்னவற்றைக் கேட்ட மன்னன் அவர்பால் அச்சமும், அன்பும் கொண்டான் என்றாலும் இவருடைய இறுமாப்பையும், செருக்கையும், பெருமிதத்தையும் அளந்தறிவேன் என்று மனத்திற்குள் நினைந்தான்.

அப்போது ஒரு வேளாளன் நன்கு முற்றிச் செழித்த கரும்பை அரசனுக்குக் கொண்டுவந்து அளித்தான். அதனைப் பெற்றுக் கொண்ட மன்னன், சித்தரை நோக்கி, "வல்லவர்களுக்கு வல்லவர் என்று உம்மையே தீர்மானித்துக்கொண்டு அகங்காரத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் சித்தரே, இதோ கற்சிற்பமாக விளங்கும் யானையை உம்மால் இந்தக் கரும்பைக் கடித்து உண்ணும்படிச் செய்யமுடியுமா? அப்படிச் செய்து விட்டால் நீர் எல்லாம் வல்ல சித்தர்தான். அதில் ஐயமே இல்லை. மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சோமசுந்தரப் பெருமானும் நீரே என்று ஒப்புக்கொண்டு நான், நீங்கள் விரும்பியதை அளிப்பேன்", என்றான்.

பாண்டியன் கூறியதைக் கேட்ட சித்தர், "பாண்டியனே எமக்கு உன்னால் ஆகவேண்டியது எதுவுமே இல்லை. உன்னுடைய ஆசைகள் தீரும் வண்ணம் நாமே உனக்கு வேண்டியவற்றைத் தருவோம். பூமியில் அரிய வித்தைகளைக் கற்றவர்கள் அந்த வித்தைகளை மற்றவர்களுக்குச் செய்து காட்டிப் பயன் பெறுவர். எல்லாவற்றையும் அறிந்த நமக்கு ஒன்றின்மீதும் பற்றில்லை. என்றாலும் நீ மகிழும் வண்ணம் இந்தக் கல்யானை கரும்பைத் தின்பதைப் பார்", என்று கூறிவிட்டு அந்தக் கல் யானையின் மீது தனது பார்வையைச் செலுத்தினார்.

அந்தக் கல்யானை உயிர்பெற்றுத் தனது கண்ணைத் திறந்தது. மும்மதங்கள் பொழிய வாய்திறந்து பிளிறியது. தன் துதிக்கையை நீட்டிப் பாண்டியன் கையிலிருந்து கரும்பைப் பற்றிக் கடைவாயில் சாறு ஒழுக கடித்து மென்று தின்றது. அதன் துதிக்கை ஊஞ்சல் போல் முன்னும் பின்னும் ஆடியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தர் அந்த யானையை மீண்டும் பார்த்தார். அது பாண்டியன் கழுத்திலிருந்த முத்து மாலையைப் பற்றியிழுத்துத் தன் வாயில் போட்டுக்கொண்டது. அதைக்கண்ட பாண்டியன் கோபங்கொண்டான். அவனுடைய மெய்க்காவலர்கள் சித்தரையும் யானையையும் அடிப்பதற்காகக் கோலை ஓங்கினர். சித்தர் அவர்களைப் பார்த்து நில்லுங்கள் என்றார். அவர்கள் அவர்கள் அசைவற்று நின்று விட்டனர்.

பாண்டியன் அளவற்ற அச்சமடைந்தான். சித்தர் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னித்து அருள்புரியமாறு வேண்டினான். பலவாறு அவரைத் துதித்துப் போற்றினான். சித்தர்பெருமான் அவனுக்கு அருள்புரிந்தார். யானை பறித்த முத்துமாலையை மீட்டு அவனிடம் நீட்டினார். யானையின்மீது தனது திருக்கண் சாத்தினார். யானை பழைய படி கல்யானையாகி விட்டது. சித்தர் அங்கு மறைந்தார். அதனைக் கண்டுதிகைத்து நின்ற அபிஷேகபாண்டியன் சோமசுந்தரபெருமானே தன் பொருட்டு சித்தராக வந்து திருவிளையாடல் புரிந்தார் என்பதை உணர்ந்தான். ஆலயத்தை வலம் வந்து அரண்மனைக்குத் திரும்பினான். சித்தரின் அருளால் பல ஆண்டுகள் தொடர்ந்து சிறப்புடன் நாட்டை ஆண்டபின் சிவனடி சேர்ந்தான்.

எல்லாம் வல்ல சித்தர் சன்னதி

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் எல்லாம் வல்ல சித்தரின் திருவுருவம் மூலவராகவும் உலாத்திருமேனியாகவும் எழுந்தருளி வைக்கப் பெற்றுள்ளது. கருவறையாகிய சுந்தரேசுவரரின் சந்நிதியின் வடமேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு எல்லாம் வல்ல சித்தரின் சந்நிதி உள்ளது. இதில் பெருமான் வீராசனத்தில் வீற்றிருக்கின்றார்.

சடைமுடி தலையின் மீது எடுத்துக்கட்டிக் கொண்டையிடப்பட்டுள்ளது. வலது கையில் சின் முத்திரை தாங்கி இடது கரத்தை யோக தண்டத்தின் மீது ஊன்றியுள்ளார். இவருக்குத் தனிப்பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

சித்தரின் உலாத்திருமேனி சுந்தரேசுவரர் சந்நிதி மகாமண்டபத்தில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது. (அருகில் வெள்ளியாலான சந்திரசேகரர் எழுந்தரு ளியுள்ளார்) தலையில் பின்னி அலங்கரித்து எடுத்துக்கட்டிய சடைமுடி விளங்குகிறது. அர்த்த வீராசனத்தில் வீற்றிருக்கின்றார். வலக்கையில் மந்திரக் கோல் (கரும்புக் கழியென்று கூறுகின்றனர்). ஏந்தி இடது கையையோக தண்டத்தின் மீது ஊன்றியுள்ளார். முகத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியும் புன்னகையும் தவழ்வதைக் காண்கிறோம். இத்தகைய கலைத்திறன் மிக்கயோகசிவனாரின்திருமேனிவேறெங்கும் இல்லை.

கல்யானைக்குக் கரும்பருத்தின திருவிளையாடலை நினைவு கூறும் வகையில் தைமாதம் முதல் தேதி பொங்கலன்று ஐந்க விழா நடத்தப்படுகின்றது.

மதுரையிலுள்ள கருவறை "எட்டு யானைகள்" தாங்குவது போல் கட்டப்பட்டதாகும். திசையானைகள் எட்டும் அதனைத் தாங்குவதாகக் கூறுவர். அதில் வடக்கு நோக்கிய சுவற்றில் அமைந்துள்ள யானையொன்றே சித்தரின் அருள் நோக்கால் உயிர் பெற்றுக் கரும்பைச் சுவைத்து மகிழ்ந்ததாகும். இந்த யானைக்கு அருகில்தான் சித்தரின் கோயில் அமைந்துள்ளது.

சித்தர் கணம்

புராணங்களில் சித்தர்கணம் என்ற தனிக்கூட்டம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் காசிப முனிவனுக்கு அனகை என்பவள் மூலம் பிறந்தவர்களாவர். இவர்கள் விண்ணில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றவர்கள். பிரம்மதேவனுக்கு மானச புத்திரர்களாகத் தோன்றிய சித்தகணம் ஒன்றும் உண்டு.

இவர்களைத் தவிர மண்மீது மனிதர்களாகத் தோன்றி தங்களுடைய ஒப்பற்ற தவஆற்றால் சித்த நிலை எய்திய பெரியோர்கள் எண்ணிலாதவர் உள்ளனர். இவர்களும் கூட்டமாக வாழ்ந்தனர். இந்தத் திருக்கூட்டம் சித்தர் கணம் எனப்பட்டது. இவர்களின் பெருமைகளை விளக்கியும் அளவற்ற ஆற்றலை வியந்தும் வேதாந்த சித்தாந்த சமரசக் கொள்கையைப் போற்றியும் தாயுமான சுவாமிகள் சித்தர் கணம் என்ற பத்து பாடலால் அவர்களைத் துதிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டமங்கையில் பரமன் உபதேசித்த அட்டமாசித்திகள்

ஒரு சமயம் உமாதேவியாருடன் பரமசிவன் கயிலைமலையில் உள்ள ஒரு மணி மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். முனிவர்களும் கணங்களும், தேவர்களும் வந்து அவர்களை வணங்கி அருள் பெற்றனர். அப்போது முருகப்பெருமான் சரவணப் பொய்கையில் குழந்தைகளாகித் தவழ்ந்தபோது பாலூட்டிச் சீராட்டிய கார்த்திகைப் பெண்கள் அறு வரும் அங்கு வந்து சிவபெருமானையும் உமாதேவி யாரையும் வணங்கினர்.

அவர்கள். "ஐயனே எல்லாவித சுகங்களையும் எளிதில் சித்திக்கச் செய்யும் அஷ்டமாசித்திகளை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டனர். பெருமானும் மகிழ்ந்து அட்டமா சித்தி களையும் அதன் நுணுக்கங்களையும், ஆற்றல்களை யும் விளக்கினார். ஆனால் அந்த நட்சத்திரப் பெண் கள் விதிவசத்தால் அதைக் கேட்பதில் சற்று அலட் சியம் காட்டினர்.

அதைக் கண்ட சிவபெருமானுக்குக் கோபம் பொங்கியது. அவர்களை நோக்கிப் பெண்களே! அரிய சிறப்பான சித்திகளுக்கு விளக்கம் தரும்போது அசட்டை செய்ததால் நீங்கள் மதுரையின் அருகி லுள்ள ஒரு தலத்தில் படர்ந்த ஆலமரத்தின் கீழே "கற்களாகி விழுந்து கிடக்க" என்று சாபமிட்டார்.

அதைக் கேட்ட அப்பெண்கள் அஞ்சினர். அவரைத் தொழுது சாபத்தை மாற்றும்படி வேண்டினர். சிவபெருமான், "கொடுத்த சாபத்தைத் திரும்பப் பெற இயலாது. நான் சொல்லியபடி அங்கே கல்லாய் கிடந்து நாட்களைக் கழியுங்கள். நாம் மதுரையில் சொக்க நாதனாகித் திருவிளையாடல் நிகழ்த்தும் போது உங்க ளுடைய சாபம் நீங்கும். அப்போது எஞ்சியவற்றைக் கேட்டுப்பயனடையுங்கள்". என்று கூறிவிட்டு உமா தேவியுடன் தனது ஆலயத்துள் சென்று விட்டார்.

அவர்கள் சற்று நேரத்தில் கல்லுருவமடைந் தனர். வானில் சுழன்று பெருமான் சொல்லிய ஆலமரத் தடியில் வந்து வீழ்ந்தனர். காலங்கள் நகர்ந்தன.

மதுராபுரியில் பெருமான் குருவடிவம் தாங்கி பலசித்தாடல்களைப் புரிந்தபின்னர். அந்த ஆலமரத் தடிக்கு வந்து சேர்ந்தார். அவருடைய திருவடிபட்டு கல்வடிவிலிருந்த பெண்களின் சாபம் நீங்கியது. அவர்கள் உண்மையான வடிவத்தைப் பெற்றனர். சிவ பெருமானை வணங்கி முன்னைய உபதேசத்தைத் தொடர்ந்து கேட்க விரும்பி அவரின் அடிகளைப் பற்றி வேண்டினர்.

சிவபெருமான் அவர்களுக்கு அவற்றை உப தேசித்ததுடன் அஷ்டமாசித்திகளும் கைவரும்படிச் செய்தார்.

அந்தப்பெண்கள் கல்லுவருவாய்க் கிடந்த இடம் அவர்கள் பெயரால் பட்டமங்கை என்று பெயர்பெற்றது. இந்நாளில் அது பட்டமங்கலம் என்று அழைக்கப்படுகின்றது. இவ்வூர் மதுரை மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகில் உள்ளதாகும்.

இந்த வரலாற்றை மாணிக்கவாசக சுவாமிகள். "பட்டமங்கையில் பாங்காயிருந்தாங்கு அட்டமா சித்திகள் அருளிய அதுவும்" (கீர்த்தித் திருவகவல்-63) இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு அத்திக் கருளிய அரசே போற்றி (போற்றித் திருவக வில்103 -3) என்றும் குறிக்கின்றார். இந்த வரலாற்றை விரிவுபடுத்தி திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 42வது திருவிளையாடலாக 16 பாடல் களில் பெரும்பற்றப்புலியூர் நம்பி பாடியுள்ளார். அவரைத் தொடர்ந்து பரஞ்சோதிமுனிவர் இந்தவரலாற்றைத் தாம் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் 33வது திரு விளையாடலாக 29 பாடல் களில் பாடியுள்ளார். இப்பகுதியில் பரஞ்சோதிமுனிவர் அஷ்டமாசித்திகளையும் விளக்கியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஆனைக்காவல் சிவமுனி சித்தர்

திருஆனைக்காவில் சிவபெருமான் சித்தராக வீற்றிருந்து ஆலயத்திற்குப் பலபணிகளைச் செய்ததாகப் புராணங்களும், செவிவழிச் செய்திகளும் குறிப்பிடுகின்றன.

ஒரு சமயம் சோழர், சேரர், பாண்டியர் அனைவரும் கூடித் திருவானைக்காவில் வீற்றிருக்கும் ஜம்புநாதப் பெருமானை வணங்கினர். அவர்கள் பெருமானுக்குப் பெரிய பிராகாரம் ஒன்றைக் கூட்ட விரும்பினர். எப்பகுதியிலிருந்து கற்களைக் கொண்டு வந்து அதைக் கட்டலாம் என்று யோசித்தனர். அந்த வேளையில் சிவபெருமான் அவர்களிடம் அன்பர்களே, நீங்கள் அம்பிகை ஆலயம், குளம் படித்துறை முதலியவற்றைக் கட்டுங்கள். நமக்கு வேண்டிய பெரிய பிராகாரத்தை நாமே கட்டிக் கொள்கிறோம் என்று வானொலியாகக் கூறினார். அதன்படியே அனைவரும் ஆலயத்தின் அனைத்துப் பிறபணிகளைச் செய்து முடித்தனர்.

ஒருநாள் சிவபெருமான் காவி ஆடைதரித்து, உருத்திராட்சங்களைப் பூண்டு, துறவிக் கோலம் தாங்கி அந்த இடத்திற்கு எழுந்தருளினார். தொழிலாளர்களை அழைத்து மதிலைக் கட்ட ஏற்பாடுகளைச் செய்தார். அவர்களுக்குக் கூலிக்குப் பதிலாக விபூதியினை அளித்தார். அந்த விபூதி அவர்கள் செய்த வேலைக்கேற்ப பொன்னாக மாறியது. சில நாட்களிலேயே மதில்வேலை பூர்த்தியாகிவிட்டது. சித்தராக வந்த சிவபெருமான் அவர்களுக்கு அனேக சித்து விளையாடல்களைச் செய்து காட்டினார். அந்த நீண்டமதிலை யாவரும் காணப் பூமியின் உள்ளே மறையும்படி செய்து மீண்டும் உயரும்படி செய்தார். அவர்கள் அதைக் கண்டு அதிசயித்தனர்.

பிறகு அவர் அவர்களிடம், "என்னுடைய சித்துப் பொருள்களை இதனுள் வைத்துள்ளேன். அருள்பெற வேண்டுவோர் இம்மதிலை வலம்வருக. இம்மதில் வேண்டியதை வேண்டியவாறு அளிக்கும் என்றார். அதன்படியே மகப்பேறு வேண்டியும் துன்பங்கள் நீங்கவும் இன்பங்கள் பெருகவும் மக்கள் இந்த மதிலை வலம் வருகின்றனர். திருநீற்றைக் கூலியாக அளித்துக் கட்டப்பட்டதால் இதற்கு நீற்ட்டான் மதில் என்பது பெயராகும். விபூதி மதில் என்றும் அதனையொட்டியமைந்த பிராகாரம் விபூதிப் பிராகாரம் என்று பெயர்பெற்றது.

திருப்பணிமாலை என்ற நூலில் திருமதில் கட்டிய சித்தரின் பெயர் சிவமுனிச் சித்தன் என்று காணப்படுகின்றது.

நவசித்தர்கள்

ஒன்பது சித்தர்களைப் பூசிக்கும் மரபு நெடுங் காலமாக உள்ளது. இவர்கள் 1. கடுவெளிசித்தர் 2. வல்லசித்தர் 3) முறங்காட்டு சித்தர் 4. வரகுலசித்தர் 5. பாம்பாட்டிசித்தர் 6. கல்லுளிசித்தர் 7. குகை சித்தர் 8. குருசித்தர் 9. பஞ்சாட்சர சித்தர் என்பவர்களாவர்.

1. கடுவெளிசித்தர் கடுவெளிஎனும் ஊரினர். (கடுவெளி எனும் பெயரில் பல ஊர்கள் தென்னகமெங்கும் உள்ளன). இவர் கடுவெளிப்பான் சிதாசத்தைப் பாடியதால் இப்பெயர் பெற்றார்.

2. வல்லசித்தர். தஞ்சாவூருக்கு மேற்கே யுள்ளவல்லம் என்ற ஊரினர் இரசவாதத்தில் தேர்ச்சி பெற்றவர் இந்திரனுக்குத் தன் வலிமையை காட்டியவர். இந்தத் தலத்திலுள்ள சிவபெருமான் இந்திரேசுவரர் என்று அழைக்கப்படுகின்றாள் தீர்த்தம் இந்திரதீர்த்தம் என வழங்குகின்றது. வல்லத்தில் இவர் இரசவாதம் செய்யப் பயன்படுத்திய கிட்டான்கள் இருந்தன என்று கூறுவர்.

3. முறங்காட்டு சித்தர் - இவர் வேணுபுரம் என்ற ஊரினர்.

4. வரகுலசித்தர் அட்டவீரட்டங்களில் ஒன்றான குறுக்கை வீரட்டானத்திற்கு அருகிலுள்ள சித்தபுரம் என்ற ஊரினர்.

5. பாம்பாட்டிச்சித்தர் - இவர் பேழைக்குடி என்ற ஊரினர். பாம்புகளை ஆட்டிப் பேழைக்குள் அடைத்து வைத்திருந்ததால் அந்த இடம் பேழைக்குடி என்று அழைக்கப்பட்டது.

6. கல்லுளிசித்தர் - இவர் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள சித்தவனம் என்ற ஊரில் வாழ்ந்தவர். பெரும்மனஉறுதிபடைத்தவர் 7.குகைசித்தர் 8. குரு சித்தர் பற்றிய விளக்கங்கள் தெரியவில்லை.

9. பஞ்சாட்சரசித்தர் இவர் திருவண்ணா மலையில் பவழப்பாறையில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது இவருக்கு அனேககாலம் கழித்து முலைப்பால் தீர்த்த த்திற்கு மேல் தங்கியிருந்தவர்கள் குகைநமசிவாயர். குரு நமசிவாயர் என்பவர்களாவர். இவர்களும் சித்தர் களேயாவர். இந்த ஒன்பது சித்தர்களைப்பற்றிய சரியான விவரங்கள் கிடைக்கவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவநாத சித்தர்கள்

சித்தர்களில் நாதசித்தர்கள் என்ற தனி வகை யினரைப் புராணங்கள் குறிக்கின்றன. இவர் களின் தலைவர்கள் ஒன்பதின்மராவர். இவர்களை நவ நாத சித்தர்கள் என்றும் அழைப்பர். இவர்களின் பெயர்கள் சத்துவநாதர், சாலோக நாதர், ஆதிநாதர், அருளிநாதர், மத்ங்கநாதர், மச்சேந்திரநாதர், கடயந்திரநாதர், கோரக்கநாதர், குக்குடநாதர் என்பதாகும்.

இவர்கள் ஜோதிடம், மந்திரம், வைத்தியம், ரசவாதம், யோகம், ஞானம், என்ற ஆறுவகைகளை விளக்கி நூல் செய்துள்ளனர். இவர்கள் வானில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றவர்கள். பல இடங்களில் இவர்கள் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுள்ளனர்.

நவநாத சித்தர்களின் பெயர்களைப் பல நூல்கள் பலவாறு குறிக்கின்றன. சில நூல்களில் சத்தியநாதர், சதோக நாதர், அநாதிநாதர், வெகுளிநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கிநாதர், மதங்கநாதர், என்றும் சில நூல்கள் கந்தளேந்திரர், கோரக்கர், கொங்கணர், நாகார்க்சுனர், மச்சேந்திர நாதர், பீமநாதர், அருணகிரிநாதர், புஜங்ககுருநாதர் என்றும் குறிக்கப்பட்டுள்ளர்.

சித்த மடங்கள்

சித்தர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி சமய, சமுதாயச் சேவைகளை மேற்கொள்ள அமைத்த இடங்கள் சித்தமடங்கள் என்று அழைக்கப்பட்டுள்ளன. மாபெரும் சித்தரான திருமூலர் குருமட வரலாறு என்ற தனிப்பகுதியை அருளியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவை சித்தாச்சிரமங்கள் என்றும் அழைக்கப்பட்டன. சித்தவட மடம் என்பது வைப்புத்தலங்களில் ஒன்றாகும். ஆதியில் ஏழு சித்தமடங்கள் இருந்தன என்றும் அவற்றிலிருந்து சென்றவர்கள் அனேக கிளை மடங்களைத் தோற்றுவித்தனர் என்றும் திருமந்திரம் கூறுகின்றது. ஆதிமடங்களான ஏழு மடங்களில் ஆதிசித்தர்களாக வீற்றிருந்தவர்கள் காலங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர் பரமானந்தர், போகர், மூலர் என்ற எழுவராவர்.

சித்த வட மடம்

தென்னாற்காடு மாவட்டம் பண்ருட்டியில் இருந்து 5 கி.மீ தொலைவில் இருப்பது கோட்டலம் பாக்கம் ஆகும். இதன் தேவாரகாலப் பெயர் சித்தவடம் என்பதாகும். வடம் என்பதற்கு ஆலமரம் என்பது பொருள். இங்குள்ள ஆலமரத்தின் கீழ் யோகம் புரிந்த சித்தர்களுக்குச் சிவபெருமான் சித்தனாகத் தோன்றி அருள்புரிந்தார். அதனால் இதற்குச் சித்தவடம் என்பது பெயராயிற்று. இந்த ஆலமரத்தின் அடியில் சித்தபரம்பரையினர் ஒரு திருமடம் அமைத்து அதில் தங்கியிருந்தனர். அம்மடம் சித்தவடமடம் என்று அழைக்கப்பெற்றது.

இம்மடத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தங்கியிருந்தபோது சிவபெருமான் கிழவேதியர் வடிவில் வந்து திருவடி தீக்ஷை செய்து மறைந்தரு ளினார் என்று பெரியபுராணம் கூறுகின்றது. சுந்தர மூர்த்திகள் தன்னை ஆட்கொள்ளவந்தது சிவபெரு மானே என்பதை உணர்ந்து "தம்மானை அறியாத" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

இங்கு ஆலமரத்தடியில் பெருமான் சித்தர்களுக்காகத் திருநடம் புரிந்தான் என்று கூறுவர். அதனையொட்டி இங்கு சிவகாமசுந்தரி உடனாய சிதம்பரேசுவரர் ஆலயம் அமைக்கப் பட்டுள்ளது. சித்தவட மான்மியம் என்ற நூல் இத்தலத் தின் சிறப்புக்களை விரிவாகக் கூறுகின்றது.

★சித்தவடம் என்பதற்கு சித்தமாகிய வலிய கயிறு என்பது பொருள்களாகும். மாணிக்கவாசகப் பெருமான் "சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த" என்று கூறுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

– நன்றி திரு: எஸ். சாயிராம் அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்டமா சித்திகள்

உலகத்திலுள்ள அனைத்து அருஞ்செயல் களையும் எளிதில் செய்ய உதவும் அடிப்படையான சித்திகள் எட்டாகும். இவை அட்டமாசித்திகள் எனப் படும். தனது ஆத்ம சாதனையின் மூலம் சித்தத்தில் தெளிந்து தனது சீவனே சிவன் என்பதை உணர்ந்த சித்தநிலை பெற்றவர்களுக்குச் சிவபெருமான் இந்த எட்டு சித்திகளையும் அருளிச்செய்கின்றான்.

சித்திகளை யோகத்தாலும், சிவனருளாலும் மட்டுமே பெறமுடியும். சிவனிடம் இந்த எண்பெருஞ் சித்திகளும் சேர்ந்துள்ளன. என்பதை ஞானசம்பந்தப் பெருமான். "அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி வட்டவார் சடையன்" என்று திருக்காளத்தி தேவாரத்துள் குறிக்கின்றார். இந்த எட்டு சித்திகளும் அவனுடைய திருக்கோயிலின் வாயிலில் காவல் தேவதைகளாக வீற்றிருக்கின்றன. என்று புராணங்கள் கூறுகின்றன.

இந்த எண்பெருஞ்சித்திகள் 1.அணிமா, 2.மகிமா, 3.லகிமா, 4.கரிமா, 5. ப்ராப்தி, 6.பிரகாமியம், 7.ஈசத்வம், 8.வசியத்வம் என்பனவாகும் இவற்றுள் முதல் நான்கும் உடல் தொடர்புடையன. பின்னைய நான்கும் மனத் தொடர்புடையனவாகும்.

சிவயோகத்தில் திளைப்பவர்களுக்கு இந்த எட்டு சித்திகளும் அவர்கள் வேண்டாமலேயே கை வந்துவிடும். இந்தச் சிவயோக சாதனைகளைப் பயில குறைந்தது பன்னிரண்டு ஆண்டுகளாவது ஆகும். என்று திருமந்திரம் கூறுகின்றது.

இந்த எட்டு சித்திகளும் பரசித்திகள், அபர சித்திகள் என்று இரண்டுவகைப்படும். அபரசித்திகள் தன்னை அடையப்பெற்றவர்களுக்கு இன்பம் தருவ தோடு மட்டும் நின்றுவிடும். பரசித்திகள் அடைந்து சிவப்பேறும் கைகூடப் பெற்றவர்களே பரலோகத்தை அடைவர். மற்றைய சித்திகளைப் பெற்றவர்கள் பரலோ கத்தை அடையமாட்டார்கள். அருட்சித்தியான பர சித்திகள் பெற்றவர்களை, அபரசித்திகள் எனப்படும் மருட் சித்திகள் படைத்தோரால் வெல்ல முடியாது.

பரசித்திகளைப் பெற்ற சித்தர்கள் அருளா ணையால் உலகநலன் பொருட்டுப் பலசித்துகள் செய்ததையும் அறிய முடிகின்றது. சித்தர்களின் மாபெரும் தலைவனான சிவபெருமானே எல்லாம் வல்ல சித்தனாகத் திருஉருவம் தாங்கிவந்து மதுரையில் திருவிளையாடல் புரிந்ததைப் புராண வரலாறுகளில் காண்கிறோம்.

1. அஷ்டமாசித்திகளில் முதலாவதான அணிமா, என்பது சித்தன் தன்னுடலை அணு அளவிற்குச் சுருக்கிக் கொள்ளுதலாகும். எடுத்துக் காட்டாக அனுமான் தன்னுடலைச் சிறியதாக்கிக் கொண்டு அரக்கியின் வாய் வழியே நுழைந்து காது வழியே வெளிப்பட்டதைக் கூறலாம்.

2. மகிமா என்பது சாதகன் தன்னுடலைப் பல யோசனை அளவிற்கு விரித்துப் பெருக்கி நிற்ற லாகும். எடுத்துகாட்டாக அனுமான் அசோகவனத்தில் சீதையின் முன்பு பேருருக் கொண்டதையும், வீரபாகு தேவர் மகேந்திரபுரத்தில் சூரபத்மனுக்குத் தனது பேருருக் காட்டியதையும் கூறலாம்.

3. கரிமா என்பது மிக்க அணுசெறிவு உள்ள வனாதலாகும். தன் உடலை மட்டுமன்றி தனது பார்வை யினாலேயே ஒரு பொருளின் எடையை அதிகப் படுத்துவதும் இவ்வகைச் சித்தில் அடங்கும். சிவனடியாரின் வடிவில் வந்த சிவபெருமான் அமர்நீதி நாய னாரிடம் தன்னுடைய கோவணத்தைக் கொடுத்து அதற்கீடாக வேறு கோவணத்தைக் கேட்கின்றார். அதன்படியே நாயனார் முனிவரின் கோவணத்தை ஒருதட்டில் வைத்து அதற்கீடாக நிறைய துணி களையும் அடுத்து அணிமணிகளையும் வைக்கின்றார். எதுவும் அதற்கீடாகாமல் போகவே தன்மனைவி மக்களுடன் தராசுத்தட்டில் ஏறி அமர்ந்து விடுகின்றார். இப்படி தன்னுடைய நோக்கத்தினாலேயே ஒரு பொருளுக்குக் கனத்தைக் கூட்டுவதும் இவ்வகைச் சித்தில் அடங்கும்.

4. லகிமா, பஞ்சுப்போல் லேசாக இருத்தல், இதனால் அந்தரத்தில் பறப்பது எளிதாகின்றது. அனு மான் கடல்தாண்டியது. வீரபாகுதேவர் வீரமகேந்திர புரம் சென்றது முதலான செயல்கள் யாவும் இதன் பாற்பட்டதேயாகும்.

இதுவரை சொல்லப்பட்ட நான்கு சித்திகளும் உடலைப்பற்றியன. இனிவரும்நான்கும்மனம் பற்றியன

5. பிராப்தி என்பது எந்தப் பொருளையும் இருந்த இடத்திலிருந்தே அடைதலாகும். எடுத்துக் காட்டாகச் சந்திரமண்டலத்திலுள்ள கல்லை இங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருந்தே எட்டி எடுத்துக் கொள்ளுதல்.

6. பிரகாமியம் என்பது கேட்கப்படும், பார்க்கப் படும் பொருள்கள் எதனாலும் தனக்குத் தடை ஏற் படாமல் பார்த்துக் கொள்ளுதல். காற்றிலும் வெட்ட வெளியிலும் நடப்பதுபோலவே, தடையின்றிப் பாறைக்குள் நடந்து செல்லுதல் தண்ணீருக்குள் குதித்து உள்ளே செல்வதுபோலவே பூமியைத் துளைத்துக் கொண்டு செல்லுதல் முதலியனவாகும்.

7. ஈசத்துவம் என்பது எல்லாவற்றிலும் தனது ஆற்றலைச் செலுத்தி அவற்றைத் தன்மனம்போல நடக்க வைத்தலாகும். பெரியமலையைத் தலைகீழாக இருக்கும்படி செய்வது; தண்ணீரினைத் திரட்டி ஒரு தூண்போல் ஆக்குதல் முதலியனவாகும். சிலர் இதனை காற்று வடிவில் சஞ்சரிப்பது என்றும் கூறுவர். இது எல்லாவற்றிற்கும் சாதகன் தலைவனாக இருப்பதை உணர்த்தும் சித்தியாகும். (ஈசத்துவம் - தலைமை தன்மை)

8. வசித்துவம் என்பது உலகப் பொருட் களைத் தன்வசப்படுத்திக் கொண்டு அவற்றை ஏவல் கொள்வது. இது புலி, கரடி, முதலான அனைத்து உயிரினங்களும் தம்முன்பு பணிந்து நின்று தான் சொன்னதைக் கேட்க வைப்பது முதலானவையாம்.

இவையாவற்றையும் இயற்கை, காலம் முதலியவற்றின் நியதிகளுக்கும், கடவுளின் விருப்பத் திற்கும் மாறாகச் செய்யக் கூடாது. அருளாளர்கள் பலர் அனேக சித்துக்கள் செய்திருந்தாலும் அவை யாவும் இயற்கை வாழ்வினிற்கு ஊறுசெய்யாதிருத்தல் இங்கு எண்ணத்தக்கதாகும்.

இந்த எண்பெருஞ்சித்துகளை அடையவதற் கான சிவயோக சாதனையும், தவயோக முறைகளும் திருமந்திரத்திலும், சித்தர் நூல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

அட்டாங்கயோகம்

யோகத்தினைப் பயிலும் அன்பர்கள் கடைப் பிடிக்கவேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் எட் டாகும். இவற்றை யோகத்தின் அங்கங்கள் என்பர். சித்த நூல்கள் இவற்றை அட்டாங்கயோகம் என்று குறிக்கும்.

இவை முறையே 1. இயமம், 2. நியமம், 3.ஆசனம், 4. பிரணாயாமம், 5. பிரத்யாகாரம் 6.தாரணை, 7. தியானம், 8. சமாதி என்று அழைக்கப்படுகின்றன.

இவற்றில் முதலாவதான இயமம் என்பது கொல்லாமை, மெய்மைகூறல், கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, இந்திரியம் அடக்கல் முதலான வையாகும். மேலும் காலத்தின் இயல்பை ராசி யோகம், நட்சத்திர யோகம் முதலிவற்றின் மூலம் அறிந்து அந்த வேளையில் யோகம் புரிதலாகும். இவை 1. அங்கிஷம் 2. சத்தி, 3. ஆர்த்திகம், 4. விரதம், 5. ஆச்சிர்யம், 6. மதம், 7. ஆட்சேபம், 8. சமயம், 9. திருதி, 10. சௌசம், 11. இதாகாரம் என்று பதினொரு வகைப்படும் என்று கூறுவர்.

இரண்டாவதான நியமம் என்பது தவம் தத்துவம், தத்துவத்தை ஓர்தல், தூய்மை காத்தல், இன்பத்தில் திளைத்திருத்தல், தெய்வவழிபாடு என்பனவாம். மேலும் தந்திரக் கிரியைகளான கவசம், நியாசம், முத்திரை முதலியவற்றை உரிய முறையில் உரிய நேரத்தில் செய்தலுமாம். நியமம் என்பதற்கு ஒழுங்கு முறைப்படி நடத்தல் என்பது பொருள். இதன் அங்கங்களாக 1. தவம், 2.. சந்தோஷம் 3. புத்தி, 4. ஆஸ்திகம், 5. சந்தானம், 6. சிவபூஜை, 7. சிரவணம், 8. சித்தாந்தம், 9. லட்சியம், 10. விரதம். என்ற பத்தினைக் கூறுவர்.

மூன்றாவதான ஆசனம் என்பது யோக சாதகன் நெடுநேரம் யோகம் பயிலச் சுகமாக அமர்ந்து கொள்ள அமையும் நிலையாகும். யோகாசனங்கள் பல்வேறு இருப்பினும் ஒன்பது வகையான ஆசனங்களைச் சிறப்பாகப் போற்றுகின்றனர். இவை முறையே 1. சுவஸ்திகம் (சொத்திகம்) 2. கோமுகம், 3. பத்மம். 4. வீரம், 5. பத்ரம், 6. சிங்கம், 7. முத்தம், 8. மயூரம், 9. சுகம் என்று பெயர்பெறுகின்றன.

நான்காவதான பிராணாயாமம் என்பது மூச்சுக்காற்றுப் பயிற்சியாகும். நாம் சுவாசிக்கும் காற்றினை நெறிப்படுத்தி அடக்கி ஆள்வதையே பிராணாயாமம் என்று கூறுவர். இது 1. ரேசகம் (மூச்சினை வெளிவிடுதல்) 2. பூரகம்(உள்ளிழுத்தல்) 3. கும்பகம் (இழுத்தகாற்றை உடலுக்குள் நிலைபெறச் செய்தல்) 4. நிர்பீஜம் (விதைப்பையிலிருந்து காற்றை வெளியிடுதல்) 5. சௌபீஜம் (விதைப்பைக்குள் காற்றை அடக்கிவைத்தல்) என ஐந்தாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் இந்தப் பயிற்சி அஜபாயோகம் எனவும் அழைக்கப்படும். இந்த யோகத்தில் நாம் உள்ளிழுத்து வெளியிடும் காற்றின் வேகத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதன் மூலம் மூலாதாரத்தில் உள்ள யோகத்தீயை எழுப்பி ஆறு ஆதாரங்களைக் கடந்து சகஸ்ராரத்தில் இன்புற்றுத் திளைத்தலாகும். இதனை அன்னமந்திரம் என்றும் ஹம்ச மந்திரம் என்றும் கூறுவர்.

ஐந்தாவது அங்கமான பிரத்தியாகாரம் என்பது உடல் உபாதைகளை நீக்கிச் சிந்தனைகளை உள்முகமாக திருப்புவதாகும். உள்நோக்கிய சிந்தனையை அது ஒன்றுமிடத்தின் அடிப்படையில் ஆறு வகைப்படும். இவை முறையே 1. சரீரம் (இந்திரியம்) 2. பிராணன் 3. கரணன் 4. காமியம் 5. சர்வசங்கம் 6. புத்தி என்பனவாம்.

ஆறாவது அங்கமான தாரணை என்பது நாபி, இதயம், கண்டம், நெற்றி, கபாலம் இவற்றில் உள்ள யோகத்தானத்தில் சிந்தனையை நிலைநிறுத்துதல் என்பர். இதனை வேறுவிதமாகவும் கூறுவர். இது மனத்தை 1. பஞ்சபூதங்களில் நிறுத்துதல் பூத தாரணை என்றும், 2. பிராணனில் நிலை நிறுத்துதல் பிராணதாரணை என்றும், 3. கரணங்களில் நிலை நிறுத்துதல் கரணதாரணை என்றும், 4. தெய்வவழிபாட்டில் நிலை நிறுத்துதல் தெய்வதாரணை என்றும், 5. தத்துவ விசாரணையில் நிலைநிறுத்துதல் தத்துவதாரணை என்றும் 6.பிரம்மத்தில் நிலைநிறுத்துதல் பிரம்மதாரணை என்றும் கூறப்படும்.

ஏழாவதான தியானம் என்பது ஐம்புலன்களை அடக்கிச் சிவயோகம் புரிதல் ஆகும். மனத்தை எதனிடத்தில் செலுத்தி தியானிக்கிறோமோ அதனையொட்டி இது பத்துவகைப்படும். இவைமுறையே. 1. சடாதாரம் (ஆறுஆதாரங்கள்) 2.தேகம் 3.மண்டலம் 4. பிரம்மா 5. திருமால் 6. உருத்திரன் 7. தேவாதி தேவர்கள் 8. விஸ்வம் 9. பிரணவம் 10. நிராதாரம் என்பனவாகும்.

இறுதியாக சொல்லப்பட்டுள்ள எட்டாவது அங்கம் சாதனையின் இறுதி நிலையான சமாதியாகும். இந்நிலை உயிரும் உணர்வும் ஒடுங்கிப் பேரின்பத்தில் திளைத்தலாகும். இந்நிலையில் புறஉலகசிந்தனைகள் அற்றுப்போகும். இது 1. தத்துவலயசமாதி, 2. சவிகற்பசமாதி, 3. நிர்விகற்பசமாதி 4. சஞ்சாரசமாதி 5.ஆரூடசமாதி என்ற ஐந்து வகையாக உள்ளது.

இந்த எட்டு அங்கங்களையும் விரிவான விளக்கங்களையும் திருமந்திரம் முதலான சித்த நூல்களில் தெளிவாகக் காணலாம்.

அஷ்டகருமசித்தி

சித்தநிலையில் முழுமை பெற்றவர்களே அட்டமாசித்திகளை அடைவர். இதற்கு கீழ் நிலை பெற்ற எண்வழிசித்திகளும் உண்டு. இது அட்ட கரும சித்திகள் என்று அழைக்கப்படும். இதனைக் கொண்டு உலகில் பல செயல்களைச் சாதகன் செய்து கொள்ள முடியும். இவைமுறையே 1. வசியம், 2.மோகனம், 3. உச்சாடனம், 4. தம்பனம், 5. பேதனம், 6.ஆகர்ஷணம், 7.வித்வேஷனம் 8.மாரணம் என்பன வாகும்.

1. வசியம் என்பது பிற உயிர்களையும், பொருள்களையும் தன்வசப்படுத்தித் தன்சொற்படி நடக்கவைத்தலாகும். பல வகையான மூலிகைகள், கருக்கள் கொண்டு இதனைச் செய்கின்றனர். இது லோகவசியம், ராஜவசியம், புருஷவசியம், மிருக வசியம், பூதவசியம், ப்ரேத வசியம், வேதாளவசியம், என்றுபலவகைப்படும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மந்திரங்கள், மூலிகைகள்; கருக்கள் உள்ளன.

2. மோகனம் என்பதற்கு ஒன்றின்மீது ஒன்றைக் காமுறச்செய்தல் (மோகிக்கவைத்தல்) என்பதாகும். இரண்டு வேறுபட்ட பொருட்களை இணைத்து இயங்கச் செய்தலுமாகும். முன்னே சொன்ன வசியம் பிறஉயிர்களைத் தன் வசப் படுத்துதல்லக் குறிக்கும். அந்நிலையில் அவர்கள் நாம் சொல்வதைச் செய்வார்கள், இந்த மோகன வித்தையால் கட்டப்பட்டவர்கள் சாதகன் தன் சேவையை விரும்பா விட்டாலும் அவனுக்கு வேண்டியதைச் செய்வதிலேயே இன்பம் அடைவர்.

3. உச்சாடனம் என்பது மந்திரங்களைத் திரும்பத்திரும்ப உபதேசமுறைப்படி உச்சரித்தலாகும். பிறவற்றின் மூளையில் தன் எண்ணத்தைச் செலுத்தி தன் விருப்பப்படி அவற்றைநடக்க வைத்தலாகும். மந்திர உச்சாடனத்தால் தேவதைகளை வசியப்படுத்தி ஏவல் கொள்ளுதல், பிறருக்குத் துன்பம் விளைத்தல் முதலியனவாம்.

4. ஸ்தம்பனம் என்பது ஒன்றை ஸ்தம்பிக்க வைத்தலாகும். இதனால் கட்டுப்பட்ட உயிர் அறிவு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறைகளில் சித்தர்கள்

சிவபெருமான் எல்லாம் வல்ல சித்தனாக விளங்குவதைத் திருமுறை ஆசியர்கள் தேவாரத்துள் பல இடங்களில் அழகுடன் விளக்குகின்றனர். திருஞானசம்பந்தப்பெருமான், சித்தனே திருஆலவாய் மேவிய அத்தனே" என்றும் சுந்தரார் சித்தா சித்தித்திறங்காட்டும் சிவனே என்றும் அப்பரடிகள், உருவாகிய சித்தனே, கழிப்பாலை யெம் சித்தனே என்றும் அழைத்து மகிழ்கின்றீனர்.

சிவபெருமான் சித்தவடிவோடு இருக்கின்றான் என்றும், உயிர்களுக்குத் துன்பம் நேருகையில் சித்தவடிவில் வந்து துயர்களைவான் என்றும் கூறுகின்றனர். சிவபெருமான் சித்தவடிவனராகவந்து விபூதி அளித்து துன்பங்களை நீக்கிய கதையை வரலாற்றில் அதிகமாகவே காண்கிறோம்.

சித்தர்கள் ஒன்றுகூடிச் சிவ்பெருமானை வந்து வணங்குகின்றார்கள் என்பதை சித்தர் பலர் ஏத்தும் ஆலங்காடன் என்றும், சித்தர் தானவர் வணங்கும் திருநின்றியூரனே என்றும் குறிப்பிடுகின்றனர். சித்தர்கள் சிவபூசை செய்கின்றார்கள் என்பதை சித்தர்பேணிய அத்தன் என்றும், சித்தராய் வந்து தன்னடி வணங்குவார்களுக்கு அருள் புரிகின்றான் என்பதையும் குறிக்கின்றனர்.

சித்தர்கள் பலவேறு ஆற்றல்களைப் பெற்றுச் சுதந்திரமாக இயங்கினாலும் அவர்கள் சென்று சேருவதற்குரிய இறுதியிடம் சிவபெருமானே என்பதைச் "சித்திசெய்பவர்க்கெல்லாம் சேர்விடம் என்றும் சித்தர்களுக்குச் சிவபெருமான் அருள் வழங்குகின்றான் என்பதைப் பலபத்தர் சித்தர்க்குப் பண்டு நல்கினீர் என்று வீழிமிழலையில் அருளிய பதிகத்தில் குறிக்கின்றனர்.

சுந்தரர், திருவாலங்காட்டில் அருளிச் செய்த முத்தா முத்திதரவல்ல என்று தொடங்கும் பதிகத்தில் சித்தா, சித்தத்திறங்காட்டும் சிவனே என்று சிவபெருமான் சித்தனாகவும், அரிய சித்து விளையாட்டுக்களைச் செய்து காட்டுவனாகவும் இருப்பதைக் குறிக்கின்றனர். இதன் இறுதிப் பாடலில் சித்தனாகிய சிவனிடம் தன் சித்தத்தை வைத்த புகழ்ச் சிறுவன் என்று அவர் தம்மை அழைத்துக் கொள்வதும் சிந்தித்து இன்புறத் தக்கதாகும்.

தடுமாறி மனம் கலங்கி இருந்த இடத்தைவிட்டு அசையாது கிடைக்கும். எதிரிகளையும் கொடிய விலங்குகளையும் ஸ்தம்பிக்கவைத்த நிகழ்சிகளைப் பல இடங்களில் காண்கிறோம். இது பூதஸ்தம்பனம் ஜலஸ்தம்பனம், அக்னிதம்பனம், வாயுத்தம்பனம், வாக்குத்தம்பனம் முதலியனவுமாகும்.

5. பேதனம் என்பது பிரியா நட்புக்கொண்ட இருவரைப் பிரித்தலாகும். கூட்டாக இருக்கும் விலங்குகளைப் பேதிக்க வைத்து தங்களுக்குள் மோதி அழித்துக் கொள்ளச் செய்தல் இதில் அடங்கும். உலோகங்களைப் பேதிக்கச் செய்தல், ஆயுதங்களை செயலற்றுப் போகச் செய்தல் முதலியன இதில் அடங்கும்.

6. ஆகர்ஷணம் என்பது பிறபொருள் களைத் தன்னிடத்திற்கு வரச்செய்து பிறருக்குக் காட்டுதல்; வெட்டவெளியில் உருவங்களைத் தோன்றச் செய்தல் முதலியனவாகும்.

7. வித்வேஷணம் என்பது நட்புகொண்ட இருவரை விரோதிகள் ஆக்குதல், பெரிய உருவங்களையும் மறையச்செய்தல்; கூட்டத்தின் மத்தியில் உருவமற்ற நிலையில் சஞ்சரித்தல் முதலியனவாம்.

8. மாரணம் என்பது கொல்லுதலாகும். பகைவர்கள் மீது மந்திர தந்திரங்களைச் செலுத்தி அவர்களைச் கொல்வதுடன், தன்னைச் சார்ந்தவர்களின் நோயை அழித்தல் பகை விலங்குளை அழித்தல் முதலியன இதனுள் அடங்கும்.

இந்த எட்டையும் அடைந்தவர்கள் செய்வது வித்தை எனப்படும். இது அருளின் பாற்படுவதில்லை. இவற்றை அடைய உதவும் சக்கரங்கள், அதை பூசிக்கவேண்டிய பூஜாவிதிகள், உருவேற்றவேண்டிய மூலமந்திரம் முதலியன சித்தர் நூல்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

அஷ்டகரும சித்திகளைச் செய்பவர்களை உலகவழக்கில் மந்திரக்காரார்கள் சூனியக்காரர் என்று கூறுவர். இவர்கள் மேல்நிலை பெறுவதில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தர்களின் சமாதித் தலங்கள்

சித்தர்கள் எல்லோருமே சிவநெறியில் திளைப்பவர்கள். சிவபெருமானையும் பராசக்தியையும் வழிபடு கடவுளராகக் கொண்டவர்கள். பெரும்பாலான சித்தர்கள் சிவாலயங்களுக்குள்ளேயே சமாதி எய்தியுள்ளனர். சித்தர்கள் சமாதி எய்துதல் என்பது அவர்கள் சிவநிலையை எய்துவதாகும். அந்நிலையில் அவர்கள் ஆதியான சிவபெருமானுக்கு இணையாகவே கருதப்படுகின்றனர். அந்நிலை சிவம்வேறு அவர்கள் வேறு அல்ல என்ற நிலையாகும். சமநிலைபெற்று ஆதிபரம் பொருள் நிலையில் அவர்கள் இருப்பதால் இந்நிலை "சமாதி" எனப்பட்டது. அதில் அவர்கள் எல்லா தத்துவங்களையும் கடந்து நிற்கின்றார்கள். சித்தர்களின் சமாதித்தலங்கள் யாவும் சிவத்தலங்களாகவே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சித்த நிலையில் வெற்றி பெற்றவர்களின் உடல் அழிவதில்லை. அவர்கள் பஞ்சபூதங்களின் சேர்க்கையில் உண்டான அதனைப்பிரித்து மீண்டும் பஞ்சபூதங்களிலேயே இணைத்துவிடுவர். அதன்பின்னர் அவர்கள் பெறும் உடல் அவர்கள் சித்தநிலை பெறுவதற்கு முன்னே இருந்த வடிவைப் போன்றதே ஆனாலும் அது முற்றிலும் வேறான தன்மையுடையது. ஒளிமயமானது அதற்கு அழிவில்லை. அந்நிலையிலேயே அவர்கள் கற்பகோடி காலங்கள் வாழ்வர். அவர்களுக்குப் பிணி, மூப்பு, தாகம், பசி எதுவுமே உண்டாவதில்லை.

அதனால் சித்தர்களின் உடலைப் புதைத்து அதன்மீது அதன்மீது ஆலயங்களை அமைத்துள்ளனர் என்றது பொய்யுரையேயாகும். சித்தர்களின் சமாதித்தலங்கள் என்பன அவர்கள் ஒளியுடல் பெற்றுச் சிவநிலை எய்திய இடங்களேயாகும். அந்த இடங்கள் புனிதத் தன்மை உடையதாகப் போற்றப் படுகின்றன. பல நாள் முயற்சியின் பயனாகவே சித்த நிலையில் இத்தகைய வெற்றி கிடைக்கின்றது என்பது எண்ணத்தக்கது.

இத்தகைய இடங்களில் சித்தர்களின் சக்தி நிலையாக இருந்து மக்களுக்கு உதவி புரியும் என நம்பப்படுகின்றது. இனி சித்தர்கள் சமாதி எய்திய தலங்களில் சிலவற்றைக் காணலாம்.

சித்தரின்பெயர்	இனம்	சமாதித்தலம்
திருமூலர்	- வேளாளர்	- சிதம்பரம்
கொங்கணவர்	- கன்னடர்	- திருப்பதி
போகர்	- சீனதேசத்துக்குயவர்	- பழனி
சட்டைமுனி	- சிங்களவர்	- சீர்காழி, சிதம்பரம்
மச்சமுனி	- செம்படவர்	- திருப்பரங்குன்றம்
கருவூரார்	- கன்னாரர்	- தஞ்சாவூர்
இராமதேவர்	- பிராமணர்	- அழகர்மலை
இராமதேவர்	- பிராமணர்	- நாகப்பட்டினம்
	(சட்டநாதர் கோயிலுக்கு எதிரில் உள்ள இடம்)	
இடைக்காடர்	- இடையர்	- திருவண்ணாமலை
கமலமுனி	- உவச்சர்	- திருவாரூர்
	(திருவாரூர் கமலாம்பிகை சன்னிதி நந்திபீடம்)	
பாம்பாட்டி	- கோசாயி	- திருக்கடையூர்
பாம்பாட்டி	- கோசாயி	- மருதமலை
புண்ணாக்கீசர்	- கன்னடஇடையர்	- நாகனஞ்சேரி
கோரக்கர்	- கள்ளர்	- பொய்கைநல்லூர்
அழுகண்ணர்	- சீனத்து ஆசாரி	- நாகப்பட்டினம்
சுந்தரானந்தர்	- வேளாளர்	- மதுரை
குதம்பை	- இடையர்	- மாயவரம்
கடுவெளிசித்தர்	- வேளாளர்	- காஞ்சிபுரம்
நந்திதேவர்	- பிராமணர்	- காசி
வால்மீகர்	- வேடர்	- எட்டுக்குடி
நாரதர்	- பிராமணர்	- திருஇடைமருதூர்
பதஞ்சலி	- கள்ளர்	- இராமேசுவரம்
காசிபர்	- பிராமணர்	- உருத்திரகிரி
விசுவாமித்திரர்	- சத்திரியர்	- திருஆவடுதுறை
காலங்கி	- சீனத்து ஆசாரி	- காஞ்சிபுரம்
தன்வந்திரி	- குருக்கள்-	வைத்தீசுவரன்கோயில்
கும்பமுனி	- வேளாளர்	- கும்பகோணம்
புலஸ்தியர்	- சிங்களவர்	- யாழ்ப்பாணம்
குண்டலினி	- பிராமணர்	- திருவக்கரை
பிரம்மமுனி	- பிராமணர்	- திருவெண்காடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டினத்தார்	- நகரத்துச் செட்டியார்	- திருஒற்றியூர்
அகத்தியர்	- வேளாளர்	- பொதிகைமலை
அகப்பேய்	- வேளாளர்	- அழகர்மலை
தேரையர்	- பிராமணர்	- பொதிகைமலை
வாமதேவர்	- ஓதுவார்	- அழகர்மலை
பூனைக்கண்ணர்	- எகிப்தியர்	- மயிலை
பாலசித்தர்	- (சிவபெருமான்)	- மயிலம்
பத்ரகிரியார்	- அரசர்	- திருஇடைமருதூர்
வாக்சமுனி	- வேளாளர்	- திருவாமூர்
கபிலன்	- கோனார்	- திருக்கழிப்பாலை
பிருங்கி	- கோனார்	- ஆலந்துறை
புலிப்பாணி	- பண்டாரம்	- பழனி
சிவவாக்கியர்	- வேதியர்	- காஞ்சி
திரிநேத்திரதாரி	- நந்திகணம்	- அச்சிறுபாக்கம்
காகபுசுண்டர்	-	- ஆலப்பாக்கம்

சித்தர்களின் நிலை?

சித்திகளைப் பெற்றவர்கள் மனிதர்களானாலும் இயற்கையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டவர்கள் இவர்களைப் பூமியிலுள்ள உடல் நெருக்கம் பரிமாணம் எடை முதலியன தடைசெய்வதில்லை. இவர்களை நீர் நனைப்பதில்லை, நெருப்பு சுடுவதில்லை, காற்று அசைப் பதில்லை.இவர்களால் ஆகாயத்தைப்போல் எங்கும் பரவி நிற்கவும், காதுக்கு எட்டாத ஒலிகளைக் கேட்கவும்முடியும்.

சித்திகள் பெறுவதேன்?

உடலை அழியாமலும், வெய்யில் மழை முதலிய இயற்கைப் பாதிப்புகளால் வேதனைப் படாமலும் திடமாகத் தவம்புரிவதற்கு இடையூறு இல்லாமலும் இருக்கவே யோகப் பயிற்சிகள் மூலம் சித்திகளைச் சித்தர்கள் அடைகிறார்கள். சித்தர்களின் நோக்கம் சித்திகளை அடைந்து மகிழ்வதல்ல. சித்திகளின் மூலம் மனோலயம் பெற்றுத் தவம் புரிவதே குறிக்கோளாகும். சித்திகள் தவத்திற்கு உதவும் சாதனங்களேயாகும்.

சித்த யோகேசுவரி பீடம்

சித்தர்கள் தங்களுக்குப் பிறகுவரும் சித்த நெறியாளர்கள் அநேக சித்திகளை எளிதில் அடைந்து இன்பம் பெறுவதற்குரிய இடங்களைக் கண்டறிந்து அந்த இடங்களில் சித்தர் பீடங்களை அமைத்துள் ளனர். இவை சித்தன் இருப்பு, சித்தசிலை, சித்தன் விளை முதலிய பல பெயர்களைப் பெறுகின்றன.

இவற்றில் முதன்மை பெற்றது காசிநகரில் உள்ள சித்தயோகேஸ்வரி பீடமாகும். இதனை அமைத் தவர் எல்லாம் வல்ல சித்தனாகிய சிவபெருமானே ஆவார். இதில் சிவபெருமான் சித்தீஸ்வரராகவும், அம்பிகை யோகேஸ்வரியாகவும் வீற்றிருக்கின்றனர். இவளைச் சித்தீசுவரி எனவும் அழைக்கின்றனர். இவள் சித்தர்களின் தாய்போன்றவள். அதனால் சித்தமாதா எனவும் பெயர் பெறுகின்றாள். இவர்களை வணங்கித் தேவர்கள், மனிதர்கள், அசுரர்கள், தைத்தியர்கள், முதலான அநேகர் அரிய சித்திகளைப் பெற்றனர் என்று காசிக் கண்டம் கூறுகின்றது.

பின்னாளில் இந்த இடத்தில் சந்திரன் ஒரு சிவலிங்கத்தை அமைத்து வழிபாடு செய்து சோமன் என்ற பெயரைப் பெற்றான் அதனால் அந்த லிங்கத் திற்குச் சந்திரேசுவரர் என்றும் சோமேசுவரர் என்றும் பெயர் வழங்குகின்றது.

யோகேஸ்வரியுடன் கூடிய சித்தயோக்சுவரர் திருவுருவம் காசிநகரில் இப்போது இல்லை. இத்தகைய திருவுருவம் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத் தில் பெரிய கற்பலகைச் சிற்பமாக அமைக்கப்பட்டி ருப்பதைக் காண்கிறோம். இச்சிற்பத்தில் சிவபெருமான் அர்த்தபத்மாசனத்தில் யோகேசுவரராக வீற்றிருக்கின் றார். மேல் வலது கரத்தில் யோகத்தின் சின்னமான பாம்பையும் இடது கரத்தில் மானையும் ஏந்தியுள்ளார். மழுவை யோகதண்டமாக ஊன்றி அதன் மீது தனது வலது முன் கரத்தை ஊன்றி எல்லையற்ற சுகத்தில் ஆழ்திருப்பதைக் குறிக்கும் வகையில் இடது கரத்தைத் தொடைமீது வைத்துள்ளார். வலது காதில் தோடும் இடது காதில் குழையும் விளங்குகின்றன. உயர்த்தி முடியப்பட்ட கொண்டை இடது பக்கம் சாய்ந்துள்ளது. இடது பக்கம் அமர்ந்துள்ள சித்தேசுவரி வலது காலையே யோதண்டமாகப் பாவித்து அதன் மீது வலது கரத்தை ஊன்றியுள்ளார். இடது கரத்தில் நீலோற்பல மலர் உள்ளது. இருவரும் எல்லையற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சித்தயோகேசுவர பீடத்தில் சித்தரும், யோகேசுவரியும் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் அமைந்துள்ள காசிக்கண்டப் புராணச் சிற்பம்

சுகத்தில் திளைத் திரப்பதைக் குறிக்க உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருக் கின்றனர். பின்புறம் போகினி என்னும் இரண்டு பெண்கள் சாமரம் வீசுகின்றனர்.

இவர்களைச் சுற்றி நந்திகேசுவரர், விநாயகர், யோகியர், சித்தர்கள் முதலானவர்கள் காட்டப்பட்டுள் ளனர். காசிக்கண்டம் சித்தீசுவரியைப் பிங்களா என்று போற்றுகின்றது. சிவபெருமான் யோக்சுவரனாக சித்தீ சுவரியுடன் வீற்றிருப்பதைத் தமிழ்வேதமான திரு முறைகளில் திருஞானசம்பந்தப் பெருமான் "மங்கை கெழுவியயோகினர்" என்றும் உமையோடு இருந்து யோகம்புரிந்தானே என்றும் குறிப்பிடுகின்றார்.

சித்தாத்மாக்கள்

நாம் எல்லோரும் ஆத்மாக்கள், காந்தி போன்றவர்கள் மகாத்மாக்கள், கிருஷ்ணர் போன்றவர்கள் பரமாத்மாக்கள் முருகன் போன்றவர்கள் ஞானத்மாக்கள், எல்லாவற்றிற்கும் மேலாக விளங்குபவர்கள் சித்தாத்மாக்கள் இவர்கள் சிவபெருமானுக்கு இணையாகச் சொல்லப்பட்டவர்கள்.

-ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தர சுவாமிகள் உரையிலிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தத்தை சிவன்பாலே வைத்தவர்கள்

ஞானத்தையும், அஷ்டமாசித்திகளையும் மோட்சத்தையும் அளிக்கவல்லது சிவயோகசாதனை யாகும் அது பலவகைப்படுகின்றது. சிவநெறிநின்று யோகம் பயிலுதல் சிவயோக சாதனை என்று அழைக் கப்படுகின்றது. இது இரண்டு வகையாக உள்ளது.

முதல்வகை சிவயோகம் மூலதாரத்தில் உறங்கும் நிலையில் உள்ள குண்டலினி சக்தியை மூச்சுக்காற்றால் எழுப்பி அதனையடுத்த சுவாதிஷ் டானம், மணிபூரகம், விசுக்தி அநாகதம், எனும் ஆறு ஆதாரங்களைக் கடந்து பிரமரந்திரம் ஐந்து எனும் சிதாகாசப் பெருவெளியில் ஆனந்தநடராசனின் பெருங் கூத்தைக் தரிசித்தவாறு எல்லையற்ற இன்பத்தில் திளைத்திருப்பதாகும். (இதன்விளக்கத் தைச் சப்தவிடங் கமும் சிவயோக சாதனை. என்னும் கட்டுரையில் காண்க (சிவமஞ்சரி 20வது மலர்).

இரண்டாம்வகைச் சிவயோக சாதனையில் சாதகனின் உடலில் ஐந்து இடங்கள் யோக நிலையங் களாகச் சொல்லப்பட்டுள்ளன. இவை பஞ்ச கமல ஸ்தானங்கள் என அழைக்கப்படுகின்றன. முறையே இதயம், கண்டம், நாவினடி, புருவமத்தி, பிரமரந்திரம் என்ற ஐந்தாகும். இவ்வரிசையில் முதலிலுள்ள நான்கு நிலையங்கள் சாதகனின் உடலினுள்ளேயும் ஐந்தா வதான பிரமரந்திரம் தலைஉச்சிக்கு மேல் பன்னிரண்டு விரற்கிடை தூரத்தில் உள்ளதாகும். இவற்றின் வடிவு, வண்ணம் தத்துவம், பூதநிலை, அதிதேவதை, மந்திரபீஜம் முதலியன சிவயோக நூல்களில் விரிவாகக் சொல்லப்பட்டுள்ளன. (இவற்றின் பட்டியலைத் தனியே காண்க.

இம்முறையில் சாதகன், இதயத்தில் கண் உள்ளேயுள்ள சித்சொருபத்தைத் தரிசித்து அதையே தியானித்துப், படிப்படியாக முன்னேறிக் கண்டம், நாவினடி புருவமத்தி ஆகியவற்றில் நிலைபெற்று அருட்காட்சிகளைக் கண்டு இறுதியில் கபாலவாயி லைத் திறந்து கொண்டு துவாத சாந்தப்பெருவெளியை அடைதலாகும். அங்கு சிவபெருமானின் எல்லையற்ற பெருங்கூத்தைனைத் தரிசித்துப் பேரின்பம் பெறுத லாகும்.

இந்தக் காட்சியை ஞானக்கண்ணால் கண்டு களித்துச் சுகித்திருப்பதே சிவயோக சமாதி எனப்படும். பிரமரந்திரத்தில் உள்ள ஆயிரம் இதழ் தாமரையை "அமலநிராதாரக்கமலம்" எனவும் அழைக்கின்றனர்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சிவனடி யார்கள் இந்த சிவயோக சாதனையைப் பயின்று இடையறா இன்பத்தில் திளைத்திருக்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

பன்னிரண்டாம் திருமுறையான பெரிய புராணத்தில் பத்தராய் பணிபவர்கள் சருக்கத்தில், சித்தத்தை சிவன்பாலே வைத்தவர்களான சிவனடி யார்களின் வரலாறு ஒருபாடலில் சொல்லப் பட்டுள்ளது. அதன் திரண்ட கருத்து-

(உலகம் தோன்றக்) காரணமான பிரமன் முதலானவர்கள் வீற்றிருக்கும் (பிரம்மபதம், விஷ்ணு பதம், உருத்திரபதம், மகேசுவரபதம், சதாசிவபதம்) என்றும் பதங்களைக் கடந்து நிறைவுடையதாய், சிவஞான ஒளிவீசி, நிற்கும் நாதாந்தத்தில் தனது சிந்தையை நிறுத்தி பேரானந்த அனுபவத்தில் திளைக்கும் அடியவர்களே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள் ஆவர். இதுவே சிவயோகசமாதி எனப்படும். இவர்கள் தில்லை சிற்றம்பலத்துள் ஆடும் வேதமுதல்வனான சிவபெருமானின் (அடியவர் களுக்குச்) செய்யும் தொண்டின் மூலமாக இதனை அடைகின்றார்கள்.

சிவயோக சாதனையில் கூறப்பட்டுள்ள ஐந்து நிலையங்களும் அவற்றின் தத்துவங்களும்

யோக நிலையம்	இதயம்	கண்டம்	நாவினடி	புருவமத்தி	பிரமரந்திரம்
வடிவம்	சதுரம்	தாமரை	முக்கோணம்	அறுகோணம்	வட்டம்
மந்திர ஒலி	லம்	வம்	ரம்	யம்	ஹம்
பூதத்துவம்	மண்	நீர்	தீ	காற்று	ஆகாயம்
அதிதேவதை	பிரமன்	திருமால்	உருத்திரர்	மகேசன்	சதாசிவன்
வண்ணம்	பொன்னிறம்	வெண்ணிறம்	சிவப்பு	கருநிறம்	புகை நிறம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தர்கள் கண்ட சக்கரங்கள்

சித்தர்கள் கண்ட வழிபாட்டு நெறியில் முதன்மை பெற்றது சக்கர வழிபாடாகும். சக்கர வழிபாடென்பது அருவுருவவழிபாடாகும் இதில் வட்டம், பலவகையானகோணங்கள், தாமரை இதழ் வடிவ அமைப்புகள் முதலியன இடம் பெறுகின்றன. இவற்றை ஒன்றுக்குள் ஒன்றாக அமைத்து அவற்றில் தேவதைகளின் பெயர் கள் அல்லது அவற்றின் மூல எழுத்துக்களை (பீஜாட்சரங்களை) எழுதி வழிபடுகின்றனர்.

இது ஆதியில் நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். காலப்போக்கில் நிறைய பீஜாட்சரங்களின் உபயோகங்களைத் தெரிந்து கொண்ட சித்தர்கள் பல்வேறுபயன்களைத்தரும் பல்லாயிரம் சக்கரங்களை உருவாக்கி அமைத்துள்ளனர்.

சித்தர் இலக்கியங்களில் சக்கரங்கள் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றுள்ளன. திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் திருவம்பல சக்கரம், வைரவி சக்கரம், திரிபுரைச்சக்கரம், ஏரொளிசக்கரம், ஆதாரஆதேயம் நவாக்கரி சக்கரம் முதலிய சக்கரங்களைப் பற்றியே பேசுகின்றது

சிதம்பரம் தில்லைச்சிற்றம்பலத்துள் இரகசியத் தானத்தில் திருவம்பலச் சக்கரம் வரையப்பட்டு வழிபடப்படுகின்றதென்பர். திருவாரூர் தியாகராஜப் பெருமானின் மார்பில் சக்கரம் இருப்பதாகக் கூறுகின்றனர். வழுவூர் வீரட்டானத்தில் கஜசம்கார மூர்த்தியின் பின்புறம் ஒரு பெரிய சக்கரம் வைத்து வழிபடப்படுகின்றது. திருக்கடவூர் காலசம்ஹார மூர்த்தியின் வலப்புறம் மார்க்கண்டேயர் பூசித்த சிவ லிங்கமும் அதனை யொட்டி அமைந்த சுவரில் மிருத்யுஞ் சய சக்கரமும் அமைந்துள்ளன. இவ்வாறு அனேக சிவத்தலங்களில் அனேக சக்கரங்கள் அமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.

சக்கரங்களை அமைக்கவும், பூசித்து பேறு பெறவும் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை கருத்துக்கள் எட்டாகும். அவை.

1) சக்கரங்களை எழுதி அமைக்கும் முறை, இது எந்தெந்த தேவதைகளுக்கு எவ்வகையான

திருவம்பல உள்ளொலி எந்திரம்

ந	ம	ஶி	வ	ய	ஶி	ம	வ	ய	ந	ஶி
ய	ந	வ	ஶி	ம	வ	ஶி	ய	ந	ம	வ
ம	வ	ய	ந	ஶி	ய	வ	ஶி	ம	ய	ந
ஶி	ய	ந	ம	வ	ந	ந	ம	ஶி	வ	ய்
வ	ஶி	ம	ய	ந	ம	ய	ந	வ	ஶி	ம
ஹ	ர	ஹ	ர	ஓம்	ௐ	ஓம்	ஹ	ர	ஹ	ர
வ	ம	ந	ய	ஶி	ஓம்	ஶி	ந	ய	வ	ம
ஶி	ந	ய	வ	ம	ஹ	ம	ஶி	வ	ந	ய
ம	ஶி	வ	ந	ய	ர	ய	வ	ஶி	ம	ந
ய	வ	ஶி	ம	ந	ஹ	ந	ய	ம	ஶி	வ
ந	ய	ம	ஶி	வ	ர்	வ	ம	ந	ய	ஶி

உருவங்களை வரைதல் என்பதாகும். எடுத்துக்காட்டாக சிவவழிபாட்டில் சதுரங்களும், பிறைகளும், அம்பிகை வழிபாட்டில் முக்கோணங் களும், முருகர் வழிபாட்டில், அறுகோணங்களும் அதிகஅளவில் பயன்படுவதைக் குறிப்பிடலாம். தாமரை இதழ் வட்டங்கள் எல்லாவற்றிக்கும் பொதுவானதாகும்.

2) சக்கரங்களில் எழுதப்பட வேண்டிய மூலஎழுத்துக்கள் ஒவ்வொரு தேவதைகளுக்கேற்ப மூல எழுத்துக்கள் பலவாறு உள்ளன. அதுபோலவே, நமது வேண்டுதலுக் கேற்பவும் எழுத்துக்களையும், மந்திரங்களையும் வகைப்படுத்தி எழுதவேண்டும்.

3) சக்கரங்கள் எழுதப் பயன்படும் பொருள் வரைந்து அமைக்கப்படும் அல்லது செதுக்கப்படும் பொருள்களுக்கு ஏற்பச் சக்கரங்கள் பயன்தருகின்றன. பாலுள்ள மரங்களின் பலகைகளில் வரையப்படும் சக்கரங்கள் நற்பயனைத் தரும். செம்புத்தகடு தங்கத்தகடு ஆகியவற்றில் வரையப்படும் சக்கரங்கள் எல்லையற்றகாலம் பயன்தரும். இரும்புத்தகடுகளில் வரையப்படும் சக்கரங்கள் நன்மையைத் தருவதில்லை. மேலும் இலைகள், மரப்பட்டைகள், மான் தோல், ஆயுதங்கள் முதலியவற்றிலும் சக்கரங்களை வரைந்து பூசிக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4) சக்கரங்களுக்குச் செய்யவேண்டிய அபிஷேகம் : இவை அருவுருவம் ஆனாலும் இவற்றிக்கு முறையாக அபிஷேகம் செய்ய வேண்டும். ஒவ்வொரு அபிஷேகப் பொருளுக்கும் ஏற்ப ஒவ்வொரு பலன் உண்டு. சக்கரங்களுக்கு வேப்பெண்ணெய், கடுகெண்ணெய் முதலியவற்றை தடவி வைப்பது நல்லது என்று கூறுகின்றனர். பௌர் ணமி நாட்களில் பஞ்சகவ்யத்தால் அபிஷேகம் செய்தால் சக்கரத்தின் ஆயுள் நீடிக்கும் என்பர்.

5) பூசையில் சொல்லப்படவேண்டிய மூலமந்திரம் : ஒவ்வொரு சக்கரத்திலும் நிலவுகின்ற தேவதைகளுக்கேற்பத் தனித்தனி மந்திரங்கள் உள்ளன. இவற்றை திரும்பத்திரும்ப உச்சரிக்க வேண்டும். சக்கரங்களை வழிபடுபவர்கள் அதிலுள்ள ஆவரண தேவதைகளையும் சேர்த்தே வழிபட வேண்டும். சக்கரங்களுக்கேற்ப மூலமந்திரத்தைக் குறைந்தபட்சம் எவ்வளவு தடவை சொல்ல வேண்டு மென்று நூல்களில் கூறப்பட்டுள்ளன. இதற்கு உருவேற்றுதல் என்று பெயர்.

6) பூசையில் படைக்க வேண்டிய பொருட்கள்: சக்கரங்களைப் பூசிக்கும்போது மந்திர ஒலியால் கவரப்பட்டு அதற்குரிய தேவர்கள், தேவதைகள் அவ்விடத்துக்கு வருகிறார்கள். அவர்களுடைய அருள் அங்கு நிவேதிக்கப்படும் பொருட்களில் கலக்கின்றன. அவற்றை உண்பதனாலேயே அவர் களுடைய அருளை நாம் அடையமுடிகிறது. ஆதலின் நிவேதனமும் அவசியமாகிறது.

7) அர்ச்சனைக்குரிய மலர்கள், தளிர்கள் : சக்கரங்களில் குடியிருக்கும் தேவ, தேவதைகளுக் கேற்ப உரிய மந்திரங்களைக் கூறி அர்ச்சிக்க வேண்டும். குங்குமம், சிவப்பு வண்ண மலர்கள், கருப்பு வண்ண மலர்கள், பச்சை வண்ண மலர்கள், அட்சதை, முதலிய பலவகையான பொருட்களால் அர்ச்சிக்கிறோம். அர்ச்சிக்கப்படும் பொருட்களுக் கேற்பப் பயனும் பலவகைப்படுகிறது.

8) பூசிக்க வேண்டிய கால எல்லையும் எண்ணிக்கையும் : ஆன்ம சாதனைக்காக பூசிப்பவர் களுக்குக் கால எல்லை இல்லை. ஏதாவது ஒரு பயனைக் குறித்துச் சக்கரங்களைப் பூசிப்பவர்கள் குறிப்பிட்ட காலம் பூசித்தால் போதும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் பயன் தரவில்லை யென்றால் குருவின் மூலம் காரணத்தை அறிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

சக்கர வழிபாட்டை விளக்கிப் பலநூல்கள் எழுந்துள்ளன. இவற்றில் சக்கரங்களை அமைக்கும் முறை, என்னென்ன செயல்களுக்கு எவ்வாறு எழுத வேண்டும். எப்படி மந்திரங்களை உச்சரிக்க வேண்டும் என்பவை விரிவாக விளக்கப்பட்டுள் ளதைக் காண்கிறோம்.

சக்கரங்களை எழுதும்போது மனதைப் பூரணத்தில் ஊன்றி நிலைப்படுத்தி, மூச்சுக் காற்றை இடது கலையில் ஒட்டி, எழுதவேண்டு மென்று சித்தர்கள் குறிக்கின்றனர்.

சித்தர்கள் அனேக தலங்களில் சித்த மருந்து களைக் கொண்டு திருவுருவங்களை செய்ததுடன் அவற்றின் கீழ் தங்களால் கண்டறியப்பட்ட ஒப்பற்ற மூல மந்திரஎழுத்துக்களை உடையசக்கரங்களையும் அமைத்துள்ளனர். அந்தச் சக்கரத்தின் ஆற்றலாலேயே அத்தலங்கள் தனிச்சிறப்புடன் விளங்கி வருகின்றன. சக்கரங்களை யந்திரங்கள் என்றும் அழைப்பர்.

திருமூலர் வழங்குகிற ஆலமுண்டானது
ஐம்பத்தொரெழுத்துச் சக்கரம்.



★யோகேசுவரி உடனாய சித்தீசுவரர் பெருமானின் அருளினாலும் சித்தர்களின் அருளினாலும்★
★ எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!!! ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஆனந்தவல்லி போற்றி! அகத்தீசா போற்றி! போற்றி!!

அகத்தீசுவரர்

தமிழ் வளர்த்த சான்றோர்களில் முதன்மை பெற்றவர் அகத்தியர். கடல்கொண்ட மதுரையில் முதற்சங்கம் இருந்த காலத்தில் அதில் தலைமைப் புலவராகச் சிவபெருமான் வீற்றிருந்தபோது, முதன் மைப் புலவனாக இருந்து தமிழ் ஆராய்ச்சி செய்த தனிப்பெரும் புலவர். அசுரகுலத்து இராவணன் தமிழர்களுக்கு இன்னல் விளைத்த போது, அவ னைத் தனது இசையால்வென்று இலங்கைக்கு ஓட் டியவர். தமிழகம் சிறந்து விளங்குவதற்குக் காரண மான காவிரியாற்றையும், தாமிரபரணியாற்றையும் தந்தவர்.

சிவனருள் பெற்ற தவயோகி. சிவபெருமான் இவருக்காகவே கயிலைமலையில் நடைபெற்ற தனது திருமணக்கோலக் காட்சியைத் தென்னகத்தில் இருபத்தியோரு இடங்களில் மீண்டும் மீண்டும் காட் டினார் என்றால்,இவருடைய பக்தியின் பெருமையை நம்மால் அளவிடமுடியுமா?

சிவபெருமான் அகத்தியரையும் அவர் செய் கின்ற சிவபூசையையும் பெரிதும் விரும்புகின்றான் என்பதைத் தேவாரம் "அகத்தியனை உகப்பானை" என்று போற்றுகின்றது. சிவமஞ்சரியின் இந்தப் பத் தொன்பதாவது மலர்அகத்தியரையும் அவர் வழி பட்டுப் பேறுபெற்ற அகத்தீசுவரங்களையும் அவர் சிவயோக சாதனையால் தென்னாட்டில் செய்த அற்புதங்களையும் விவரிப்பதாக மலர்கிறது.

இதனுள் அகத்தியர் வரலாறு, அகத்தியர் சிவனருள் பெறுதல், அகத்தியருக்காகச் சிவபெரு மான் தனது திருமணக் கோலக் காட்சியைக் காட்டு தல், அகத்தியர் அமைத்த அகத்தீச்சரங்கள், அகத்திய தீர்த்தங்கள், அகத்தியகீதை, அகத்தியர் தேவாரத்திரட்டு, அகத்தியர் குற்றாலத்தில் திருமால் வடிவத்தைச் சிவலிங்கமாக்குதல் முதலான அனேக செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

ஆனந்தவல்லி உடனாகிய அகத்தீசுவரப் பெருமான் அன்பர்கள் யாவருக்கும் சகலசெல்வ யோகமிக்கப் பெருவாழ்வினை அளித்து அருள் பாலிக்க வேண்டுமென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்றேன். –சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் வரலாறு

மாபெரும் தவமுனியான அகத்தியர் எல்லாம்வல்ல சித்தர், சிவன் அனைய திருமுனி என்று புகழப்படுபவர். இப்படிப் பல சிறப்புக்களைப் பெற்ற அகத்திய முனிவரின் தோற்றத்தைப் பலபுராணங்கள் பலவிதமாகக் கூறுகின்றன.

ஒரு சமயம் பிரம்மன் ஒரு பெரிய வேள்வியைச் செய்தான். அந்த வேள்விச் சாலையில் இருந்த கும்பத்தில் சிவபெருமானின் ஓர் அம்சம் ஒளிவடிவமாக இறங்கியது. வேள்வியின் முடிவில் அது முனிவனாக உருப்பெற்றது. அட்சமாலை, கமண்டலம், யோகதண்டம், ஞானமுத்திரை ஆகியவற்றைத் தாங்கியவராய் வெளிப்பட்ட அவரைக் கும்பமுனி என்றும் குடமுனி என்றும் தேவர்கள் போற்றித் துதித்தனர்.

பிறக்கும்போதே ஞானஒளியைத் தன்னகத்தே கொண்டிருந்ததால் அவரை அகஸ்தியன் என்றனர். அவர் குள்ளமான உருவமுடையவராக இருந்ததால் குறுமுனி என்றும் அழைக்கப்பெற்றார்.

அவர் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன்னே தோன்றி, அவரை முனிவர்களில் சிறந்தவராகவும், நட்சத்திரமாக ஒளிரவும் அருள்புரிந்தார்.

ஒருசமயம் அகத்திய முனிவர் ஒரு காட்டைக் கடந்து கொண்டிருந்தார். அக்காட்டில் அனேக முனிவர்கள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் அகத்தியர், நீங்கள் ஏன் இப்படித் தொங்கிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார். அவர்கள், "அன்பனே, எமது வம்சத்தில் தோன்றிய அகத்தியன் என்பான்.தனது இல்லறக் கடமைகளைச் செய்யாது இருக்கின்றான். அவன் இல்லறம் புகுந்து உரிய கடன்களைச் செய் தால்தான் நாங்கள் சொர்க்கம் புகமுடியும்". என்று கூறினர். அதைக் கேட்ட அகத்தியர் அவர்களைப் பணிந்து, நான்தான் அந்த அகத்தியன் ''உங்கள் விருப்பத்தை உடனே நிறைவேற்றுவேன்'' என்று கூறினார்.

பின்னர் அகத்தியர் விதர்ப்பநாட்டு இளவரசியான லோபாமுத்திரையை மணந்து கொண்டு இல்லறம் நடத்திவந்தார். அதனால் அவருடைய முன்னோர்கள் சுவர்க்கம் புகுந்தனர்.

மக்களுக்கு இன்னல் விளைந்த போதெல்லாம் அவற்றை விலக்கி அருள்புரிந்துள்ளார். முனிவர்களுக்குத் தீங்குசெய்து அவர்களைக் கொன்று வந்த வில்லவன் வாதாபியை அடக்கியது, சூரியனின் போக்கைத் தடுமாறவைத்த விந்திய மலையை அடக்கியது, இந்திரனுக்கு எதிராகப் போரிட்டுக் கடலில் ஒளிந்து கொண்ட விருத்திராசூரனைக் கண்டுபிடிக்க கடலை ஒருமுறை உள்ளங்கையில் அடக்கிக் குடித்து முடித்தது. இராவணனை இசையால் வென்று இலங்கைக்கு ஓட்டியது முதலியன இவருடைய அருஞ்செயல்களாகும்.

பின்னும் அகத்தியர் அனேக தவங்களைச் செய்து அஷ்டமாசித்திகள் கைவரப்பெற்றார். மனிதகுலம் மேன்மை அடையும் பொருட்டுத் தமிழ்மொழியை வளப்படுத்த இலக்கணங்களைச் செய்தார். அனேக ஜோதிட, வைத்திய, ஞானநூல்களை இயற்றி அளித்தார். பல அரிய செயல்களைச் செய்தபின், பொதிகை மலையில் அருவநிலையில் வாழ்ந்து வருகின்றார். அவ்வப்போது வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியமரபும் - புலத்தியமரபும்

மாபெரும் தவமுனியாகிய அகத்தியர் வழிபட்டுப்பேறு பெற்ற சிவாலயங்களே அகத்தீசுவரர் ஆலயங்கள் என்று புராணங்களும் வரலாறுகளும் கூறுகின்றன. என்றாலும் சில ஆராய்ச்சியாளர்கள் அகத்தியர் என்பவரைத் தனித்த ஒரு முனிவராகக் கொள்ளாமல் அப்பெயரை ஒருபெரிய கூட்டத்தின் குறியீட்டுப் பெயராகக் குறிக்கின்றனர்.

இவர்கள் "அகத்தில் தீ வளர்ப்பவர்கள்" ஆவர். எனவே அகத்தியர் எனப்பட்டனர் என்பர். அகத்தீ என்பது மூலாதாரத்தில் உறங்கும் நிலையில் உள்ள மூலக் கனலாகும். இதனை மூச்சுக் காற்றுப் பயிற்சியால் எழுப்பி, உடலிலுள்ள ஆறு ஆதாரங்களைக் கடந்து, உச்சி வெளியான பிரமரந் திரத்தில் மலராத நிலையில் உள்ள ஆயிரம் இதழ் கொண்ட தாமரையை மலரச் செய்து அதில் வழியும் தேனான அமுதத்தைப் பெற்று அருந்துவதே அகத்திய நெறியாகும். இந்த அமுதம் உண்ணப் பெற்றவர்கள் நீடுழி காலம் வாழ்வர். அஷ்டமாசித்திகள் கைவரப் பெறுவர்.

இவர்கள் தங்கள் உடலின் உள்ளேயுள்ள நாலிதழ் தாமரையான மூலாதார யாககுண்டத்தில் மூலக்கனலை மூட்டி இடைகலை, பிங்கலை என்ற ஹோமக் கரண்டிகளால் காற்றுப் பயிற்சி என்னும் நெய்வார்த்து அஜபா என்னும் மந்திரத்தை ஓதி அகவேள்வியை இடையாறாது செய்கின்றனர். இப்படிப்பட்ட வேள்வியைச் செய்வதால் இவர்களுடைய உடலில் தீகனன்று கொண்டேயிருக்கும். இதனால் இவர்கள் அகத்தியர்கள் எனப்பெற்றனர். இவர்கள் எண்ணற்றவர்களாவர். வழிவழியாக வருபவர்கள். இவர்களின் மரபு அகத்திய மரபு எனப்படும்.

இதற்கு நேர்மாறாக ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு வேத விதிப்படி ஓமகுண்டங்கள் அமைத்து அதில் வேதமந்திரங்களைக் கூறி வேள்விகளைச் செய்பவர்கள் புலத்தியர்கள் என்றழைக்கப்பெற்றனர். புலம் என்பது செம்மையான இடம் ஆகும். புலத்தில் தீவளர்த்து வேள்விகளைச் செய்ததால் இவர்கள் புலத்தியர் எனப்பட்டனர். இவர்களின் மரபு புலத்திய மரபு ஆகும்.

இந்த இருவரின் நோக்கமும் இறைவனை அடைந்து அவனோடு இரண்டறக்கலந்து விடுதலே என்றாலும், அதை அடைய கடைப்பிடிக்கும் அணுகுமுறையில் மாறுபட்டிருந்தனர். இதனால் இந்த இரண்டு மரபினரும் அடிக்கடி மோதிக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாக அகத்தியரும், இராவணனும் இசைப்போட்டியில் மோதிப் பலநாள் வாது செய்ததைக் கூறலாம். இதன் இறுதியில் இராவணன் தோற்றான். அக்த்தியர் வென்றார். இதில் இராவணன் புலத்திய மரபைச் சேர்ந்தவன் என்பதும் அகத்தியர் அகத்திய மரபைச் சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களிடையே இப்படி நடைபெற்ற போட்டிகளில் பெரும்பான்மையான நேரங்களில் அகத்திய மரபினரே வென்றனர். புலத்திய மரபினர் தோற்றனர்.

அகத்திய மரபு அகஒழுக்கத்துடன் புற ஒழுக்கங்ளையும் வற்புறுத்தியது. புலத்திய மரபோ புறஒழுக்கங்களுக்கும் விதிகளுக்குமே முதல் இடங்கொடுத்தது. அகத்தியமரபு எளிமையான நிலையிலிருந்தது. இந்தக் காரணத்தினால் அகத்திய மரபு தழைத்தது புலத்திய மரபு சிறுத்தது. என்றாலும், காலப் போக்கில் இருவரும் ஒன்றாயினர். புலத்தியர்கள் அகத்தியர்களின் சீடர்களாகவும் ஆகிவிட்டனர்.

பின்னாளில், அகத்திய மரபினரும் புலத்திய மரபினரும் ஒரே மதிலுக்குள் இரண்டு லிங்கங்களை அமைத்து வழிபடும் வழக்கத்தையும் மேற்கொண்டனர். இவை அகத்தீசுவரர்-புலத்தீசுவரர் என்றழைக்கப்பெற்றன. தேவாரப் பாடல் பெற்ற தலமான (வன்பார்த்தான் பனங்காட்டூர்) திருப்பனங்காடு சிவாலயத்தில் ஒரே வரிசையில் அமைந்த அகத்தீசுவரர்-புலத்தீசுவரர் என்ற லிங்கங்களைக் காண்கிறோம்.

மேலும், இதே மாவட்டத்திலுள்ள அழிசூர், திருமழிசை, சின்னக்காவணம் முதலிய அனேக தலங்களில் அகத்தியனும் புலத்தியனும் பூசித்த இரண்டு லிங்கங்கள் அமைந்த ஆலயங்களைக் காணலாம். பொதுவாக அகத்தீசுவர லிங்கங்கள் சதுரமான ஆவுடையாரைக் கொண்டவை. புலத்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிங்கங்கள் வட்டமான ஆவுடையாரைக் கொண்டவைகளாக உள்ளன.

இப்படி இரண்டு லிங்கங்களைக் கொண்ட கோயில்கள் இரட்டைத்தளிகள் என்றும் (தளி-கோயில்) அழைக்கப்பெறுகின்றன. உத்திரமேரூரில் இரட் டைத்தளீச்சுவரர் ஆலயத்தைக் காணலாம். காலப் போக்கில் அகத்தியமரபு மேலோங்கியது புலத்திய மரபு அதில் ஒன்றிக்கலந்து விட்டது. அகத்திய மரபினர் தென்னகமெங்கும் பரவியிருந்தனர். அவர்கள் தங்கள் வழிபாட்டிற்கென அமைத்துக்கொண்ட ஆலயங்களே அகத்தீச்சரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அக்கோயில்களின் உள்ளேயே ஈசானபாகத்தில் தனிக்கோயிலாகப் புலத்தியன் வழி பட்ட லிங்கம் அமைந்துள்ளதைக் காண்கிறோம். புலத்தியர்கள் வேதங்களுக்கும் அதில் சொல்லப் பட்டுள்ள யாகங்களுக்குமே முதலிடம் தந்தனர். அதனால் அவர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் வேதநாயகர், வேதபுரீசுவரர் என்றும், அம்பிகை ஆரணவல்லி, வேதவல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

அகத்தியர்-புலத்தியர் வடிவங்கள்

அகத்திய

தென்னகத்தில் அபூர்வமாக அமைந்த சில குடைவரைக் கோயில் வாயில்களின் இருமருங்கும் இரண்டு துறவிகளின் வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றை அகத்தியர், புலத்தியர் என்று அழைக்கின்றனர். இத்தகைய அரிய காட்சியைப் புதுக்கோட்டை வட்டத்தில் உள்ள தேவர்மலை குடைவரைக் கோயிலில் காண்கிறோம்.

இந்தக் குடைவரைக் கோயிலின் கருவறையில் சதுரவடிவ லிங்கமாக தேவநாயகர் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அகத்தியர் வழிபாட்டினர் சதுரவடிவமான லிங்கத்தினை வழிபடுபவர்கள் என்பது இங்கு எண்ணத்தக்கது. அன்னையின் பெயர் தேவநாயகி என்பதாகும். இந்தக் குடைவரைவாயிலின் இருமருங்கிலும் அகத்தியரும் புலத்தியரும் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளனர்.

இதில் அகத்தியர் நீண்டதாடியும் உயர்த்திக் கட்டிய சடைமுடியும் கொண்டவராக சற்று வாலிப வயதைக் கடந்தவராகக் காட்சியளிக்கின்றார். புலத்தியர் இளமை ததும்ப வாலிப வயதுடையவராய் விளங்குகின்றார். என்றாலும் சிறந்த தவத்தை உடையவர் என்பதைக் குறிக்கத் தலையில் சடாமகுடம் கொண்டவராக அமைக்கப்பட்டுள்ளார்.


புலத்தியர்

இந்தக் குடைவரையில் உள்ளதைப் போன்றே திருக்கோளக்குடியில் அமைந்துள்ள குடைவரைக் கோயிலிலும் அகத்தியர், புலத்தியர் வடிவங்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிவாலயங்களிலன்றி முருகனுக்கு அமைக்கப்பெற்ற குடைவரைக் கோயில் வாயில்களிலும், முருகன் புடைப்புச் சிற்பங்களிலும் அகத்தியர் புலத்தியர் வடிவங்களைக் காண்கிறோம்.

❑ திருப்புறம்பியம் சாட்சி நாதேசுவரர் ஆலயத்தில் அகத்தியரும் புலத்தியரும் வழிபட்ட லிங்கங்கள் அடுத்தடுத்து உள்ளன. நெல்லைமாவட்டம் பாபநாசம் ஆலயத்தின் தலமரமான முக்காள மரத்தின் கீழ் ஒரு சிவலிங்கமும் அகத்தியர் புலத்தியர் வடிவங்களும் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தீச்சரமும் - புலத்தீச்சரமும்

தொண்டை நாட்டுத் திருத்தலம் திருப்பனங்காடு ஆகும். இது காஞ்சீபுரத்திலிருந்து ஐயன்குளம் வழியாகச் செய்யாறு செல்லும் சாலையிலுள்ள திருப்பனங்காடு கூட்டுப் பாதையிலிருந்து வடக்கே 1கி.மீ தொலைவில் உள்ளதாகும். திருமுறைத் தலங்களில் இரண்டு பனங்காட்டூர்கள் உள்ளன. இவற்றை இனம் பிரித்துக் காட்ட விழுப்புரத்தை அடுத்துள்ள பனங்காட்டூரைப் புறவார் பனங்காட்டூர் என்றும், மேலே சொல்லிய பனங்காட்டூரை வன் பார்த்தான் பனங்காட்டூர் என்றும் அழைக்கின்றனர். இது சுந்தரர் பாடிப் பரவிய திருத்தலமாகும்.

இங்கு ஒரே மதிலுக்குள் கிழக்கு நோக்கியவாறு இரண்டு சிவாலயங்கள் அடுத்தடுத்து உள்ளன. இவற்றில் வடக்கில் உள்ளது அகத்தியர் வழிபட்ட அகத்தீசுவரமாகும். இதில் எழுந்தருளியுள்ள பெருமான் அகத்தீசுவரர் என்றும் தாலபுரீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார். இவருடைய அம்பிகைக்கு அமிர்தவல்லி என்பது பெயராகும். இந்தக் கருவறைவாயிலில் அகத்தியர் பனை மரத்தின் கீழ் சிவலிங்கம் அமைத்து வழிபடுவது புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன இந்தச் சந்நிதிக்கு இணையாக தெற்கில் மற்றோர் கருவறை உள்ளது. இதனுள் அமைந்துள்ள சிவலிங்கம் கிருபானாதீசுவரர் கிருபாபுரீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றது. இது புலத்தியர் வழிபட்ட சிவலிங்கமாகும். இந்தக் கருவறை வாயிலிலும் பனைமரத்தடியில் புலத்தியர் சிவலிங்கம் அமைத்து வழிபடும் காட்சி புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இவருக்கு உரிய அம்பிகையின் பெயர் கிருபாநாயகி என்பதாகும். புலத்தியர் வழிபட்ட லிங்கமான கிருபாபுரீசுரருக்கு நேராக தலை வாயிலும், அதன் மீது ராஜகோபுரமும் அமைந்துள்ளது. அகத்தியர் வழிபட்ட லிங்கத்திற்கு நேராக ஜன்னல் அமைக்கப்பட்டுள்ளது. பிராகாரத்தில் தல விருட்சமாகிய பனைமரங்கள் உள்ளன. இங்கு கோயிலுக்கு எதிரில் பெரிய குளமாக ஜடாகங்கை என்ற தீர்த்தம் அமைந்துள்ளது.

தொண்டை மண்டலத்தில் அகத்தியர் அமைத்த நூற்றெட்டு லிங்கங்கள்

ஒரு சமயம் கடலில் ஒளிந்து கொண்ட விருத்தி ராசுரனைக் கண்டு பிடிப்பதற்காக இந்திரனின் வேண்டுகோளின்படி அகத்திய முனிவர் கடலை ஒரே முறையில் ஆசமித்து அதனைவற்றும்படிச் செய்தார். அவ்வேளையில் கடல் நீருடன் கடலில் வாழ்கின்ற எல்லா ஜீவராசிகளையும் சேர்த்தே உண்டார். அதனால் அவருக்குக் கடும் வயிற்றுவலி உண்டாயிற்று. அவர் தணிகை மலைக்குச் சென்று முருகப்பெருமானை வணங்கி தனது வலி நீங்க அருள்புரியுமாறு கேட்டார். முருகன் முனிவரே, நீர் கடல் நீருடன் அனேக ஜீவராசிகளை செரித்து அழித்தீர். அது கொடிய பாவமாகும். அந்த பாவத்தின் விளைவால் இப்போது துன்பப்படுகிறீர். அத்துன்பத்தை நீக்க வல்லது சிவபூசை ஒன்றேயாகும். ஆதலில் நீர் சிவபூசை செய்யும் என்றார்.

அகத்தியர் ஒரு தர்பைப் புல்லை மந்திரித்து அனுப்பினார். அது மேற்கே சென்று அங்கிருந்த மலையிலிருந்து ஒரு ஆற்றைப் பெருகி வரச் செய்ததது. அதுவே கொசஸ்தலை ஆறு ஆகும்.

தொண்டை மண்டலத்தில் ஓடும் இந்த குசஸ்தலை ஆற்றின் கரைநெடுக அகத்தியர் 108 தலங்களில் 108 சிவாலயங்களை அமைத்துப் பூசை செய்தார். இத்தலங்களில் அவருடன் அவருடைய முதன்மைச் சீடனான புலத்தியனும் தம் பெயரால் மற்றோர் லிங்கத்தை அமைத்து வழிபாடு செய்துள்ளார். அகத்தியரும் புலத்தியரும் நிறுவிய 108 வது ஆலயம் சின்னக் காவனத்தில் அமைந்துள்ள அகத்தீசுவரர் ஆலயமாகும். அதனால் பெருமானுக்கு நூற்றெட்டீசுவரர் என்ற பெயர் வழங்குகின்றது. இங்கு அகத்தியர் அழிஞ்சில் மரத்தின் கீழ் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அம்பிகையின் பெயர் அஷ்டோத்ர வல்லி (நூற்றெண்கொடி) என்பதாகும். இங்குள்ள புலத்தியன் வழிபட்டலிங்கம் வேதபுரீசுவரர் என்றும் அவருடைய அம்பிகை வேதவல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இங்குள்ள தலமரமான அழிஞ்சில் மரத்தின் கீழ் அகத்தியர் அமைத்த விநாயகரின் திருவுருவமும், கோயிலுக்குக் கிழக்கில் அகத்திய தீர்த்தமும் உள்ளன. சின்னக் காவணம் சென்னைக்கு வடக்கிலுள்ள பொன்னேரிக்கு அருகில் குசஸ்தலை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகு அகத்தியர் திருவான்மியூர் சென்று பால்வண்ண நாதரை வழிபட்டதுடன் ஒரே இடத்தில் 108 லிங்கங்களையும் அமைத்து வழிபட்டார்.

இதனால் மகிழ்ந்த சிவபெருமான் அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அகத்தியருக்குக் காட்சியளித்ததுடன் வயிற்றுவலி தீர மருந்தையும் அளித்தார். அதனால் பெருமானுக்கு மருந்தீஸ்வரர் என்பது பெயராயிற்று. சென்னை திருவான்மியூரில் உள்ள மருந்தீஸ்வரர் ஆலயத்தில் 108 லிங்கங்களைக் கண்டு மகிழலாம். இவற்றை வழிபடுபவர்களுக்கு உடற்பிணியும், மனப்பிணியும் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.

தொண்டைமலத்து அகத்தீச்சுரங்களும் அதன் தத்துவ விளக்கங்களும்



1. அகத்தீசுவரர் 2. ஆனந்தவல்லி 3. நந்தி 4. தெற்கு தலைவாசல்

தமிழகமெங்கும் அகத்தியர் வழிபட்ட திருத் தலங்கள் சிறப்பாக இருந்தாலும் செங்கை மாவட்டத் தில் ஓடும் குசத்தலையாற்றின் கரையில் அமைந் துள்ள அகத்தியர் வழிபட்ட சிவாலயங்கள் தனிச்சிறப் பைப் பெறுகின்றன.

குசத்தலையாறு, திருத்தணிக்கு மேற்கிலுள்ள மலைகளில் தோன்றித் திருத்தணி, திருவள்ளூர் வழியாக ஓடிப் பொன்னேரியை அடைந்து வங்கக் கடலில் கலந்து விடுகின்றது.

திருத்தணிகையில் முருகனின் அருள்பெற்ற அகத்தியர் ஒரு தர்ப்பையை மந்திரித்து அனுப்ப அதன் வழியே இந்த ஆறு வந்ததென்பர். குசமாகிய தர்ப்பைப் புல்லின் முனைவழியாக வந்ததால் இது குசத்தலையாறு எனப்பெயர் பெற்றது என்பர்.

இந்த ஆற்றின் இரண்டு கரையிலிலும் சுமார் 5 கிலோமீட்டர் தொலைவு வரை பல சிவாலயங்கள் அகத்திய மரபினரால் அமைத்து வழிபடப்பட் டுள்ளன. இவை அகத்தீசுவரர் கோயில்கள் என்றே வழங்கப்படுகின்றன.

பெரும்பான்மையாக இத்தளிகளின் மூல லிங்கம் சதுர வடிவிலேயே அமைந்துள்ளதும் குறிப் பிடத்தக்கதாகும்.

நூற்றுக்கும் மேற்பட்ட அகத்தீசுவரர் ஆலயங் களை இப்பகுதியில் காண்கிறோம். இவற்றில் குறிப்பிடத்தக்கவை பொன்னேரி, சின்னக்காவணம், பஞ்செட்டி, சின்னம்பேடு, வடமதுரை நல்லூர், புது வாயில், குளத்தூர் முதலிய தலங்களாகும்.

இங்குள்ள ஆலயங்களின் அமைப்பு தனிச் சிறப்புடையதாகும். இவற்றில்மூலவர் கிழக்கு நோக்கி எழுந்ருளியிருந்தாலும் கிழக்கில் ஜன்னல் மட்டுமே அமைகின்றது. உள்வாயிலும் தலைவாயிலும் தெற்கு நோக்கியே அமைகின்றன. இதற்கான தத்துவ விளக்கமும் கூறப்பட்டுள்ளது.

இந்த தத்துவத்தை அறிந்து கொள்வதற்கு முன் இந்த ஆலயங்களின் அமைப்பை அறிந்து கொள்வது அவசியமாகும். எனவே முதலில் ஆலய அமைப்பையும் அதைத்தொடர்ந்து அதன் தத்துவ விளக்கத்தையும் காணலாம்.

இக்கோயில்களின் தலைவாயில்கள் எப் போதும் கிழக்கில் இல்லாமல் தெற்கு நோக்கியே அமைந்துள்ளன. இந்த வாயிலைக் கடந்து உட்சென்றால் மகா மண்டபத்தை அடைகின்றோம். இந்த மண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அம்பிகை எழுந்தருளியுள்ளாள். இவளைத் தரிசித்த பின்னரே கிழக்கு நோக்கி அமைந்துள்ள மூலவரைத் தரிசிக்கிறோம்.

இப்படித் தெற்கு வாயிலின் வழியாக இக் கோயிலுக்குள் செல்வதன் பொருள் உயிர்கள் தெற்கில் வாழும் எமனின் வாயில் படாமல் தெற்கி லிருந்து இறைவன் வாழும் திசையான வடக்கு நோக்கி வருகின்றன என்பதாகும். அப்படி வருகின்ற உயிர்களுக்கு முதலில் அருளாகிய சக்தியின் தரிசனம் கிட்டுகின்றது. இந்த அம்பிகை உயிர்களுக்கு ஆனந்தம் அளிப்பதால் 'ஆனந்தவல்லி என்றும், தாயாகிக் காப்பதால் அகிலாண்டேஸ்வரி என்றும் மரணத்தை விலக்கும் அமுதத்தை அளித்து அழி வினின்று காப்பதால் அமுதவல்லி என்றும் அழைக் கப்படுகின்றாள். ஆனந்தவல்லி என்ற பெயரே அதிக கோயில்களில் வழக்கத்தில் உள்ளது. (பார்க்க அடுத்த பக்கத்திலுள்ள பெட்டிச் செய்தி)

இப்படி அன்னையின் அருட்காட்சி பெற்ற உயிர்நிற்குமிடம் மகாமண்டபமாகும். இது நான்கு கால்களை உடையது. இந்த நான்கு கால்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணர்த்துகின்றன. இந்த நான்கில் ஒன்றைப் பின்பற்றும் உயிர்க்கு முதலில் ஞான சூரியன் உதிக்கின்றான். இது சிறுபிழம்பாகத் தோன்றுகிறது. இதையே கிழக்கில் உள்ள ஜன்னலும் அதன் வழியாகத் தோன்றும் காலைக் கதிரவன் ஒளியும் குறிக்கின்றன. அந்த ஜன்னலுக்குப் பின்னால் உள்ள நந்தி, ஞான குருவாக இருந்துஆன்மாவிற்கு அதன் உண்மையை உணர்த்தி அது இறைவனை நோக்கி நிற்க உதவுகிறது. இப்படி உணர்த்தப்பட்ட உயிர் சற்று இடப்பக்கம் திரும்பி மூலத்தானத்தைக் காண்கிறது. மூலத்தானத்தில் குருவான அர்ச்சகர் ஞான ஒளியாக தீபாராதனையைச் செய்கின்றார். அந்த ஞானஒளியின் விளக்கத்தால் உயிருக்கு இறைவனின் காட்சியாகிய சிவலிங்கம் தோன்றுகின்றது.

இப்படிப் படிப்படியாக உயிர் எமன் வழியினின்று விடுபட்டு உத்திர திசையாகிய மேல் நிலையை நோக்கிச் செல்ல முயல அதற்குத் தாயின்அருள் கிடைப்பதும் பிறகு அது நான்கு வழிகளில் தனக்கு உரிய வழியைத் தேர்ந்தெடுத்துக் கடைப்பிடித்து ஒழுகிப் பிறகு ஞானப் பிழம்பின் உணர்வால் தனது பசுத்தன்மையை உணர்ந்து அதிலிருந்து விடுபட்டு வலமாகிக் குருவின் அருளால் இறைவனைக் காண்பதே அகத்தியர் ஆலயதத்துவ விளக்கமாகும்.

மேலும் இக்கோயில் கருவறைகள் தூங்கானை மாடவடிவாகவே இருக்கக் காண்கிறோம். (இதே நிலை நீடிக்கவில்லை. காலப்போக்கில் பலவேறு சந்நிதிகளும் இக்கோயிலுக்குள் கட்டப்பட்டன. அதற்கான விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன)

நூற்றுக்கணக்கான கோயில்களை இந்த அமைப்பில் இப்பகுதியில் கண்டு மகிழ்கின்றோம்.

சிவத்தை வெளிப்படுத்தும் ஆனந்தசுந்தரி

சிவபெருமானை உயிர்களுக்கு வெளிப்படுத்தி உணரவைப்பவள். அம்பிகையே அவள் அமுதவல்லி, ஆனந்தசுந்தரி என்று பலவாறு அழைக்கப்படுகின்றாள். இதனைத் திருமந்திரம்

கோலக்குழலி குலாய புருவத்தள்
நீலக்குவளை மலரன்ன கண்ணினாள்
ஆலிக்கும் இன்அமுத ஆனந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத்தாளே

என்று குறிக்கின்றது. இதன் பொருள், அழகிய நீண்ட கூந்தலையும், வளைந்த புருவங்களையும், கருங்குவளைப் போன்ற கண்களையும் உடைய அமுதசுந்தரி, ஆனந்த சுந்தரி என்று அழைக்கப்படும் பராசக்தி உயிர்களுக்கு மேலான பொருளான சிவபெருமானை வெளிப்படுத்துகின்றாள் என்பதாகும். இதனையொட்டியே அகத்தீச்சுவரங்களில் அமைந்துள்ள அன்னைக்கு ஆனந்தவல்லி, அமுதவல்லி, அகிலாண்டவல்லி, முதலியபெயர்கள் வழங்குகின்றன.

திருஒற்றியூர் அகத்தீச்சரம்

பொதுவாக ஆலயங்களின் கருவறையைக் கிழக்கு நோக்கியும் தலைவாயிலை தெற்கு நோக்கியும் அமைக்க வேண்டும் என்பது விதியாகும். சில சமயங்களில் அதற்கு மாறுதலாக அமைவதும் உண்டு. எடுத்துக்காட்டாக சென்னை திருஒற்றியூரில் சந்நிதி வீதியில் அமைந்துள்ள அகத்தீசுவரர் ஆலயத்தின் தலைவாயில் வடக்கு நோக்கி அமைந்திருக்கக் காண்கிறோம். வாயிலுக்கு நேராக அன்பர்களை அழைத்து அருள்பவராகச் சிவபெருமான் வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அபூர்வமாகச் சமயங்களில் மட்டுமே சிவபெருமானை வடக்கு நோக்கி அமைக்கின்றனர். இது ஆதியில் அகத்தியர் தென்னாடு நோக்கி வந்தபோது அவருக்கு அருள்பாலிக்க சிவபெருமான் வடக்குநோக்கி எழுந்தருளிய கோலம் என்பர்.

இத்தலத்தில் அகத்தியர் அகிலாண்டேசுவரி அம்பிகையையும் சிவலிங்கத்தையும் அமைத்து வழிபட்டுள்ளார். இது தனிக் கோயிலாகவே திகழ்கின்றது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான கலிய நாயனார் இங்குத் திருவிளக்குத் தொண்டு செய்துள்ளார். அவர் நிலையாகத் தங்கி இங்குப் பணிகள் செய்துள்ளதை வரலாறு கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திய துணைக் கண்டத்தில் அகத்தியர் வழிபாடு

இமயம் முதல் குமரிவரை, போற்றி வணங்கப்படும் பெருந்தவமுனிவராக விளங்குபவர் அகத்தியர். இவருக்குத் தனி ஆலயங்கள் அமைத்து வழிபடும் வழக்கம் பரவலாக இருந்து வருகின்றது. காலப்போக்கில் அது குறைந்து விட்டது என்றாலும் சிவாலயங்களுக்குள்ளேயே அகத்தியர் உருவங்களை நிலைப்படுத்தி வணங்கி வருகின்றனர்.

இமயமலையில் பல இடங்களில் அகத்தியர் வழிபட்ட தலங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக இமயமலைச் சாரலில் உள்ள கேதாரத்தில் அகஸ்திய சட்டி என்ற இடம் உள்ளது. அங்கு அகத்தியருக்கான ஆலயம் உள்ளது. இதுபோன்றே நேப்பாளத்திலும் அகத்தியர் வழிபட்ட லிங்கங்களும் அகத்தியர் திருவுருங்களும் உள்ளன.

இமயமலைச் சாரலில் அகத்தியவடம் என்ற இடம் இருப்பதாகப் மகாபாரதம் குறிப்பிடுகின்றது. இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கி இதன் கரையில் உள்ள ஆலமரத்தின் கீழ் அகத்தியர் தவம் செய்தார் என்று- நம்புகின்றனர். அந்த மரம் அகத்தியவடம் என்று அழைக்கப்பட்டது.

காசியில் அகத்தியர் வழிபட்ட லிங்கம் உள்ளது. அகத்தியர் ஒளிவடிவில் அதில் கலந்துள்ளார் என்பர். நாசிக் என்றழைக்கப்படும் இடத்திற்கு 24 கீ.மீ. தொலைவில் அகத்தியர் ஆசிரமம் இருந்தது என்று புராணங்கள் கூறுகின்றன.

விந்திய மலைச்சாரலில் அனேக (இடங்களில்) அகத்தியர் வழிபட்ட சிவலிங்கங்கள் அமைந்திருப்பதுடன் அகத்தியருக்கான ஆலயங்களும் உள்ளன.

கன்னட நாட்டில் உள்ள குடகுமலைப்பகுதி புராணங்களில் சையமலை என்று அழைக்கப்படுகின்றது. இங்கிருந்துதான் காவிரி உற்பத்தியாகிறது. இந்த இடம் தலைக்காவேரி என்று அழைக்கப்படுகின்றது. இங்கு அகத்தியர் ஆலயம் உள்ளது.

தமிழ்நாட்டின் வடபகுதியான தொண்டை மண்டலத்தில் அகத்தியர் வழிபட்ட தலங்கள் பல உள்ளன. இதில் குறிப்பிடத்தக்கதான திருவேற்காடு, திருஒற்றியூர் முதலிய தலங்களில் அகத்தியரின் உலாத்திருமேனி வழிபடப்படுவதைக் காண்கிறோம்.

சென்னையின் மையப்பகுதியான தியாகராய நகரில் அண்மையில் அமைக்கப்பெற்ற அகத்தியர் ஆலயம் உள்ளது. இதில் திருமால் சிவபெருமான், அம்பிகை, விநாயகர், முருகன், சூரியன் ஆகிய ஆறுமதக் கடவுளருக்கும் அவர்களின் பரிவாரங்களுக்கும் சந்நிதிகள் அமைந்துள்ளன. இங்கு மையத்தில் வடக்குநோக்கியவாறு அகத்தியரும் லோபாமுத்திரையும் மூலவராக வீற்றிருக்கக் காண்கிறோம். இருவரின் உலாத்திருமேனிகளும் உள்ளன.

நடுநாட்டில் அகத்தியர் வழிபாடு தனிச் சிறப்புடன் இல்லாவிட்டாலும் சிதம்பரம் நடராஜர் ஆலயம், முதலிய ஆலயங்களில் அகத்தியர் கோட்டத்தில் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம்.

இதுபோன்றே சோழநாட்டில் அகத்தியருக்கான தனி ஆலயங்கள் இல்லை என்றாலும் கருவறைக் கோட்டங்களில் அவர் கோட்ட தெய்வமாக வணங்கப்படுவதை அதிக அளவில் காண்கிறோம்.

இவர் குருபிரானாகப் போற்றப்படுவதால் தென்முகக் கடவுளைப் (தட்சணாமூர்த்தி) போன்று தெற்குக் கோட்டங்களிலேயே எழுந்தருளி வைக்கப்படுகின்றார்.

வேதாரண்யத்தை அடுத்துள்ள அகத்தியான் பள்ளி அகத்தீசுவரர் சிவாலயத்தில் அகத்தியருக்கென தனிச் சந்நிதி அமைந்துள்ளது. இதில் அகத்தியர் தவக்கோலத்தில் வீற்றிருக்கின்றார். இங்குள்ள சிவபெருமானுக்கு அகத்தீசர் என்றும் அம்பிகைக்கு பாகம்பிரியாள் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இக்கோயிலை மக்கள் அகத்தியர் கோயிலென்று அழைக்கின்றர்.

வலங்கைமானை அடுத்த சந்திரசேகர புரத்தில் அகத்தியர் வழிபட்ட சிவாலயமும் விநாயகர் ஆலயமும் உள்ளன. இங்குள்ள விநாயகர் ஆலயத்தில் அகத்தியர் லோபாமுத்திரை திருவுருங்களும் உள்ளன.

பாண்டியமண்டலத்தில் அகத்தியர் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றதைக் காண்கிறோம். அகத்தியரின் இருப்பிடமான பொதிகை மலை இம்மண்டலத்திலேயே உள்ளது. இதில் அகத்தியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலயங்களும்அவர்தவம் செய்த குகைகளும் அதிக அளவில் உள் ளன.



திருவாங்கூரில் அகத்திய மலை என்ற மலை உள்ளது. இந்த மலையில் இருந்துதான் தாமிர பரணி ஆறு உற்பத் தியாகின்றது.

கேரளாவில் பல இடங் களில் அகஸ்திய கூடங்கள் என்ற இடங்களைக் காண்கிறோம். இங்கு அகத்தியர் தவம் செய்தார் என்று நம்புகின்றனர்.

சின்னமனூரில் கிடைத்த செப்பேடுகள் அகத்தியர் பாண்டிய மன்னர்களுக்குக் குலகுருவாக இருந்ததுடன், அவர்களுக்குப் பட்டாபிஷேகம் செய்த வைக்கும் புரோகிதராக விளங்கியதையும் அறிய முடிகின்றது.

திருநெல்வேலியில் அகத்தியர் பூசித்த லிங் கம் அகத்தீசர் எனும் பெயரில் மகாமண்டபத்தில் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம்.

அம்பாசமுத்திரத்தில் அகத்தியருக்கான பெரிய தனி ஆலயம் உள்ளது. இங்கு அவருக்குத் திருமணக் காட்சி கொடுத்த ஐதீக விழா நடத்தப்படுகின்றது. இதனை யொத்ததாக கல்லிடைக் குறிச்சி யிலும் அகத்தியர் ஆலயம் உள்ளது.

பாபநாசத்தில் மலையின் மீது அகத்தியர் அருவி என்ற இடமும் அதற்கு அருகில் அகத்தியர் ஆலயமும் இருக்கக் காண்கிறோம். அதற்கும் மேலே கல்யாணி தீர்த்தம் உள்ளது. அதன் கரையில் அகத்தீசுவரர் ஆலயம் உள்ளது.

குமரி மாவட்டத்தில் அகத்தியர் பெயரால் அகத்தீசுவரம் என்ற ஊர் உள்ளது. இங்கு அகத் தியர் வழிபட்ட அகத்தீசுவரர் ஆலயம் உள்ளது. மேலும் தென்குமரிக் கடலையொட்டி அகத்திய தீர்த்தம் இருந்ததென்றும் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தபோது அதில் மூழ்கி வழிபட்டான் என்றும் மகாபாரதம் கூறுகிறது.

இப்படி இமயம் முதல் குமரிவரை அகத்தியர் ஆலயங்கள் பரவலாக இருந்ததையும் அவர் சிறப் புடன் போற்றப்பட்டு வருவதையும் காண்கிறோம்.

அகஸ்திய நட்சத்திரம்

தேவரிஷிகள் பூமியில் செய்த கடுந்த வத்தின் பயனாக நட்சத்திரமண்டலத்தில் தனக் கென ஒரு உலகத்தைப் படைத்துக் கொண்டு வாழ் கின்றனர். சப்தரிஷிகள் வாழும் மண்டலம் சப்த ரிஷிமண்டலம் என்ற நட்சத்திரக் கூட்டமாகத் திகழ்கிறது. விசுவாமித்திரனும் சிவனருளால் நட் சத்திர மண்டலத்தில் ஜொலித்துக் கொண்டிருக் கின்றார். இவர்களைப் போலவே அகத்தியரும் வானவெளியில் நட்சத்திரமாக விளங்குகின்றார். ஒரு சமயம் அகத்தியர் கடுந்தவம் செய்தார். அதன் வெப்பம் எங்கும் பரவியது.

அதனால் மும்மூர்த்திகள் அவர் முன்னே தோன்றி "அன்பனே உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டனர். அவர் "நான் இருபத்தைந்தாயிரம் கோடி பிரமாக்களின் காலம்வரை வானவீதியில் நட்சத்திரமாக இருக்கும்படியான வரத்தை அருளுக" என்றார். அவர்களும் அப்படியே ஆகட்டும் என்றார்கள். அதன்படியே அவர் நட்சத்திர மண்டலத்தை அமைத்துக் கொண்டு அதில் வீற்றிருந்தார். அந்த நட்சத்திரம் மிகவும் வெப்பம் மிகுந்த தாகும். அது பூமியிலுள்ள கடல் அலைகளைக் கட்டுப்படுத்து வதுடன், கடல்நீர் பெருகி பூமியை மூழ்கடித்து விடாமல் இருக்கக் கடல் நீரை ஆவியாக்கிக் கொண்டேயிருக்கின்றது எனவும் மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன.

அகத்தியர் திருமடம்

வேதாரண்யத்தை அடுத்துள்ள பாடல்பெற்ற திருத்தலம் அகத்தியான் பள்ளியாகும். இங்கு அகத்தியர் பெயரால் அகத்தியதேவர் திருமடம் ஒன்று இருந்ததையும் இதில் சிவனடியார்களுக்கு மதியஉணவு அளிக்க நன்கொடை வழங்கப்பட்டதையும் இவ்வூரின் ஒரு கல்வெட்டு குறிக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் தந்த ஆறுகள்



சிவபெருமான் பகீதரனின் தவத்திற்கு மகிழ்ந்து வானுலகத்திலிருந்து கங்கையைப் பூமிக்கு வரவழைத்தது போலவே தென்தமிழ்நாடு செழிக்க அகத்தியர் காவிரியாற்றையும் தாமிரபரணி ஆற்றையும் பெருகி வரும்படிச் செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த இரண்டு ஆறுகளி னாலும் தமிழகம் இன்றுவரை செழிப்படைகின்றது.

இவற்றின் இரண்டு கரைகளிலும் அகத்தியர் அமைத்து வழிபட்ட சிவாலயங்கள் பல உள்ளன. இவை அகத்தீச்சுவரங்கள் என்று அவர் பெயரால் அழைக்கப்படுகின்றன.

அகத்தியர் காவிரி ஆற்றைத் தந்த வரலாறு பலநூல்களில் பலவாறு குறிக்கப்பட்டுள்ளது. தமிழில் தோன்றியுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை கூறும் வரலாற்றை இப்போது காணலாம்:-

சோழநாட்டை ஒரு சமயம் "காந்தமன்" என்ற மன்னன்ஆட்சி செய்துவந்தான். அவன் அகத்தியர் மீது பக்தியும் பணிவும் கொண்டவன். அந்நாளில் சோழமண்டலம் வான்மழையை நம்பியே வாழ்ந் திருந்தது. காந்தமன் தன்நாடு எப்போதும் வளமா யிக்க நல்ல வற்றாத ஜீவநதி ஒன்று இருந்தால் நல மாக இருக்கும் என்று விரும்பினான். தக்க சமயத்தில் அதனை அகத்தியரிடம் தெரிவித்தான்.

அகத்தியர் மனம் மகிழ்ந்து தனது வற்றாத கமண்டலத்தினைக் கவிழ்த்து நீரை விரிந்து செல்க என்றார். கரகத்தினின்று விரிந்து சென்றதால் அது காவிரி என்று பெயர்பெற்றது. இதனை மணி மேகலை,

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்சவேட்கையிற் "காந்தமன்" வேண்ட
அமரமுனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை
பொங்கு நீர்பரப்பப் பொருந்தித்தோன்ற

என்று குறிக்கின்றது.

இதன் பொருள்: சிவந்த கதிர்களை உடைய சூரியகுலத்தின் வழிவந்த காந்தமன் என்ற சோழகுல மன்னன் தேவமுனிவனாகிய அகத்தியனிடம் தன்னாட்டில் வற்றாத ஆறு ஓடி நீர்வளம் பெருக வேண்டும் என்று வேண்டிக் கொண்டான் அதற்கேற்ப தேவமுனிவனாகிய அகத்தியர் தனது குண்டிகையைக் கவிழ்த்து அதிலிருந்து நீரை விரிந்து செல்க என்று கூற தண்ணீர் பொங்கிப் பரந்து ஓடியது அதுவே காவிரியாயிற்று என்பதாகும்.)

மேலும் காவிரி தோன்றியதற்கான வேறு ஒரு வரலாறும் வழங்கி வருகின்றது. அது:-

ஒரு சமயம் கவேரர் என்ற மகரிஷி தனக்கு ஓர் புதல்வி வேண்டுமென்று பிரம்மனை நோக்கித் தவம் புரிந்தார். பிரம்மா அவர் முன்னே தோன்றி ஒரு பெண்ணை அவருக்கு அளித்தார். பிறகு அம்முனிவனைப் பார்த்து, 'முனிகளில் சிறந்தவனே! முன்பு நான் தவம் செய்தபோது விஷ்ணுமாயாவின் அருளால் எனக்கு மானச புத்திரியாக இவள் தோன் றினாள். இவளுக்கு பெண்ணுருவமும் நதியுருவ மும் ஆக இரண்டு உருவங்கள் உண்டு. இவளை இப்போது உனக்கு அளிக்கின்றேன்" என்று கூறி விட்டு மறைந்தார்.

முனிவர் அவளுக்கு லோபாமுத்திரை என்று பெயர் சூட்டினார். அவள் வளர்ந்து மங்கைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பருவம் அடைந்தாள். பெற்றோர்களின் அனுமதி பெற்றுச் சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் செய்தாள். அவளுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான், அவள்முன்னே தோன்றி, "உனக்கு வேண்டிய வரத்தைக்கேள்", என்றார். அவள் நான் நதிவடிவமாகி பூமியை வளப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அவர், பெண்ணே நீ கங்கையிற் புனிதமாய் காவேரி என்று அழைக்கப் பெறுவாய். நீ நதிரூபம் அடைந்து பூமியை வளப் படுத்தினாலும் உனது அம்சம் லோபாமுத்திரை என்ற பெயரிலேயே இருக்கும் நீ முனிவர்களில் சிறந்தவராகிய அகத்தியரைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வாய் . இந்த வரத்தை உனக்கு அளிக் கின்றேன்", என்றார். இந்த செய்தியைக் கேட்டு கரவேர மன்னனும் அவர் மனைவியும் மிகவும் மகிழ்ந்தனர்.

சிவன் அளித்த வரத்தின்படி அகத்தியருக் கும் லோபாமுத்திரைக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. லோபாமுத்திரையும் அகத்தியரும் காசி நகரத்திற்குச் சென்று சிவபூசை செய்து கொண்டு இனிதே இல்லறம் நடத்தி வந்தனர்.

அகத்தியர் லோபாமுத்திரையின் நதிவடிவத் தைக் தமது கமண்டலத்தில் வசிக்கும்படி செய்தார். பிறகு பரமேசுவரரின் ஆணைப்படி அவர்கள் தென்னகம் வந்தனர். இந்நாளில் குடகுமலை என்று சொல்லப்படும் இடம் அந்நாளில் சையமலை என்று அழைக்கப்பெற்றது. இதனைப் பிரம்மகிரி என்றும் கூறுவர். அங்கு இருவரும் தங்கினர்.

அங்கு நெடுநாள் சிவபூசை செய்து மகிழ்ந் தனர். அந்த இடத்தில் திருமால் நெல்லி மரங்களாக உருவம் கொண்டு நின்றிருந்தார்.

ஒரு நாள் அங்கிருந்த நெல்லி மரத்தடியில் அகத்தியர் தன் கமண்டலத்தை வைத்துவிட்டு தவத்தில் ஆழ்ந்தார். அப்போது சிவபெருமான் ஆணைப்படி காவேரி நதிவடிமாகச் சென்று பூமியை வளப்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டதால் தேவர்கள் அனைவரும் கூடி விநாயகப் பெருமானிடம் சென்று காவிரியைப் பூமியில் பெருகியோடும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

அவர் காக்கை வடிவம் கொண்டு அகத்தி யரின் கமண்டலத்தைக் கவிழ்த்து, காவிரியை

பெருகச் செய்தார். அவள் நெல்லி மரத்தடியைச் சுற்றி வந்து பாயவேண்டிய திசை புரியாது நின்றாள். கண்விழித்த அகத்தியர் விநாயகர் காக வடிவில் வந்து தனது கமண்டலத்தைக் கவிழ்த்ததை உணர் ந்து வருந்தினார். இறைவன் திருவுளப்படியேயா வும் நடைபெறுகிறது என்று தேறினார். பிறகு காவிரிக்கு வழிகாட்டியவாறு நடந்தார். அவரைத் தொடர்ந்து ஓடிய காவேரி பலநாடுகளை வளப்படு த்தியபின் கடலில் கலந்தாள்.

அகத்தியர் காவிரிக் கரையின் ஓரமெங்கும் அனேக சிவலிங்கங்களைத் தாபித்தார். அவற்றிற்கு காவிரி நீரால் திருமுழுக்காட்டிப் பூசித்தார். அன்று முதல் காவேரி சோழநாட்டின் குலக்கொடியானாள். அவளைப் "பொன்னி" என்று அனைவரும் போற்றினர்.

ஆடிப் பதினெட்டாம் தேதியன்று அவள் நதியாகப் பெருகி வருவதுடன் ஒவ்வொரு வீட்டி ற்கும் வருவதாக நம்புகின்றனர். அன்று சிறப்பாகக் காவிரியைப் பூசித்து மகிழ்கின்றனர். காவிரி நீரில் அகல்களை ஏற்றி விடுகின்றார்.

❐ காவிரிக்கரையில் அமைந்துள்ள திருத் தலம் திருஐயாறு ஆகும். இங்கு ஐயாறப்பர் ஆலயம் அமைந்துள்ளது. இதனைத் தேவாரம் "காவிரிக் கோட்டம்" என்று குறிக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❒ காவேரியின் உற்பத்தித் தானமான பிரம்ம குண்டத்தில் அகத்தியர் தவம் செய்வதும், காகம் அவருடைய கமண்டலத்தைக் கவிழ்ப்பதுமாகிய காட்சிகள் சுதைச் சிற்பங்களாகச் செய்யப்பட்டுள்ளன.

தாமிரபரணி

அகத்தியர் தந்த மற்றோர் ஆறு தாமிரபரணி ஆகும். தாமிரபரணியாற்றைக் கங்கையின் ஒரு கூறு என்றும் கங்கையின் தங்கை என்றும் புராணங்கள் கூறும். கங்கைக்கு இளையவளான இவள் அகத்தியரை வேண்டி அவர் கமண்டலத்தில் வசித்து வந்தாள். ஒருமுறை பாண்டியநாடு பஞ்சத்தால் வருந்தியது. அப்போது பாண்டிய மன்னனின் வேண்டுகோளின் படி அவர் தனது கரகத்திலிருந்து அவளை வெளிவிடுத்துப் பாண்டியநாட்டை வளப் படுத்தும்படி கூறினார். அவள் பொதிகை மலையின் மேற்குப் பகுதியான அகத்திய மலையில் தோன்றி பாநாசம் நீர்வீழ்ச்சியாக மாறிப் பல தலங்களை வளப்படுத்தியபின் வங்கக்கடலில் கலந்து விடு கின்றாள். தாமிரபரணி ஆற்றங்கரையில் சிந்து பூந் துறை திருநெல்வேலி, செப்பறை, முதலான சிறந்த சிவத்தலங்கள் உள்ளன.

இந்த இரண்டு பெரிய ஆறுகளேயன்றி பல சிற்றாறுகளும் அகத்தியரோடு தொடர்புடையதாக விளங்குகின்றன. இவற்றில் சுவர்ணகங்கை எனப் படும் பொன்முகலியாறும் குசஸ்தலை ஆறும் குறிப் பிடத்தக்கவையாகும். குசத்தலையாற்றைப் பற்றிய விவரத்தை இந்நூலின் வேறு பக்கங்களில் காண்க.

திருப்பதிக்கு மேற்கேயுள்ள மலைத் தொடர் களில் உற்பத்தியாகி திருப்பதி காளஹஸ்தி முதலான தலங்கள் வழியே ஓடி வங்கக் கடலில் கலக்கும் ஆறு பொன்முகலியாகும். இதனைச் சுவர்ணமுகி ஆறு, சுவர்ணகங்கை என்று பலவாறு அழைக் கின்றனர். இதன் உற்பத்தித் தானம் அகத்தியமலை என்றும் அங்கு அகத்தியர் கரகத்தைக் கவிழ்த்து இவளை ஓடச் செய்தார் என்றும் தலபுராணங்கள் கூறுகின்றன. இந்த ஆற்றின் உற்பத்தித்தானமான அகத்திய மலையில் அகத்தீசுவரர் ஆலயம் உள்ளதென்று சுவர்ணமுகி மகாத்மியம் கூறுகிறது. இந்த அகத்தியமலை கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒருபகுதியாகும். இந்த ஆற்றைத் தேவாரம் சிறப்புடன் குறிக்கின்றது.

இதனை யொத்ததாக மேலும் பல சிற்றாறு கள் அகத்தியரால் பூமிக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனப் பல தலவரலாறுகள் தெரிவிக்கின்றன.

அகத்திய தீர்த்தங்கள்

அகத்தியமுனிவர் சிவலிங்கங்களை நிறுவியபின் அதற்கு நீராட்டவும் பூசிக்கவும் பல தீர்த்தங்களை உருவாக்கினார். அவை குளங்களாகவும், கிணறுகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குப் பொதுவான பெயர் அகத்திய தீர்த்தங்கள் என்பதாகும்.

மேலும் பலமலைகளில் அகத்தியர் பெயரால் அமைந்த அருவிகள்ளயும் கிளைஆறுகளையும் காண்கிறோம். பாபநாசத்திற்கு மேலுள்ள பொதிகை மலையில் அகத்தியர் அருவியும் அகத்தியர் கோயி லும் உள்ளன. இது போன்றே குமரிமாவட்டத்திலுள்ள மலைகளில் பல அகத்தியர் அருவிகள் உள்ளன. இமயமலையில் அகத்திய பர்வதப்பகுதியில் அகத்தியர் தீர்த்தம் உள்ளதென்று புராணங்கள் கூறுகின்றன. இதைபோன்று குமரிமுனையில் அகத்திய தீர்த்தம் இருந்ததென்றும் அதில் தீர்த்த யாத்திரையின் போது பாண்டவர்களின் ஒருவனான அர்ச்சுனன் நீராடி மகிழ்ந்தான் என்று மகாபாரதம் கூறுகின்றது.

சென்னைக்கு அருகிலுள்ள திருமழிசை ஆலயம் கல்வெட்டுக்களில் அகத்தீசுவரம் என்று குறிக்கப்படுகின்றது. இங்கு ஆலயத்தின் முன்னேயுள்ள. குளத்திற்கு அகத்திய தீர்த்தம் என்பது பெயராகும்.

குமரிமாவட்டத்திலுள்ள அகத்தீசுவரம் ஊரிலுள்ள விசுவநாதர் ஆலயத்தின் முன்புறம் அகத்தியர் தமது கமண்டலத்திருந்து கங்கையை விடுத்துப், பாதாளகங்கை என்ற தீர்த்தத்தை அமைத்தார். என்று கூறப்படுகின்றது.

❒ திருக்கொள்ளம்பூதூரில் ஆயலத்திற்கு எதிரில் ஓடும் காவேரி அகஸ்திய காவேரி என்று அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் அமைத்த சிவலிங்கங்கள்

அகத்தியர் மக்களின் நன்மைக்காகத் தென்னகமெங்கும் ஓயாது பயணம் செய்து கொண்டே இருக்கின்றார். அவர் அன்பர்களின் வேண்டுகோளின்படி ஆங்காங்கே பல லிங்கங்களை அமைத்துப் பூசை செய்துள்ளார். இவை அவர் பெயராலேயே அகத்தீசுவரர் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றிற்கு அன்பர்கள் ஆலயங்களை அமைத்து அகத்தீச்சரங்கள் என்று போற்றுகின்றனர்.

அகத்தியர் பெருமான் மூன்று வேளைகளிலும் சிவபூசை செய்பவர். அப்படிப் பூசை செய்ய வேண்டிய நேரத்தில் சிவலிங்கம் கிடைக்காத போது வெண்மணலைக் கூட்டிச் சிவலிங்கமாக வழிபட்டுள்ளார். அவர் கைப்பட்ட அந்த மண் காலப்போக்கில் இறுகிச் சிவலிங்கமாகி விட்டதைப் பலதலங்களில் காண்கிறோம்.

வாலூகம் என்பதற்கு மண் என்பது பொருள். அதனால் இந்த லிங்கங்கள் வாலூகநாதர் என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றன. குற்றாலத்தில் அகத்தியர் வெண்மணல் கொண்டு அமைத்த லிங்கம் வாலூகநாதர் என்ற பெயரில் விளங்குவதைக் காண்கிறோம்.

மேல் மருவத்தூரை அடுத்த பெரும்பேர் கண்டிகையின் ஊர்க்கோடியில் தான்தோன்றீசர் ஆலயம் உள்ளது. இது அகத்தியர் மண்ணால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலமாகும். மணல் கரையாதிருக்கும் பொருட்டு இந்த லிங்கத்திற்குச் செம்பினாலான கவசம் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

அகத்தியர் சில சமயங்களில் வெண்மணல் கிடைக்காதபோது தனது தண்டம், கமண்டலம், உருத்திராக்க மாலை முதலியவற்றையும் சிவலிங்கமாக அமைத்து வழிபட்டுள்ளார். அவர் உருத்திராக்க மலையை வழிபட அதுவே லிங்கமாக மாறி விட்ட வரலாற்றையும் காண்கிறோம்.

கொங்கு நாட்டில் அகத்தியர் தனது உருத்திராக்கத்தை சிவலிங்கமாக அமைத்து வழிபட்ட தலம் உள்ளது. அக்கோயில் இந்நாளில் நட்டாற்றீசுவரர் கோயில் என வழங்குகின்றது. இது சேலம்

மாவட்டத்தில் பட்லூர் என்ற ஊரினை ஒட்டியுள்ளது. இங்குக் காவிரியாறு ஓடுகின்றது. இந்த ஆற்றின் மையத்தில் தீவுபோன்ற திட்டு காணப்படுகின்றது. இந்தத்திட்டு பெரும் பாறைகளால் அமைந்ததாகும். சுமார் 30அடி உயரமுடையது. இதன் மேற்குப்புறம் அகன்றும் கிழக்குப் பகுதி சிறுத்தும் இது சங்குவடிவில் காணப்படுகின்றது.

இதன் மேற்புறம் பாறையில் இயற்கையாக அமைந்த சுயம்புலிங்கம் உள்ளது. இது மற்றைய லிங்கங்களைப் போலன்றி ஒரு அடி அகலமும் மூன்றங்குல உயரமும் கொண்டதாக உள்ளது. ஒரு சமயம் இப்பகுதிக்கு வந்த அகத்தியர் இந்தப் பாறையின்மீது அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். அமைதியும் இனிமையும் நிறைந்த சூழ்நிலையில் அவர் தவத்தில் ஆழ்ந்து விட்டதால் அவருக்கு நேரம் போனதே தெரியவில்லை. அவர் கண்விழித்துப் பார்த்த பொழுது சூரியன் உச்சியை அடைந்து விட்டிருந்தான். அதனால் அவர் அந்த அமைதியான சூழ்நிலையிலேயே தனது உச்சிகால சிவபூசையைச் செய்யவிரும்பினார். அங்கு சிவலிங்கம் அமைக்கத்தக்க மண்முதலான பொருள் ஏதும் கிடைக்கவில்லை. அதனால் தான் அணிந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருந்த உத்திராட்சவடத்தை எடுத்துப் பாறையின் மீது வைத்து அதனையே சிவலிங்கமாகப் பாவித்து அங்கிருந்த வில்வஇலைகளைக் கொண்டுச் சிறப்பான பூசைகளைச் செய்தார்.

அவருக்கு இறைவன் காட்சியளித்து அருள் பாலித்தார். பின்னர் பூசை முடிந்ததும் அகத்தியர் இந்த உத்திராட்ச வடத்தை எடுக்க முனைந்தார். அவரால் அதனை எடுக்கமுடியவில்லை. அப்பொழுது இறைவன் உனக்கு காட்சியளித்ததன் நினைவாக இந்த உத்திராட்ச வடத்திலேயே நாம் நீங்காது இருக்கின்றோம். இதுவே இங்கு சிவலிங்கமாக உமது பெயரால் அகத்தீசுவரர் என வழங்கும் என்று கூறினார். அதைக்கேட்டு மகிழ்ந்த அகத்தியர் அந்த உருத்திராட்சவட சிவலிங்கத்தைத் வணங்கியவாறு மேலும் சில நாட்கள் அங்கு தங்கியிருந்தார்.

சிலநாட்களில் அந்த வடம் பாறையோடு கலந்து கல்வடிவம் பெற்றுவிட்டது. பின்னாளில் அங்கு சிவாலயம் அமைக்கப்பெற்றது. அது ஆற்றின் நடுவில் அமைந்திருப்பதால் நட்டாற்றீசுவரர் கோயில் என்றே பெயர் பெற்றது.

இங்கு அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர் சண்டிகேசுவரர் துர்கை ஆகியோருக்குச் சிறப்பான தனிச் சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்கைச்சூழலில் அமைதி தவழும் இடமாக இருப்பதால் அன்பர்கள் சுற்றுலாவாக இந்த ஊருக்கு வந்து மகிழ்கின்றனர்.

நல்லூர் அகத்தியலிங்கம்

அகத்தியர் செய்த வழிபாட்டிற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குத் தனது திருமணக்கோலத்தைக் காட்டிய தலங்களில் ஒன்று நல்லூர் ஆகும். இது கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தலமாகும். இங்கு கட்டுமலையின் மீது கல்யாணசுந்தரர் ஆலயம் உள்ளது. கருவறையில் சதுரவடிவமான லிங்கமும் அதற்குப் பின்னணியில் பெரிய சுதைச் சிற்பமாக உமாமகேசுவரர் சிற்பமும் உள்ளது. இங்குள்ள லிங்கம் மற்ற லிங்கங்களில் இருந்து வேறுபட்டதாகும். இங்கு ஒரே ஆவுடையார் மீது இரண்டு பாணங்கள் உள்ளன. வலது பக்கம் இருப்பது பெரியதாகவும் இடது பக்கம் இருப்பது சிறியதாகவும் உள்ளது. பெரிய லிங்கம் உலோக வண்ணத்தில் பல தொளைகளுடன் கூடியதாக உள்ளது. இது வண்ணம் மாறும் இயல்புடையதாகும். இதனால் சுவாமிக்குப் பஞ்சவர்ணேசுவரர் என்பது பெயராயிற்று. இடது பக்கத்தில் இருக்கும் பாணம் சிறியதாக உள்ளது. இதனை அகத்தியலிங்கம் என்று அழைக்கின்றனர். தனது திருமணக் கோலத்தைக் காட்டியபின் சிவபெருமான் அகத்தியரை லிங்கவடிவில் தனக்கு இணையாக இருக்குமாறு அமர்த்தி அருள்புரிந்ததை இது குறிக்கிறதென்பர். இதனைக் கருத்திற்கொண்டு அருணகிரிநாதர்," அகத்தியரைச்" சிவன்அனைய திருமுனி" என்று திருப்புகழில் அழைக்கின்றார்.

❑ அகத்திய மரபினர் அமைத்த லிங்கங்கள் சதுரமான ஆவுடையாரைக் கொண்டுள்ளதைக் காண்கிறோம்.

❑ அகத்தியர் இரண்டு லிங்கங்களை அமைத்து வழிபட்டதைப் பலதலங்களில் காண முடிகிறது. இதில் அகத்தியர் வழிபட்ட லிங்கம் மையக்கோயிலில் இருக்கின்றது. அவருடைய சீடரான புலத்தியன் வழிபட்ட லிங்கம் மையக் கோயிலின் வடகிழக்கில் தனிச் சிற்றாலயத்தில் அமைந்துள்ளது. இரண்டையுமே அகத்தியர் சிறப்புடன் வழிபட்டுள்ளார்.

❑ அகத்தியர் அமைத்த லிங்கங்கள் "அகத்தியலிங்கம்" என்று அழைக்கப்படுகின்றன. குமரிமாவட்டத்தில் பலர் "அகத்தியலிங்கம்" என்ற பெயரைச் சூட்டிக் கொள்கின்றனர்.

❑ அகத்தியர் சில இடங்களில் மூலிகைகள், இடிகற்கள், பாஷாணங்கள் ஆகியவற்றைக் கொண்டும் சிவலிங்கங்களை அமைத்துள்ளார்.

❑ அகத்தியர் அவ்வப்போது ஆங்காங்கே பூசைக்குச் சிவலிங்கங்கள் அமைத்து வழிபட்டதைப்போலவே பெரிய தலங்களுக்குச் சென்றபோது அங்கு மூலமூர்த்தியை வழிபட்டதுடன் பிராகாரத்தில் தம்பெயரால் ஒரு லிங்கத்தையும் அமைத்து வழிபட்டுள்ளார். அவற்றிற்கும் அகத்தீசுவரர் அகத்தியலிங்கம் என்ற பெயர்களே வழங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியரின் நீர்க்கரகம் (கமண்டம்) சிவலிங்கமாதல்

அகத்தியர் பெருமான் தனது உருத்திராக்க வடத்தைச் சிவலிங்கமாகப் பாவித்து வழிபட்டது போலவே தனது கமண்டலத்தையும் சிவ லிங்கமாக வழிபட்டுள்ளார். அந்தக் கமண்டலம் பிறகு சிவ லிங்கமாகி விட்டது என்று வரலாறு கூறுகின்றது.

ஒருமுறை அகத்தியர் தலயாத்திரையாக வடுக நாட்டிற்குச் சென்றார். அங்கிருந்த ஒரு மலையின் இயற்கைச் சூழல் அவரைப் பெரிதும் கவர்ந்தது. அவ்விடத்தில் சிவபூசை செய்ய விரும் பினார். அதற்கான சிவலிங்கம் கிடைக்கவில்லை. அவர் தமது நீர்நிறைந்த கமண்டலத்தையே சிவ லிங்கமாக அமைத்து மந்திர தந்திரங்களால் பூசித் தார். பலவகையான மலர்களைச் சூட்டி வழிபட்டார். தொடர்ந்து நெடுநேரம் தியானத்தில் அமர்ந்தார். அவர் மனம் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தது.

கண்விழித்த அவர் லிங்கமாக அமைத்துப் போற்றிய தமது கமண்டலத்தின் மீதிருந்த மலர் களை விலக்கி விட்டு அந்தக் கமண்டலத்தை எடுக்க முயன்றார். என்னமுயன்றும் அவரால் அந்த கலசத்தினை எடுக்கமுடியவில்லை. அப்போது சிவ பெருமான் வானொலியாக "அன்பனே வருந்தற்க நாம் இங்கு உமது கரத்தால் பூசித்த இந்த லிங்கத்தில் வீற்றிருக்க விரும்புகின்றோம். நீ புதிய கமண்ட லத்தைப் பெற்றுக் கொள்க. இந்த லிங்கம் கலச லிங்கம் என்ற பெயரைப்பெறும்", என்றார்.

அகத்தியரும் அதைக்கேட்டு மகிழ்ந்தார். மேலும் சிலநாள் அங்கேயே தங்கி கலசலிங்கப் பெருமானை வழிபட்ட பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

இப்படிக் "கலசலிங்கம்" அமைந்த தலம் கர்னாடக மாநிலத்தில் சிக்மகளூக்கு அருகில் அமைந்துள்ளது. இயற்கைச் சூழலில் மலைகள் சூழ அமைந்துள்ள இத்தலம் "கலசா" என்றே அழைக்கப் படுகின்றது. இதனையொட்டி கலசா என்ற சிற்றாறு ஓடுகின்றது.

கலசலிங்கம் இப்போது சுயம்புலிங்கமாகக் காட்சியளிக்கின்றது. இத்தலத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்குச் சர்வாங்க சுந்தரி என்பது பெய ராகும். கோயில் நன்முறையில் பராமரிக்கப்படு கின்றது. இங்கே பலர் கலசலிங்கம் என்ற பெயரைச் சூட்டிக் கொள்கின்றார்.

அகத்தியர் நீரால் அமைத்த லிங்கம்

அம்பிகை திருவானைக்காவலில் நீரைத்திரட்டிச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டதைப் போலவே அகத்தியரும் நீரைத்திரட்டிச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுள்ளார்.

அகத்தியர் நீருள் அமைத்த லிங்கம்

அகத்தியர் நிலையாகத் தங்கி வசித்துவரும் தென் பொதிகை மலையின் ஒரு பகுதியாகத் திகழ்வது சிவ கிரியாகும். இங்கு மலையில் ஒரு பெரிய சுனை உள்ளது. ஆழமான இந்த சுனையின் நீர் பளிங்கு போன்று தூயதாக இருக்கிறது. பாசியோ, பச்சையோ படிவதில்லை. இந்த நீருக்கு அடியில் ஒரு சிவலிங்கம் உள்ளது. இது கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது என்றாலும் அகத்தியர் நீரைத் திரட்டி அமைத்த தாகவே செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

நீருள் மூழ்கி மூச்சை அடக்கிக் கொண்டு சொல்லவேண்டிய மந்திரங்கள் பல உள்ளன. சித்த மரபில் இத்தகைய மந்திரங்கள் அதிகமாகவே உள்ளன. அகத்தியர் இங்குள்ள சுனையில் மூழ்கி அத்தகைய மந்திரங்களை ஓதி பல சித்திகளைப் பெற்றார் என்று கூறப்படுகின்றது. அப்போது அவர் அமைத்ததே இந்த நீருள் விளங்கும் லிங்கம் என்று கூறுகின்றனர்.

விக்ரம சிங்கபுரத்திலிருந்து தோரணமலை என்ற இடத்திற்குச் சென்று அங்கிருந்து சிவகிரிக் குச் செல்கின்றனர்.

அகத்தியர் நீரால் அமைத்த சிவலிங்கம்

நன்னிலத்திற்கு அருகிலுள்ள சோழமங் கலத்தில் அகத்தீசுவரம் என்ற ஆலயம் உள்ளது. இங்குள்ள மூலலிங்கம் அகத்தியரால் நீரைக் கொண்டு அமைக்கப்பட்டலிங்கமாதலின் செழு நீர்த்திரள் என்று அழைக்கப்பட்டது. இக்கோயிலில் பணியாற்றி வந்த அர்ச்சகனுக்கு "அகத்தியன் செழுநீர்த்திரள்" என்ற பெயர் இருந்ததை இக் கோயில் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் திருமால்வடிவைச் சிவலிங்கமாக்குதல்

இமயமலையில் சிவபெருமான் பார்வதி தேவியின் திருமணம் நடைபெற்றபோது உலக மக்கள் யாவரும் வடதிசையில் கூடியதால் வடபகுதி தாழ்ந்து தென்பகுதி உயர்ந்தது. அப்பொழுது இறைவன் உலகைச் சமன்செய்ய அகத்தியரைத் தென்திசைக்கு அனுப்பினார். அப்பொழுது அகத்தியர் அவரிடம் எல்லோரும் கண்டு இன்பமடையும் இந்தத் திருமணக்காட்சியும் நடன தரிசனமும் எனக்கும் கிடைக்கவில்லையே என்று வருந்துவதாகக் கூறினார். அதற்குச் சிவபெருமான் திரிகூட மலையின் சிறப்பை விளக்கி அங்கு சென்று வழிபட நடனதரிசனமும் திருமணக் காட்சியையும் வழங்குவோம் என்று உறுதி கூறினார். அதைக்கேட்டு மகிழ்ந்த அகத்தியர் அவராணைப்படியே தெற்கே வந்து பல தலங்களைத் தரிசித்துத் திரிகூடமலையை வணங்கினார். அங்கு, குற்றால அருவியில் நீராடினார்.

அந்நாளில் அங்குத் திருமாலின் பெரிய ஆலயம் இருந்தது. அகத்தியருக்கு அங்குச் சென்று பெருமாளைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அதனால் அக்கோயிலுக்குள் சென்றார். ஆனால் அங்கிருந்த வைணவர்கள் இவருடைய சிவவேடப் பொலிவைக் கண்டு இவரை உள்ளே விட மறுத்துவிட்டனர்.

அகத்தியர் கோபம் கொண்டார் என்றாலும் அதனை வெளிக்காட்டாது வெளியே வந்து தமது குருநாதனான முருகப்பெருமான் இருக்குமிடமான இலஞ்சிக்குச் சென்றார். அங்கு முருகனை வணங்கி அருள் பெற்றார்.

மறுநாள் பழுத்த வைணவரைப் போல திருமண் அணிந்து துழாய் (துளசி) மாலைகளைச் சூடிக் கொண்டு ஆலயத்தை அடைந்தார். வைணவர்கள் இவருடைய தெய்வீகப் பொலிவைக்கண்டுத் தமது சமயக் குருவென்று வணங்கிக் கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர். உட்சென்றதும் அகத்தியர் பூசைப் பொருட்களை வாங்கிக் கொண்டு கருவறையைத் திரையிட்டுக் கொண்டு பூசை புரியலானார். பின்னர் வேதமந்திரங்களைக் கூறி திருமாலின் தலையில் கைகளை வைத்து அழுத்தி அவர் வடிவைச் சிவலிங்கமாக்கினார். பிறகு மாலைகளை அணிவித்துச் சிவபூசைகள் செய்தார்.

நெடுநேரமாகியும் கதவு திறக்காததால் வைணவர்கள் சந்தேகித்துக் கதவைத்திறக்க அங்கே, சிவவேடப்பொலிவுடன் பூசனை செய்யும் அகத்தியரைக் கண்டனர். திருமால் இருந்த இடத்தில் சிவ லிங்கமூர்த்தியையும் கண்டனர்.

கோபம் கொண்டு இது இந்த முனிவன் செய்த சூழ்ச்சி என்று கோபித்து அவரைக்கொல்ல முயன்றனர். அகத்தியர் ஒரு தருப்பைப்புல்லை அவர்கள் மீது மந்திரித்து ஏவினார். அது அவர்களைக் கடுமையாகத் தாக்கியது. அதனால் அவர்கள் அஞ்சி அவரடி வீழ்ந்து வணங்கினார்.

அவர்கள் மீது கருணை கொண்ட அகத்தியர் நீங்கள் திருமாலைச் சங்கவீதியில் வைத்துப் பூசியுங்கள் என்றார். அதன்படியே அவர்கள் அமைத்துக் கொண்ட திருமால் ஆலயமே இந்நாளில் நன்னகரப் பெருமான் ஆலயம் என்று சிறப்புடன் திகழ்கிறது.

பிறகு அகத்தியர் திருமால் கனிந்து சிவரூபம் பெற்றுச் சிவலிங்கமானதை மற்றவர்களுக்கு உணர்த்தி சிவாசாரியார்களைக் கொண்டு மகுடாகமப்படி அங்குப் பூசை செய்ய வழிவகுத்தார்.

அன்று முதல் சங்க ஆலயம் என்ற அந்தத் திருமால் கோயில், குற்றாலநாதர் கோயில் என்ற சிவாலயமாக இருந்து வருகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் அவருடைய பக்தியைக் கண்டு மகிழ்ந்து அவருக்குத் திருமணக் கோலத்தையும், சித்திர சபையில் நடன தரிசனத்தையும் காட்டினார். இதனைத் திருக்குற்றாலப் புராணம் சுவைபடக் கூறுகின்றது.

இப்படிக் குற்றாலநாதர் கோயில் அகத்தியரால் மாற்றப்படுவதற்கு முன்பாக குற்றாலமலைச் சாரலில் அமைந்திருந்த சிவாலயம் கூத்தர் கோயிலாகும். ஐந்தருவிப் பாதையும் இலஞ்சிப் பாதையும் சந்திக்கும் இடத்தில் இது உள்ளது. இங்குள்ள இறைவர் கூத்தர் என்றும் அம்பிகை குழல்வாய் மொழியம்மை என்றும் அழைக்கப் படுகின்றனர்.

திருமால் சிவலிங்கமாகி விளங்கும் குற்றால நாதரான சிவலிங்கத்தின் தலையில் அகத்தியர் அழுத்திப்பிடித்ததால் உண்டான விரல் அடையாளங்கள் உள்ளன என்றும், கூர்ந்து பார்த்தால் சிவ லிங்கத்தின் பாணத்தில் திருமாலின் முகஅமைப்பையும் காணமுடியும் என்றும் கூறுகின்றனர்.

தினமும் இரவில் அகத்தியர் இங்கு வந்து பெருமானைப் பூசைசெய்வதாகக் கூறுகின்றனர்.

இம்மலையில் அகத்தியர் தவம் செய்த பல குகைகள் உள்ளன. ஒரு பாறையில் அகத்தியர் பாதங்கள் உள்ளன. மக்கள் இதனை வழிபடுகின்றனர். அகத்தியர் சுனைகள் என்ற பெயரில் பல சுனைகளும் உள்ளன.

அகத்தியர் சங்கு ஆலயத்திலிருந்த திருமால் வடிவைச் சிவலிங்கமாக ஆக்கியதுடன் அங்கிருந்த தாயார் வடிவையும் எடுத்துவிட்டு குழல்வாய்மொழி அம்மனை நிறுவினார். திருமாலுக்கு இடப்புறம் பூதேவியிருந்த இடத்தில் யந்திரத்தை அமைத்தார். அந்த இடத்திற்குத் தரணி பீடம் என்பது பெயராகும்.

இதில் யந்திரம் பெரியதாக பீடத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இது 64 சக்தி பீடங்களில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

அகத்தியர் தேவாரத்திரட்டு

குற்றாலநாதர் ஆலயத்துள் அகத்தியர் வழிபட்ட லிங்கம் வாலுகநாதர் என்ற பெயரில் உள்ளது. அகத்தியர் வெண்மணல் கொண்டு இரண்டு லிங்கங்களைக் செய்து வழிபட்டு பிறகு அவற்றை ஒரே லிங்கமாக்கி அதற்கு வாலுகநாதர் என்ற பெயரிட்டார் என்பர். (வாலுகம்-வெண்மனல்) இதற்கு எதிரில் சிவாலய முனிவரின் சந்நிதி உள்ளது. இவர் அகத்தியரின் மாணாக்கார்களின் ஒருவர்.

இவர் தினமும் தேவாரத்தை முறையாகப் பாராயணம் செய்து வந்தார். இவரால் அவ்வளவு தேவாரத்தையும் தினமும் பாராயண செய்யமுடியவில்லை அதனால் வருந்தி அவர் அகத்தியரை வணங்கி,' முழுமையாகப் பாராயணம் செய்ய முயன்றேன். அது இயலவில்லை. குருநாதா நான் தினமும் தேவாரத்தை முழுமையாகப் பாராயணம் செய்தால் உண்டாகும் பயனை அடைய எனக்கு அருள்கூர்ந்து தேவாரத்தை முழுமையாகப் பாராயணம் செய்தால் உண்டாகும் பயனை அடைய வழியைக் கூறுங்கள் என்று வேண்டினார்.

அதற்கு அகத்தியர் தேவாரத்தில் இருந்து 25 பதிகங்களைத் திரட்டிக் கொடுத்து இவற்றைப் பாராயணம் செய்தாலே போதும் தேவாரத்தை முழுவதும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும் என்றார். அந்தத் திரட்டு நூலே அகத்தியர் தேவாரத் திரட்டு என்ற பெயரில் வழங்கி வருகின்றது. அகத்தியரின் அருள்பெற்ற சிவாலயமுனிவர் இந்தக் குற்றாலத்திலேயே அருவநிலையில் வாழ்ந்து வருகின்றார் என்பர்.

அகத்திய பக்த விலாசம் (எ) சிவபக்த விலாசம்

ஒரு சமயம் அகத்தியர் காஞ்சீபுரத்திற்கு வந்து ஏகாம்பரநாதர் ஆலயம் முதலிய அனேக சிவத்தலங்களைத் தரிசித்து தங்கியிருந்தார். அவரிடம் முனிவர்கள், ஐயனே சிவனடியார்களின் கதைகளைக் கேட்பதால் மோட்சம் எளிதில் கிட்டுமென்று பெரியோர்கள் கூறுகின்றனர். ஆதலின் தாங்கள் சிவபக்த சிரோன்மணிகளின் வரலாற்றை எங்களுக்குக் கூறியருளவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அகத்தியரும் மகிழ்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் முதலான அறுபத்துமூவர் வரலாற்றை விளக்கிக் கூறினார். முனிவர்கள் மகிழ்ந்து அதனை நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறினர். அவர்களிடமிருந்து வியாசருக்கு சொல்லப்பட்ட இது ஸ்ரீஹரசர்மா என்பவரால் நூல்வடிவில் எழுதப்பட்டது. அகத்தியர் இதற்கு சிவபக்த விலாசம் என்ற பெயர் சூட்டினாலும் சிவபக்த விலாசம் என்ற பெயராலேயே அறியப்பட்டுள்ளது. 1907 ஆம் ஆண்டில் கிரந்த எழுத்தில் ஸ்ரீராஜா சாஸ்திரிகள் என்பவரால் பதிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியன் வீணைவாசித்து சிவபெருமானை மகிழ்வித்தது

சிவபெருமான் வீணையிசையை விரும்பிக் கேட்கின்றான். அவன் தானே வீணை வாசிப்பதிலும் வல்லவனாக இருக்கின்றான். வீணையேந்தி வாசித்து மகிழும் சிவபெருமானை வீணாதர தட்சணா மூர்த்தி என்று போற்றுகின்றோம். பக்தர்கள் சிவசந்நிதியில் வீணை வாசிப்பதை மாணிக்க வாசகர் "இன்னிசை வீணையர்" யாழினர் ஒருபால் என்று குறிக்கின்றார்.

வீணைக்கொடி ஏந்திய இசையரசன் ராவணன் தனது வீணையிசையால் சிவபெருமானை மகிழ்வித்து முக்கோடி வாழ்நாளையும், சந்திரகாசம் என்ற வாளையும், இராவணேசுவரன் என்ற பட்டத்தையும் பெற்றான். அப்படிச் சிவபெருமானைத் தன் வீணாகானத்தால் மகிழ்வித்த இராவணனையே இசையில் வென்றுத் தென்திசைக்கு ஒட்டியவர் அகத்தியர் முனிவராவார்.

அது பற்றிய பழங்கதை :-

ஒரு சமயம் அகத்தியர் பொதிய மலையின் கண் தங்கியிருந்தார். அக்காலத்தில் தென்திசையினை ஆண்டுவந்த இராவணனும் அவனுடைய ராட்சதர் கூட்டமும் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வந்து மக்களுக்குத் தொல்லை விளைவித்து வந்தனர். மக்கள் அந்தச் செய்தியை அகத்தியரிடம் கூறினர். அகத்தியர் அவர்களிடம் இனி நீங்கள் கவலையை விடுங்கள். இராவணனையும் அரக்கர் கூட்டத்தையும் நொடியில் வெல்லுவோம் என்றார்.

இதனை ஒற்றர்கள் மூலம் அறிந்த இராவணன், புறப்பட்டுப் பொதிகை மலைக்கு வந்தான்.

அகத்தியனை நோக்கி, "என் அனுமதியின்றி இங்கே தங்கியிருக்கும் நீர் யார்?" என்று கேட்டான்.

அதற்கு அகத்தியர், மன்னனே நீதான் இப்போது எனது இடத்திற்கு எனது அனுமதியின்றி வந்து ஆனவமாகப் பேசுகிறாய். யான் உன்னை அறிவேன், நீ சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்தையும் அறிவேன்" என்றான்.

இராவணன், "ஓ அப்படியா என் இசையைக் கேட்டு இறைவனே கட்டுண்டு நின்றான் என்பதை அறிவீர். எனது தோள் வலியும் வாள்வலியும் அறிவீர். அப்படியிருந்தும் என் அனுமதியின்றி எப்படி இங்கு வசிக்கத் துணிந்தீர்? என்றான்.

மன்னவனே! இறைவனை இசையால் உருக்கிவிட்டோம் என்று மமதை அடையாதே இயலுமானால் என்னை யாழ் போட்டியில் வெல்லுக என்றார்.

இராவணன், "முனியே இப்போதே போட்டியை வைத்துக் கொள்ளலாம். நீரே இடத்தையும் நடுவர்களையும் தீர்மானியும் என்றான்.

அகத்தியர், "மன்னனே இந்தப் பொதிகை மலையையே நடுவராக வைப்போம். யாருடைய இசையைக் கேட்டு இது உருகுகின்றதோ அவரே பெரியவர் என்று ஒப்புக் கொள்ளலாம்," என்றார். இராவணன் அதற்கு உடன்பட்டான்.

முதலில் ராவணன் வீணையைமீட்டி வாசித்தான். அக்கானகத்திலிருந்த மரஞ்செடி கொடிகளும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விலங்கினங்களும் அசைவற்று நின்று, அதில் தோய்ந்து தம்மை மறந்தன. அவன் பாடி முடித்தான்.

அகத்தியர் தனது வீணையை எடுத்து இசைத்தார். அந்த இசையைக் கேட்டுப்பறவை களும் விலங்குகளும் தேவர்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். கொஞ்ச நேரத்திற்குப்பிறகு மலையுச்சி லுள்ள பாறைகள் இசையால் உருக ஆரம்பித்து விட்டன. இராவணனும் அந்த இசையில் கட்டுண்டு மயங்கி நின்றுவிட்டான். நீண்ட நேரத்திற்கு பிறகு அகத்தியர் வீணை வாசிப்பதை நிறுத்தினார்.

இராவணன் தனது நினைவுக்கு மீண்டான். அவரைப் பணிந்து அவருடைய இசைக்கு அடிமை யானேன் என்றான்.

அகத்தியர் அவரை அன்போடு "தழுவி நீ தென்திசைக்குச் செல்லுக இனி தமிழ்நாட்டிற்குள் வராதே, அப்படி வந்தாலும் தமிழ் மக்களுக்குத் தொல்லை அளிக்காதே'', என்று கூறி விடை கொடுத்து வழி அனுப்பினார்.

அன்று முதல் தமிழ்நாட்டில் அரக்கர்களின் தொல்லை இல்லாது போயிற்று. மக்கள் மகிழ்ச்சி கொண்டு இவரைத் "தொன்முது கடவுள்" என்று வாழ்த்தி வணங்கினர்.

மேலும் அகத்தியர் திருக்கயிலாயத்து சிவ சந்நிதியில் யாழ்வாசித்துச் சிவபெருமானை மகிழ்விக்கின்றார் என்பதைத் திருக்கயிலாய ஞான உலாவில் சேரமான் பெருமாள் நாயனார் "மன்னும் அகத்தியன் யாழ் வாசிப்ப" என்று அருளிச் செய்கின்றார்.

(திருக்கயிலாய ஞானஉலா ஆதி உலா என்றும் அழைக்கப்படும். இதனை இயற்றியவர் சேரமான் பெருமாள் நாயனார் ஆவர். இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் திருக்கயிலாயம் சென்று சிவசந் நிதியில் இதனை அரங்கேற்றினார். இதைச் சிவபெரு மான்கேட்டு உவந்தார். பின்னர் அந்நூலை திருப் பிடவூர் சாத்தன் பூவுலகிற்குக் கொண்டுவந்து அளித்தான் என்று புராணங்கள் கூறுகின்றன)

அகத்தியர் சிவனோடு வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்தது

இறைவனால் தோற்றுவிக்கப்பெற்ற தொன்மை மொழியான தமிழை ஆராய்ந்து நெறிப் படுத்தி வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்களாவர் அவர்கள் தமிழ் வளர்க்க அமைத்தவை மூன்று தமிழ்ச் சங்கங்களாகும்.

இதில் முதற்சங்கம் இன்றைக்கு 10000 ஆண்டுகளுக்கு முன்பாக தென்மதுரையில் இருந்த தாகும். இச்சங்கம் 4440 ஆண்டுகள் நடைபெற்றது. இதற்குச் சிவபெருமானும் முருகப் பெருமானும் முதன்மைப் புலவர்களாக வீற்றிருந்தனர் அவர்கள் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப அகத்தியர் தலை வராக வீற்றிருந்தார். இதனுள் வீற்றிருந்த புலவர்கள் 549ன்மராவர் நெடுநாட்கள் சிறப்புடன் வீற்றிருந்த இச்சங்கம் ஒருசமயம் ஏற்பட்ட கடற்கோளால் அழிந்தது.

நெடுங்காலத்திற்குப் பிறகு "கபாடபுரம்" என்ற நகரில் வீற்றிருந்து அரசுசெய்த வெண்டேர் செழியன் என்ற பாண்டியன் இடைச் சங்கத்தைத் தோற்றுவித்தான். அதிலும் அகத்தியரின் அருள் பெற்ற ஒருவர் அகத்தியர் என்ற பெயர்தாங்கி தலைவராக வீற்றிருந்தார். ஐம்பத்தொன்பது புலவர்களால் அலங்கரிக்கப் பெற்ற அந்த சங்கம் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. பின்னர் தோன்றிய கடற்கோளால் அந்நகரமும் அழிந்தது.

இதற்கு நெடுங்காலத்திற்குப் பிறகு முடத்திருமாறன் என்பவன் இப்போதுள்ள மதுரையில் கடைச் சங்கத்தைத் தோற்றுவித்தான். இதில் நாற்பத்தொன்பது புலவர்கள் வீற்றிருந்து தமிழ் வளர்த்தனர் அவர்களுக்கும் அகத்தியர் அருள்பெற்றவரே தலைவராக இருந்து அவர்களை அறவழிப்படுத்தினார்.

இப்படி மூன்று முறை அமைத்த சங்கங் களுக்கும் அகத்தியரும் அவர் அருள்பெற்றவர்களுமே தலைவராக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். முதல் இரண்டு சங்கங்களுக்கு இவர் இயற்றிய அகத்தியம் என்ற இலக்கண நூலே வழிகாட்டியாக இருந்தது. சிவபெருமானே அகத்தியரை முதற்சங்கத்திற்குத் தலைவராக இருக்கும்படி வேண்டிக் கொண்டான் என்பதை நோக்க அகத்தியரின் தமிழ் இலக்கண இலக்கியத் தேர்ச்சியை யார் அளக்க வல்லார்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் மரங்கள்

அழிஞ்சல் மரம் - சின்னக்காவணம்

பெரும்பாலும் முனிவர்கள் தங்களுக்கு விருப்பான மரத்தைத் தேர்ந்தெடுத்து அதன்கீழ் அமர்ந்து யோகம் பயிலுதல், மாணவர்களுக்கு உபதேசித்தல் ஆகியவற்றைச் செய்கின்றனர். இதனால் அந்த மரம் தனிச் சிறப்பைப் பெறுகின்றது. தட்சிணாமூர்த்தி கல்லாலமரத்தின் கீழ் அமர்ந்து யோகம் புரிவதுடன், சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் செய்வதையும் காண்கிறோம். அதனால் அவருக்கு ஆலமர் செல்வர் என்பது பெயராயிற்று.

அதுபோன்று சிவபெருமான் ஆலமரத் தடியில் நடனமாடுவதையே விரும்புகின்றார். தில்லை திருவாலங்காடு முதலிய தலங்களில் ஆலமரத்தின் கீழ் ஆடிமகிழ்வதைக் காண்கிறோம். அதனால் அவருக்கு ஆலங்காடன் என்பது பெயராயிற்று. அம்பிகை பசுவடிவம் கொண்டு பூசித்தபோது அரசமரத்தடியில் அமைந்த லிங்கங் களைப் பூசித்ததைக் காண்கிறோம்.

இதுபோன்று மரத்துடன் தொடர்புடைய பலநூறு செய்திகளைச் சமய வரலாற்றில் காண் கிறோம். இதனை ஒத்ததாக அகத்தியர் சில மரங் களைத் தேர்ந்தெடுத்து அதன்கீழ் தவம் புரிந்ததைக் காண்கிறோம்.

தொண்டை மண்டலத்தில் அழிஞ்சல் மரங்களின் அடியில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுள்ளார். இதனால் சிறப்புப் பெற்ற ஊர்கள் அழிசூர், திருமழிசை என்று பெயர் பெற்றுள்ளன. அவர் குசத்தலை ஆற்றின் கரை நெடுக 108 சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டுள்ளார். இந்த நூற்றெட்டு ஆலயங்களிலும் அழிஞ்சல் மரத்தின் கீழேயே லிங்கம் அமைத்து வழிபட்டார் என்று செவிவழிச்செய்திகள்கூறுகின்றன. அவர் 108 வதாக லிங்கம் அமைத்த ஊர் சின்னக்காவணமாகும். இங்குள்ள பெருமானுக்கு நூற்றெட்டீசுவரர் என்பது பெயராயிற்று. இத்தலத்திலும் ★ஏர்அழிஞ்சல் மரத்தின் கீழ் லிங்கம் அமைத்து வழிபட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அகத்தியர் சிவபெருமானின் திருமணக் காட்சியைக் காண விரும்பியபோது ஆத்தி மரங்களின் கீழ் தவம் செய்ததைக் காண்கிறோம். மேல் மருவத்தூரை அடுத்துள்ள பெரும்பேர் கண்டிகையின் ஊருக்கு மேற்கில் தான் தோன்றீச் சுவரர் ஆலயம் உள்ளது. இது அகத்தியர் மணலால் லிங்கம் அமைத்து வழிபட்ட தலமாகும். இதன் முற்றத்தில் உள்ள அழகிய மேடைமீது ஆத்திமரம் உள்ளது. இதன்கீழ் அமர்ந்து அகத்தியர் முனிவர் தவம்புரிந்து இறைவனின் திருமணக்கோலக் காட்சியைக் கண்டார் என்று வரலாறு கூறுகிறது. இதனையொட்டி சித்திரை மாதம் பௌர்ணமிக்கு அடுத்த நாளில் அகத்தியருக்கு காட்சி கொடுக்கும் ஐதீகவிழா நடத்தப்படுகின்றது. (பார்க்க பக்கம் 602)

குமரி மாவட்டத்திலுள்ள அகத்தீசுவரம்

★இந்த மரத்தில் இருந்து விழும் பழங் களின் கொட்டைகள் சிலநாட்களில் மெல்ல மெல்ல நகர்ந்து சென்று மறுபடியும் மரத்தின் அடிப்பகுதி யிலும் கிளைகளிலும் ஒட்டிக்கொள்ளும் என்று நம்பு கின்றனர். இதன் வட மொழிப்பெயர்"அங்கோலம்" என்பதாகும். ஆதிசங்கரர் சிவபெருமானிடம் அங்கோல மரத்தின் விதைகள் கீழே விழுந்தாலும் மீண்டும் மரத்தில் சென்று ஒட்டிக் கொள்வது போன்று நான் உன்னிடமிருந்து விலகினாலும் மீண்டும் உன்னி டமே சேர்ந்துவிடவேண்டும் என்று குறிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலயத்திலும் ஆத்திமரம் சிறப்பாகப் போற்றப் படுகின்றது. இதன்கீழ் அகத்தியர் யோகத்தில் அமர்ந்து சிவபார்வதியரின் திருமணக் காட்சியைக் கண்டார் என்று தலபுராணம் கூறு கின்றது. இந்த மரத்தை அன்பர்கள் அகஸ்தியமரம் என்றே அழைக்கின்றனர்.

அம்பாசமுத்திரத்தில் அகத்தியர் புளிய மரத்தடியில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். இவ்வூரின் மையத்தில் சாலையோரத்தில் அமைந் துள்ள அந்தப்புளியமரம் வேலியிட்டுப் பாதுகாக்கப் படுகின்றது. அதன்கீழ் அகத்தியர் அமர்ந்ததைக் குறிக்கும் வகையில் ஒரு பீடம் அமைக்கப் பட்டுள்ளது. இக்கோயிலில் உள்ள அகத்தியரின் வடிவமொன்று புளியடி அகத்தியர் என்று அழைக்கப்படுகின்றது.

பாபநாசத்தில் அகத்தியரும் புலத்தியரும் முக்காளமரத்தின் அடியில் அமர்ந்து முக்காளா லிங்கரை வழிபட்டதாகப் தலபுராணம் கூறுகின்றது. இந்த ஆலயத் தலமரமான முக்காளமரத்தின் அடியில் சிவலிங்கமும் அகத்தியர், புலத்தியர் வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இலந்தை, வன்னி, புளி, முதலிய பல மரங்கள் அகத்தியரோடு தொடர்புகொண்டதாக உள்ளதை இந்தியாவெங்கும் காண்கிறோம்.

தேவாரத்துள் அகத்தியர்

பொதிகைப்பொருப்பனான அகத்தியர் பெருமான், திருமுறைகளில் சிறப்புடன் போற்றப் படுகின்றார். அவர் அதிகாலை நண்பகல் மாலை என்ற மூன்று சந்திகளிலும் வெண்மணலால் சிவ லிங்கம் அமைத்துச் சிறப்புடன் வழிப்பட்டதையும் அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவரைப் பொதிகை மலையில் நிலையாகத் தங்கியிருக் கும்படி அருள்பாலித்ததையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநின்றியூர் பதிகத்தில்

சந்தி மூன்றிலும் தாபரம் நிறுத்திச்சகளி
செய்திறைஞ்சும் அகத்தியர் தமக்கு
சிந்துமாமணி அணி திருப்பொதியிற்
சேர்வு நல்கிய செல்வம் கண்டு அடைந்தேன்

என்று குறிப்பிடுகின்றார்.

அப்பரடிகள் திருமங்கலக்குடி பதிகத்தில் அகத்தியர் சிவபெருமானை அர்ச்சித்துப் போற்று கிறார் என்பதை அங்கு அகத்தியனும் அர்ச்சித்தா ரன்றே என்று அருளிச் செய்துள்ளார். மேலும் அவர் சிவபெருமான் அகத்தியரை மிகவும் விரும் புகிறான் என்பதைத் திருவீழிமிழலைப் பதிகத்தில் அகத்தியனை உகப்பானை என்று பாடிப் பரவு கின்றார். இவ்வாறு திருமுறைகளில் பல இடங் களில் அகத்தியர் போற்றப்படுவதைக் காண் கிறோம்.

திருமந்திரத்துள் அகத்தியர்

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்துள் இரண்டாம் தந்திரத்துள் முதல் பகுதியாக "அகத்தியம்" விளங்குகின்றது. இதில் இரண்டு பாடல்கள் உள்ளன. முதற்பாடல் சிவபார்வதியரின் திருமணத்தொடர்புடைய புராணத்தை விளக்குகிறது. இரண்டாம் பாடல் அகத்தியன் செய்யும் வேள்வியைப் பற்றியதாக விளங்குகிறது.

"அங்கி உதயம்" எனும் இரண்டாம் பாடலின் பொருள் உதயகாலத்தில் சிவவேள்வியை அகத்தியன் சிவமந்திரங்களை ஓதிச் செய்கின்றான். அதனால் நாடு வளம் பெறுகின்றது. அவன் செய்யும் வேள்வியின் உட்பொருளாக இருப்பவன் சிவபெருமான் அவன் உயிர்களின் உள்ளொளியாய் பேரொளியாய் அறிவொளியாய் விளங்குகின்றான். அந்த ஒளி அகத்தியனின் அருள் விளக்கத்தால் உலகமெல்லா வற்றையும் ஒளிப்படுத்துகின்றது வளமூட்டுகின்றது என்பதாகும்.

இப்பாடலிலுள்ள வடபால் தவமுனி என்பது யோக முனிவராக வடகயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் குறித்தது அவருக்குத் இணையாக தென்னாட்டில் மேற்குமலைத் தொடரில் அகத்தியன் வீற்றிருக்கின்றான். இதனால் அவர் தென்முனி என்று போற்றப்படுகின்றார்.

அகத்தியன் என்பதற்கு உள்ளத்தே ஒளியை உடையவன் என்பது பொருள். இங்கு அவன் செய்யும் அகவழிபாட்டில் அவனைச் சார்ந்தவர்களும் ஒளிபெற்றுத் திகழ்கின்றார்கள் என்பதாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனந்தவல்லி

ஆனந்தவல்லி - பஞ்செட்டி

சிவபெருமான் பலவேறு பெயர்களில் விளங்குவதற்கேற்ப அவருடன் எழுந்தருளும் பராசக்திக்கும் பல்வேறு பெயர்கள் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, சிவபெருமானுக்குக் காசிவிசுவநாதர் என்ற பெயர் வழங்கும் போது அம்பிகைக்கு விசாலாட்சி என்ற பெயர் வழங்குகின்றது. இது போன்றே ஏகாம்பரநாதர்-காமாட்சியம்மன்,; சோமசுந்தரர்- மீனாட்சியம்மன்,; அண்ணாமலையார் -உண்ணாமுலையம்மன், காளத்தீசுவரர்- ஞானம்பிகை, ஜம்புகேசுவரர் - அகிலாண்டேசுவரரி என்ற பெயர்கள் இணையாக வழங்குவதைக் காண்கிறோம். இந்த அடிப்படையில் அகத்தீசுவரர் என்ற சிவலிங்கத்திற்கு இணையாக அமையும் அம்பிகைக்கு ஆனந்தவல்லி என்பது பெயராயிற்று. சில தலங்களில் அமுதவல்லி என்ற பெயரும் வழங்குகின்றது.

தொண்டை மண்டலத்திலுள்ள அனேக அகத்தீசுவரர் ஆலயங்களில் அம்பிகைக்கு ஆனந்தவல்லி என்ற பெயர் வழங்கக் காண்கிறோம். (காலப் போக்கில் பல தலங்களில் இந்தப் பெயரின் அருமை தெரியாதவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப அம்பிகையின் பெயரை மாற்றி விட்டனர்)

இவ்வட்டாரத்திலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலமான திருக்கள்ளில் (இந்நாளில் திருக் கண்டலம் என்று வழங்குகின்றது) சிவானந்தேசுவரர் ஆலயத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கும் ஆனந்தவல்லி என்பதே பெயராக உள்ளது. இதுவும் அகத்தியர் வழிபட்ட தலங்களில் ஒன்றாகும்.

இம்மண்டலத்து ஆனந்தவல்லியரின் சிறப்புக்களைக் கருத்திற்கொண்டு "ஆனந்தவல்லியம்மன் பதிகம்" என்ற நூல் பாடப்பெற்றுள்ளது.

கேரள மாநிலத்தில் சிறந்த நகரமாகத் திகழும் கொல்லம் முன்னாளில் பெரிய ஆலமரக் காடாக இருந்தது. அங்கு அகத்தியர் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். அந்த இடத்திற்கு அகத்திய கூடம் என்பது பெயராயிற்று. அகத்தியருக்கு இத்தலத்தில் சிவபெருமான் திருமணக் கோலக்காட்சியைக் காட்டியருளினார். அந்தத் தலமே உமாமகேசுவரர் ஆலயம் என்ற தனிக் கோயிலாகத் திகழ்கின்றது. இங்கு அகத்தியர் வழிபட்ட ஆலயம் தனியே மேற்கு நோக்கியுள்ளது. அந்த ஆலயத்தின் கிழக்கு வாயிலுக்கு நேர் எதிரில் அமைந்த கருவறைக் கோட்டத்தில் ஆனந்தவல்லி என்ற அம்பிகை உருவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இக்கோயில் "ஆனந்தவல்லீசுவரம்" என்று அழைக்கப்படுகின்றது.

கன்யாகுமரிக்கு அருகிலுள்ள பத்மனாபபுரத்தில் நீலகண்டசுவாமி ஆலயம் உள்ளது. இவ்வூர் ஆதியில் கல்குளம் என்றும், இங்கு வீற்றிருக்கும் பெருமான் கல்குளம் மகாதேவர் என்றும் அழைக்கப்பட்டார். இங்கு திருமலைநாயக்கரால் அமைக்கப்பட்ட மீனாட்சி அம்பிகையின் திருவுருவம் உள்ளது. மார்த்தாண்டவர்மா எனும் மன்னர் இதற்கு ஆனந்தவல்லி என்று பெயரைச் சூட்டினர். அதனால் இக்கோயில் ஆனந்த வல்லீசுவரம் என்றும் அழைக்கப்பட்டது. இன்னும் இதனை யொத்ததாக அனேக ஆனந்தவல்லீசுவரங்களைத் தென்னகமெங்கும் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகிலாண்டநாயகி

சிலதலங்களில் அகத்தீசுவரருடன் வீற்றிருக்கும் அம்பிகைக்கு அகிலாண்டேசுவரி என்ற பெயரும் வழங்குகிறது. தென்மாவட்டத்தில் அகத்தியர் வழிபட்டுப் பேறுபெற்ற பல தலங்களில் உள்ள அம்பிகை உலகநாயகி என்று அழைக்கப்படுவதைக் காண்கிறோம். இதுவே வடமொழிப்படுத்தப்பட்டு வடதமிழ்நாட்டு அகத்தீச்சுவரங்களிலுள்ள அம்பிகைக்கு "அகிலாண்டேசுவரி"என்று வழங்குகின்றது.

அகத்தீச்சுவரங்கள்

அகத்தியர் வழிபட்ட சிவலிங்கங்களுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்கள் அகத்தீச்சரங்கள் என்று பெயர் பெற்றன. மேலும் அகத்திய மரபினர் வழிபட்ட ஆலயங்களும் அகத்தீச்சுவரங்கள் என்றே பெயர் பெறுகின்றன.

அகத்தீசுவரம் என்ற பெயரில் அனேக ஆலயங்கள் தென்னகமெங்கும் இருக்கக் காண்கிறோம். தொண்டைநாட்டின் வடபகுதியில் அமைந்த பல சிவாலயங்கள் அகத்தீச்சுவரங்கள் என்றே பெயர் பெறுகின்றன.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள அத்தி, கொடுங்காலூர் முதலிய அனேக தலங்களில் உள்ள ஆலயங்கள் கல்வெட்டுக்களில் அகத்தீச் சுவரம் என்று குறிக்கப்படுகின்றன.

இதுபோன்றே புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வெள்ளலூர், வாராப்பூர், மேலதாணையம், மடியனூர், நெய்வாசல், கோட்டையூர், திருச்சி மாவட்டத்திலுள்ள கீழையூர், தஞ்சை மாவட்டத்திலுள்ள கீரக்களூர், குலதீபமங்கயம் முதலான ஊர்களிலுள்ள ஆலயங்கள் கல்வெட்டுகளில் அகத்தீசுவரம் என்றே குறிக்கப்படுகின்றன. இதை நோக்க தென்னகமெங்கும் அகத்திய மரபினர் நெடுங்காலம் சிறப்புடன் வாழ்ந்து வந்தது தெளிவாகிறது.

அகத்தீசுவரங்களைச் சுற்றி அமைந்த ஊர்களும் அகத்தீசுவரம் என்றே பெயர் பெற்றன. வடாற்காடு மாவட்டத்திலுள்ள வாலாஜா பேட்டையின் பழைய பெயர் அகத்தீசுவரம் என்பதேயாகும். இப்பகுதியை ஆற்காடு நவாப் தன் மருமகனுக்கு அளித்து இதற்கு அவர் பெயரைச் சூட்டினார். வாலாஜாபேட்டையின் தென்மேற்கில் பாலாற்றங் கரையில் வன்னிமரத்தடியில் அகத்தியர் வழிபட்ட அகத்தீசர் ஆலயம் உள்ளது. இந்நாளில் இதனைச் சுற்றியுள்ள ஊர் வன்னிவேடு என்று அழைக்கப் படுகின்றது.



அகத்தீசுவரம் (ஒத்தாண்டேசுவரம்) – திருமழிசை

செங்கை மாவட்டத்தில் அகத்தீசுவரம் என்ற ஆலயமும் அதனைச் சுற்றி அமைந்துள்ள ஊரும் உள்ளது. காலப்போக்கில் இப்பெயர் மருவி அத்தி என வழங்குகின்றது.

குமரி மாவட்டத்தில் அகத்தியர் வழிபட்ட அகத்தீச்சுவரம் உள்ளது. இதனைச் சுற்றி அமைந்துள்ள ஊருக்கும் அகத்தீசுவரம் என்னும் பெயரே வழங்குகின்றது. இதுபெரிய ஊராகும்.

தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் திருத்தலக் கோவையில் அகத்தீச்சரம் என்ற தலத்தை குறிக்கின்றார். அறிஞர்கள் மேலே குறிக்கப்பட்ட குமரிமாவட்டத்திலுள்ள அகத்தீசுவரத்தையே வைப்புத்தலமாகக் குறிப்பிடுகின்றனர்.

அகத்தீச்சுவரங்கள் அமைந்த பகுதிகள் அகத்தியரின் வேறு பெயர்களான கும்பமுனி, கும்பசம்பவன், அங்குலன், கடமுனி முதலிய வற்றாலும் அழைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாகச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூற்றெட்டீசுவரர் ஆலயம் - சின்னக்காவணம்

சென்னையை அடுத்த பொன்னேரியின் ஒரு பகுதியில் அகத்தியர் வழிபட்ட சிவாலயம் உள்ளது. இதனைச் சுற்றி அமைந்துள்ள ஊர் கும்பமுனி மங்கலம் என்று அழைக்கப்படுகின்றது. கும்பமுனி என்பது அகத்தியரின் பெயர்களில் ஒன்றாகும்.

தென்னகத்தில் ஆலயங்களில் குறிக்கப் பட்டுள்ள அனேக கல்வெட்டுகளில் இன்னும் ஏராளமான அகத்தீசுவரம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

★ தொண்டை நாட்டில் செய்யாற்றங் கரையில் அமைந்துள்ள திருமாகறல் பாடல் பெற்ற திருப்பதி யாகும். இங்குள்ள இறைவர் அகத்தியரால் பூசை செய்யப்பட்டதாக அகத்தீசுவரர் என்று அழைக்கப் படுகிறார். இத் தலத்தின் 12 பேர்களில் ஒன்று அகஸ்திய புரம் என்பதாகும். இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் இதனை அகத்தீசுவரம் என்றே குறிக்கின்றன.

குமரி மாவட்டத்து அகத்தீசுவரம்

குமரிமாவட்டத்தில், கன்னியாகுமரி யிலிருந்து நாகர்கோவில் செல்லும் சாலையில் கொட்டாரம் என்ற ஊர் உள்ளது. இதன் தென்மேற்கு திசையில் செல்லும் சாலையில் ஒரு. கி.மீ சென்றால் அகத்தீசுவரத்தை அடைகின்றோம்.

இங்குள்ள மூலவர் அகத்தியாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் அகஸ்தியலிங்கம் என்று அழைக்கப்படுகின்றார். இந்த ஆலயத்திற்கு அகத்தீசுவரம் என்பது பெயராயிற்று இதனைச் சுற்றி அமைந்த ஊருக்கும் அகத்தீசுவரம் என்பது பெயராயிற்று.

இக்கோயிலில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்று கிழக்கு நோக்கியவாறும் மற்றது தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. கிழக்கு நோக்கி சந்நி தியில் அகத்தீசுவரரும் தெற்குநோக்கிய சந்நிதியில் அறம் வளர்த்த நாயகியும் எழுந்தருளியுள்ளனர்.

இவர்கள் சந்நிதிக்கு அருகில் அமைந்த மற்றோர் சந்நிதியில் ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் அழகிய மணவாளப்பெருமான் எழுந்தருளியுள்ளார். அதற்கடுத்த சந்நிதியில் மண்ணாடிபகவதியை ஸ்ரீசக்கரவடிவில் அமைத்து வணங்கி வருகின்றனர்.

பிராகாரத்தில் ஆத்திமரம் தலமரமாக உள்ளது. இது பூக்கும். ஆனால் காய்ப்பதில்லை. இதனை மக்கள் "அகத்தியர்மரம்" என்றே அழைக் கின்றனர். இதன்கீழ் அமர்ந்து யோகம் செய்தே அகத்தியர் சிவபெருமானின் திருமணக் கோலக் காட்சியைக் கண்டார் என்று தலவரலாறு கூறுகின்றது.

அகத்தீசுவரம் எனும் இந்த ஊர் இந்தப் பகுதியில் பெரிய ஊராக இருப்பதால் வட்டத்தின் தலைநகராக உள்ளது. (அகத்தீசுவரம் வட்டம்) இப்பகுதியில் மக்கள் அகத்தியலிங்கம் என்ற பெயரைச் சூட்டிக்கொள்கின்றனர்.

பாண்டிக் கொடுமுடி அகத்தீசுவரம்

கொங்கேழ் தலங்களில் ஒன்றான திருப்பாண்டிக்கொடுமுடி சுந்தரரால் நமச்சிவாயப்பதிகம் அருளப்பெற்ற தலம். இங்கு மகுடேசுவரர் ஆலயம் உள்ளது. இங்கு சுயம்புநாதராக கொடுமுடிநாதர் எழுந்தருளியுள்ளார். அகத் தியர் இங்கு பூசை செய்ததுடன் சிவலிங்கத்தினைத் தழுவி மகிழ்ந்துள்ளார். அவருடைய விரல் அடையாளங்கள் சிவலிங்கத்திருமேனியில் பதிந்துள்ளன. இங்கு அகத்தியர் சிவபெருமான் உமாதேவியின் திருமணக் காட்சியைக் கண்டு தரிசித்துள்ளார். அவருக்குத் எதிரில் ஓடும் காவிரியாற்றின் மையப்பகுதியில் பெரியபாறை உள்ளது. இதன் மீது அமர்ந்து அகத்தியர் யோகம்புரிந்தார் என்று நம்புகின்றனர். மக்கள் அகத்தியபாறை என்று அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் கண்ட நடன தரிசனம்

சிவபெருமானின் அற்புதக்கோலங்களில் ஒன்று ஆடற்கோலமாகும். அன்பர்கள் விரும்பும் போதெல்லாம் சிவபெருமான் அவர்களுக்குத் தனது ஆனந்த நடனத்தை நிகழ்த்திக் காட்டுகின்றான்.

அவ்வகையில் அகத்தியரும் அவனுடைய நடன தரிசனத்தைக் காணத் தவம் புரிந்தார். அவருக்குப் பெருமான் தனது ஒப்புயர்வற்ற நடனத்தைக் காட்டினான். அகத்தியர் மட்டுமின்றி தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் கணங்களும் அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

இந்த நடனத்திற்கேற்ப இந்திரன் புல்லாங்குழல் வாசித்தான், பிரமன் பொன்தாளமிட கலைமகள் வீணையை மீட்டினாள். திருமால் மத்தளம் வாசிக்க திருமகள் கரதாளமிட்டு வாய்ப்பாட்டு பாடினாள். உமையவள் அந்த திருக்கூத்தைக் கண்டு மகிழ்ந்தார். அகத்தியர் உள்ளிட்ட யாவரும் அதிசய நடனம் கண்டு துதித்தனர். பெருமான் இடது பாகத்தை ஊன்றி வலது பாதத்தை எடுத்து வளைத்து அந்த உள்ளங்காலை அகத்தியருக்குக் காட்டினார். அகத்தியர் பேரானந்தமடைந்தார்.

இப்படி, அகத்தியர் சிவபெருமானின் வலதுபாத தரிசனம் காணத் தவம் செய்த இடம் கீழ்வேளூர் என்ற தலமாகும். இது நாகப்பட்டினத்திற்கு மேற்கே பத்து கி.மீ. தொலைவில் உள்ளதாகும். இங்கு இலந்தை மரத்தடியில் அகத்தியர் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார் என்பர்.

இறைவனின் பெயர் அட்சயலிங்கம் என்பதாகும். அம்பிகை வனமுலைநாயகி என்றழைக்கப் படுகின்றாள். கட்டு மலைமீது அமைந்துள்ள இந்த ஆலயத்தில் வழக்கமாக அனைத்து ஆலயங்களிலும் உள்ளதுபோன்று ஆனந்தத் தாண்டவ நடராஜரின் சபை உள்ளது.

அது தவிர அகத்தியருக்குக் காட்சியளித்த கோலத்தில் தனியே நடராஜர் எழுந்தருளியுள்ளார். இவர் எழுந்தருளியுள்ள இடத்திற்கு அட்சயசபை என்பது பெயராகும். இதில் பத்துகரங்கங்களுடன் நடராஜர் இடது காலை ஊன்றி வலதுகாலின் உள்ளங்கால் தெரிய நடமாடுகின்றார். இருபுறமும் விநாயகரும் முருகனும் உள்ளனர். அவர்களுக்கு



நடராஜர் - கீழ்வேளூர்

இருபுறமும் பதஞ்சலியும் வியாக்ரபாதரும் வணங்கியவாறு உள்ளனர். திருமால் மத்தளம் கொட்ட, திருமகள் பாட, பிரமன் தாளம்போட, கலைமகள் வீணை வாசிக்க, இந்திரன் புல்லாங்குழல் இசைக்க இசைக் கலைத் தொகுப்பாக இங்குள்ள உலாத்திரு மேனிகள் விளங்குகின்றன.

சிவகாமசுந்தரி தனிபீடத்தில் நின்றவாறு நடனத்தை ரசிப்பவர்களாகக் காட்சியளிக்கின்றார். இவர்கள் அனைவரையும் வணங்கியவாறு அகத்தியர் காட்சிளிக்கின்றார். இந்த மூர்த்தங்கள் யாவும் கலையழகுமிக்க உலாத்திரு மேனிகளாகும்.

சிவபெருமான் அகத்தியருக்கு ஆனிமக நட்சத்திரத்தில் காட்சி கொடுத்தார் ஆதலின் அன்று சிறப்பு விழா கொண்டாடப்படுகின்றது. அன்று இந்த அனைத்து மூர்த்திகளுக்கும் சிறப்பு அபிஷேக அலங்காரங்களும் திருவீதியுலாவும் நடைபெறுகின்றன.

திருக்குற்றாலத்துச் சித்திரசபையில் அகத்தியர் சிவபெருமானின் நடனக்காட்சியைக் கண்டதாகத் திருக்குற்றாலப்புராணம் கூறுகிறது. ஆனாலும் கீழ்வேளூரில் அகத்தியர் கண்ட தரிசனம் முற்றிலும் தனித்தன்மை கொண்டதாக விளங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியன் கண்ட திருமணக்கோலம்

அகத்தியர் தென்னாட்டுமுனிவர் என்றும் அவர் இமயமலையில் ஒருசமயம் நடைபெற்ற பார்வதி பரமசிவன் திருமணத்திற்கு மற்றவர்களோடு சேர்ந்து சென்றார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. அப்போது அனைவரும் வட திசையில் கூடியதால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. அப்போது சிவபெருமான் அகத்தியரைத் தென்னாட்டிற்குச் சென்று உலகினைச் சமப்படுத்துமாறு கூறினார். அப்போது அகத்தியர் "ஐயனே" நான் இந்த அரிய காட்சியைக் கான முடியாது போகிறதே" என்று வருத்தத்துடன் கூறினார். பெருமான், "முனிவனே", வருந்தற்க; தென்னாட்டில் நீ விரும்பிய இடங்களில் எல்லாம் இக்காட்சியை உனது மனம் மகிழுமாறு முழுவதுமாகக் காட்டுவோம் என்றார். அதனால் மகிழ்ந்த முனிவன் தென்னகத்து வந்து உலகினைச் சமப்படுத்தினார். பிறகு கயிலைமலையில் திருமணம் நன்கு நடைபெற்றது.

அகத்தியர் தென்னாட்டில் பல தலங்களுக்கும் பயணம் செய்து அங்கு தன்பெயரால் சிவலிங்கம் அமைத்துவழிபாடுசெய்தார்.சிலதலங்களில் சிவபார்வதியரைத்தியானித்து அவர்களுடைய திருமணக் கோலக்காட்சியைக் காட்டுமாறு வேண்டினார். அவர்களும் அங்கு அப்படியே காட்டினர். அதனை அகத்தியரும் அவருடைய மாணாக்கர்களும் கண்டு மகிழ்ந்தனர்.

இத்தகைய தலங்கள் உமைமணவாளர், உமா மகேசுவரத் தலங்கள், என்று போற்றப்படுகின்றன. இவற்றில் மூலத்தானத்தில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் சிவ-பார்வதியர் திருமணக் கோலத்தில் அமர்ந்திருப்பதைக் காணலாம். தொண்டை நாட்டிலுள்ள திருவேற்காடு, திருமழிசை, சோழ நாட்டிலுள்ள இடும்பாவனம், வேதாரண்யம், கேரளா விலுள்ள கொல்லம் முதலிய தலங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

அகத்தியர் நிலையாகத் தங்கி வசிக்கும் பொதிகை மலைச்சாரலில் அமைந்த பல சிவாலயங்களிலும் அகத்தியருக்கு இறைவன் தனது திருமணக் கோலம் காட்டியதாகத் தலவரலாறுகள் கூறுகின்றன. இத்தலங்களில் (கருவறையில் இல்லாமல் தனிச் சந்தியில்) திருமணக்காட்சி கொடுத்த நாயகர் எழுந்தருளியுள்ளார்.பிறபகுதியில் அமைந்த கல்யாணத் தலங்களில் உயர்ந்த ஆசனத்தில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் அமர்ந்திருக்கும் சிவபார்வதியரைக் காணும் நாம் இங்கு அவர்கள் இடபாருடராகக் காட்சியளிப்பதைக் காண்கிறோம். இவ்வட்டாரத்தில் பல தலங்களில் இக்காட்சியிருந்தாலும் பாபநாசத்தில் இருக்கும் காட்சியே அழகாக உள்ளது. இதில் சிவபெருமானும் உமாதேவியாரும் பெரிய இடபத்தில் வீற்றிருக்கின்றனர். பூதவடிவினாலான குபேரன் அவர்களுக்குக் குடைபிடிக்கின்றான். அக்காட்சியை அகத்தியரும் லோபா முத்திரையும் கண்டு களிக்கின்றனர்.

மேலும் இப்பகுதிகளிலுள்ள பல சிவாலயங்களில் அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டும் ஐதீகவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

அம்பாசமுத்திரம் அகத்தியர் ஆலயத்தில் பங்குனி மாதத்தில் நடைபெறும் இத்திருவிழா தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

தொண்டை மண்டலத்திலும் அகத்தியருக்கு திருமணக்கோலம் காட்டும் விழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. திருவேற்காட்டில் அகத்தியர் திருவுருவத்திற்கு முன்பாக வேற்காட்டீசருக்கும் வேற்கண்ணி அம்பிகைக்கும் திருமண விழா சிறப்புடன் நடத்தப்படுகின்றது. இது அகத்தியருக்கு தன் திருமணச் சடங்குகள் அனைத்தையும் காட்டியதை குறிக்கின்றதென்பர். திருமணம் முடிந்ததும் வீதியுலாவில் சுவாமி, அம்மனுடன் அகத்தியரும் இணைந்தே வலம் வருகின்றார்.

மேல்மருவத்தூரை அடுத்த அச்சிறுபாக்கத்திலும் அகத்தியருக்கு, திருமணக்கோலம் காட்டிய ஐதீகவிழா சித்திராபெளர்ணமிக்கு அடுத்தநாள் நடைபெறுகின்றது. அதனை ஒட்டிய புராண வரலாற்றையும் இப்போது நடைபெறும் ஐதீக விழாவையும் இங்கே சுருக்கமாகக் காணலாம்.

அச்சிறுபாக்கத்தில் அகத்தியரும், புலத்தியரும், கொன்றைவனத்தில் நெடுங்காலம் தங்கித் தவம் செய்துள்ளனர். இந்நாளில் அகத்தியர் பூசித்த லிங்கம் ஆட்சீசுவரர் என்றும், புலத்தியர் வழிபட்ட லிங்கம் உமையாட்சீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியன் கண்ட திருமண தரிசனம்

குண்டோதரன் தான் பிடிக்கும் கொற்றக் குடை நிழல் தர
மலயமலைப் பாரிசத்தில் வானத்தில் எழுந்தருளக்
கலசமுனி மணக்கோலங் கண்டு மகிழ் கொண்டு நின்றான் – பாவநாசத் தலபுராணம்



அகத்தியர் லோபாமுத்திரைக்கு இறைவன் இடபவாகனத்தில் திருமணக்காட்சி அளித்தல். குபேரன் பெருமானுக்கு குடைபிடிக்கிறான் - பாபநாசம் திருக்கோயில் - நெல்லை மாவட்டம்

ஒருசமயம் ஆட்சீசுவரை வழிபட்ட பின்னர் அகத்தியர் அருகிலுள்ள மலைக்குச் சென்று அதன் தென்சிறகில் இருந்த முருகனாலயத்தைக் கண்டு வணங்கினார். முருகன் அவருக்கு ஆறுமுக குருவாக வீற்றிருந்து சிவஞானச் செம்பொருளை உபதேசித் தார். அந்த உபதேசத்தைப் பெற்றபின் அகத்தியர் அம்மலைச்சாரலில் இருந்த ஆத்திமரத்தின் கீழ் அமர்ந்து அதன் நுண்பொருளை சிந்தித்தார்.

அப்போது அவருக்குச் சிவபெருமானின் திருமணக் கோலக்காட்சியைக் காணவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அங்கு வெண் மணலைக் கூட்டி, சிவலிங்கம் அமைத்தார். அதற்கு மலர்களைச் சூட்டி வழிபட்டு தியானத்தில் அமர்ந்தார்.

அந்த லிங்கத்திலிருந்து சிவபெருமான் உமாதேவியுடன் வெளிப்பட்டு அவருக்கு கயி லையில் நடந்த தமது திருமணத்தின் அனைத்து சடங் குகளையும் ஒன்று விடாமல் காட்டினார். சிவலிங்கத் திலிருந்து சிவ பெருமான் தானே வெளிப்பட்டு அருள் பாலித்ததால் அந்த லிங்கத்திற்குத் தான் தோன்றீசுவரர் என்பது பெயராயிற்று.

அதனைக் கண்டு மகிழ்ந்த அகத்தியர் அங்கேயே தனது மாலைவழிபாட்டையும் முடித்துக் கொண்டு அச்சிறுபாக்கம் திரும்பினார். அவரை வணங்கிய புலத்தியரும் மற்ற முனிவர்களும் பகல் பொழுது முழுவதும் நீங்கள் எங்குசென்றீர்கள் என்று கேட்டனர்.

அகத்தியர் முருகன் மலையில் வெளிப் பட்டுத் தனக்கு ஞானஉபதேசம் செய்ததையும் அதைத் தொடர்ந்து உமாமகேசுவரர் திருமணக் கோலக் காட்சியைக் கண்டதையும் கூறினர். புலத்தி யனும் மற்ற சீடர்களும் அகத்தியரை மீண்டும் பணி வுடன் வணங்கித் தாங்களும் சிவ-பார்வதியரின் திருமணக் கோலத்தைக் கண்டு மகிழ வகை செய்ய வேண்டும் என்று வேண்டினர். அகத்தியர் மறுநாள் ஆட்சீசுவரரைப் பணிந்தபின்னர் உச்சி வேளையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புலத்தியன் வழிபடும் லிங்கத்தை வழிபட்டு சீடர்களின் வேண்டுகோளைச் சிவ பெருமானிடம் விண்ணப்பித்தார். அந்த லிங்கத்தி லிருந்து பெருமான் உமையுடன் வெளிப்பட்டு அனைவரும் காணத் தமது திருமணக்காட்சியை மீண்டும் காட்டினார். அன்பர்கள் அனைவரும் அதைக் கண்டு மகிழ்ந்தனர். அந்த லிங்கமே இந்நாளில் அச்சிறுபாக்கத்தில் உமையாட்சீசுவரர் என்ற பெயரில் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது.

அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் இளங்கிளை நாயகியின் திருமணம் ஆண்டுதோறும் சித்திரை மாதம் தசமி நாளில் நடைபெறுகின்றது. அதற்கடுத்த சித்திரா பௌர்ணமியன்று திருமணக் கோலத்துடன் ஆட்சீசுவரர்-இளங்கிளை நாயகியுடன் பெரும்பேர் செல்கின்றார். அங்கு அவர்களை பெரும்பேர் முருகன் எதிர்கொண்டு அழைக்கின்றார். மூவருமாகப் பெரும்பேர் ஊரில் வலம் வந்து ஊரின் மேற்குப் பகுதியில் ஏரிக்கரையின் கீழ் அமைந்துள்ள தான் தோன்றீசுவரர் ஆலயத்தை அடைகின்றனர்.

அந்த ஆலயத்தின் முற்றத்திலுள்ள பெரிய மேடையின்மீது காலங்கடந்த ஆத்திமரம் உள்ளது. அதன் கீழ்தான் அகத்தியர் தவம் செய்தார். அங்கு மண்ணால் அகத்தியர் திருவுருவம் அமைக்கப்படுகின்றது. அதற்கு எதிரில் தான் திருமணக்காட்சி மண்டபம் உள்ளது.

அங்கு ஆட்சீசுவரர் - இளங்கிளை நாயகி - முருகன் ஆகியோர் எழுந்தருளி வைக்கப்பட்டு அவர்களுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றன. இதனை அகத்தியரே செய்வதாக ஐதீகம். பிறகு அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டும் ஐதீக நிகழ்ச்சியாக ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறுகின்றது. பிறகு ஆட்சீசுவரர் இளங்கிளை அம்பிகை மலையை வலமாக வந்து அச்சிறுபாக்கம் ஆலயத்தை அடைகின்றனர். இவ்விழா ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

குற்றாலத்திலுள்ள ஐதீக சிற்பம் இடமிருந்து வலமாக பார்வதியை இறைவன் தன் கையை பற்றிக் கொள்ள வலது கரத்தை நீட்டியவாறு உள்ளார். இறைவர் மேற்கரத்தில் மான்மழு ஏந்தி முன் இடது கரத்தை நந்தியின் மீது ஊன்றும் பாவனையிலும் வலது கரத்தால் அம்பிகையின் கரத்தைப் பிடிக்கும் பாவனையிலும் உள்ளாள். அடுத்ததாகத் திருமால் திருமணம் செய்ய தாரைவார்க்கின்றாள். அடுத்து லோபாமுத்திரையும் அகத்தியரும் திருமணக்கோலத்தைக் கண்டு மகிழ்கின்றனர். இவை கல்திருமேனிகளாகும். இவற்றின் மீது சந்தனக் குழம்பு பூசப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் ஆலயங்கள்

சிவன் அனைய திருமுனி என்ற போற்றப் படுபவர் அகத்தியர். சிவபெருமானின் ஒரு அம்சமே பிரம்மன் செய்த வேள்விச் சாலையிலிருந்த கும்பத்தில் வீழ்ந்து முனியுருப்பெற்றதென்று புரா ணங்கள் கூறுகின்றன. அகத்தியரும் புலத்தியரும் சிவனின் முகத்திலிருந்து தோன்றிய பஞ்சரிஷிகளில் முதன்மையானவர்கள். இவர்களில் சிவபெருமானால் தீட்சை அளிக்கப்பட்டு முதலில் அருள்பெற்றவர் அகத்தியரே ஆவார். அகத்தியரை மகாகுருவென்று சமயநூல்கள் போற்றுகின்றன. இவரை வணங்குவதும் சிவபெருமானை வணங்குவதும் ஒன்றேயென்று சான்றோர்கள் கருதுகின்றனர். அந்த அடிப்படையில் அகத்தியருக்கும் அவர் மனைவி லோபாமுத்தி ரைக்கும் தனிக்கோயில்கள் உரியபரிவாரங்களுடன் அமைக்கப்படுகின்றன.

இத்தகைய அகத்தியர் கோயில்கள் இந்தி யாவில் ஆங்காங்கு இருந்தாலும் நெல்லைமாவட்டம் அம்பாசமுத்திரத்தில் அமைந்துள்ள கோயிலே தனிச் சிறப்புப் பெறுகின்றது. இங்கு அகத்தியர் சிவபெரு மானாகவே போற்றப்படுகின்றார். சிவபெருமா னுக்கே உரிய ஈசுவரபட்டம் அளிக்கப்பெற்று இங் குள்ள அகத்தியர் பெருமான் "அகத்தீசுவரர்" என்று அழைக்கப்படுகின்றார்.

ஊரின்மையத்தில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு வாயிலுடன் வடக்கு நோக்கியவாறும் வாயில் அமைக்கப்பட்டு அதன்மீது முகப்பு விமானம் கட்டப்பட்டுள்ளது.

கிழக்கு வாயிலின் வழியாக உட்சென்றதும் பெரிய மண்டபத்தைக் காண்கிறோம். இதில் பெரிய கொடிமரம் பலிபீடம். நந்தியம் பெருமான் திரு வுருவம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இப் பிரா காரத்தில் சற்று வலமாகச் சென்றால் (வடக்கு வாயி லுக்கு நேராக அமைக்கப்பட்டுள்ள சந்நிதியில்) புளி யடி அகத்தியரின் பெரியதிருவுருவம் வண்ண ஓவி யமாக அமைந்துள்ளது. இதனையொட்டி கிழக்கு நோக்கியவாறு அன்ன மண்டபமும் (இதில் ஆண்டு க்கு ஒருமுறை அகத்தியருக்காகப் பெரிய அளவில் அன்னம் படைக்கப்படும்) இங்கு புளியடி அகத் தியரின் உலாத் திருமேனியும் உள்ளது.

இவரை வணங்கி மகாமண்டபத்தை அடைகின்றோம். இதன் மேற்கில் கிழக்கு நோக்கிய வாறு உள்மண்டபமும் கருவறையும் உள்ளன. கரு வறையில் அகத்தியர் நின்றவடிவில் காட்சியளிக் கின்றார். வலதுகையில் ஜெபமாலையும் இடது கையில் புத்தகமும் உள்ளன. பெரிய திருவாசி இவ ரைச் சுற்றியுள்ளது. இவருடைய திருக்கோலம் கண் ணையும் கருத்தையும் கவர்வதாக அமைந் துள்ளது.

மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அம்பிகை சந்நிதியுள்ளது. இதில் லோபமுத்திரை எழுந்தருளியுள்ளார். வலதுகை மலரேந்த இடதுகையைத் தொங்கவிட்டவாறு காட்சி யளிக்கின்றாள். இவர்கள் இருவரையும் ஒரே நேரத் தில் வணங்கும் வகையில் இந்தச் சந்நிதிகள்



அகத்தியர் - லோபாமுத்திரை
கல்லிடைக்குறிச்சி, நெல்லை மாவட்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைந்துள்ளன. இவர்களை வணங்கியபின் பிரா காரத்தை வலம் வருகின்றோம். இதில் தென் மேற்கு முனையில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். அவருக்கு அடுத்த சந்நிதியில் பெரிய உலாத்திரு மேனிகளாக அகத்தியரும் லோபாமுத்திரையும் எழுந்தருளியுள்ளனர். உலாத் திருமேனியான அகத்தியர் நின்றவாறு காட்சியளிக்கிறார். எடுத்துக் கட்டிய கொண்டை சடாமகுடமாக விளங்க அடர்ந்த தாடி மார்பில் புரள்கிறது. வலது கரத்தில் ஜெபமாலை உள்ளது. இடது கரத்தை நீர்க்கரகத்தைத் தாங்குவது போன்ற பாவனையில் தொங்கவிட்டுள்ளார். இடப்புறம் அமைந்துள்ள லோபாமுத்திரை வலது கையில் மலரேந்தி இடதுகரத்தைத் தொங்கவிட்டுக் கொண்டுள்ளார். இவர்களின் திருவுருவம் நல்ல கலைத்திண்மையுடன் உள்ளது.

அடுத்துள்ள சந்நிதியில் விநாயகர், சங்கர லிங்கர், சங்கரகோமதியம்மன், சங்கரநாராயணர், முதலிய உலாத்திருமேனிகள் உள்ளன. இவை இவ்வூரின் அருகிலுள்ள சங்கரன் கோயில் எனும் ஊரினைச் சேர்ந்ததாகும். இவர்கள் இக்கோயிலிலேயே எழுந்த ருளியிருப்பதுடன் இவர்களுக்கான பெருந்திரு விழாவும் இங்கேயே கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவின் பத்தாம் நாள் விழாவில் சுவாமியும் அம்பிகையும் சங்கரன் கோயிலுக்கு எழுந்தருளி அன் பர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

இவர்களை அடுத்து வள்ளி தெய்வயானை உடனாய சிவசுப்பிரமணியப் பெருமான் எழுந்தரு ளியிருக்கின்றார். அடுத்து வடக்குப்பிராகாரத்தில் தனி சனீசுவரரைக் காண்கிறோம். இவர்களை வணங்கி வலம் வந்தபின் மண்டபத்தில் அமர்ந்து குருவருள்பெற தியானம் செய்யவேண்டும்.

இந்த ஆலயத்தில் பங்குனி மாதம் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. விழாவில் முதல் நாள் விநாயகர் விழாவும், கொடியேற்றமும் நடைபெறுகின்றன. விழாநாட்களில் இரண்டு வேளைகளிலும் அகத்தியரும் லோபாமுத்திரையும தனித்தனியே வாகனங்களில் வலம் வருகின்றனர். அகத்தியருக்கென யானை, பூதம், புருஷாமிருகம், கற்பகத்தரு, வெள்ளிசம்பரம் ஆகிய வாகனங்களும் வோபாமுத்திரை தேவிக்கு கிளி, சிம்மம், அன்னம், முதலிய வாகனங்களும் உள்ளன. எட்டாம் நாள் மாலை அகத்தியருக்கும் லோபாமுத்திரைக்கும் இறைவன் திருமணக்காட்சி கொடுக்கும் ஐதீகம் நடைபெறுகின்றது.அப்போது இவ்வூரின் கிழக்குப்பகுதியில் உள்ள காசிபநாதர் ஆலயத்தில் உள்ள நடராஜரும் சிவகாமியும் ஊரின் மையத்திற்கு வருகின்றனர். அப்போது அகத்தியரும் லோபா முத்திரையும் அங்கு எழுந்தருள்கின்றார். அப்போது அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய ஐதீகம் நடைபெறுகின்றது.

பொதுவாக உமாமகேசுவரர், சோமாஸ் கந்தர் முதலிய சிவபெருமானின் திருவுருவங்களே அவர்களுடைய திருக்கல்யாணக் கோலங்களாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றைஎழுந்தருள வைத்து அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டுவதே மரபு என்றாலும் இம்மண்டலத்தில் நடராசர் திரு மேனிக்கு முதன்மை தரப்படுவதாலும் அகத்தி யருக்கு திருமணம் முடிந்தபிறகு சிவபெருமான் தனது நடனகோலத்தையும் காட்டி அருளியதாகக் கூறப்படுவதாலும் இங்கு நடராசர் சிவகாமியே திருமணக்காட்சி தருகின்றனர். இது எங்கும் இல்லாத புதுமையாகும்.

இங்கு ஆலயம் உண்டானதற்குச் சொல்லப் படும் வரலாறு:-

கயிலைமலையில் நடைபெற்ற சிவன் பார்வதி திருமணத்தின்போது உலகமக்கள் அனை வரும் அங்கு கூடியதால் வடபகுதிதாழ்ந்து தென் பகுதி உயர்ந்தது இதனால் திருமணத்திற்கு வந்தவர் கள் வருந்தினர். அப்போது சிவபெருமான் அகத் தியரை அழைத்து நீ தென்திசைக்குச் சென்று உலகி னைச் சமப்படுத்துக என்றார். அப்போது அகத்தியர் இந்த அரிய திருமணக்காட்சியை தான் தரிசிக்க முடியாமல் போகிறதே என்று வருந்துகிறேன் என் றார். அதற்குச் சிவபெருமான் அவரிடம், அன்பனே இங்குள்ளவர்கள் இதனை ஒருமுறையே காணப்போறார்கள். உனக்கு மட்டும் நீ விரும்பிய இடத்திலெல்லாம் இக்காட்சி கிடைக்கும் என்று கூறி அவருக்கு விடைகொடுத்து வழி அனுப்பினார். அகத்தியர் வழியில் பல அருஞ்செயல்களைச் செய்து முடித்துத் தென்னாடுவந்தார்.

திருக்குற்றாலம் முதலிய அனேக தலங் களில் சிவபூசைசெய்து இறையருள் பெற்றார். பின் னர் பொதிகை மலைக்குச் செல்ல அம்பாசமுத்திரம் வழியாக வந்து கொண்டிருந்தர். அப்போது அவருக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குப்பசி உண்டாயிற்று. அங்கேயிருந்த பெரிய புளிய மரத்தின் அடியில் அமர்ந்தார். அருகில் செங்குந் தர்கள் பாவோடிக்கொண்டிருந்தனர். அவர்கள் புளியமரத்தடியில் சிவவேடப்பொலி வுடன் விளங்கும் அகத்தியரின் அடிபணிந்து உங்களுக்கு வேண்டுவது என்ன? என்று கேட்டனர். அவர், "அன்பர்களே! நான் மிகவும் பசியோடு இருக்கின் றேன். எனக்கு உண்பதற்கு ஏதாவது தாருங்கள் என்று கேட்டார்.

அவர்கள் மகிழ்ச்சியுடன்", அப்படியே தருகிறோம்" என்று சொல்லிவிட்டுத் தங்கள் வீட்டிற் குச் சென்று பலாக்காய் கறியும், கீரைமசியலும் செய்து, சோறுவடித்து எடுத்துக்கொண்டு வந்தனர். அப்படி வருவதற்குச் சற்று நேரமாகிவிட்டது.

அதற்குள் அகத்தியர் அவ்விடத்தை விட்டு அகன்று பொதியமலைக்குச் சென்றுவிட்டார். சோறு, கறி, கீரையுடன் வந்த செங்குந்தர்கள் அகத்தியரைக் காணாது வருந்தினர். அவரை எண்ணி மனம் உருகினர். அகத்தியர், "அன்பர்களே மனம் வருந் தற்க. நாம் எப்போதும் உங்களுடனேயே இருக் கின்றோம் எமக்குக் கோயில் கட்டி வழிபடுக, ஆண் டிற்கு ஒருமுறை எனக்கு அன்னம் படையுங்கள், நாம் அதைஏற்போம். நாம் அதை ஏற்றுக் கொண்ட தன் அடையாளமாக அந்த அன்னத்தின் மீது நாம் நடமாடிய கால்சுவடுகளும் நமது யோக தண்டப் பிரம்படிகளையும் காண்பீர்கள்" என்றார். அதைக் கேட்டு களிப்புற்ற செங்குந்தர்கள் அகத்தியர் அமர்ந்திருந்த புளியமரத்தின் கீழ் பெரிய அகத்திய பீடத்தை அமைத்தனர். அதற்கு "வீரசிங்காதனக் குறடு" என்பது பெயராகும். அதற்கு நாள்வழிபாடு செய்யத் தொடங்கினர். பின்னர் அகத்தியருக்கும் அவருடைய மனைவியான லோபமுத்திரைக்கும் உரிய பரிவார தெய்வங்களுடன் பெரிய ஆலயத்தை அமைத்தனர். நாள்வழிபாடுகளையும் பெருந்திரு விழாவையும் ஏற்படுத்தினர். அவைகளை முறைப் படுத்திச் சிறந்த முறையில் பரிபாலித்து வருகின்றனர்.

அகத்தியர் செங்குந்தர்களுக்கு வாக்களித் தபடித்தன் திருவடிச் சுவடுகளை அன்னத்தின் மீது காட்டுவதும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. பெருந்திருவிழாவின் எட்டாம் நாளன்று செங்குந் தர்கள் தீபதீர்த்தம் எனுமிடத்திலிருந்து நீர் திரட்டி 21 பால்குடம் கொண்டு வந்து அகத்தியருக்கு அபிஷேகம் செய்கின்றனர். பிறகு முன்னுள்ள மண்டபத்தில் கோயிலிலிருந்து சோறு, பலாக்காய் கறி, கீரைமசியல் படைக்கப் படுகின்றது அதன்பிறகு அன்பர்கள் பிரார்த்தனையாக வடித்தசோற்றை அம் மண்டபத்தில் பரப்பு கின்றனர். பின்னர் கதவுகள் மூடப்படுகின்றன.

வெளியே சிறப்புவழிபாடுகள் செய்யப் படுகின்றன. பிறகு கதவுதிறக்கப்பட்டு பூசை செய்யப் படுகிறது. அங்கு பரப்பிய சோற்றின் மீது காலடித் தடங்களும் பிரம்பு அடையாளங்களும் தெரிவதாகக் கூறப்படுகின்றது. இது வேறெங்கும் இல்லாத புதுமையான விழாவாகும். இதில் ஏராளமான அன்பர்கள் கலந்து கொள்கின்றார்.

அம்பாசமுத்திரம் அகத்தியர் கோயிலின் புராணத்தொடர்புகளும் அங்கு நடைபெறும் திரு விழாக்களும் தனிச்சிறப்புமிக்கதாக உள்ளன.

அம்பாசமுத்திரத்தில் உள்ளதைப்போலவே கல்லிடைக்குறிச்சியிலும் அகத்தியர் ஆலயம் சிறப்பாக உள்ளது. அதிலும் விழாக்கள் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன.

❑ ஆவுடையார் கோயிலில் சிவபெரு மானுக்குரிய அனைத்து விழாக்களையும் மாணிக்க வாசகருக்கே நடத்துகின்றனர். மாணிக்கவாசகர் சிவபெருமானைப் போலவே இடபவாகனத்தில் வரும் காட்சியையும் அங்கு காண்கிறோம். அது போலவே. சிவபெருமானுக்குரிய அனைத்து விழாக் களும் இங்கு அகத்தியருக்குச் செய்யப்படுகின்றன. ஆயினும் அகத்தியர் இடபவாகனத்தில் வலம் வருவதில்லை. ஆதியில் நந்தியெம்பெருமானிடம் அகத்தியர் சிவஞான உபதேசம் பெற்றார். என்பதால் அவரை வாகனமாகக் கொள்வதில்லை அதற்குப் பதிலாக புருஷாமிருக வாகனத்தில் பவனி வருகிறார். புருஷாமிருகம் தென்பாண்டி நாட்டிற்கே உரியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

❑ அம்பாசமுத்திரத்தின் பெருமை களை விளக்கும் நூல் அம்பைத் தலபுராணமாகும். இதில் அகத்தியருக்குக் காட்சியளித்த சருக்கம் என்ற பகுதி உள்ளது. இதில் அகத்தியர்தவம் செய்த போது சிவபெருமான் அவரை அம்பையிலுள்ள காசிபேச நாதர் ஆலயத்தில் ஓர் அரசன் நடத்தும் விழாவி ற்குச் சென்று அதனைத் தரிசிக்குமாறு கூறு கின்றார். அதைக்கேட்ட அகத்தியர் தன் மனைவி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

றார். அன்று எட்டாம் நாளாகும். அந்த திருவிழாவில் நடராசப்பெருமான் சிவகாமியுடன் வீதிவலம் வருகின்றார். அக்காட்சியை அவர்கள் கண்டு மகிழும் போது சிவபெருமான் அவர்களுக்குத் தமது திருமணக்கோலக்காட்சியையும் திருநடனதரிசனத் தையும் காட்டி அருளுகின்றார். அதைக் கண்டு அவர்கள் மகிழ்கின்றனர். பின்னர் விடை பெற்றுக் கொண்டு பொதிகை மலைக்குச் செல்கின்றனர். இதனையொட்டியே இப்போது அம்பா சமுத் திரத்தில் காசிவிசுநாதர் கோயிலிலும், அகத்தியர் கோயிலிலும் ஒரே சமயத்தில் திருவிழா கொண்டா டப்படுகின்றது. விசுவநாதர் கோயிலில் எட்டாம் நாளன்று நடராசரும் சிவகாமியும் பவனி வருகின்றனர். அவர்கள் வீதிக்கு எழுந்தருளும் போது அகத்தியரும் லோபாமுத்திரையும் அங்கு சென்று திருமணக் காட்சியையும், நடனதரிசனத்தையும் கண்ட ஐதீகவிழா கொண்டாட ,கின்றது.

பிறகு தலபுராணத்தில் செங்குந்தர்களுக்கு அகத்தியர் அருள்புரிதல் அவர்கள் படைத்த அன்னத்தின்மீதுத் தன் திருவடிச் சுவடுகளையும், பிரம்புச் சுவடுகளையும் காட்டுதல் முதலிய நிகழ்ச் சிகள் கூறப்பட்டுள்ளன.

• விக்ரமசிங்கபுரத்திற்கு அருகிலுள்ள பாபநாசத்திலும் அகத்தியர் திருமணக்காட்சி கண்டுள்ளார். இதனையொட்டி பாபநாசத்தில் சித்திரை மாதம் முதல் தேதியன்று இறைவன் அகத்தியருக்கு காட்சி கொடுக்கும் ஐதீகம் நடத்தப்பெறுகிறது.

அகத்திய கீதை (எ) சிவகீதை

கீதை என்றதும் நமக்கு கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்குக் குருக்ஷேத்திரப் போர்க் களத்தில் உபதேசித்த பகவத்கீதையே நினைவுக்கு வருகின்றது. ஆனால் பதினெண் புராணங்களுக்கு நடுவில் பல கீதைகளைக் காண்கிறோம்.

இவற்றில் குறிப்பிடத்தக்கது அகத்திய கீதை என்பதாகும். இதனைச் சிவகீதை எனவும் வழங்குகின்றனர். இதனை ஆதியில் சிவபெருமான் அகத்தியருக்கு உபதேசித்தார். அதனால் சிவகீதை என்று அழைக்கப்பட்டது. பின்னர் இராமபிரான் பஞ்சவடியில் சீதையை இழந்து வருந்தித் துன்புற்று மனங்கலங்கியபோது இதனை அகத்தியர் அவ ருக்கு உபதேசித்தார். இதனால் இது அகத்திய கீதை என்றும் அழைக்கப்பட்டது. இது உபநிஷதங்களின் சாரமாகத் திகழ்வதாகும். இதனுள் பதினாறு அத்தியாயங்கள் உள்ளன. இதைக் அகத்தியரிடம் கேட்டுக் கொண்ட இராமபிரான் அவரிடமே சிவதீட்சையையும் பெற்றுக் கொண்டு கடுமையான பாசுபத விரத த்தைக் கடைபிடித்தார். அதனால் மகிழ்ந்த சிவ பெருமான் இராமபிரானுக்கும் இலக்குவனுக்கும் உமாதேவியோடு இடபவாக னத்தில் காட்சிய ளித்தார். பிறகு இராமனை அருகில் அழைத்து அமர்த்திக் கொண்டுச் சிவகீதையின் சாரத்தை மீண்டும் கூறினார். அவருக்கு பாசுபதாஸ் திரத்தை அளித்து இராவணனை வெற்றிகொள்ளும் வரத்தையும் அளித்தார்.

இராமபிரானுக்கு வாழ்வில் அகத்தியர் இரண்டு நூலை உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. அதில் முதல் நூல் சிவகீதை யாகும். பின்னும் ஒருமுறை இராமபிரான் சோர்ந்தபோது ஆதித்திய ஹ்ருதயம் என்று நூலை உபதேசித்து சூரியனி டமிருந்து அரிய வரங்களைப் பெறவைத்தார். இப்படி இரண்டு நூல்கள் இராமருக்கு அகத்தியரால் உபதேசிக்கப்பட்டன.

அகத்தியர் திருவடிகள்

குருவின் திருவடிகளைப் போற்றும் மரபு நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இவ்வகையில் அகத்தியரின் திருவடிச் சுவடுகளை மக்கள் நெடுங்காலமாகப் பூசித்து வருகின்றனர். குற்றாலத்தில் அகத்தியர் பாறையும் அதில் அகத்தியரின் பாதச் சுவடுகளும் உள்ளன. இதைபோலவே நெல்லைமாவட்டத்திலும் குமரி மாவட்டத்திலுள்ள அனேக மலைகளில் அகத்தியர் பாறைகளும் அதில் அவருடைய பாதச் சுவடுகளும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இவற்றை மக்கள் சிறப்புடன் வணங்குகின்றனர்.

ஆனந்தவல்லி உடனாய அகத்தீசுவரப் பெருமானின் அருளால் அன்பர்கள் அனைவரும் சகல நலங்களையும் பெற்று வாழ்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அதி(க) தியாகராஜர்

செம்பொன் சோதியாகிய சிவபெருமான் திருவாரூரில் தியாகராஜனாகக் கொலுவீற்றிருந்து ஞானச்செங்கோல் நடத்தும் சிறப்பையும், அவருக்கு செய்யப்படும். சிறப்புக்களையும் பதினைந்தாம் மலரில் கண்டு மகிழ்ந்தோம். ஆரூர்த் தியா கேசப்பெருமானின் அருள்வடிவாகப் பிறதலங்களில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் தியாகராஜர் பற்றிய செய்திகளை இந்நூலில் அறிந்து மகிழலாம்.

இந்திர உலகத்திலிருந்து முசுகுந்தன் தியாகராஜரைப் பூமண்டலத்திற்குக் கொண்டு வந்தபோதே, அவருடன் ஆறு தியாகராஜ வடிவங்களையும், உடன் கொண்டுவந்து ஆரூரில் வைத்துப் பூசித்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. அவன் முதன்மைத் தியாகராஜரைத் திருவாரூரில் நிலைப்படுத்திய பின்னர், மற்ற ஆறுவடிவங்களை முறையே நாகப்பட்டினம், திருமறைக்காடு, திருக்கோளிலி, திருவாய்மூர், திருநள்ளாறு, திருக்காரவாசல் (திருக்காறாயில்) ஆகிய தலங்களில் அமைத்து வழிபட்டான். ஆரூர் உள்ளிட்ட இந்த ஏழுதலங்களும் 'சப்தவிடங்கத் தலங்கள்' என்று போற்றப்படுகின்றன.

தியாகராஜரின் அருட்சிறப்பையும் அவருடைய இருந்தாடும் கூத்தின் சிறப்பையும் உணர்ந்த அன்பர்கள் அவருடைய அருட்கூத்தைக் காண வேண்டிப் பலதலங்களில் தவம் புரிந்தனர். சிவபெருமான் அவர்களுடைய பக்திக்கு இரங்கி அவர்கள் கண்டுமகிழத் தனது. இருந்தாடும் கூத்தினை ஆடினார். அதனைக் கண்டு மகிழ்ந்த அன்பர்கள் அந்த நினைவு மாறாதிருக்கும் பொருட்டு அந்தத் தலத்தில் தியாகராஜத் திருக்கோலத் திலேயே அவர் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அதன்படியே சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் உபயவிடங்கத் தலங்கள் என்று போற்றப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகையில் நந்திகாண நடமாடிய திருஒற்றியூர், திருமால் உளம் உவப்ப ஆடிய திருக்கச்சூர், வால்மீகி முனிவர் காண நடமாடிய திருவான்மியூர் முதலிய தலங்களில் தியாகராஜர் உபயவிடங்கராக வீற்றிருந்து அருள்பாலிப்பதைக் காண்கிறோம்.

சில சமயங்களில் திருவாரூர் தியாகராஜரே அன்பர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்ற அவர்கள் வாழும் தலங்களுக்குச் சென்று கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்றார். இவை தியாகராஜரின் பிரதிநிதியான வடிவங்களாதலின் இவை எழுந்தருளியுள்ள தலங்கள் **"பிரதிவிடங்கத் தலங்கள்"** என்று அழைக்கப்படுகின்றன.

திருவாவடுதுறையில் முசுகுந்தனுக்குப் புத்திரப்பேற்றை அளிக்கத் தோன்றிப் புத்திரத் தியாகர், சோமாசி மாற நாயனாரின் வேள்வியில் அவிர்ப்பாகத்தைப் பெற அம்பர்மாகாளத்திற்கு எழுந்தருளிய தியாகராஜர் முதலிய திருமேனிகள் இவ்வகையின ஆகும்.

மேலும், திருவாரூர்ப் பெருமானிடம் எல்லையற்ற அன்பு கொண்ட பேரரசர்களும், அரசியர்களும், கன, தனவான்களும் தினமும் ஆரூர் வந்து அவரைத் தரிசிக்க முடியாமலும் ஆண்டுமுழுவதும் அங்கு கொண்டாடப்படும் விழாக்களைக் கண்டு களிக்க முடியாமலும் இருந்ததால் தம்மிடத்திலேயே தியாகராஜருக்கெனக் கோயில் கட்டி விழாக்களை நடத்த ஏற்பாடு செய்தனர். அத்தகைய அன்பர்களின் எல்லையற்ற அபிமானத்தால் எழுந்தருளி வைக்கப்பெற்ற தியாகராஜ மூர்த்தங்கள் **"அபிமான விடங்கர்கள்"** என்று அழைக்கப்படுகின்றனர்.

இப்படிப் பலவேறு வகைகளில் ஆரூரிலும் அதிகமான இடங்களில் எழுந்தருளி அருள் பாலிக்கும் தியாகராஜப் பெருமானின் பெருமைகளை விளக்க முயல்வதால் இந்த மலருக்கு **"அதி(க) தியாகராஜர்"** என்று பெயரிடப்பட்டுள்ளது.

பூவுலக இன்பங்களையும் வானுலக இன்பங்களையும் ஒருசேர அளிக்கும் பெருமானான தியாகராஜரை இருவகைப் பற்றுகளையும் உணர்த்தும் "இருபது" என்ற எண்ணிட்ட இந்த இருபதாம் மலரில் போற்றி வணங்குகின்றோம்.

மேலும், இந்நூலில் சப்த விடங்கத்தலங்களில் தியாகராஜப் பெருமான் வழிபாட்டின் மூலம் விளக்கப்படும் யோகநெறிக் கொள்கைகளும் விளக்கப்படுகின்றன.

அன்பர்களுக்குச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று ஒரு குடை நிழலில், இருசுடர் விளங்க மும்மலம்நீக்கி, நான்குநெறி காட்டி, ஐந்தொழில் நடத்தி, அறுவகைச் சமயம் எழில்பெற விளக்கி, எண்திசை போற்ற, நவமணி பதித்த வீரசிங்கார தனத்து, கொண்டிதேவியோடு கொலுவீற்றிருந்து அருளும் தியாகேசப் பெருமானின் கழற்சேவடிகளைப் பணிந்து இறைஞ்சுகின்றோம்.

- சிவசுந்தரி.

தேவேந்திரனும் - தியாகராஜரும்

தேவேந்திரன் தியாகராஜ வழிபாட்டில் பெருத்த விருப்பமுடையவன். அவன் சப்தவிடங்கத் தலங்களிலும், பிரதிவிடங்கத் தலங்களிலும், உபயவிடங்கத் தலங்களிலும் அவ்வப்போது வந்து வழிபடுகின்றான். அவனும் அவன் மனைவியுமான இந்திராணியும் தியாகராஜரைப் பூசிப்பதை உணர்த்தும் வகையில் அனைத்து விடங்கத்தலங்களிலும் திருவாரூரில் புரட்டாசி மாதம் நிறைபணி விழா கொண்டாடப்படுகின்றது. அந்நாளில் விரிவான மலர் அலங்காரமும் பெருத்த நிவேதனங்களும் செய்யப்படுகின்றன. அவனுடைய யானைக் கொடியே தியாகக் கொடியாக ஏற்றப் படுகின்றது. அவனுக்கு அருளும் விழாவான வசந்தவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சப்த விடங்கத் தலங்கள்

முசுகுந்தசோழனால் தியாகராஜர் விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்திற்குக் கொண்டு வரப்பட்டுத் திருவாரூரில் எழுந்தருளி வைக்கப்பெற்ற வரலாறு சிவமஞ்சரியின் 15-வது மலரில் பக்கம் 450ல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அது மிகச் சுருக்கமாக மீண்டும் இங்கு வெளியிடப்பட்டுகின்றது.

ஒரு சமயம் பிள்ளைப்பேற்றை வேண்டித் தவம் செய்த திருமால் தனக்குச் சிவபிரான், முருகன், உமாதேவியார் ஆகிய மூவரும் ஒருசேரக் காட்சியளித்ததை மனதில் நினைந்து நினைந்து மகிழ்ந்தார். அக்காட்சியை விசுவகர்மா எனும் தேவதச்சனைனைக் கொண்டு அழகிய திருவடிவமாகச் செய்து அதனைத் தன்மார்பில் வைத்துப் பூசை செய்து கொண்டிருந்தார். பிறகு திருவடிவத்தைத் தேவர்களின் நல்வாழ்வின் பொருட்டு இந்திரனிடம் அளித்தார். அவன் இந்திரலோகத்தில் அம் மூர்த்தியை வைத்துச் சிறப்பான பூசனைகளைச் செய்து வழிபட்டு வந்தான்.

ஒரு சமயம் இந்திரன், தேவலோகத்தின் மீது படையெடுத்து வந்த "வலன்" எனும் அசுரனை வெற்றிகொள்ள முடியாமல் பூமண்டலத்தையாளும் முசுகுந்த சோழ மன்னனின் உதவியை நாடினான். முசுகுந்தனும் அசுரனைக் கொன்று இந்திரனுக்கு வெற்றியைத் தேடித்தந்தான்.

முசுகுந்தனுக்குப் பரிசளிக்க விரும்பிய தேவேந்திரன் அவனிடம் அவன் விரும்பியதைக் கேட்குமாறு கூறினான். முசுகுந்தன், தேவேந்திரனிடம், "அமரேந்திரனே எம்மிடம் எல்லா செல்வங்களும் நிறைந்துள்ளன. நாம் விரும்புவது நீ வணங்கிவரும் தியாகேசப் பெருமானின் திருவடிவத்தை மட்டுமே. அவரை நீ எமக்களித்தால் பூவுலகில் நிலைப்படுத்தி வணங்குவேன் என்றான். தியாக்ராஜரைப் பிரியமனமில்லாத இந்திரன்மறுநாள் தருவதாக வாக்களித்தான். அன்றிரவே தியாகராஜரைப் போலவே மேலும், ஆறு உருவங்களைச் செய்து தன் பூசை மண்டபத்தில் வைத்துவிட்டான்.

மறுநாள் முசுகுந்தனிடம் இந்திரன் ஏழு திருவடிவங்களையும் காட்டி, விரும்புவதை எடுத்துக் கொள்ளுமாறு கூறினான். முசுகுந்தன் அதைக்கண்டு திகைத்துவிட்டான் என்றாலும், இறைவனின் திருவருளால் உண்மையான திருவடிவினைக்



கண்டுபிடித்து அதனையே தருமாறு கேட்டான். இந்திரன் அந்த வேண்டுகோளை மறுக்க இயலாது. மூலத்தியாகருடன் மற்ற ஆறு தியாகராஜர்களையும் சேர்த்தே அவனிடம் அளித்தான்.

முசுகுந்தன் ஒரு பெரிய தேரில் ஏழு தியாகராஜ வடிவங்களையும் எழுந்தருளிவித்துக் சோழ நாட்டை அடைந்தான். நல்லூரில் மூன்று நாட்கள் வைத்துப் பூசித்த பின் பல தலங்கள் வழியாகத் திருஆரூரை அடைந்தான்.

திருவாரூரில் ஏழு அங்கங்களைக் கொண்டதான பெரிய வசந்த மண்டபத்தை நிறுவி அதில் ஏழு தியாகராஜர்களையும் வைத்து நெடுங்காலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூசித்தான். பிறகு மூலத்தியாகரைத் திருவாரூரில் அமைத்து விட்டு, மற்ற தியாகராஜர்களைத் திருக்கோளிலி, திருவாய்மூர், திருக்காரவாசல், திருநள்ளாறு, திருமறைக்காடு, நாகப்பட்டினம் ஆகிய ஆறுதலங்களில் எழுந்தருளி வைத்தான். இந்த ஆரூர் உள்ளிட்ட ஏழு தலங்களே சப்த விடங்கத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை யாவும் திருவாரூரைச் சார்ந்தே அமைந்துள்ளன.

திருவாரூரில் இருப்பது போலவே இந்த ஆறு தலங்களிலும் கருவறையின் தென்கிழக்கில் தனிச் சந்நிதியில் பொற்சிம்மாசனத்தில் தியாகராஜர் எழுந்தருளியுள்ளார். சிம்மாசன மேடையும், மேற்கட்டும், முன்புறம் வீரகட்கங்களும், நேர் எதிரில் உலோகத் தாலான நின்ற இடபமும், அவரைத் தொழுபவராக (பரவையார் உடனாய) சுந்தரமூர்த்திசுவாமிகளும் அமைந்துள்ளனர். இத்தலங்களில் தென்றல் வரும்வாயிலும் அமைக் கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தியாகராஜ் மூர்த்திக்கும் தனித்தனி விழாக்களும், தனித்தனி நடனங்களும், தனித்தனிச் சிறப்புகளும் உள்ளன. அவற்றை அந்தந்தத் தலபுராணங்களில் கண்டு மகிழலாம்.

இந்த ஏழுதலங்களையும் எளிதில் நினைவிற் கொள்ள உதவும் பாடலொன்று உள்ளது. அது

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில் - பேரான
ஒத்த திருவாய்மூர் உகந்த திருக்கோளிலி
சத்த விடங்கத் தலம்.

என்பதாகும்.

திருக்காரவாசல் - ஆதிவிடங்கர்

திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் திருவாரூரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தலம் "திருக்காறாயில்" என்கிற திருக்காரவாசல். இங்கு சாலையோரத்திலேயே ஆலயம் அமைந்துள்ளது.

ஆதியில் இந்த இடம் கருப்பு அகில் மரங்களால் நிறையப்பெற்றிருந்ததால் திருக்காரகில் என அழைக்கப்பட்டது என்றும் அதுவே பின்னா ளில் திருமுறைகளில் 'திருக்காறாயில்' என வழங்கப்பட்டதென்றும் கூறுகின்றனர். இந்நாளில் அப்பெயர் திரிந்து "திருக்காரவாசல்" என வழங்குகிறது.

இங்கு அமைந்துள்ள கயிலாயநாயகி உடனாகிய கண்ணாயிரநாதர் கோயிலில் கருவறைக்கு இணையாகத் தியாகராஜர் சந்நிதி அமைந்துள்ளது.

இந்தச் சந்நிதியுள் விதானத்துடன் கூடிய உயர்ந்த மேடைமீது சிம்மாசனத்தில் தியாகராஜர் எழுந்தருளியுள்ளார். முன்புறம் வீர வெண்டையங்களைக் காண்கிறோம். (இவருடைய சந்நிதியில் முன்னாளில் மரகதலிங்கம் இருந்ததாக அறிகிறோம். அது இந்நாளில் இல்லை)

தியாகராஜருக்குரிய ஆறு அபிஷேகங்கள், கிரகண புண்ணியகால அபிஷேகங்கள் யாவும், சிறப்பாக நடைபெறுகின்றன. இந்தத் தியாகராஜர் "ஆதிவிடங்கர்" என்று அழைக்கப்படுகின்றார். அநாதியான சிவபெருமான் உலகத் தோற்றத்தின் ஆதியாகவும் இருப்பதையே இப்பெயர் உணர்த்துகின்றது.

இவர் ஆடும் நடனம் குக்குடநடனம் எனப் படும். இது போருக்குச் செல்லும் கோழியானது இடமும் வலமும் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துப் பார்த்து முன்னே றியும், சற்று நிதானித்தும் சுழன்றும் தாக்குவதுபோல் ஆடும் நடனமாதலின் குக்குட நடனம் எனப்பட்டது. வைகாசி விசாகத்தில் பெருந் திருவிழா கொண்டாடப் படுகின்றது.

இக்கோயில் நகரத்தார் திருப்பணியில் பொலிவுடன் விளங்குகின்றது. பழைய கோயிலை முழுவதுமாகப் பிரித்தெடுத்துவிட்டு நல்ல கருங்கல்லால் கலை வேலைப்பாட்டுடன் தேவகோட்டை முத்துகரு செட்டியார் வகையறாவினரால் புதுப்பிக் கப்பட்டுள்ளது. அவர்களாலேயே சிறப்பாக நிர்வகிக் கப்பட்டு வருகின்றது.

இவ்வூர்த் தலபுராணம் வடமொழியில் அமைந்திருந்தது. அதனை தேவிகோட்டை வித்துவான் சொ. வேலுசாமிக் கவிராயர் மொழி பெயர்த்து எழுதியுள்ளார். இது 1924-ஆம் ஆண்டில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் முன்பகுதியாக உள்ள தோத்திரப்பாக்கள் தேவிகோட்டை வித்துவசிகாமணி சிதம்பரஞ் செட்டியாரால் பாடப் பெற்றுள்ளன.

இதில் நைமிசாரண்ய சருக்கம் தொடங்கி நாற்பது சருக்கங்களில் தலவரலாறு கூறப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக வடமொழியில் அமைந்த சுவாமி அஷ்டோத்ர சதநாமாவளியும், அம்பிகா அஷ்டோத்தர சத நாமாவளியும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூலில், முசுகுந்தன், தியாகராஜரை இந்தத் தலத்தில் பிரதிஷ்டை செய்தது, அவருடைய சிங்காதனச் சிறப்பு. அவருக்குச் செய்யவேண்டிய அபிஷேக முறை, தியாகராஜ ரகசியம் ஆகியன விளக்கமாகத் தனித்தனிச் சருக்கங்களில் கூறப் பட்டுள்ளன.

இதில் விடங்கப்பெருமானுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்கள் விரிவாகக் குறிக்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தியாகராஜருக்கு அணிவிக்கப்படும் தியாகப்பரிவட்டம் என்னும் துணிகளை விவரிக்கும் பகுதியைக் கூறலாம். இதன்படி சதுரவடிவான பூமி தத்துவ பூந்துகில் நான்கும், அரைவட்ட வடிவாயுள்ள நீர்த்தத்துவ ஆடை ஐந்தும், முக்கோண வடிவான அக்னி தத்துவ ஆடை மூன்றும், ஆறுகோண வடிவாயுள்ள வாயுதத்துவ வஸ்திரம் ஐந்தும், வட்ட வடிவமான ஆகாயதத்துவ ஆடை மூன்றும் ஆக இருபத்தியோரு ஆடைகளை அணிவிக்க வேண்டும் என்று குறித்திருப்பது புதியசெய்தியாகும்.

மேலும் காறாயில் ஆதிவிடங்கர் வெள்ளைச் செவ்வந்தி மலர்களைச் சிறப்பாக சூடுகின்றார் என்றும் இந்நூல் குறிக்கின்றது.

இந்நூலில் உள்ள சிங்காசன விதிச்சருக்கம் தியாகராஜரின் சிம்மாசனத்தைப் பற்றிய விரிவான விளக்கத்தைக் கூறுகிறது. அதன்படி இச்சிம்மாசனம் நல்ல சந்தனமரத்தால் செய்யப்பட்டு தங்கத் தகடுகளால் கவசமிடப்பட வேண்டும். சந்தன மரத்திற்குப் பதிலாகத் தேவதாரு மரத்தையும் பயன்படுத்தலாம். அது மத்திம பலனைத் தருவதாகும். தங்கத் தகடுகளால் கவசம் அமைப்பது உத்தமம் என்றும்

திருக்காரவாசல் - ஆதிவிடங்கர், முன்னிலையில் ஸ்ரீசுந்தர மூர்த்திசுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளியால் அமைப்பது மத்திமம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன் நான்கு கால்களும் நான்கு வலிய சிங்கங்களால் தாங்கப்பட வேண்டும். இதன் எட்டு திக்கிலும் அஷ்டதிக்பாலகர்களின் உருவங்கள் அமையவேண்டும். நான்கு பக்கமும் கற்பவிருட்சம் காமதேனு, இடபங்கள் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். நடுவில் மலர்ந்த தாமரையும் அதன்மீது ஸ்ரீசக்கரம் அமைந்திருக்க அதன் நாற்புறமும் பிரம்மா, விஷ்ணு உருத்திரன் மகேசன் முதலிய தேவர்களின் உருவங்கள் அமைந்திருக்க வேண்டும். இது ப்ருதிவி பிரஸ்தாரத்தின் வடிவமாகும். இதன்மீது அமர்த்தியே தியாகராசனைப் பூசிக்க வேண்டும். இந்த அமைப்பில் தான் திருவாரூர் பெருமானின் சிம்மாசனம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தியாகராஜ வழிபாட்டினை விளக்கும் பல அரிய விரிவான செய்திகளை இந்நூல் குறிப்பிடுகின்றது.

நாகப்பட்டினம் - அழகிய விடங்கர்

தஞ்சைத் தரணியின் கிழக்குக் கடற்கரையோர நகரங்களில் ஒன்று நாகப்பட்டினம்.

இந்த நகரின் மையப்பகுதியில் "நாகைக் காரோணம்" என்ற பாடல்பெற்ற சிவத்தலம் உள்ளது. இங்கு நீலயதயாக்ஷி அம்பிகை உடனாய காயாரோகணேசுவரப் பெருமான் எழுந்தருளியுள்ளார்.

இக்கோயிலில் கருவறைக்கு இணையாகத் தெற்கில் தியாகராஜரின் சந்நிதி அமைந்துள்ளது. இதில் பெரிய மேடைமீது முத்துவிதானத்தின் கீழ் தியாகராஜப்பெருமான் அழகிய சிம்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார். இவருக்குச் "சுந்தரவிடங்கர்" என்பது பெயராகும். இவருக்கு முன்புறத்தில் இரண்டு வீரகட்கங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இவருடைய நடனம் பாராவார தரங்க நடனம் என்று அழைக்கப்படும். பாராவாரம் என்றல் கடல். தரங்கம் என்றால் அலைகள். கடலின் மீது தோன்றும் அலைகள் கரைமீது சுழன்று வீழ்ந்தும் தணிந்தும் அடிப்பது போன்று உயர்ந்தும் தாழ்ந்தும் இவர் ஆடுவதால் தியாகராசநடனம் பாராவார தரங்க நடனம் எனப்பெயர் பெற்றது. இதனை வீசி நடனம், சுந்தர நடனம் என்பாரும் உண்டு.

இவருடைய சந்நிதியில் முன்னாளில் கோமேதகத்தால் ஆன அழகிய லிங்கம் பிரதி விடங்க லிங்கமாக வைத்து பூசிக்கப்பட்டு வந்தது. அது களவுபோய் விட்டதால் தருமையாதீனக் குருமகா சந்நிதானத்தால் அளிக்கப்பெற்ற ஸ்படிக லிங்கத்தை வைத்து பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன.

தியாகராஜருக்கு முன்புறம் மகாமண்டபத்தில் உலோகத்தாலான நின்ற இடபமும் அவருக்குப் பின்புறம் பரவைநாச்சியார் உடனாய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் எழுந்தருளியுள்ளனர். தியாகேசருக்கு ஆண்டிற்கு ஆறுகால அபிஷேகத்துடன், கிரகண புண்ணிய கால அபிஷேகங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. சப்தவிடங்கத் தலங்களில் அமைந்துள்ள தியாகராஜர் சந்நிதிகளில் மிகவும் பெரியது இதுவேயாகும்.

இந்தச் சந்நிதி மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ளது. இவனுடைய 14வது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு இக்கோயிலைப் புதுப்பித்தது பற்றியும், மருதமங்கலமுடைய மலைமேல் அமர்ந்தவன் என்கிற வானவன் விழுப்பரையன் அழகிய விடங்கருக்குப் பொன்னும் மணியும் ஆபரணங்களும் கொடையாக அளித்ததையும் குறிப்பிடுகின்றது.

பின்னாளில் எழுந்த கடல்நாகைக் காரோண புராணம் முந்திய வரலாற்றை மாற்றி, சாலீசுகள் என்பான். இங்கு தியாகராஜரை எழுந்தருளி வைத்தான் என்று குறிப்பிடுகின்றது.

இப்புராணம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப்பெற்றதாகும். இதிலுள்ள சுந்தரவிடங்கப்படலம் நாகை அழகிய விடங்கரின் பெருமைகளை விரிவாகப் பேசுகின்றது. முசுகுந்தன் இங்கு வழிபட்டுத் தமது பிரம்மஹத்திக் குற்றத்தைப் போக்கிக் கொண்டான் என்று இப்புராணம் கூறுகிறது. சுந்தரவிடங்கரைக் "காரோணச் சிந்தாமணி" என்று புராணம் குறிக்கின்றது. இவரை ஓராண்டுகாலம் நினைந்து தொழுவார்க்குப் பிள்ளைப்பேறு கிட்டும் என்று நம்பப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு - நகவிடங்கர்

சனீசுவரன் சிறப்புடன் எழுந்தருளியுள்ள திருத்தலமாக விளங்கும் திருநள்ளாறு, யூனியன் பிரதேசத்திலுள்ள காரைக்காலுக்கு மேற்கே 5.கி.மீ தொலைவில் இருக்கிறது.

இந்த ஊரின் மையத்தில் போகமார்த்த பூண் முலையாள் உடனாய தர்பாரண்யேசுவர சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. இங்கு திருவோலக்க மண்டபம் ஆகியவற்றுடன் கூடிய தியாகராஜரின் சந்நிதி அமைந்துள்ளது. இதனுள்தியாகராஜர் பெரிய வெள்ளி விதானத்தின் கீழ், வெள்ளி மஞ்சத்திலுள்ள சிம்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார். இவருக்கு முன்பாக இரண்டு வீரகட்கங்கள் வைக்கப் பெற்றுள்ளன.

இவருக்கு நகவிடங்கர் என்ற பெயர் வழங்குகின்றது. நாகவிடங்கர் என்ற பெயரே, மருவி நகவிடங்கர் என வழங்குகிறதென்பர். "நாகம் பூண்டு கூத்தாடு நள்ளாறனே" என்று தேவாரம் குறிப்பதால் இவர் நாகவிடங்கர் என்று அழைக்கப்பட்டார் என்பர். மேலும் நகம் என்பதற்கு மலை என்பது பொருள். இவர் மலைபோல கம்பீரமாக இருப்பதால் இப்பெயர் பெற்றார் என்பர்.

இவருடைய சந்நிதியில் ஜாதிப்பச்சைக் கல்லாலான மரகதலிங்கம் அமைந்துள்ளது. இதற்கே ஐந்துகால நாட்பூசைகள் நடைபெறுகின்றன. இவருக்குச் "செண்பகத்தியாகர்" என்பதும் பெயராகும்.

இவருடைய் நடனம் உன்மத்த நடனம் எனப்படும். உன்மத்தம் என்பது பித்துப் பிடித்த நிலையாகும். பெருமான் பித்தனைப் போல் சுழன்று சுழன்று ஆடுவதால் இப்பெயர் பெற்றார்.

வைகாசிமாதம் பூரட்டாதியில் கொடியேற்றி தொடர்ந்து வசந்தவிழா, தேரோட்டம், பக்தக்காட்சி, ஆகியன நடைபெறுகின்றன. விழாவில் தியாகராஜர் பெரிய தேரில் வருவது கண்கொள்ளாக் காட்சி யாகும்.

ஆலயத்தின் வடமேற்கில் தியாகராஜர் எண்ணெய்க் காப்பு (அபிஷேகம்) கொண்டருளும் பெரிய மண்டபம் உள்ளது. வசந்த மண்டபம் திருவோலக்க மண்டபம் ஆகியனவும் உள்ளன. வசந்தவிழாவின் போது ஆலயப் பிரகாரத்தில் தியாகராஜர் வலம் வந்து எட்டு திசையிலும் கொடி யேற்றி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருள்கின்றார்.

மேலும் திருவிழாவின்போது தியாகராஜர் இக்கோயிலில் அமைந்துள்ள இடையன் - இடைச்சியருக்குப் பக்தகாட்சி அருளும் ஐதீகமும் நடைபெறுகின்றது.

கோயிலுக்கு ஒரு கி.மீ தொலைவில் சம்பந்த ரோடை என்ற ஒரு ஓடை உள்ளது. இங்கு மலரும் செங்கழுநீர்பூக்களைக் கொண்டே தியாகராஜ ருக்குத் தினப்பூசைகள் நடைபெறும் என்றும் கூறுகின்றனர்.

இங்குள்ள தியாகருக்குப் "புத்திரத்தியாகர்" என்பதும் பெயராகும். நெடுநாளாகப் புத்திரப்பேறு இன்றி வருந்திய இந்திரன் இவரை நோக்கித் தவம் புரிந்தான். இப்பெருமான் அவனுக்கு இந்திர லோகத்தில் இன்பத்திற்கு மட்டுமே இடமுண்டு. இனவிருத்திக்கு இடமில்லையாதலால் ஆயிரம் யாகங்களைச் செய்து முடித்து இந்திரனாகும் தகுதி பெற்றிருந்த ஒரு மன்னனை அவனுக்கு மானச மைந்தனாகக் கொடுத்தார். அவனே ஜயந்தன் என்ற இந்திர குமாரனாவான். இந்த ஜயந்தனும் இவரை வணங்கிப் பேறுபெற்றான் என்பர்.

திருநள்ளாற்றுப்புராணம் விரிவாகப் பாடப் பெற்றிருந்தபோதிலும் அதில் தியாகேசரின் வரலாறு பற்றிய விளக்கங்கள் அதிகம் இல்லை.

தியாகேசர் வழிபாட்டில் முத்திரைகள்

தியாகராஜவழிபாட்டில் அனேக முத்திரைகள் இடம் பெறுகின்றன. முன்னாளில் பூசை செய்யும் அர்ச்சகர் முத்திரைகளை மந்திரபூர்வமாகச் சொல்ல ஆலய ஆடற்பணிப் பெண்கள் அந்த முத்திரைகளை அபிநயத்துக் காட்டினர். முத்திரைகள் தெய்வத்தன்மை பொருந்தியதாகப் போற்றப்பட்டன. முத்திரைகளைக் காட்டுவதால் தேவர்கள் மகிழ்கின்றனர். என்று பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன. இதனால் இதனை காட்டும் பெண்கள் சிறப்புடன் போற்றப்பட்டனர். இவர்கள் "கைகாட்டும் முறைக்காரிகள்" என்றழைக்கப்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கோளிலி (திருக்குவளை) - அவனிவிடங்கர்



அவனி விடங்கர் - திருக்குவளை (கோளிலி)

திருக்குவளை என்றழைக்கப்படும் இத்தலம், திருவாரூர் - திருத்துறைப்பூண்டி செல்லும் சாலையில் உள்ள கச்சினத்திலிருந்து 3 மைல் தொலைவில் உள்ளதாகும்.

இங்கு ஆலயத்தின் வாயிலில் பிரம்ம தீர்த்தம் அமைந் துள்ளது. பிரமன் வெண்மணல் கொண்டு சிவலிங்கம் செய்து வழிபட்டுப்பேறு பெற்ற இடமாகும். சுவாமி பிரமபுரீசுவரர் என்றும் அம்பிகை வண்டமர் பூங்குழலாள் என்றும் அழைக்கப்படுகின்றார்.

கருவறைக்கு இணையாகத் தென்பகுதியில் மகாமண்டபம், திருவோலக்க மண்டபத்துடன் கூடியதான தியாகராஜரின் சபை உள்ளது. இதில் தியாகராஜர் பெரிய விதானத்தின்கீழ் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார். முன்புறம் இரண்டு வீரகட்கங்கள் உள்ளன. மகாமண்டபத்தில் உலோகத்தாலான நின்ற இடபம் உள்ளது. எதிரே சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாருடன் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்தின் முகப்பின் மீது பள்ளி கொண்டுள்ள திருமால் தனது மார்பில் தியாகராஜரை வைத்தப் பூசிக்கும் காட்சி சுதைச் சிற்பமாக இடம்பெற்றுள்ளது. இவ ருடைய பெயர் அவனி விடங்கர் என்பதாகும். இந்த அவனியைத் தான் இருந்த இடத்தில் இருந்தே ஆட்டு வதால் இப்பெயர் பெற்றார் என்பர். இவரை "ஊழிப்பரன்" எனவும். ''செல்வத்தியாகேசர்'' எனவும் குறிப்பர். தேவாரத்துள் இப்பெருமான் ''விண்ணுளோர் தொழுதேத்தும் விளக்கு" என்று குறிக்கப்பட்டுள்ளார்.

இவருடைய நடனம் பிருங்கி நடனம் எனப்படும். பூவினில் தேனெ டுக்கும் வண்டு அந்தப்பூவைச் சுற்றிச் சுற்றி எழுந்தும் தாழ்ந்தும் பறந்தும், பிறகு பூவில் அமர்ந்து குடைந்து தேன் குடித்து ஆடுவது போல் ஆடுதலின் இந்த நடனம் ''பிருங்கநடனம்'' எனப்பட்டது.

இங்கு மரகதக் கல்லால் அமைந்து விடங்கலிங்கம் உள்ளது. அதற்கு நாட்பூசைகள் செய்யப்படுகின்றன.

இவர் மீது திருக்குவளை "ஸ்ரீ தியாகராஜ சுவாமி உலா" என்ற நூல் பாடப்பட்டுள்ளது. இந்நூலில் திருக்கோ ளிலியின் புராணச் சிறப்புகள் தல வரலாறுகள் யாவும் சிறப்புடன் பேசப் படுகின்றன.

இக்கோயிலிலுள்ள பத்தொன்ப திற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள். சோழமன்னர்கள் காலத்தில் விளக்கிட வும் விழாக்கள் கொண்டாடவும் அடியவர்களுக்கு அமுது செய்விக் கவும், அளிக்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன. இதன் மூலம் இக்கோயி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லில் முப்பது வட்டத்துக் காணி உடையார் என்ற சிவப்பிராமணர்கள் இருந்தனர். இவர்களிடம் சடையவர்மல் சுந்தர பாண்டியன் என்ற மன்னனின் 18வது ஆட்சியாண்டில் திருவாதிரை நாள்விழா கொண்டாட 800 பொற்காசுகளைக் கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

இங்கு முசுகுந்தார்ச்சனை சிறப்பாக நடை பெறுகின்றது. மாசி மகநாளில் சுந்தமூர்த்தி சுவாமி களுக்கு நெல் அட்டித் தரும் விழா மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. அப்போது பஞ்ச மூர்த்திகள் குண்டையூருக்குச் சென்று விழா காண்கின்றனர்.

மார்கழியில் தியாகராஜர் வசந்த மண்டபத் திற்கு எழுந்தருளிப் பாததரிசனமளிக்கின்றார். சித்திரை மாதப்பிறப்பு, அயன விழாக்கள் முதலிய நாட்களில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

கோள் என்பதற்குக் குற்றங்கள் என்பது பொருள். இங்கு வழிபடும் அன்பர்களின் கோள்தன்னை இறைவன் நீக்கி அருள் பாலிப்பதால் இத்தலம் கோளிலி எனப்பட்டதென்பர். இறைவன் நவகோள்களாகிய நவக்கிரகங்களின் குற்றங்களை நீக்கி அருள்பாலித்ததால் இத்தலம் கோளிலி எனப்பெயர் பெற்றதென்பர்.

இது திருத்தருமபுர ஆதீனத்தின் அருள் ஆட்சிக்கு உட்பட்ட கோயிலாகும்.

திருமறைக்காடு - புவனி விடங்கர்



வேதாரண்யத்து (திருமறைக்காட்டுப்) புவனி விடங்கர்

நாகை மாவட்டத்தின் கடலோர நகரமாக விளங்குவது வேதாரண்யமாகும். இது திருமுறை களில் திருமறைக்காடு என்று போற்றப்பட்ட பழம்பதியாகும். இத்தலத்தின் மையத்தில் யாழைப் பழித்த மென்மொழியாள் உடனாய திருமறைக்காட்டு மணவாளர் (வேதாரண்யேசுவரர்) ஆலயம். பெருங்கோயிலாகத் திகழ்கின்றது. இந்த ஆலயத்தில் கருவறைக்கு இணையாகக் கிழக்கு நோக்கியவாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரிய மகாமண்டபம் உள்மண்டபம் ஆகியவற்றுடன் கூடியதாகப் மிகப்பெரிய தியாகராஜரின் தனி ஆலயம் உள்ளது. இதில் "புவனி விடங்கர்" என்ற பெயரில் தியாகராஜர் எழுந்தருளியுள்ளார்.

இவருடைய நடனம் அம்சபாத நடனம் என்று அழைக்கப்படுகின்றது. அன்னப்பறவை அடிமேல் அடிவைத்து ஒய்யாரமாக நடப்பதுபோல் அமைவதால் இது இப்பெயர் பெற்றது.

இவருடைய சந்நிதியில் "புவனி விடங்கர்" என்ற மரகதலிங்கம் எழுந்தருளிவைக்கப் பெற்றுள் ளது. உயர்வகை ஜாதி மரகதக் கல்லால் அமைந்த இந்த லிங்கம் விலை மதிப்பற்றதாகும். இதற்கு காலையிலும் மாலையிலுமாக இரண்டு வேளை அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

தேர் பழுதுபட்டிருப்பதால் பெருமான் வீதியில் எழுந்தருள்வதில்லை. மற்றபடி வசந்த மண்டபத்தில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். தியாகராஜருக்குரிய ஆறு அபிஷேகங்களும் கிரகண புண்ணியகால அபிஷேகங்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன. திருவாதிரையில் பாததரிசனக் காட்சி சிறப்புடன் நடைபெறுகின்றது.

இவருடைய சந்நிதிக்கு நேர் எதிரில் நின்ற இடபம் உள்ளது. அதற்குப் பின்னணியில் அமைந்த விமானத்தில் இவரைத் தொழுது நிற்பவராக சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அமைந்துள்ளார்.

திருவாரூரில் நடப்பதுபோலவே பெருந்திரு விழாவில் சந்திரசேகரருக்குப் பட்டம் கட்டும் "பட்டோற்சவம்" சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இக்கோயில் யாழ்ப்பாணம் வரணி ஆதீனம் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆகியவற் றால் நிர்வகிக்கப்படுகின்றது.

திருவாய்மூர் - நீலவிடங்கர்

திருவாரூரை அடுத்துள்ள திருக்குவளைக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருவாய்மூர். சாலையோரத்திலேயே கிழக்கு நோக்கியவாறு கோயில் அமைந்துள்ளது. ஆலயத்தின் முன்புறம் சூரியதீர்த்தம் என்ற பெரிய தீர்த்தக்குளம் உள்ளது.

ஒரே பிரகாரம் கொண்ட இக்கோயிலில் கருவறைக்கு இணையாகத் தெற்குப் பிரகாரத்தில் தியாகராஜரின் மண்டபம் அமைந்துள்ளது. இதில் அழகிய பெரிய மஞ்சத்தினுள் அமைந்த சிம்மா சனத்தில் நீலவிடங்கர் என்ற பெயரில் தியாகராஜர் கொலுவீற்றிருக்கின்றார். சப்தவிடங்கங்களில் உள்ள விடங்கர்களில் அளவால் சிறிய விடங்கர் இவரே யாவார். மேலும் இவருடைய சந்நிதியில் அரிய நீல ரத்தினக் கல்லால் ஆன சிவலிங்கம் விடங்கராக வைத்துப் பூசிக்கப்படுகின்றது. உயர்ந்தவகை ஸ்படிகலிங்கம் ஒன்றும் உள்ளது.

நிதி பற்றாக்குறை காரணமாக ஏறத்தாழ இருபதாண்டு காலமாக இங்குப் பெருந்திருவிழாக்கள் நடைபெறுவதில்லை. வைகாசிப் பெருந்திருவிழா ஏகதின உற்சவமாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று பகலில் சந்திரசேகரர் தீர்த்தம் கொடுப்பதும், இரவில் பஞ்சமூர்த்தி விழாவும் நடைபெறுகின்றன. திருவாதிரையின்போது தியாகராஜர் வசந்தமண்டபத் திற்கு எழுந்தருள்கின்றார். இவருடைய நடனம் கமலநடனம் எனப்படும். தண்ணீர் நிறைந்த குளத்தில் தாமரைமலர் தென்றல் வீசுவதற்கேற்ப ஆடுவது போல இவர் ஆடுதலின், இவருடைய நடனம் கமலநடனம் எனப்பட்டது. தினமும் மாலையில் சிறப்பு வழிபாடும் அவ்வேளையில் வடையும், புட்டும் நிவேதனம் செய்யபடுகின்றன.

இவருடைய கோயில் பொற்கோயில் என்றழைக்கப்படுகிறது. திருநாவுக்கரசர் தேவாரத்துள் இதனைப் "பொற்கோயில்" என்றே குறிக்கின்றார்.

மேலும் திருநாவுக்கரசர் திருவாரூரில் தியாகராஜப்பெருமான் பவனிவரும் அழகைக் கண்டு பரவசமடைந்து "ஆதிரை நாளால்" அது வண்ணம் என்று பாடியது போலவே வாய்மூர் அடிகளான தியாகேசர் பவனி வந்த அழகையும் கண்டு களித்துப் "பாட அடியார் பரவக்கண்டேன்" என்ற பதிகத்தினை அருளிச் செய்துள்ளார். திருவாரூர் விழாவில், பக்தர்கள் பாடியாட, சித்தர்கள் சூழ்ந்து நிற்க, பதினெண்கணங்கள் உடன்வர, விநாயகனும், பார்வதியும் உடன்வர பக்தர்கள் கழல் வலங்கொண்டு உடன்வர, பெருமான் வலம் வந்தது போலவே இங்கும் வலம்வந்த அழகைக் கண்ணாரக் கண்டு களித்து "வாய்மூர் அடிகளை நான் கண்ட வாறே" என்று பாடுவது படித்து இன்புறத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்லூர் தியாகராஜர்

கும்பகோணத்தை அடுத்துள்ள நல்லூர் தியாகராஜ வழிபாட்டில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள தலமாகும். முசுகுந்தன் இந்திரனிடமிருந்து ஏழுதியாகராஜர் திருமேனிகளையும் பெற்றுக்கொண்டு பூமிக்கு வந்ததும் முதலில் தங்கிய திருத்தலம் இந்த நல்லூரேயாகும். அவன் இங்கு தியாகராஜர்களை வைத்து மூன்று நாட்கள் பூசித்த பின்னரே பலதலங்கள் வழியாகத் திருவாரூருக்கு ஏடுத்துச் சென்று நிலைப்படுத்தினான் என்று கூறப்படுகின்றது.

அப்பர் சுவாமிகள் அருளியுள்ள கீழ்காணும் பதிகத்தில் நல்லூரினின்று திருவாரூருக்குத் தியாகராஜர் சென்ற ஊர்கள் வரிசையாகச் சொல்லப்பட்டுள்ள தென்பர்.

நல்லூரே நன்றாக நடமிட்டு
நரையேற்றைப் பழையாறே பாயஏறிப்
பல்லூரும் பலிதிரித்து சேற்றூர்மீதே
பலர்காணத் தலையாலங் காட்டின் ஊடே
இல்லார்ந்த பெருவேளூர் தனியே பேணி
இராப்பட்டீச்சரம் கடந்து மணற்கால்புக்கு
எல்லாரும் தளிச் சாந்தங்குடியிற்காண
இறைப்பொழுதில் திருவாரூர் புக்கார்தாமே

இதன்பொருள் - சிவபெருமான் நல்லூரில் நன்றாக நடனமாடி பழையாறு, சேற்றூர், தலையாலங்காடு பெருவேளூர், பட்டீசரம், மணக்கால், சாத்தன்குடி ஆகிய ஊர்களின் வழியாகப் பயணம் செய்து இமைப்பொழுதில் திருவாரூரில் புகுந்து கோயில் கொண்டார் என்பதாகும்.

நல்லூர் ஆலயம் மாடக்கோயில் வகையைச் சார்ந்ததாகும். கட்டுமலைமீது சுவாமி ஆலயமும் அம்பிகை ஆலயமும் அமைந்துள்ளன. இறைவர் பஞ்சவர்ணேசுவரர் என்றும், அம்பிகை கல்யாண சுந்தரி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இந்தக் கட்டுமலையைச் சுற்றி அமைந்துள்ள பிராகாரத்தில் தென்மேற்கு முனையில் தியாகராசர் சந்நிதியும் அதற்கு அருகில் முசுகுந்தன் நிறுவி வழிபட்ட முசுகுந்தலிங்கமும் அமைந்துள்ளன.

தியாகராஜருக்குரிய சிறப்பு அபிஷேகங்களும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும்.

திருமாலுக்குச் சக்கரம் வழங்கிய திருவீழிமிழலை வீழிவிடங்கர்

ஒரு சமயம் முசுகுந்தன் இந்திர உலகிற்குச் சென்றான். அவனை உபசரித்த இந்திரன் பூ மண்டலத்தில் நடைபெறும் தியாகராஜ வழிபாட்டைப் பற்றி விசாரித்து அறிந்து கொண்டபின் தியாகராஜருக்கு நிவேதிக்க திராட்சைப் பழங்களைக் கொடுத்தனுப்பினான்.

அவற்றை எடுத்துக்கொண்டு பூவுலகம் திரும்பிவந்த முசுகுந்தன் ஆரூர்தியாகேசர் சந்நிதியை அடைந்து வழிபட்டான். அப்போது அவனிடம் நந்தியம் பெருமான் திருவீழிமிழலையில் திருமால் புதிய சக்ராயுதம் வேண்டித் தவம் புரிவதால் அவருக்கு அருள்புரிய அங்கு சென்றுள்ளார் என்று கூறினார். அவன் திருவீழிமிழலையை அடைந்தான். அங்குத் திருமாலுக்குச் சக்கரத்தை வழங்கிய பெருமான் அவர் மகிழ இருந்தாடும் கூத்தினை ஆடிக்காட்டினார். முசுகுந்தனும் அதைக் கண்டு மகிழ்ந்ததுடன் திராட்சைப் பழங்களை அவருக்கு நிவேதித்து மகிழ்ந்தான். அப்படி விடங்கராக ஆடியதால் பெருமானுக்கு வீழிவிடங்கர் என்பது பெயராயிற்று (விரிவான விளக்கத்தை பின்வரும் மலரில் காண்க).

கொங்கு நாட்டு அமரவிடங்கர்

பாரியூர் என்றத் திருத்தலம் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையத்தின் அருகில் அமைந்துள்ளது. இங்குள்ள சிவாலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு அமரவிடங்கர் என்பது பெயராகும். இவர் பெயரில் அமர விடங்கர் குறவஞ்சி என்ற நூல் பாடப்பட்டுள்ளது. நிறைய கல் வெட்டுக்களைக் கொண்டுள்ள இக் கோயில் கொங்கு நாட்டு விடங்கத் தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரனுக்கு அருள்புரிய எழுந்தருளிய

கீழ்வேளூர் அட்சய விடங்கர்

நாகப்பட்டிணத்திற்கு மேற்கே ஏறத்தாழ பத்துகிலோமீட்டர் தொலைவில் உள்ளது கீழ்வேளூர். இவ்வூர் இந்நாளில் கீவளூர் என்றழைக்கப்படுகின்றது.

ஊரின் மையத்தில் கிழக்குநோக்கியவாறு அட்சயவிடங்கர் ஆலயம் அமைந்துள்ளது. கிழக்குக் கோபுர வாயிலின் வழியாக உட்சென்றால் பெரிய கட்டுமலையைக் காண்கிறோம். கட்டுமலை மீதுள்ளதால் இதனை மாடக்கோயில் என்பர். "சித்ரகூடபர்வதம்" என்ற இந்தக்கட்டுமலைக்குச் சீராக அமைக்கப்பெற்ற பதினெட்டுபடிகள் உள்ளன. அவற்றின் மீதேறி அகன்ற விசாலமான மண்டபத்தினை அடைகின்றோம். படிகளுக்கு நேரே காட்சியளிக்கும் கொலுமண்டபத்தில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியுள்ளார். இவரே "அட்சவிடங்கர்" என்று அழைக்கப்பெறுகின்றார். திருவாரூரில் தியாகராஜரைத் தனது தேவர்கூட்டத்துடன் கூடிநின்று பூசித்த இந்திரன், தியாகரைத் தான்மட்டும் தனித்து நின்று ஏகாந்தமாக வழிபட இங்கு வந்தான் என்பர்.

அவனுக்குச் சிவபெருமான் தியாகராஜ கோலத்தில் மார்கழி மாதம் அமாவாசையன்று காட்சியளித்து அருள்பாலித்தார். அவன் அன்று அவருக்கு நிறைபணி உற்சவத்தைச் செய்து மகிழ்ந்தான். மேலும் சித்திரைத் திங்களில் பெருமானுக்கு யானைக் கொடியை ஏற்றிப் பெருவிழாவினைச் செய்தான். இந்தத் தியாகேசப் பெருமானுக்குப் பொற்கோயில் தம்பிரான், தேவநாயகர் என்பன பெயர்களாகும்.

இவருடைய சந்நிதியில் இந்திரநீலக்கல்லான சிவலிங்கம் விடங்க லிங்கமாக இருந்ததென்று கீழ்வேளூர் உலா குறிக்கின்றது.

முன்னாளில் சித்திரைமாதம் திருவிழா நடைபெற்று வந்துள்ளது. காலப்போக்கில் விடங்கர் உலாவரும் பெரியதேர் பழுதுபட்டதால் பெருந் திருவிழா நின்று போனதென்று கூறுகின்றனர். சுமார் எண்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பெருந் திருவிழா நடைபெறாததால் தியாகராஜருக்குரிய சிறப்புக்களை நாம் இப்பொழுது கண்டு அறிந்து மகிழமுடியவில்லை.

திருக்கொட்டாரத்தில் ஐராவதம் பூசித்த வெள்யானை விடங்கர்

புகழ்பெற்ற சனீசுவரத் தலமான திருநள்ளாற்றுக்கு அருகிலுள்ள திருமுறைத் தலம் கோட்டாறு. இது இந்நாளில் கொட்டாரம் என வழங்குகின்றது. இந்திரன் கீழ்வேளூரிலும், அரம்பையர் திருப்பைஞ்லியிலும், காமதேனு திருவான்மியூரிலும் தியாகராஜரைப் பூசித்து அருள்பெற்றது போலவே கொட்டாரத்தில் இந்திரனின் யானையான ஐராவதம் தியாகராஜரைப் பூசித்துப் பேறுபெற்றது என்பர். தேவாரத்தில் ஐராவதம் இங்கு வழிபட்டதை "நின்று மேய்ந்து நினைந்து மாகரி நீரொடும் மலர் வேண்டி வான்மழை குன்றின் நேர்ந்து உகுத்திப் பணி செய்யும் கோட்டாறு" என்று குறிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டு இங்கு "வெள்ளானை விடங்கர்" என்ற தியாகராஜர் எழுந்தருளிவைக்கப் பெற்றிருந்தார் என்றும் அவருக்கு தினமும் வெள்ளைச்சாமந்திப் பூக்களலான நான்கு மாலைகள் சாத்த நிலமளிக்கப்பட்ட செய்தியையும் குறிக்கின்றது. இந்நாளில் இத்தலத்து இறைவர் ஐராவதீசுவரர் என்றும் அம்பிகை மலர்க்குழல்நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

☐ கச்சினத்து இந்திர விடங்கர் - இந்திரன் பூசித்துப் பேறு பெற்ற திருத்தலங்களில் ஒன்று திருவாரூரை அடுத்துள்ள கச்சினமாகும். இங்குள்ள சோமாஸ்கந்த மூர்த்திக்குத் தியாகராஜர் என்ற பெயர் வழங்குகிறது. புரட்டாசி மாதத்தில் நிறைபணி விழாவும், முசுகுந்தார்ச்சனையும் சிறப்பாக நடைபெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பகுதியில், திருவாரூர்த் தியாகராஜர் அன்பர்களின் வேண்டுகோளையேற்று அவர்களுடைய இருப்பிடத்திற்கு எழுந்தருளி அருள்பாலித்து வீற்றிருக்கும் பிரதிவிடங்கத் தலங்களைக் காணலாம்.

அம்பர் மகாளம் யாகவிடங்கர்

மயிலாடுதுறை - திருவாரூர் பாதையிலுள்ள பூந்தோட்டத்திலிருந்து கிழக்கே செல்லும் காரைக்கால் சாலையில் 3 கி.மீ சென்றால் அம்பர், அம்பர் மாகாளம் என்ற இரண்டு தேவாரப்பாடல் பெற்றத் தலங்கள் அடுத்தடுத்து உள்ளன. இந்நாளில் அம்பர் "அம்பல்" என்றும், அம்பர் மாகாளம், "கோயில் மாகாளம்" என்றும் மருவி அழைக்கப்படுகின்றன. அகரத் திருமாகாளம் எனவும் ஒரு சிறு தளி உள்ளது.

கோயில் மாகாளத்திலுள்ள பயக்ஷயநாயகி உடனாய மாகாளநாதசுவாமி ஆலயத்தில் கருவறைக்கு இணையாகக் கிழக்கு நோக்கியவாறு தியாகராஜசுவாமி சந்நிதி உள்ளது. இப்பெருமான் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சோமாசி மாறநாயனார் செய்த சோமயாகத்தில் அவிர்பாகம்பெற இத் தலத்திற்கு எழுந்தருளிய மூர்த்தியாவார். இது பற்றிய வரலாறுகள் பெரியபுராணத்தில் இல்லையென்றாலும் நாட்டுப்புற வழக்கில் தனிச் சிறப்புடன் வழங்குகின்றது. இதனையொட்டி இக்கதை அம்பர் புராணத்திலும் பாடப்பட்டுள்ளது. இதனைக் குறிக்கும் வகையில் வைகாசி மாத ஆயில்ய நட்சத்திரத்தில் "யாகத் திருவிழா" என்ற ஐதீக விழா நடைபெறுகின்றது.

அம்பர் என்னும் தலத்தில் மாறன் என்ற நாயனார் வாழ்ந்து வந்தார். இவர் பலசோமயாகங் களைச் செய்து புகழ் பெற்றிருந்தால் "சோமாசி மாறர்" என்றழைக்கப்பட்டார்.

ஒருசமயம் இவருக்குத் தான் செய்யும் யாகத்திற்குச் சிவபெருமான் நேரில் எழுந்தருளி அதில் அளிக்கப்பெறும் அவிர்ப்பாகத்தைத் தனது திருக்கரத்தால் பெற்றுக்கொண்டு தமக்கு அருள்புரிய வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. இதனை எப்படி நிறைவேற்றுவது என்று யோசித்தார்.

அந்நாளில் திருவாரூரில் வாழ்ந்து வந்த தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைத் தோழமை கொண்டு பாடிப் பரவி அவரிடம் பொன்னும் பொருளும் பெற்று வந்ததை அறிந்தார். அவர்மூலம் தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடிவு செய்தார். அதனால் தினமும் திருவாரூருக்குச் சென்று சுந்தரரைச் தரிசித்து

காட்சி கொடுத்தவர்

நீசவடிவில் ஸ்ரீ தியாகேசர்

மதுக்குடம் தாங்கிய இறைவி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தார். சமயம்நேரும் போது தனது விருப்பத்தைச் சொல்லலாம் என்று நேரத்தை எதிர்பார்த்திருந்தார்.

சுந்தரர் சிவயோக வித்தையைப் பயின்று வந்ததால் அதில் உண்டாகும் பித்தமும், மயக்கமும் தீர, தூதுவளைக் கீரையையும், பாகற்காய் பொறியலையும் உண்பது வழக்கம். அதையறிந்த சோமாசிமாற நாயனார் தினமும் பாகற்காயையும் தூதுவளைக் கீரையையும் கொண்டு சென்றுப் பரவையாரிடம் கொடுத்து சுந்தரர் உண்டுமகிழ வகைசெய்தார்.

நெடுநாள் தடையின்றிக் கீரையும், காயும் கிடைத்து வருவது பற்றி மகிழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், பரவைநாச்சியாரிடம் இப்படி கிடைக்கச் செய்பவர் யார்? என்று கேட்டார்.

பரவையார் அம்பர் சோமாசிமாறரே தினமும் கீரையும், காயும் கொடுத்து வருகின்றார் என்றார். மறுமுறை தங்கள் மனைக்கு வந்த சோமாசிமாறரைச் சுந்தரர் அன்புடன் விசாரித்து, "தங்கள் உதவிக்குக் கைமாறாக நான் யாது செய்யலாம்"? என்றார்.

சமயத்தை எதிர்நோக்கியிருந்த சோமாசி மாறர், "ஐயனே நான் செய்துவரும் சோமயாகத்தில் தியாகராஜர் நேரே வந்து அவிர்பாகம் பெற்றுக் கொண்டு எனக்கு அருள் செய்யவேண்டும் என விரும்புகின்றேன். தாங்கள் மனது வைத்து சிவபெருமானை எனது யாகசாலைக்கு எழுந்தருள வைத்தால் நலமாக இருக்கும் அதுவே எனது தணியாத ஆவல் என்றார். சுந்தரர், அன்பனே, சிவபெருமானை உன்னிடத்திற்குச் வரச் சொல்வது ஒன்றும் பெரிய செயல் அல்ல, ஆனால் அலகிலா விளையாட்டை உடைய அவர் எப்படி வருவார், எந்தவடிவில் வருவார் என்பதெல்லாம் தெரியாது, அவர் செய்யும் சோதனைகளில் வெற்றி பெறுவதும் எளிதல்ல. அதில் தவறினால் பழியும், பாவமும் சேரும். நீங்கள் நன்கு யோசித்துக் கூறுங்கள். நான் அவரை யாகத்திற்கு வரும்படிச் செய்கின்றேன் என்றார். சோமாசிமாறர், ஐயனே சிவபெருமான் எந்தவடிவில், வந்தாலும் நான் வரவேற்று உபசரிப்பேன். அவர் வந்து அவிர்ப்பாகம் பெறுவதை மட்டுமே விரும்புகின்றேன். தாங்கள் சிவனை அங்கு வரச் செய்தால் போதும்" என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டார்.

சுந்தரர் அவருடைய தளராத முயற்சியைக் கண்டு மகிழ்ந்து நீங்கள் யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள், நான் தியாகராஜரை அனுப்பி வைக்கின்றேன் என்று கூறி விடைகொடுத்து அனுப்பினார். சோமாசிமாறரும் மகிழ்வுடன் அம்பருக்குச் சென்று யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார். சுந்தரர், "தியாகேசப் பெருமானை வணங்கி மாறனாரின் யாகத்திற்குச் சென்று அவர் கையால் அவிர்பாகம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்தார். பெருமானும் அப்படியே ஆகட்டுமென்றார்.

உரிய நாளில் யாகத்தைத் தொடங்கிய மாறநாயனார் மிகுந்த கவனத்துடனும், பக்தியுடனும் வேள்விச் சடங்குகளைச் செய்தார். அவிர்பாகம்தர வேண்டிய நேரமும் வந்தது.

தியாகராஜர் சுந்தரரின் வேண்டுகோளின்படி யாகசாலைக்கு எழுந்தருளினார். அவரால் பக்தர்களைச் சோதிக்காமல் இருக்க முடியாதல்லவா? அதனால் இயல்பான அரசகோலத்துடன் செல்லாமல் நீசவடிவம் தாங்கிக் திருமாகாளத்திலிருந்து அரைக் கால் சட்டை அணிந்து, ஒரு தோளில் இறந்து போன கன்றுக் குட்டியின் உடலை போட்டுக் கொண்டு மற்றொரு தோளில் கள்குடுவையைத், தொங்கவிட்டுக் கொண்டு கழுத்தில் தொங்கவிட்ட பறையைக் கொட்டியவாறே நடந்தார். அவ்வரைத் தொடர்ந்து நான்கு வேதங்களும் நாய்களாக உருமாறித் தொடர்ந்து ஓடின. அவரை பின்பற்றிப் பொங்கும் கள்பானையை ஏந்தியவாறு எளிய நீசப் பெண்ணாக வடிவம் தாங்கி பார்வதிதேவி நடந்தாள். முருகனும் கணபதியும் சிறுவர்களாக வடிவம் தாங்கி ஆடிப்பாடியவாறே . அவர்களுடன் சென்றனர். ஒளிபொருந்திய முகத்துடனும், அதற்கு மாறான நடையுடையுடனும் காணப்படும் இவர்களைக் கண்டு அனைவரும் வியப்படைந்தனர்.

இவர்கள் நேராக மாறனார் வேள்வி செய்யும் யாகசாலையை அடைந்தனர். இதைக் கண்டு அங்கு கூடியிருந்த பெரும்பாலான வேதப் பிராமணர்கள் யாகசாலை தீட்டுப்பட்டுவிட்டதென்று சொல்லி வெளியே ஓடினர். சிலர் தீட்டு நீங்கக் குளத்தில் வீழ்ந்து மூழ்கினர். அந்த சமயத்தில் விநாயகர் சோமாசிமாறருக்கும் அவருடைய கூட்டத்தாருக்கும் குறிப்பால் வந்திருப்பவர் சிவபெருமானே என்று உணர்த்தி, அவர்களுடைய அச்சத்தைப் போக்கியருளினார். இந்த விநாயகர், சாட்சி விநாயகர், அச்சம் தவிர்த்த விநாயகர் என்ற பல பெயர்களில் இப்போது வணங்கப்படுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோமாசிமாறர் மிகுந்த பக்தியுடன் அவிர் பாகத்தை நீசவடிவில் இருந்த இறைவனிடம் நீட்டினார். இறைவனும் அதைப்பெற்றுக் கொண்டு ஆசிய ளித்தார். பிறகு தனது அரசகோலக் காட்சியை அவர் களுக்குக் காட்டி அருள்புரிந்தார்.

அந்த நினைவுமாறாதிருக்கும் பொருட்டு அம்பர் மாகாளத்தில் கோயில் கொண்டு அன்பர் களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

அம்பர் மாகாளத்தில் தியாகராஜர் சந்நிதியில் வீற்றிருக்கும் தியாகராஜரின் வடிவம் மற்ற விடங்கத் தலங்களில் இருப்பதுபோன்று சோமாஸ்கந்த மூர்த்தமாக இல்லை. நின்ற நிலையில் இரண்டு கைகளுடன், பறையறையும் கோலத்தில் உள்ளது. தலையில் வட்டமாக முடியப்பட்ட சடைமண்டலம் உள்ளது.

அருகில் தனித்த பீடத்தில் கொண்டிதேவி நின்றவாறு காட்சியளிக்கின்றாள். இவளும் தலை யிலுள்ள கள்பானையைப் பிடித்துக் கொள்ளும் பாவ னையில் உள்ளாள். இவளுக்கு இருபுறமும் அழகிய குழந்தைகள் வடிவில் முருகனும் விநாயகரும் உள்ளனர்.

வைகாசிமாதம் ஆயில்யத்தையொட்டி யாகத்திருவிழா கொண்டாடப்படுகின்றது. முதல் நாள் சோமாசிமாறநாயனார் அம்பலுக்குச் சென்று தூதுவளைக் கீரையும், பாகற்காயும் கொண்டு வரும் ஐதீகம் நடைபெறும். இரண்டாம் நாள் பஞ்சமூர்த்திகள் அம்பலுக்கு எழுந்தருள்வர். மதியம் தியாகராசரும் அம்பிகையும் நீச வடிவில் யாகத்திற்கு எழுந்தருளி அவிர்ப்பாகம் பெறும் ஐதீகம் நடைபெறும். அம்பலுக் கும் கோயில் மாகாளத்திற்கும் நடுவிலுள்ள திடலில் "அச்சம் தவிர்த்த விநாயகர்" கோயிலுக்கு அருகில் ஒரு யாகசாலை அமைக்கப்படுகின்றது. அதில் ஐந்து வேள்விக் குண்டங்கள் அமைத்து வேள்வி செய்யப்படுகின்றது. அங்கு சென்று தியாகராஜர் அவிர்ப்பாகம் பெறுகின்றார். பிறகு கோயிலுக்கு வந்து வசந்த மண்டபத்தில் எழுந்தருள்கின்றார். மாலையில் விரிவான அபிஷேகமும் திருவாரூர்த் தியாகராஜருக் குரிய சிறப்பு அலங்காரமும் செய்யப்படுகின்றன.

அம்பல் சென்ற பஞ்ச மூர்த்திகளுக்கு அங்கே சிறப்பு அபிஷேக அலங்காரங்கள் செய்யப் படுகின்றன. அவர்கள் இரவு முத்துப் பல்லக்கில் சிறப்பான ஊர்வலத்துடன் புறப்பட்டு நகர்வலம் வந்து ஆலயத்தில் எழுந்தருள்கின்றனர். அதன் பிறகு அதிகாலையில் தியாகராஜர் புறப்பட்டு சோமாசி மாறநாயனாருக்குச் காட்சி தருவதுடன் அஜபா நடனமாடியபடியே உட்பிரகாரத்தை வலம் வந்து கொலுமண்டபத்தை அடைகின்றார். (மூன்றாம் நாளில் காளி பூசிக்கும் ஐதீகவிழா நடைபெறுகின்றது)

பின்னாளில் இந்த சோமாசிமாறர் சுந்தரரால் "அம்பரான் சோமாசிமாறன்" அடியார்க்கும் அடியேன்" என்று போற்றி வணங்கப்பட்டு அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகின்றார். வன்றொண்டர் பாதந்தொழுது "ஆன சிறப்பு வாய்க்க" என்றும் நிலவும் சிவலோகத்தில் இன்பம் பெற்றார்" எனத் திருத்தொண்டர் புராணம் இவருடைய சிறப்பைப் பேசுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முசுகுந்தனுக்கு புத்திரப்பேற்றை அளிக்கத் திருவாவடுதுறைக்கு எழுந்தருளிய தியாகராஜரான

திருஆவடுதுறைச் செம்பொன் தியாகர் (புத்திரத்தியாகர்)

கும்பகோணம்-மயிலாடுதுறை சாலையில் உள்ள திருவாலங்காட்டிலிருந்து தெற்குநோக்கிச் செல்லும் சாலையில் 2 கி.மீ. சென்றால் திருவாவடு துறையை அடையலாம். இங்கு ஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி அளித்த கோமுத்தீசுவரர் ஆலயமும், சைவத்திருமடங்களில் முதன்மையான திருவா வடுதுறை ஆதீனமும் சிறப்புடன் உள்ளன.

கோமுத்தீசுவரர் ஆலயத்துள் கருவறைக் குத் தெற்கில் அமைந்த பெரிய சந்நிதியில் செம் பொற்றியாகர் எழுந்தருளியுள்ளார். இவர் உள்மண்ட பத்தில் எழுந்தருளியிருக்கத் தென்றல்வாசல் தெற்கில் அமைந்துள்ளது. இவருக்கு நேர்எதிரில் இவரைத் தொழுத வண்ணம் சுந்தரமூர்த்தி நாயனார் உலாத்திருமேனியாக உள்ளார். அவருக்கு முன்னால் நந்தியம்பெருமானின் உருவமும் உலோகக்கண்ணாடியும் உள்ளன. இவருக்குத் திரவியத்தியாகேசர் என்பதும் பெயராகும். இவருடைய ஆலயம் "நவநிதி அம்பலம்" என்று புராணத்துள் குறிக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத் தூண்களில் பதஞ்சலி, வியாக் ரபாதர், முசுகுந்தன், அவனுடைய மந்திரி ஆகியோர் தியாகராஜரைத் தொழும் பாவனையில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளனர்.

இவருக்குச் செம்பொன்தியாகர் என்றும் புத்திரத்தியாகர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

ஞானசம்பந்தர் இவருடைய ஆலயத்தைத் "தேவர்பிரான் மகிழ்கோயில்" என்ற குறிக்கின்றார்.

கல்வெட்டுகளில் இப்பெருமான் "ஆடியரு ளும் உடையார்" என்று குறிக்கப்பட்டுள்ளார். கல் வெட்டின்படி பெருந்திருவிழா புரட்டாசி மாதம் மூல நட்சத்திரத்தில் கொடியேறி பெருந்திருவிழா நடை பெற்று இறுதிநாளில் தீர்த்தமாடுதல் நடைபெற்று வந்துள்ளது.

இந்நாளில் தை மாதத்தில் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. அதில் 5-ம் நாள் தியாகருக்கு "வசந்தம்" கொண்டாடப்படுகின்றது. தியாகர் சந்நிதியிலிருந்து அம்பிகை புறப்பட்டு மூன்றுமுறை உட்பிராகாரத்தை வலம் வந்து மீண்டும் தியாகர் முன்பு வருகின்றாள். பின்பு இருவரும் புறப்பட்டு நடனமாடியவாறே வலம்வந்து வசந்த மண்டபத்திற்கு எழுந்தருள்கின்றனர். வசந்த மண்டபத்தில் சிறப்புப்பூசைகளும், முசுகுந்தார்ச் சனையும், தீபாராதனையும் நடைபெறுகின்றன. அதன்பிறகு தியாகராஜர் நடனமாடியபடியே தமது இருப்பிடத்திற்குத் திரும்புகின்றார். மீண்டும் எட்டாம்நாள் இரவு புறப்பட்டு தேருக்கு எழுந்தரு ளுதல் தேர்த்திருவிழா, பத்தாம்நாள் பக்தர்காட்சி ஆகியன சிறப்புடன் நடைபெறுகின்றன.

இவருடைய சந்நிதியில் "புத்திரவிடங்கர்" என்ற ஸ்படிகலிங்கம் எழுந்தருளிவைக்கப் பட்டுள்ளது. அவருக்கே நாள் வழிபாடுகள் செய்யப் படுகின்றன.

இவ்வூரில் "நீலவிடங்கன் மடம்" என்ற ஒரு மடம் இருந்ததைக் கல்வெட்டால் அறிகின்றோம். அதனால் பெருமானுக்கு நீலவிடங்கன் என்ற பெயர் இருந்திருக்கலாமென்றும் கருதுகின்றனர்.

துறைசைப்புராணம் இங்கு திருவாரூர்த் தியாகராஜர் எழுந்தருளிய வரலாற்றைத் தியாகேச புரக்காண்டம் என்ற பகுதியில் விரிவாகக் கூறுகின் றது. திருவாரூரில் தியாகராஜரை அமைத்து கோயில் கட்டி மகிழ்ச்சியுடன் வழிபட்டு வந்த முசுகுந்த னுக்கு நெடுநாட்களாகப் புத்திரப்பேறு இல்லாமல் இருந்தது. அவன் தியாகேசப்பெருமாளை வணங்கி தனக்குப்பின் தொடர்ந்து குலம் வளர ஒரு சிறந்த மகனை அருளவேண்டும் என்று வேண்டினான்.

அவர், "நாம் திருவாரூரில் இருப்பது போலவே துறைசையிலும் எழுந்தருளியள்ளோம். நீ அங்கு சென்று பூசனை புரிக. உமக்கு வேண்டிய புத்திரப் பேற்றினை அருள்வோமென்றார்" அதன் படியே முசுகுந்தன் இங்கு வந்து தியாக ராஜரை வணங்கி அவருக்கு திருவிழாச் செய்து மகிழ்ந்தான். இதன் பயனாக அவனுக்கு எட்டு புதல்வர்கள் தோன்றினர். இவர்களில் மூத்தவனுக்கு அக்னி வர்ணன் என்பது பெயராகும். அன்று முதல் இவ ருக்குப் புத்திரத் தியாகர் என்பது பெயராயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமலைர்ராயன்பட்டினம் - செண்பகத் தியாகர்

காரைக்கால் நகரத்திற்குத் தெற்கே நாகப்பட்டினம் செல்லும் சாலையில் 3வது கிலோமீட்டரில் அமைந்துள்ளது. திருமலை ராயன் பட்டினமாகும். இங்கு சடாயு என்கின்ற பறவையரசன் பூசித்துப் பேறுபெற்ற சிவாலயம் உள்ளது. இதனால் பெருமானுக்குச் "சடாயுபுரீசுவரர்" என்பது பெயராயிற்று. நீண்ட நெடுங்காலம் சிறப்புடன் விளங்கிய இப்பட்டினம் அழிந்து போயிற்றென்றும் மீண்டும் திருமலைராயன் என்ற மன்னனால் புதியதாக அமைக்கப் பெற்று அவன் பெயரால் திருமலைராஜன் பட்டினம்" என்று அழைக்கப்படுகின்றது என்றும் கூறுகின்றனர்.

இங்குள்ள சடாயுபுரீசுவரர் ஆலயம் தனிச்சிறப்புமிக்கதாகும். அயோத்தி நகரிலிருந்து வனவாசத்திற்காக வந்த இராமனுடன் பஞ்சவடியில் இருந்த சீதையை இராவணன் கபட சன்னியாசி வேடம் பூண்டு அபகரித்துக் கொண்டு வான்வழியாகச் செல்லுகையில் சீதையைக் காக்கச் சடாயு வீரத்துடன் அவனுடன்போரிட்டு மாண்டார். அவருக்கு மோட்சமளித்ததால் இப்பெருமான் சடாயுபுரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். அம்பிகையின் பெயர் மையாடுங்கண்ணி என்பதாகும்.

முசுகுந்தன், திருவாரூரிலிருந்து திருநள் ளாற்றுக்கு விடங்கரை எடுத்துச் செல்கையில் இங்கு அவரை எழுந்தருள வைத்துச் சிலகாலம் பூசித்த பின்னரே அங்கு நிலைப்படுத்தினான் என்பர். அதனை நினைவுகூறும் வகையில் பின்னாளில் இங்கு தியாகேசர் சந்நிதி அமைக்கப்பெற்று, திருநள்ளாற்றில் நடைபெறும் அத்தனை உபசாரங்களும் விழாக்களும் இங்கும் நடத்தப்பட்டு வருகின்றன. இவருக்குச் செண்பகத்தியாகர் என்பது பெயராகும். இவருடைய நடனம் உன்மத்த நடனமாகும்.

முன்னாளில் பெருந்திருவிழா பலநாட் களுக்கு நடத்தப்பட்டுவந்துள்ளது. பிறகு பத்துநாட் களாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இப்போது அது மாசி மகத்தையொட்டி மூன்று நாட்கள் நடைபெறு கின்றது. முதல் நாள் இரவு சந்திரசேகரர் இடபவாக னத்தில் வலம் வருதலும் இரண்டாம் நாள் மாலையில் ஜடாயு ராவணயுத்தம்' என்கிற ஐதிக நாடகமும் அன்றிரவு செண்பகத்தியாகர் உன்மத்த நடனமாடிக் கொண்டே ஆலயத்தை வலம்வந்து வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளி திருவோலக்கக் காட்சி கொடுப்பதும் பிறகு உன்மத்த நடனமாடிய வாறே தனது சந்நிதிக்கு எழுந்தருளுவதும் நடை பெறுகின்றன. தியாகராசரின் நடனமும் அலங் காரமும் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது.

மறுநாளான மாசிமகத்தன்று காலையில் சந்திரசேகரர் கயிலாய பர்வத வாகனத்தில் கடற்கரைக்குச் சென்று தீர்த்தம் கொடுப்பதும், இரவில் புஷ்பபல்லக்கில் வலம்வருவதுமாக திருவிழா கொண்டாடப்படுகின்றது. விழாவினையொட்டி இசைக்கச்சேரிகளும், சொற்பொழிவுகளும் சிறப்பு டன் நடைபெறுகின்றன இது சோழிய வேளாளர்களின் உரிமைக்கோயிலாகும். சோழியவேளாளர் இளைஞர் சங்கம் என்ற அமைப்பினர் மிகுந்த ஈடுபாட்டுடன் விழாக்களை நடத்தி வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்பது முனிவர்களுக்கு அருள்புரிய எழுந்தருளிய

திருத்துறைப்பூண்டி - தீர்த்த விடங்கர்

திருவாரூர் - வேதாரண்யம் சாலையில் அமைந்திருப்பது திருத்தருப்பூண்டியாகும். இந்நாளில் இது திருத்துறைப்பூண்டி என்று அழைக்கப் படுகின்றது. இங்குள்ள பெரியநாயகி (தீர்த்தவல்லி) உடனாய பிறவிப் பிணி மருந்தீசர் (பவஔஷதீசுவரர்) ஆலயத்தில் தீர்த்தவிடங்கர் என்ற பெயரில் சிவபெருமான் சோமாஸ்கந்த மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். திருத்தரு எனும் சொல் வில்வ மரத்தைக் குறிப்பதாகும்.

ஒரு சமயம் அகத்தியர், வாமதேவர், காசிபர், அத்திரி, பரத்வாஜர், கௌதமர், விசுவாமித்திரர், ஜமதக்னி, வசிட்டர் ஆகிய ஒன்பது முனிவர்கள் வில்வவனமாகிய இந்த இடத்தில் தத்தம் பெயரால் தீர்த்தங்களை அமைத்து அதன் கரையில் சிவலிங்கங் களை அமைத்து வழிபட்டனர். இந்த ஒன்பது தீர்த்தங் களுக்கு நடுவில் முனிவர்களும் பிரமதேவனும் காணச் சிவபெருமான் சிவ்லிங்கத்திலிருந்து சோமாஸ்கந்தராக வெளிப்பட்டுத் தமது இருந்தாடும் கூத்தினை ஆடிக்காட்டினார். பிறகு அந்த நினைவு மாறாதிருக்கும் பொருட்டு அவர்களுடைய வேண்டுகோளின்படி சம்புபட்சத் திருமேனியாக இங்கே அமர்ந்தார்.

தீர்த்தங்களின் மத்தியிலிருந்து ஆடி அருள்பாலித்ததால் இந்தத் தியாகராஜருக்குத் "தீர்த்தவிடங்கர்" என்பது பெயராயிற்று. இவருடைய நடனம் "சந்திரசூளாமணிச் சுந்தரத் தாண்டவம்" என்று அழைக்கப்படுகின்றது.

இவர் அமர்ந்திருக்கும் ஆசனம் வஜ்ர சிங்காசனம், வாத்தியம் பஞ்சமுக வாத்தியம், சூடும் சிறப்புமாலைகள் செங்கழுநீர், வெண்சாமந்தி, பாரிஜாதமாலை ஆகியனவாம்.

இவர் முனிவர்களுக்குச் சித்திரை மாதத்தில் நடனம் ஆடிக் காட்டியதால் அதனையொட்டியே பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது.

தீர்த்தவிடங்கரின் பெருமைகளை வில்வா ரண்ய ஷேத்திரமான திருத்தருப்பூண்டி மான்மியத் தில் காணலாம். பல வடமொழி ஓலைச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட் டுள்ளது.

தீர்த்தவிடங்கப் பெருமானுக்குச் சித்திரை முதல் தேதி, ஆடி அயனம், ஐப்பசி முதல் தேதி, தை முதல் தேதி ஆகிய நாட்களில் சிறப்பு அபிஷே கங்கள் நடைபெறுகின்றன. புரட்டாசி பௌர்ணமி யன்று நிறைபணிக்காட்சி நடைபெறுகின்றது. அன்று சிறப்புடன் இந்திரபூசையும், பஞ்சமுக வாத்தியம் வாசித்தலும் நடைபெறுகின்றன. பஞ்சமுக வாத்தியத்தைச் சிறப்பாக பாரசைவர்கள் தாள இலயத்துடன் இசைக்கின்றனர். மார்கழித் திருவாதிரை நாளில் சிறப்புவழிபாடு நடைபெறுகின்றது.

சித்திரை மாதத்தில் 25 நாட்கள் பெருந் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அதில் ஒன்பதாவது நாள் அஷ்டகொடி எனப்படும் வசந்த விழாவும் அன்று இரவு பஞ்சமுகவாத்தியம் வாசித்தலும் சிறப்புடன் நிகழ்கின்றன. பெருந்திரு விழாவில் பாததரிசனம் பக்தர்காட்சி முதலியவை யாவும் சிறப்புடன் நடத்தப்படுகின்றன.

இவருடைய சந்நிதியில் சுவர்ண பந்தனமிடப் பட்ட மரகத லிங்கம் எழுந்தருளி வைக்கப் பெற்றுள்ளது. அதற்கே நாட்பூசைகள் சிறப்புடன் நிகழ்கின்றன. இங்கு நடைபெறும் தியாகராஜரின் திருவிழாக் காட்சிகளும், பவனியும் தனிச்சிறப்புக் களைக் கொண்டதாக அமைகின்றன.

- ❑ வழக்கமாக அம்பிகைக்கும் பெருமானுக்கும் நடுவில் குதித்தாடும் நிலையிலுள்ள முருகன் இங்கு அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றார்.
- ❑ தியாகராஜருக்கு நேர் எதிரிலுள்ள கிழக்குச் சுவரில் ஜன்னலும், அதற்கு நேரே தீர்த்தக் கிணறும் உள்ளன. தீர்த்த விடங்கர் என்ற பெயருக்கேற்ப இவர் சந்நிதிக்கு நேரே தீர்த்தக் கிணறு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பகுதியில் சோழ மண்டலத்தில் எழுந்தருளியுள்ள தியாகராஜத்தலங்களைப் பற்றிய செய்திகளைக் கண்டோம். இப்பகுதியில் தொண்டை மண்டலத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் தியாகராஜர்களைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

திருவான்மியூர் கமலத்தியாகராஜர்

தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகரின் முக்கியமான பகுதியாக விளங்கும் திருவான்மியூர் சைதாப்பேட்டை யிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளதாகும். இங்கு ஊரின் மையப்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு மருந்தீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு கருவறைக்கு இணையாக அமைந்த கொலுமண்டபத்தின் (தியாகராஜர் மண்டபத்தில்) மேற்கில் அமைந்த பெரிய சந்நிதியுள் தியாகராஜப் பெருமான் பெரிய சிங்காதனத்தில் கொலுவீற்றிருக்கின்றார்.



அருள்மிகு தியாகராஜர் - பங்குனி உத்திரநாளில பவனிக்காட்சி

இவர் உண்டான வரலாற்றை விளக்கும் பழைய புராணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனாலும் இராமாயணத்தை இயற்றிய வால்மீகி முனிவர் மோட்சம் பெறவேண்டித் தவம் செய்தபோது சிவபெருமான் இங்கு அவருக்குப் பதினெட்டு நடனங்களை நிகழ்த்திக்காட்டி மோட்சமளித்தார் என்று கூறப்படுகின்றது. இவ்வூரில் வடக்கு மாடவீதியும் மேற்கு மாடவீதியும், சந்திக்குமிடத்தில் தெற்கு நோக்கியவாறு வான்மீகி முனிவரின் திருக்கோயில் அமைந்துள்ளது. இதில் மூலவராகவும் உற்சவராகவும் வால்மீகி முனிவர் எழுந்தருளியுள்ளார்.

பங்குனி உத்திரப்பெருந்திருவிழாவின் 10வது நாளில் பக்தகாட்சி விழாவாக வால்மீகி முனிவருக்குப் 18 நடனம் ஆடிக்காட்டி அருளும் ஐதீகம் நடைபெறுகின்றது. அது தவிர சுவாமி வீதியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவனி வரும் பொழுதெல்லாம் மேற்கு மாடவீதியில் வால்மீகி முனிவருக்கு எதிரே மூன்று நடனங்களை நிகழ்த்துகின்றார்.

மேலும் விழாவின் இறுதிநாளான பதினோராம் நாள் அதிகாலையில் அம்பிகைக்கு நடனங்கள் நிகழ்த்திக் காட்டுகின்றார். அது முடிந்ததும் அம்பிகையும் சுவாமியும் எதிரெதிராக அமைந்த ஊஞ்சல்களில் அமர்ந்து ஆடுவது கண்டு களிக்கத்தக்கதாகும்.

மேலும் இங்கு கோயிலுக்கு நேர் கிழக்கில் பெரிய மேடை (60 அடிக்கு 60 அடி பரப்பளவுள்ள) ஒன்று அமைந்துள்ளது. இதற்குப் பவனிமேடை என்பது பெயர். இந்த மேடைமீது திருவிழாவின் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய நான்கு நாட்களில் நள்ளிரவில் தியாகராஜரின் நடனம் நிகழ்த்தப்படுகின்றது. இவை முறையே மூன்றாம்பவனி, நான்காம்பவனி, ஐந்தாம்பவனி ஆறாம் பவனி என்றழைக்கப்படுகின்றன.



திரிபுரசுந்தரி – திருவான்மியூர்

இத்தகைய பவனிமேடையை வேறு எந்த ஊரிலும் காணமுடியவில்லை. தியாகராஜர் வீதிக்கு எழுந்தருளுதலே இங்கு பவனி என்றழைக்கப்படுகின்றது. பவனியின்போது பெரிய ஆலவட்டங்களைக் கொண்டு வீசுதல், பஞ்சமுக தீவர்த்திகள், எக்காளம், பிரம்மதாளம் இசைத்தல் ஆகியன இடம் பெறுகின்றன. முன்னாளில் பவனியின்போது பதினெட்டு வாத்தியங்களுடன் ஆடலரசிகளின் நாட்டியங்களும் நிகழ்ந்ததென்று கூறுகின்றனர்.

இந்தத் தியாகரின் பெயர் கமலவிடங்கர் என்றும் நடனம் கமல நடனம் என்றும் கூறுகின்றனர். இவ்வூர்க் கல்வெட்டுகள் மூலவரை மருந்தாண்டார் என்றும், தியாகராசரை உலகாளுடைய நாயனார் என்றும் அழைக்கின்றன. சேக்கிழார் பெருமான், பெரிய புராணத்தில் இவரை உலகாளுடையார் என்றே அழைக்கின்றார்.

இவருடைய அலங்காரம் மிகவும் அழகானதாகும் மார்பில் அணிவிக்கப்படும் கல்லிழைத்த பதக்கங்களும் அவற்றிற்குக் கரையிட்டதுபோல பொன்னால் செய்த சாமந்திப்பூக்களின் பட்டையும் தலையில் கல்லிழைத்த சீராவும், வெண்பிறையும் கங்கையும் செவிப்பூக்களும் கலைநயம்மிக்கதாகும். இவர் காமதேனுவுக்கு அருள்பாலித்தால் தேனு விடங்கர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

முன்பு பௌர்ணமிதோறும் தியாகராஜரின் பவனி நடந்து வந்தது. இப்பொழுது திருவாதிரை, கார்த்திகை, பெருந்திருவிழா முதலிய நாட்களில் மட்டுமே நடனம் நடைபெறுகின்றது.

பெருந்திருவிழாவில் பெரியமாலைகளை அணிவித்து சரிகையாலான பெரிய கிளிகளைத் தோளில் பொருத்துகின்றனர். இது கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது.

தியாகராஜரின் திருமணவிழா

☐ தியாகராஜஸ்தலங்களில் தியாகராஜருக்கும் உடனுறை அம்பிகைக்கும் திருமணவிழா நடத்தும் வழக்கமில்லை. திருவான்மியூரில் பங்குனி உத்திரத் திருநாளில் தியாகராஜசுவாமிக்கும் அம்பிகைக்கும் பெரிய அளவில் திருமணவிழா நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஒற்றியூர் தியாகராஜர்

சென்னையின் மையப்பகுதியாகிய பாரிமுனையில் இருந்து திருஒற்றியூருக்கு நகரப் பேருந்துகள் செல்கின்றன. பாரிமுனையிலிருந்து திருஒற்றியூர் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதாகும். பாரிமுனையிலிருந்து திருஒற்றியூருக்கு நகரப் பேருந்துகள் அதிகம் உள்ளன.

இங்கு ஊரின் மையப்பகுதியில் கோயில் உள்ளது. ஆலயத்தில் மூலவராக எழுந்தருளியுள்ள இறைவர் படம்பக்கநாதர், புற்றிடங்கொண்டார் என்று அழைக்கப்படுகின்றார் என்றாலும் இந்த ஆலயம் தியாகராஜப் பெருமானின் பெயரால் தியாகராஜ சுவாமி கோயில் என்றே இக்கோயில் அழைக்கப் படுகின்றது.

இங்கு சுவாமி சந்நிதியின் தென்புறம் அமைந்துள்ள கொலுமண்டபம் என்ற விசாலமான மண்டபத்தின் மேற்கில் தியாகராஜரின் சந்நிதி அமைந்துள்ளது. இவரை வணங்கிய பின்னரே சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வகையில் உள்வாயில் அமைக்கப்பட்டுள்ளது.

தியாகராஜர் சந்நிதிக்குத் தனியான, சிறு சுற்றுப்பிரகாரம் உள்ளது. இந்தச் சந்நிதியுள் அழகிய சதுரமான மேடைமீது தியாகராஜர் எழுந்தருளி யுள்ளார்.

இப்பெருமான் மான் மழு ஏந்தி அபய, சிம்ம கர்ணமுத்திரைகளைத் தாங்கியவராய், வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்து சுகாச னத்தில் அமர்ந்துள்ளார். இடப்புறம் உமாதேவியார் வலக்கரத்தில் மலரேந்தும் பாவனையிலும் இடக் கரத்தில் வரதமுத்திரை தாங்கியும் வலக்காலை மடித்து இடதுகாலைத் தொங்கவிட்டவாறு அமைந் துள்ளார். இருவருக்கும் இடையில் முருகப்பெருமான் குதித்தாடும் நிலையில் எழுந்தருளியுள்ளார்.

அருகில் உள்ள தனிமேடையில் பிரியாவிடை அம்மன் என்னும் தனியம்மன் எழுந்தருளியுள்ளாள்.

இவர் சோழமண்டலத்தில் விண்ணுலகத் திலிருந்து மண்ணுலகிற்கு முசுகுந்தனால் கொண்டு வரப்பெற்று ஆரூரில் எழுந்தருளிவைக்கப்பெற்ற தியாகராஜரைப் போன்றவரல்லர். நந்தியம் பெருமானுக்குக் காட்சி கொடுத்த பின்பு சம்புபட்சத்



ஒற்றியூர் - மாணிக்கத் தியாகர்

திருமேனியாக இங்கு எழுந்தருளிய தியாகராஜப் பெருமானாவார்.

இவர் நந்தியம் பெருமானுக்காக நடனக்காட்சி அருளிய வரலாறு இவ்வூர்த் தலபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கமான செய்திகளைத் தொகுத்து இங்கு காணலாம்.

ஒரு சமயம் நந்தியம் பெருமான் சிவபெரு மானைப் பணிந்து "ஐயனே நீங்கள் கயிலைமால் வரையில் ஆடிய சிவஞானக் கூத்தினைக் கண்டு மகிழ்ந்தேன். ஐம்பெருஞ்சபைகளில் ஆடிய அழகிய கூத்துக்களையும் கண்டு மகிழ்ந்தேன். இவை எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை உண்டாக்கிப் பேரின் பத்தை நல்கின. என்றாலும்தாங்கள் நிகழ்த்திய "இருந் தாடிடும் திருக்கூத்தினைக்" கண்டு களிக்க எண்ணு கின்றேன். அதனை எனக்காக ஒருமுறை நிகழ்த் தியருள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் சிவ பெருமானும் அப்படியே ஆகட்டுமென்றார்.

பிறகு அவரைநோக்கி, "அன்பனே, நீ பூவுலகில் ஜம்புத்துவீபத்தில் கீழைக்கடலுக்கு அருகில்அமைந்த (ஔதும்பரவன்மான) ஒற்றி யூருக்குச் சென்று தவம் செய்து வருவாய் . அங்கு உமக்கு நாம் நமதுஇருந்தாடும் கூத்தினை நிகழ்த்திக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்டுவோம் என்றார். அதன்படியே நந்தியம் பெருமான் பூவுலகிற்கு வந்து ஒற்றியூரில் ஒரு பர்ண சாலையைமைத்துத் தவம் செய்து கொண்டிருந் தார். அங்கு அருகில் எழுந்தருளியிருக்கும் புற்றிடங் கொண்ட பெருமானையும் வழிபட்டு வருவாராயினர்.

இப்படியிருக்கப் பாற்கடலில் யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும் திருமாலின் மார்பில் எழுந்தருளியிருந்த "சோமாஸ்கந்தரான" தியாகராஜர் மறைந்தருளினார். அதைக் கண்டு திருமால் வருந்த சிவபெருமான் அவரிடம், "அன்பனே, நாம் இப்பொழுது பூவுலகில் எழுந்தருள எண்ணியுள்ளோம். ஆதலின் நீ வருந்தற்க, நீயும் பூவுலகம் சென்று ஒற்றியூரில் தவம் செய்வாய் அங்கு உமக்கு எமது இருந்தாடும் கூத்தினை மீண்டும் நிகழ்த்திக் காட்டுவோம் என்றார். திருமாலும் அதன்படியே பூவுலகம் வந்து ரோமரிஷியின் ஆசிரமம் உள்ள திருஒற்றியூருக்கு வந்து தவம் செய்யத் தொடங்கினர்.

இவ்வாறு நந்தியம்பெருமான், திருமால், ரோமரிஷி ஆகியோர் சிறப்பான தவங்களைச் செய்து கொண்டு சிவபெருமானின் திருநடன கோலத்தைக் காண ஆவலாக இருந்தனர். அவர்களைப் பார்த்த தேவர்களும் மூவர்களும் பதினெண்கணங்களும் திருஒற்றியூரில் வந்து கூடினர்.

மாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய நாளில் சிவபெருமான் அங்கு கூடியிருந்த அனைவரும் காணத் தனது இருந்தாடும் கூத்தினை நிகழ்த்தியருளினார். அதைக்கண்டு அனைவரும் மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடினர்.

அதனைப் பலவாறு போற்றி மகிழ்ந்த நந்தியம் பெருமான் அந்தக் காட்சி என்றும் அங்கு நிலைத்திருக்கும்படி அருள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவரது விருப்பப்படியே பெருமான் உலோகத்திருமேனியாக அங்கு எழுந்தருளினார். அம்மூர்த்தியே இப்பொழுது தியாகராஜசுவாமியாக வீற்றிருந்து அங்கு அருள்பாலிக்கின்றார் என்பர்.

இங்கு அத்திமரக்காட்டில் பெருமான் ஆடல் நிகழ்த்தியதால் இந்தச்சபை ஔதும்பர சபை என்றழைக்கப்படுகின்றது. கல்வெட்டுகளில் இப்பெருமான் "காரணைவிடங்கர்" என்றழைக்கப்படுகின்றார்.

மாசி மகத்தை மையப்படுத்தி, பெருந்திரு விழா கொண்டாடப்படுகின்றது. சிவபெருமானின் இந்த நடனத்தைக் காண விரும்பிய நந்தியம் பெருமான் இத்தலத்தில் குடில் அமைத்து தவம் செய்த இடத்தில் நந்தியம்பெருமானுக்கென ஒரு அழகிய ஆலயம் அமைக்கப்பெற்றுள்ளது. இதில் நந்தியம் பெருமான் நாற்கரங்களுடன் நின்றவாறு காட்சி யளிக்கின்றார். மேற்கரங்களில் மான் மழுவேந்தியும் கீழ்க்கரங்களைக் குவித்து வணங்கும் பாவனையிலும் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

ஆலயத்தின் வடமேற்கில், மேற்கு மாடவீதியும், வடக்கு மாடவீதியும் சந்திக்குமிடத்தில் தெற்கு நோக்கியவாறு நந்திதேவரின் ஆலயம் அமைந்துள்ளது. தியாகராஜர் வீதிகளில் உலாவரும்போது இந்த சந்நிதிக்கு முன்பாக நந்தி காணும்படியாகத் தியாகர் ஆடும் நடனம் நிகழ்த்தப்படுகின்றது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இப்பெருமான் மீது கொண்ட அன்பால் இங்கு சிலகாலம் தங்கியிருந்து பல பதிகங்களை அருளிச்செய்துள்ளார். இங்கு சுவாமியின் முன்புறம் (திருவாரூரில் இரண்டு கத்திகள் வைத்திருப்பது போன்று) இரண்டு மயிற்பீலிகள் வைக்கப்பெற்றுள்ளன. இவை இங்கு மயிலானந்தர் என்ற முனிவர் வழிபட்டு இறைவனின் ஆட்ற்காட்சியை கண்டதைக் குறிக்கிறது என்பர்.

இந்தத் தியாகராஜர் எழுந்தருளியுள்ள ஆலயம் "குணாலயம்" எனப்படும். திருவாரூரில் மூலாதார கணபதி எழுந்தருளியிருப்பதைப் போல இங்கு தியாகராஜருக்கு நேர் எதிரில் குணாலய ஹேரம்ப கணபதி எழுந்தருளியுள்ளார்.

திருஒற்றியூர்த் தியாகேசருக்கு மாணிக்கத் தியாகர் என்பதும் பெயர். ஒரு சமயம் திருவாரூர்த் தியாகராசருக்கு பன்மணிகளாலான பதக்கம் ஒன்றைச் செய்ய சோழமன்னன் விரும்பினான். அப்பதக்கத்தின் நடுவில் அமைக்கத்தக்க பெரிய நாயக மணி கிடைக்கவில்லை. அரசனுடைய ஆட்கள் பல இடங்களில் திரிந்த பிறகு திருஒற்றியூருக்கு வந்தனர். பெருமான் அவர்களுக்குத் திருவள்ளுவரின் தலைமைச் சீடனான ஏலேல சிங்கர் என்பவரிடமிருந்து விலைமதிக்க முடியாத ஒரு மாணிக்கக் கல்லை வாங்கித் தந்தார். அரசனும் அதைக்கண்டு மகிழ்ந்தான் அன்றுமுதல் இவருக்கு மாணிக்கத் தியாகர் என்பது பெயராயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கச்சூர் - தியாகராஜர்

சென்னை - செங்கல்பட்டு சாலையிலுள்ள சிங்கபெருமாள்கோயிலில் இருந்து மேற்கே பிரிந்து செல்லும் திருப்பெரும்புதூர் சாலையில் 3 கி.மீ (வழியில் ஒரு ரயில்வே லெவல்கிராசிங் உள்ளது) சென்று அங்கிருந்து வடக்கு நோக்கிப் பிரிந்து செல்லும் மண்சாலையில் 1 கி.மீ சென்றால் திருக்கச்சூரை அடையலாம்.

ஊரின் மையத்தில் கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்சென்று கொடிமரம் பலிபீடம் நந்திமண்டபம் ஆகியவற்றைத் தரிசித்துச் சற்று வலமாகச் சென்றால் மையக் கோயிலை ஒட்டித் தென்பகுதியில் கிழக்கு நோக்கி அமைந்த பெரிய கொலுமண்டபம் என்ற தியாகராஜ மண்டபத்தைக் காண்கின்றோம்.

விசாலமான இந்தத் தியாகராஜ மண்டபத்தின் மேற்குக் கோடியில் தனிச்சுற்றாலையுடன் கூடிய கருவறையில் தியாகராஜர் எழுந்தருளியுள்ளார்.

இவருக்கு அமிர்தத்தியாகர் என்பது பெயர். இது பாற்கடலில் பெருகிய நஞ்சைஉண்டு சந்தியா தாண்டவம் ஆடிய பெருமான் பின்னர் அமுதம் பெற்ற தேவர்கள் மகிழ்ந்து போற்ற அமுதக் கூத்து ஆடிய இடமாகும். தேவ அசுரர்கள் பாற்கடலைக் கடையும் போது மந்திரமலையை ஆமை வடிவம் கொண்டு தாங்கிப் பிடிக்க வல்லமை பெறத் திருமால் பூசித்த திருத்தலம்.

அமிர்தம் கிடைத்தபின் பின்னர் திருமால் கச்சப அவதாரம் கொண்டு மீண்டும் பூசித்தபோது அவருக்குச் சிவபெருமான் அருள்பாலித்து அவர்கண்டு மகிழ அமிர்த நடனம் ஆடிய தலமாகும். இப்படி ஆடிய தியாகராஜர் இங்கு அமிர்த தியாகராஜராக வீற்றிருக்கின்றார். இவர் தேவர்களுக்கு அருளும் விதத்தில் முன்கரங்களில் அபயவரத முத்திரைகளைத் தாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருவான்மியூரைப் போலவே இங்கும் பெருந்திருவிழாவில் மூன்று முதல் ஆறு நாட்கள் நடைபெறும் பவனி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இவருடைய நடனத்தை இவ்வூர்த் தலபுராணம் ஆனந்தபவனி அஜபா நடனம் என்று குறிக்கின்றது. மேலும் இது வீரபாராவார தரங்க நடனம் என்றும் அழைக்கப்படுகின்றது. இது பாற்கடல் மீது அலைகள் வீசுவது போல ஆடுதலாகும். இதனை அமிர்தநடனம், சுந்தரநடனம் என் பாரும் உண்டு. விழாவின் இறுதிநாளில் பெருமான் ஆடும்போது வாத்தியம் எதுவும் வாசிக்கப்படாததால் மௌன நடனம் என்றும் அழைக்கப்பட்டது. திருக்கச்சூர்த் தியாகராஜரின் நடனம் நட்டவினோதம் எனப்பெற்றது. இதனால் இந்த ஊருக்கே "நட்டவினோத நல்லூர்" என்ற பெயர் வழங்கி வந்ததைச் சோழர்காலக் கல்வெட்டால் அறியமுடிகின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்குவந்தபோது பசியால் துன்புற்று நிற்கப் பெருமான் பல வீடுகளில் பிச்சை ஏற்று அவருக்கு உணவளித்தார். எனவே இங்குள்ள இறைவர் இரந்துவிருந்திட்டீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இங்கு வந்தபோது சுந்தரர் திருவாரூரை நினைத்தபோது அவருக்காகவும் பெருமான் நடனம் ஆடினார் என்பர். மாடவீதியில் வடமேற்கு முனையில் சுந்தரர், திருமால் ஆகியோரின் ஆலயம் இருந்ததென்றும் தியாகராஜர் பவனிவரும்போது அவர்களுக்கு நடனக்காட்சி அருள்வது வழக்கம் என்றும் கூறுகின்றனர். இந்நாளில் அங்கு விநாயகர் ஆலயம் உள்ளது. அதற்குச் சுந்தரவினாயகர் என்ற பெயர் வழங்குகின்றது. சித்திரைமாதத்தில் பெருந்திருவிழாவும் தியாகராஜரின் பவனிக்காட்சியும் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு அம்பிகைக்கு நேர் எதிரில் தியாகராஜர் விழாவில் எழுந்தளும் ஊஞ்சல் மண்டபம் உள்ளது.

தொட்டிக்கலை - அமிர்தத்தியாகர்

சென்னை (ஆவடியை) அடுத்துள்ள தலம் "தொட்டிக்கலை' ஆகும். இலக்கியங்களில் இது கலசை என்று குறிக்கப்படுகின்றது. இங்கு சிவகாமி அம்பிகை உடனுறை சிதம்பரேசுவரர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்துள் கலசத்தியாகர் என்ற பெயரில் தியாகராஜர் எழுந்தருளியுள்ளார். இவரை அமிர்தத்தியாகர் எனவும் அழைப்பர். திருஒற்றியூரில் நடந்துவரும் அத்தனை சிறப்புக்களும் இவருக்கும் நடைபெற்று வருகின்றன. கலசைக்கோவை, கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூற்கள் இவருடைய பெருமைகளைப் பேசுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனி மாமன்னர்கள் எழுந்தருளி வைத்து வழிபட்ட அபிமான விடங்கர்களைக் காணலாம்.

தஞ்சை தட்சணமேரு விடங்கர்

சோழ மாமன்னன் இராஜராஜசோழன் திருவாரூர்ப் பெருமானிடத்தில் எல்லையற்ற பக்திபூண்டவனாக இருந்தான். அவன் தான் எடுத்த தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் தான் எழுந்தருளிவைத்த சோமாஸ்கந்தமூர்த்திக்குத் தஞ்சை விடங்கர், தட்சணமேரு விடங்கர் என்ற பெயர்களையும் சூட்டினான். திருவாரூரில் வீதி விடங்கனான தியாகராஜப் பெருமானுக்குச் செய்யப் படும் அத்தனை விழாக்களையும் சிறப்புக்களையும் தட்சணமேரு விடங்கர்க்கும் செய்து மகிழ்ந்தான்.

இவனுக்குப் பிறகு அரியணையேறிய இராஜேந்திரசோழன் தன் தந்தையான இராஜராஜன் தியாகேசப் பெருமானிடம் கொண்டிருந்த அளவற்ற பக்தியை உலகிற்குக் காட்டத் தியாகராஜருக்கு நேர் எதிரில் (அமைந்திருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளை எடுத்துவிட்டு) அவருடைய சிலையை அமைத்த துடன் தியாகர் உலாப்போகும் போது அவர்முன்னே அவரைத் தொழுதவாறு அந்தத் திருவுருவத்தை எடுத்துச் செல்லவும் ஏற்பாடுசெய்தான்.

இம்மன்னர்கள் காலத்தில் தியாகராஜருக்கு 28 நாட்கள் வசந்தவிழாவும், விழாவின்போது தியாகராஜருக்கு முன்னே நாட்டியங்களும், குற வஞ்சி நாடகங்களும் நடைபெற்று வந்தன. இம் மன்னர்கள் தியாகராஜர் உலாவர திருவாரூரிலுள்ள ஆழித் தேரைப் போலவே பெரியதேரைச் செய்தளித்தனர். பின்னாளில் அதை இழுப்பதற்குப் போதிய ஆட்கள்கிடைக்காமல் போகவே சிவாஜி காலத்தில் இருந்த சோமையாஜி பண்டிதர் என்பவர் அதனை அழித்துச் சிறிய தேராக்கினார் என்று வரலாறு கூறுகின்றது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சை நகரை ஆண்ட சரபோஜி மன்னர் தியாகேசர் மீது மிகவும் பக்தியுடையவராக இருந்தார். இவர்பேரில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்ற நாட்டிய நாடக நூலை எழுதினார். திருவாரூர் தியாகேசர் விழாவில் தியாகேசர் குறவஞ்சி நடிக்கப்பட்டதுபோலவே தஞ்சைப் பெரிய கோயிலில் இந்த நாடகம் நடிக்கப் பட்டது. தியாகராஜர் எட்டுதிசையிலும் கொடியேற்றி விழாக்காணும் வசந்தவிழா நாளில் நடிக்கப்பெற்ற தால் இது அஷ்டகொடி குறவஞ்சி எனவும் அழைக்கப்பட்டது.

இந்தத் தியாகேசப்பெருமானைத் "தஞ்சைப் பெருவுடையார் உலா" தட்சணமேரு விடங்கர் என்றும் கருணைத்தியாகேசர் என்றும் குறிக்கின்றது.

தீபாம்பாள்புரம் - தீபவிடங்கர்

தஞ்சாவூர் - திருவாரூர் சாலையில் உள்ள அம்மாப்பேட்டை என்னுமிடத்திற்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் தீபாம்பாள்புரம் இருக்கின்றது.

ஆதியில் இவ்விடம் வில்வவனமாக இருந்தது. இந்தவனத்துள் புற்றில் ஒருசிவலிங்கம் இருந்தது அன்பர்கள் அதனை வெளிப்படுத்தி அதற்குச் சிறு கோயிலை அமைத்து வழிபட்டு வந்தனர். இறைவன் புற்றிடங்கொண்டார் (வன்மீக நாதர்) என்றும் அம்பிகை மங்களநாயகி என்றும் அழைக்கப்பட்டனர்.

அந்நாளில் தஞ்சை மண்டலத்தை ஆண்டு வந்த மராட்டிய மன்னர்களின் வழிவந்த மகாராணி தீபாம்பாள் மிகுந்த சிவபக்தி உடையவளாக விளங்கினாள். இவள் திருவாவடுதுறையாதீனத்தின் பால் மிகுந்த பக்தியும் பற்றும் கொண்டவராக விளங்கினார். திருவாவடுதுறை ஆதீன முகப்பில் இவருடைய திருவுருவம் மிகப்பெரியதாகத் தீட்டப்பட்டிருப்பதை இப்போதும் காணலாம்.

இந்த அரசி மேற்சொன்ன வில்வவனத்தைத் திருத்திப் புற்றிடங்கொண்ட நாதர் கோயிலைப் பெரியதாகக் கட்டினாள். அதன் தென்புறம் புதிய கிராமத்தை அமைத்து அதில் 300 அந்தணர்களைக் குடியேற்றி, அதற்குத் தன்பெயரைச் சூட்டினாள். அதுவே தீபாம்பாள்புரம் என்றழைக்கப்படுவதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்கோயிலின் தூணொன்றில் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானத்தின் திருவுருவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம்.

இக்கோயிலில் அரசி தீபாம்பாள், தியாக ராஜருக்கென தனிச்சந்நிதியை அமைத்து அதில் தியாகராஜரை எழுந்தருளிவைத்தாள். திருவாரூரிலும், தஞ்சையிலும் நடைபெறும் அத்தனை உபசாரங்களையும வழிபாடுகளையும் செய்து வர வகை செய்தார். இவருக்குத் தீபவிடங்கர் என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தாள்.

இந்நாளில் நிதி பற்றாக்குறை காரணமாகப் பெருந்திருவிழாக்கள் நடைபெறுவதில்லை. தியாக ராஜருக்குரிய ஆறு அபிஷேகங்கள் சிறப்புடன் நடைபெறுகின்றன. திருவாதிரையன்று தியாகேசர் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுதலும் அபிஷேகம் கொள்ளுதலும் மீண்டும் சபைக்கு எழுந்தருளுதலும் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்குள்ள வசந்தமண்டபம், தேர்முட்டு மண்டபம் ஆகியன மிகவும் சிதைந்து காணப்பட்டாலும் மிகுந்த கலையழகுடன் திகழ்கின்றன.

தேர் பழுதுபட்டதால் பெருந்திருவிழா நின்று விட்டதென்று கூறுகின்றனர். பெருந்திருவிழாக்கள் நடந்து நெடுங்காலமாகிவிட்டதால் தியாகராஜருக்கு நடத்தப்பட்ட விழாச் சிறப்புக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

ஊருக்கு வடக்கே தனித்த நிலையில் அமைந்துள்ள இக்கோயிலில் நாட்பூசைகள் நன்கு நடைபெறுகின்றன. தீபாம்பாளின் சிவபக்தியும், தியாகராஜரின் அழகையும் பறைசாற்றிக் கொண்டு அமைதியான சூழலில் இருக்கும் இக்கோயில் மனதிற்கு மகிழ்ச்சியையும் இதத்தையும் தருகின்றது.

நாகூர் நாகவிடங்கர்

நாகைப்பட்டினத்திற்கு வடக்கே 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. "நாகூர்" ஆகும். இந்நாளில் இது மகமதியர்களின் புனிதத்தலமாகப் புகழ்பெற்று விளங்குகின்றது. இங்கு சாலையின் மேற்கில் கிழக்குநோக்கியவாறு பெரியகோயிலாக நாகவல்லி உடனுறை நாகநாதசுவாமி ஆலயம் அமைந்துள்ளது. இதில் தெற்குப்பிராகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு தியாகராஜரின் சந்நிதி அமைந்துள்ளது.

இவரை சமுத்திரவிடங்கர் என்று அழைக்கின்றனர். தியாகராஜருக்குரிய ஆறுஅபிடேகங்கள் கிரகண புண்ணியகால அபிஷேகங்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன.

ஆனிமாதம் பௌர்ணமியைக்கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழா 10 நாட்கள் நடைபெறுகின்றது. விழாவின் அங்கமாக பூசநட்சத்திரத்தில் கொடியேற்றமும் தியாகராஜருக்கு 5ஆம் நாள் மாலை அஷ்டகொடியேற்றி வசந்தமண்டபத்திற்கு எழுந்தருளவைத்தல் இரவு மகாருத்ர அபிஷேகம் ஒன்பதாம் நாள் காலை தேரில் உலாவரச் செய்தல் அன்றிரவு பிராயச்சித்த அபிஷேகம், ஆகியனவும் நடைபெறுகின்றன. பத்தாம்ஆம் நாள் இரவு வசந்த மண்டபத் திலிருந்து புறப்பட்டு தியாகராஜர் நடனமாடியவாறே சந்திரன், சமுத்திரராஜன், இந்திரன் ஆகியோருக்குக் காட்சி வழங்குகின்றார்.

பெரிய தேர் பழுதுபட்டிருப்பதால் அழகிய சிறியதேரில் தியாகராஜர் பவனி வருகின்றார். இவ்வூர்த்தலபுராணம் விரிவாகப் பாடப்பட்டிருந்த போதிலும் அதில் தியாகராஜரைப் பற்றிய செய்திகள் எதுவுமில்லை.

ஞானவாளும், வீரவாளும்

அரசனுக்கு முதன்மையான வீரச்சின்னமாக இருப்பது வாளாகும். இந்த வாளுக்கு அதன் சிறப்புக் கருதி தனியான சிறப்புப் பெயர் சூட்டப்படுவதைக் காணலாம். அரசன் செல்வதற்கு முன்பாக அவனுடைய வாள் எடுத்துச் செல்லப்படும். இதற்கு வாள் வலம் செய்தல் என்பது பெயர்.

ஞானச் செங்கோல் நடத்தும் தியாகராஜனுக்கு முன்புறம் இரண்டு வாட்கள் உள்ளன. இவற்றிற்கு வீரவெண்டையம் என்பது பெயர். ஒன்று தவயோக சாதனையில் ஈடுபடும் சாதகனுக்கு ஏற்படும் இடையூறுகளைக் களையும் யோகவாளாகவும் மற்றது ஞானவான்களுக்குத் துணைநிற்கும் ஞானவாளாகவும் விளங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பைஞ்ஞீலி சக்கரத் தியாகர்



இதுவரை தரிசித்த தியாகராஜர் வடிவங்கள் யாவும் உலோகத்திருமேனியாக உள்ளனவாகும். இதற்கு நேர்மாறாக ஒரு பெரிய பாறையில் ஒரு மாடத்தில் செதுக்கிப்பட்டதாகத் திருப்பைஞ்ஞீலி சக்கரத்தியாகராஜர் வடிவம் விளங்குகின்றது.

திருச்சி - துறையூர் சாலையிலுள்ள மணச்சநல்லூரிலிருந்து ஏழு கி.மீட்டர் தொலைவில் திருப்பைஞ்ஞீலி அமைந்துள்ளது. இது புராணச் சிறப்பும் வரலாற்றுசிறப்பும் கொண்ட பதியாகும்.

இங்கு சிவபெருமான் தன்னை நோக்கித் தவம் செய்த அம்பிகை, திருமால், சப்தரிஷி ஆகியோருக்கு முத்துமலை என்ற குன்றின்மீது காட்சியளித்தார். இதனால் இவருக்கு 'முத்துமலைத் தியாகர்' என்பது பெயராயிற்று.

ஒரு காலத்தில் திருமாலுக்குச் சக்கரத்தை அளித்தால் இவருக்குச் 'சக்கரத்தியாகர்' என்ற பெயர் வழங்குகின்றது மற்றுமோர் சமயம் விமலையாகிய பார்வதி இங்கு வாழைவனத்தினை அமைத்து அதில் சிவலிங்கத்தை நிறுவிப் பூசித்தார். அவளுக்குக் காட்சியளித்து அருள்பாலித்ததால் பெருமானுக்கு 'விமலாரண்ய விடங்கர்' என்பதும் பெயராயிற்று. மேலும் அம்பிகை இங்கு சிவபூசை செய்தபோது அரம்பையர்கள் வாழை மரங்களாக நின்று நிழல் தந்ததுடன் தன் இலைகளால் கவரியைக் கொண்டு வீசுவதுபோல் காற்றைவீசி அங்கு வசந்தகாலம்போல் இருக்கச் செய்தனர். அந்த வசந்தகாலச்சுகானுபவத்தில் திளைத்திருப்பதால் சிவபெருமானுக்குக் 'கதலி வசந்தர்' என்றும் பெயர் உண்டாயிற்று.

இங்குள்ள சிறுகுன்றில் சிவபெருமான் விடங்கராக அமர்ந்து நடனமாடியதை உணர்த்தும் வகையில் முதலாம் மகேந்திர வர்ம பல்லவன் என்ற பேரரசன் விடங்க வேடமாகிய சோமாஸ்கந்தர் வடிவை) குடைவரைச் சிற்பமாகச் செதுக்கி வைத்து அன்பர்கள் வழிபட வகைசெய்தான்.

இந்த முத்துமலை என்பது சிறுபாறை யாகும். அதில் பெரிய மாடத்தைக் குடைந்து அதனுள் சக்கரத்தியாகரின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாறையை மையப்படுத்தி சிறு ஆலயம் வட்டமான விமானத்துடன் கட்டப்பட்டுள்ளது. இது பூமி மட்டத்திலிருந்து தாழ்வாக இருப்பதால் சிலபடிகள் இறங்கிச் சென்று தரிசிக்க வேண்டியுள்ளது. மேற்கு நோக்கி எழுந் தருளியுள்ளதால் கல்வெட்டுகளில் இவர் 'மேற்றளி நாயனார்' என்றும் குறிக்கப் பட்டுள்ளார்.

மேலும் இவரை அதிகாரவல்லபர், இரத்தினசபாபதி என்ற பல்வேறு பெயர் களால் புராணங்கள் அழைக்கின்றன. இத் தலத்தில் அம்பிகை திருமால் முதலானோர் அமைத்து வழிபட்ட மூலமூர்த்தியான சிவலிங்கத்திற்கு ஞீலிவனநாதர் (நீலகண்டீசு வரர்) என்ற பெயர் வழங்குகின்றது. பாறை யில் குடைந்து அமைக்கப்பெற்ற சோமாஸ் கந்தத் திருவுருவமே முத்துமலைத் தியாக ராஜர், விமலாரண்ய விடங்கர், கதலி வசந்தர் முதலான பெயர்களால் குறிக்கப்படுகின்றது.

இந்நாளில் இந்தச் சந்நிதியின் சிறப் பையும் தல வரலாற்றுப் பெருமையையும் உணராமல் இங்கு "அதிகார வல்லபர் எம தருமராசர் சந்நிதி" என்று எழுதியுள்ளனர். இதனை பலர் எமன் கோயில் என்று, எழுதியும், பேசியும் பிரபலப்படுத்தி வருகின் றனர். இது மிக வருந்தத்தக்கதாகும்.

முத்துமலைத் தியாகராஜரின் வடிவம் குறிப்பிடத்தக்தொன்றாகும். இது இடவல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதனை, கண்ணாடியில் பார்த்து வணங்கினால் தான் நேரான அமைப்பாக இருக்கும். இதில் பெருமான் இடது கரத்தில் பாம்பையும், வலது கரத்தில் மானையும் ஏந்தி யுள்ளார். வலப்பக்கத்தில் தேவி வலதுகலை நெடுக்காக மடித்தும் இடதுகாலைத் தொங்கவிட்டும் காட்சியளிக்கின்றாள். இருவருக்கும் நடுவில் முருகன் நின்றவாறு காட்சியளிக்கின்றார்.

இது மூவராலும் பாடப்பெற்ற பதியாகும். திருவாரூர்ப் பெருமானை வீதிவிடங்கர் என்று அழைப்பதுபோல இவரை சுந்தரமூர்த்தி சுவாமிகள் "காறாலாவிய" என்று தொடங்கும் பதிகப் பாடல்தோறும் "ஆரணீய விடங்கரே" என்று அழைக்கின்றார். இது இறைவன் அப்பரடிகளுக்குப் பொதிசோறு அளித்த தலமாகும்.

காட்சி கொடுத்த நாயகர்

தியாகராஜத் தலங்களில் எழுந்தருளி வைக்கப்படும் உலாத்திருமேனிகளில் தனிச் சிறப்பிடம் பெற்றது "காட்சி கொடுத்த நாயகர்" என்னும் வடிவ மாகும். தியாகராஜர் உலாவரும் உலோகத் திரு மேனியாக இருந்தாலும் மூலமூர்த்திக்கு இணை யாகவே போற்றப்படுகின்றார். இவருக்கென வரைய றுக்கப்பெற்ற அபிஷேகம் அலங்காரம் முதலிய வையே நடைபெறுகின்றன. இவர் விழாக்களில் தேரில் வருவது தவிர வாகனங்களில் வலம் வரும் வழக்கமில்லை. ஆதலால் (சோமாஸ்கந்தரான) இவருக்குரிய விழாக்களை சந்திரசேகரமூர்த்திக்குச் செய்து மகிழ்கின்றனர்.

பொதுவாக பெரிய தலங்களில் உள்ள சந்திரசேகரர் சுற்றியுள்ள திருத்தலங்களுக்குச் சென்று ஓரிருநாட்கள் தங்கி. அன்பர்கள் செய்யும் சிறப்புவழிபாடுகள் மண்டகப்படிகள் ஆகியவற்றை ஏற்பது வழக்கம்., தியாகராஜத் தலங்களில் சந்திரசேகரர் தியாகராஜரின் பிரதிநிதியாக விளங்குவதால் பிறதலங்களில் உள்ள மூர்த்தியைப் போல் வெளியூர் செல்வதில்லை வெளியூர்களுக்குச் சென்று அன்பர்களுக்குக் காட்சி கொடுத்து அருள் பாலிப்பதை நினைவுபடுத்துவதற்காகச் சிறப்பான சிவத்திருமேனியொன்று தியாகராஜத் தலங்களில் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது. அந்தத்திரு மேனியே "காட்சி கொடுத்த நாயகர்" ஆகும்.

இதில் சிவபெருமான் எளிவந்த நிலையில் இரண்டு திருக்கரங்களோடு காட்சியளிக்கின்றார். இடது கை இடுப்பில் ஊன்றியிருக்க வலது கரம் அருகிலுள்ள இடபத்தின் மீது ஊன்றியுள்ளது. தலையில் வட்டமாக எடுத்துக்கட்டப்பட்ட வட்டனை விளங்குகின்றது. மார்பில் பன்றிக் கொம்பு அணி செய்கின்றது. இடப்பக்கத்தில் மலையரையன் பொற்பாவையாகிய உமாதேவியார் வலதுகரத்தில் மலரேந்தி இடது கையைத் தொங்கவிட்டவாறு காட்சியளிக்கின்றார். இறைவனின் பின்புறம் இடபம் நிற்கின்றது.

காட்சி கொடுத்த நாயகர் – கீழ்வேளூர்

எப்போதும் சிவபெருமான் உமாதேவியுடன் இடபவாகனத்தில் எழுந்தருளிவந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். பெரியபுராணத்தில் இதனை விளக்கும் வகையில் பல செய்திகள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்துக்காட்டாக: மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில், "பாங்கின் மலைவல்லியுடன் பழைய மழவிடையேறி ஓங்கிய விண்மிசை வந்தார் என்றும், திருக்குறிப்புத் தொண்டர்புராணத்தில்," தேனிறைந்த மலர்இதழித் திருமுடியார் பொருவிடையின் மேனிறைந்த துணைவியோடும் வெளி நின்றார் என்றும், சண்டேசுவர நாயனார் புராணத்தில்," செறிந்த சடைநீர் முடியாரும் தேவியோடும் விடையேறி", என்றும், திருஞானசம்பந்தர் புராணத்தில் பொன் மலை வல்லியும் தாமும் பொருவிடைமேல் எழுந்தருளி" என்றும், சாக்கிய நாயனார் புராணத்தில், "நெடுவிசும்பில் துணைவியோடும் தோன்றினார் மழவிடைமேல் எழுந்தருளி," என்றும் பலவாறு வரும் செய்திகளைக் காணலாம். இது அன்பர்களுக்கு காட்சியளித்து அருள்பாலிக்கும் கோலமாதலின் "காட்சி கொடுத்த நாயகர்" என்றே பெயர் பெற்றது. மாகேசுரத்திருமேனிகளில் இது "ரிஷபாந்திகர்" எனப்படும்.

இம்மூர்த்தி தியாகராஜர் ஆலயப் பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியிருக்கக் காண்கிறோம். திருவாரூரில் பங்குனி உத்திரப் பெருவிழாவின்போது 5 நாட்கள் காட்சி கொடுத்த நாயகருக்குத் தனிவிழா கொண்டாடப்படுகின்றது.

சப்த விடங்கத் தலங்களான, வேதாரண்யம், நாகப்பட்டினம் உபயவிடங்கத் தலங்களான கீழ்வேளூர், அம்பர்மாகாளம் முதலியவற்றில் எழுந்தருளியுள்ள சோழர்கால கலைச்செல்வங்களான "காட்சி கொடுத்த நாயகர்" திருவுருவங்கள் தனிச்சிறப்புடையதாகும்.

இதன் எளிமையாலும் கலையழகாலும் கவரப்பட்ட சோழமன்னர்கள் திருவெண்காடு முதலிய தலங்களில் பெரிய உலாத்திருமேனிகளாக, இதனை அமைத்து வழிபட்டனர் காலப்போக்கில் இரண்டு கரங்களுக்குப் பதிலாக நான்கு கரங்கள் அமைக்கப்பட்டன.

தலையில் வட்டணைக்குப் பதிலாகச் ஜடா மகுடம் அமைக்கப்பட்டது. இப்படி காலத்திற்கு ஏற்ப பல மாறுதல்கள் செய்யப்பட்டன. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் இறைவன் காட்சி கொடுத்ததை விளக்கும் வகையில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரிசையின் முடிவில் இந்த காட்சி கொடுத்த நாயகரின் வடிவமும் நிலைப்படுத்தி வணங்கப்படுவதை காண்கிறோம்.

விடங்கத் தலங்களில் நடைபெறும் பெருந் திருவிழாக்களில் தீர்த்தமளிக்கும் சடங்கில் காட்சி கொடுத்த நாயகர் எழுந்தருளி தீர்த்தமளிப்பதே மரபாகும். இந்நிலையும் இப்போது மாறியுள்ளது.

காலம் மாறினும், கருத்துக்கள் மாறினாலும் கலையாத எழிற்கோலமாக எளிவந்த வான்கருணை வடிவாக "காட்சி கொடுத்த நாயகர்" வடிவில் சிவபெருமான் அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றான்.

அன்பர்களை ஆட்கொள்ள எழுந்தருளும் கோலமாதலின் "காட்சி கொடுத்த நாயகரை' "ஆட்கொண்ட நாயகர்" எனவும் அழைத்தனர். அம்பர் மாகாளக் கோயில் கல்வெட்டு இக்கோயிலில் எழுந்தருளியுள்ள காட்சி கொடுத்த நாயகரை ஆட்கொண்ட நாயகர் என்றே குறிக்கின்றது.

சிவலிங்க வடிவான தியாகராஜரும், விடங்கரும்

தியாகராஜர் என்றதும் கொண்டிதேவியுடன் வீரசிம்மாசனத்தில் முத்துவிதானத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் அழகிய திருக்கோலமே நினைவுக்கு வருகின்றது. ஆனால் பல தலங்களில் மூலமூர்த்தியாக உள்ள சிவலிங்கங்களுக்குத் தியாகர் என்ற பெயர் வழங்குவதைக் காண்கிறோம். திருவாரூர் ஆலயத்தில் வடக்குக் கோபுரத்திற்கு நேராக அமைந்த சந்நிதியில் ஒட்டுத்தியாகர் என்ற பெயரில் அமைந்திருப்பது சிவலிங்க மூர்த்தமேயாகும். திருஞானசம்பந்தர் தன் பக்தர்களுடன் வீடுபேறு பெற்றருளிய ஆச்சாள்புரத்தில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியான சிவலிங்கத்திற்கு சிவலோகத்தியாகர் என்பது பெயராகும்.

மேலும் விடங்கர் என்ற பெயரும் தியாகராஜருக்கே உரியதாகும். திருவாரூர் பெருமானுக்கு வீதிவிடங்கர் என்றும், பவனி விடங்கர் என்றும் பெயர் வழங்குவதைக் காண்க. என்றாலும் திருச்சுழியலில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்திற்கும் திருச்சி மாவட்டத்திலுள்ள கானூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கும் பிரளயவிடங்கர் என்ற பெயர் வழங்குகின்றது. இதுபோன்றே திருவெண்காட்டை அடுத்துள்ள மேலையூர் தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குப் பிரியா விடங்கர் என்பது பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவயோக சாதனையும் சப்த விடங்கமும்

தியாகராஜப் பெருமான் கொலுவீற்றிருந்து அருள்பாலிக்கும் திருவாரூர் உள்ளிட்ட சப்த விடங்கத்தலங்கள் சைவ சமயத்தில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. பொதுவாக இவற்றைச் சிவத்தலங்கள் என்ற முறையிலேயே சென்று வழிபடுகின்றோம். சிவயோக சாதனையாளர்களால் இத்தலங்களுக்குச் சிவயோக முறையில் சிறப்பான விளக்கம் தரப்படுகின்றது. அதன்படி இவை மனித உடலில் உள்ள ஆறு ஆதாரங்களுடன் உச்சியைத் திறக்கும் வாயிலையும் சேர்த்த ஏழு தானங்களைக் குறிக்கும் குறியீடு என்பர். மேலும் சிவயோகசாதனையால் எழும் குண்டலினி சக்தியானது ஒரு ஆதாரத்திலிருந்து மறு ஆதாரத்திற்குச் செல்லும் நிலையையே தியாகராஜ நடனங்கள் குறிக்கின்றன என்றும் சிவயோகத் தியானத்தில் தோன்றும் ஒளிக் காட்சியையே விடங்க லிங்கங்கள் உணர்த்துகின்றன என்றும் கூறப்படுகின்றது. அவற்றைப் படிப்படியாக இக்கட்டுரை விளக்குவதைக் காணலாம்.

பெறற்கரிய பேரின்பத்தையும், அளவற்ற ஆற்றலையும் பெறுவதற்குப் பலவகையான நெறிகளைச் சைவசமயம் போதிக்கின்றது. அவற்றுள் ஒன்றே யோகசாதனையாகும். பலவேறு சமயங்கள் பலவகையான யோகசாதனைகளைப் பற்றிப் பேசுவதால் சைவசமயம் பேசும் யோகசாதனை சிறப்புப் பெயரால் சிவயோக சாதனை எனப்பட்டது. அதிலும் சிவபெருமானைப் பின்பற்றிச் செய்யப்படும் யோகசாதனையாதலில் இது "சிவராஜயோகம்" எனப்பட்டது. இந்த யோகவித்தையைப் பயில்பவர்கள் சிவபெருமானை யோகேசுவரனென்றும், "பரமயோகி" என்றும் அழைத்தனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவருமே தேவாரத்துள் பல இடங்களில் சிவபெருமானைப் "பரமயோகி" என்று குறித்துள்ளதைக் காணலாம்.

திருவாரூரில் சிவபெருமான் தியாகராஜ கோலத்தில் ராஜயோகியாக, வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான் என்று யோகமார்க்கத்தினர் கூறுகின்றனர்.

யோகசாதனையின் முதல்படி, உடலில் கருவாய்க்கும், எருவாய்க்கும் நடுவில் உள்ள மூலாதாரம் என்னுமிடத்தில் பாம்புவடிவில் சுருண்டு உறங்கிய நிலையில் இருக்கும் மூலாதார சக்தியை விழிப்புறச்செய்து அதனை மேல்நோக்கி எழுப்புவதாகும். இதனை எழுப்புவதற்குக் குருவின் அருளுடன் பிராணாயாமம் என்னும் மூச்சுக் காற்றுப் பயிற்சியும் தேவையாகும். யோகசாதனையால் எழுந்த அச்சக்தியானது, (பின்னர் மூலாதாரத்திற்கு நான்கு விரற்கிடை) மேலுள்ள சுவாதிஷ்டானம், கொப்பூழுக்கு நேரேயுள்ள மணிபூரகம், இருதயத் திலுள்ள அநாகதம், கழுத்திலுள்ள விசுத்தி, புருவமத்தியிலுள்ள ஆக்ஞா ஆகிய ஆறு இடங்களில் படிப்படியாக மேலேறிச் சஞ்சரித்துப் பின்னர் கபாலவாயில் என்னும் பிரமரந்திரம் வழியாக வெளிப்பட்டுத் தலைக்குமேல் உள்ள சஹஸ்ராரம் என்னும் இடத்தை அடைந்து இறையின்பத்தை அனுபவிக்கின்றது.



இப்படி மனித உடலில் உள்ளதாகச் சொல்லப்பட்ட ஆறு ஆதாரங்களும் கபாலவாயில் என்னும் ஏழாவது தலமுமே, பூவுலகில் சப்தவிடங்கத் தலங்களாக உள்ளன என்று கூறப்படுகின்றது. இனி இவை எவ்வாறு சப்தவிடங்கத் தலங்களோடு ஒன்றுகின்றன என்பதைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதில் முதலில் சொல்லப்படும் திருவாரூர் என்பது மூலாதாரத் தலமாகும். மூலாதாரத்தில் உயிர்ச்சக்தியாகிய குண்டலினி பாம்புவடிவில் கிடக்கின்றது என்பதைக் குறிக்கவே அங்கு பாம்புப் புற்றில் பெருமான் வீற்றிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மூலாதாரத்தின் அதிதேவதை விநாயகர் ஆவார். இவர் மூலாதார கணபதி என்ற பெயரில் திருவாரூரில் தூணொன்றில் எழுந்தருளியுள்ளார்.

இரண்டாவதான சுவாதிஷ்டானம் என்ற ஆதாரத்தைக் குறிக்கும் தலம் திருக்காறாயில் ஆகும். இந்த இரண்டாவதான ஆதாரத்தைக் குண்டலினி சக்தி அடையும் போது யோக சாதகனைச் சுற்றிலும், தெய்வீக மணம் கமழும். அந்தச் தெய்வீக வாசனையின் குறியீடாகவே இத்தலம் கருஞ் சந்தனமாகிய காறாயில் வனம் (கார்+ அகில்) என்று அழைக்கப்படுகின்றது.

அதனையடுத்த மூன்றாவதான மணிபூரகம் என்னும் ஆதாரம் நாகப்பட்டினம் என்று குறிக்கப்படுகின்றது. கட்டுக் கடங்காத சக்தியுடன் எழுந்த குண்டலினி சக்தி நிதானத்துடன் பாம்புபோல் வட்டமிட்டுச் சஞ்சரிக்கும் இடமாதலின் பாம்பையும், அதன் மணியையும் குறிக்கும் வகையில் இது நாகப்பட்டினம் எனப்பட்டது.

நான்காவது ஆதார்மான அனாகதத்தைக் குறிக்கும் தலம் திருநள்ளாறு ஆகும். ஏழு ஆதாரத் தானங்களில் இது நடுவில் இருப்பதால் (நள்+பாதி, ஆறு வழி) பாதிவழியில் இருப்பது என்ற பொருள்பட நள்ளாறு எனப்பட்டது.

ஐந்தாவதாக கண்டத்தில் விளங்கும் விசுத்தி என்பது திருக்கோளிலி என்ற தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. குண்டலினி சக்தி அநாகதத்திலிருந்து விசுத்திக்குச் செல்லும் பாதை மிகவும் கடினமாகும். உரியகுருவின்றி இச்சாதனையில் ஈடுபடுபவர்களுக்கு சாதனையில் கடும் மயக்கம் உண்டாகும். சமயத்தில் மரணமும் நேரும். இந்த இடத்தில் சாதகன் செல்வதை நெருப்பாறும் மயிர்ப்பாலமும் என்று சித்தர்கள் பரிபாஷையில் கூறுவர். இதனைக் கடந்து விசுத்தியை அடைந்து விட்டால் குண்டலினி சக்தி வெற்றியடைந்து விட்டது என்றே கூறலாம். குண்டலினி சக்தியின் குற்றங்களை நீக்கி மேன்மையடைய வைப்பதால் இது கோளிலி எனப்பட்டது (கோள் + இலி = குற்றமில்லாத இடம்) என்பர்.

ஆறாவது ஆதாரமான ஆக்ஞா என்பதே திருமறைக்காடு எனும் தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. புருவமத்தியில் விளங்கும் ஆக்ஞா என்ற ஆதாரத்தில் சக்தியேறி நிற்கும் போது நெற்றிக்கண் என்னும் ஞானக்கண் திறக்கின்றது. இது திறந்து விட்டால் உலகிலுள்ள அனைத்து வேதங்களையும் சாதகன் ஓதாது உணர்ந்து விடுகின்றான். அதனால் இது வேதவனம் என்றும் மறைக்காடு என்றும் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆறு ஆதாரங்களைக் கடந்த குண்டலினி சக்தி கபாலவாயில் வழியாக வெளிப்பட்டு தலைக்கு மேல் பன்னிரண்டு விரற்கிடை தூரத்திலுள்ள சஹஸ்ராரத்தை அடையும். ஏழாவதாக விளங்கும் கபால வாயிலே திருவாய்மூர் என்ற தலமாகச் சொல்லப்பட்டுள்ளது. திருவாகிய கடவுட்காட்சிக்கு வாயாக (வழியாக) இருக்கும் காரணத்தால் இது திருவாய்மூர் என்றழைக்கப்பட்டது.

எட்டாவதாக . விளங்குமிடமே சிதம்பரப் பெருவெளியாகிய சஹஸ்ராரமாகும். இதில் சிவபெருமான் ஓயாது நடனம் புரிகின்றார். அதனால்தான் குண்டலினியின் ஆதிஇருப்பிடமான திருவாரூரைச் சிதம்பரத்திற்கு மூத்த முதல் திருத்தலம் என்று குறிக்கின்றனர். அதனாலேயே திருவாரூரில் மாலை வழிபாட்டைக் கண்டவர்கள் சிதம்பரத்தில் கலைகளை ஒடுக்கும் நிகழ்ச்சியான அர்த்தசாமத்தையும் காணவேண்டுமென்றும் கூறுகின்றனர். இதன் மூலம் சப்தவிடங்கத் தலங்களின் பெயர்கள் யோகநெறியில் சொல்லப்படும் ஆதாரங்களோடு பொருளால் ஒன்றுபட்டு நிற்றலை அறியமுடிகின்றது.

... ...

இனி தியாகராஜரின் நடனத்திற்கும், குண்டலினிசக்தி பயணம் செய்வதற்கும் உள்ள தொடர்பைக் காணலாம்.

குண்டலினி சக்தி மூலாதாரத்தில் விழித்தெழுந்து சஹஸ்ராரத்திற்குச் செல்லும் பாதையானது, ராஜபாட்டை என்றும் யோகவழி என்றும் குலபதம் என்றும் பலவாறு அறிஞர்களால் குறிக்கப்படுகின்றது. இவ்வழியில் குண்டலினி சக்தி ஒரே சீராகச் செல்வதில்லை. முட்டிமோதி பலவகைச் சோதனைகளைக் கடந்தே வெற்றியை எட்டுகின்றது. இந்தப் பயணத்தின் பல்வேறு நிலைகளே தியாகராஜரின் நடனங்களாகச் சொல்லப்பட்டுள்ளது என்பர் யோகியர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலாதாரத்தில் விழிப்புற்ற கனல், சுவாதிட் டானத்தை அடைய மேற்கொள்ளும் நிலையே திருவாரூர் தியாகராஜரின் அஜபா நடனமாகச் சொல்லப்பட்டுள்ளது. முதலில் ஜெபிக்கப்படாத அஜபாமந்திர முயற்சியில் எழுந்த குண்டலினி கனலாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இதனால் சாதகனின் உடலில் வெப்பம் அதிகமாகிறது. இந்த சக்தி கட்டுக் கடங்காமல் நிலை கொள்ளாமல் குதிக்கும் தீக்கொழுந்தினை ஒத்ததாக உள்ளது.

'அஜபா' என்னும் சொல், "வாய்வழியால் உச்சரிக்கப்படாதது" என்ற பொருளுடையது. நாம் ஒவ்வோர் முறை மூச்சுவிடும்போதும் "ஸோஹம்" எனும் மந்திரத்தை மனத்தால் உறைத்து நின்று எண்ணுதலே அஜபா தியானமாகும். இம் முறையில் தியானிக்கையில் ஒரு நாளுக்கு 21,600 முறை இதயத்திலுள்ள சிறு இடைவெளியில் ஏற்படும் அசைவே ஞான நடனமாகும். இவ்வசைவே அஜபா நடனமாகும். இதனையே "ஊன் நில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம் - நான் நிலாவி இருப்பன் என் நாதனை" என நாவுக்கரசர் ஆரூர்ப் பதிகத்தில் விளக்கியுள்ளார்.

சுவாதிஷ்டானத்திலிருந்து மணிபூரகம் செல்லும் கதியை உணர்த்துவது திருக்காரவாசல் தியாகரின் நடனமாகிய குக்குட நடனமாகும். இது துள்ளுதல் குறைந்து சண்டைக்குச் செல்லும் கோழி இடமும் வலமும் பார்த்துச் சாய்ந்து சாய்ந்து மிக எச்ச ரிக்கையுடன் செயல்படுவது போன்று அமைகின்றது. எச்சரிக்கையின்றி செயல்பட்டால் குண்டலினி சக்தி அவிந்து விடுவதுடன் மீண்டும் அதனை எழுப்பக் கடும் முயற்சிதேவை என்பதை இது உணர்த்துகின்றது. கோழியும் அக்னியின் மற்றொரு குறியீடு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மணிபூரகத்திலிருந்து - அநாகதத்தை அடையும் பயணநிலையைக் குறிப்பது நாகைத் தியாகராஜரின் வீசி நடனம் என்கின்ற பாராவார நடனமாகும். முதலில் மிக்க ஆவலுடன் ஆர்ப்பரித்து கட்டுக்கடங்காது பயணம் செய்த குண்டலினியின் நிலை பின்னர் சற்று அடங்கிச் செயல்பட்டது. இங்கு இன்னும் அடங்கி கடல் அலைகள் சுழன்று சுழன்று விழுவதுபோல அமைந்திருக்கின்றது. இதனால் பாராவார தரங்க நடனம் எனப்பட்டது. (பாரவாரம்- அலை ; தரங்கம் - கடல்).

இதனையடுத்ததாகிய அநாகதத்திலிருந்து விசுக்திக்குச் செல்லும் வழி கடுமையானதென்று முன்னமேயே கூறப்பட்டது. சாதகன் இதில் பயணம் செய்யும்போது இது அவனைப் பயித்தியக்காரனைப் போல ஆக்குகின்றது. அது தீர சாதகர்கள் பாகற்காயும் தூதுவளைக்கீரையும் உண்ணுகின்றனர். இந்த நிலை உன்மத்த நிலையாதலின் இந்த நடனம் உன்மத்த நடனம் எனப்பட்டது. இதுவே அநாகதத்தில் வீற்றிருக்கும் நள்ளாற்று நம்பனின் உன்மத்த நடனமாக விளங்குகின்றது.

அடுத்ததாக விசுத்தியிலிருந்து ஆக்ஞா என்ற ஆதாரத்திற்குச் செல்லும் வழி சற்று எளிய தென்றாலும் அதிலும் பல தடைகளைக் கடக்க வேண்டியதாகிறது. இந்தப் பயணம் மேலும் கீழும் பக்கவாட்டிலும், வட்டமிட்டும், சுழன்றும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இது பூவினைச் சுற்றி எழுந்தும் தாழ்ந்தும் வட்டமிட்டும் பறக்கின்ற வண்டின் ஆட்டத்திற்கு இணையாகச் சொல்லப்பட்டது. இந்தப் பிரமரநடனம் என்ற வண்டுநடனமே கோளிலிப் பெருமானுக்கு நடனமாகச் சொல்லப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஆக்ஞா சக்கரத்தில் நிலைபெற்று எல்லாவற்றையும் உணர்ந்து கொண்ட சக்தி அன்னம் நடப்பது போல் அடிமேல் அடிவைத்து அசைந்து அசைந்து சென்று கபாலவாயிலை அடைகின்றது. எனவே இது அம்சபாத நடனம் எனப்பட்டது. இதுவே திருமறைக்காட்டுத் தியாகராஜரின் நடனமாகச் சொல்லப்பட்டுள்ளது.

இறுதியாகக் கபாலவாயிளைத் திறந்து கொண்டு மேலேசெல்லும் சக்தி தாமரைமலர் குளத் தின் நீரில் மெல்லிய நீரலைகளுக்கு ஏற்ப ஆடியாடி அசைவது போல வருத்தமின்றி எளிதாகச் செல்லு கின்றது. இதனால் இது கமல நடனமாகத் திருவாய்மூர் விடங்கர்க்குச் சொல்லப்பட்டுள்ளது.

இதன் மூலம் குண்டலினி சக்தி பயணம் மேற் கொள்ளும் பலவகையான நிலைகளைக் குறிப்பதே தியாகராஜரின் நடனங்கள் என்பதை உணரமுடி கின்றது.

ஒளிக்காட்சியும் விடங்கலிங்கமும்

இதனையடுத்து சாதகனுக்கு யோகசாதனை யின்போது தோன்றும் ஒளி நிலைகளைக் காணலாம். யோகப் பயிற்சியின் போது சாதகர்களின் உள்ளுக் குள்ளேயே ஒளி தோன்றுகின்றது. இந்தச் சாதனை வளரவளர ஒளியின் வண்ணம் மாறிமாறி அமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றது. இதனைக்குறிக்கும் வகையில் தியாகராஜர் சந்நிதியில் வண்ண லிங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன என்பர். (இவற்றில் பெரும் பாலானவை இடம்மாறி விட்டன என்றும், அவற்றிற்குப் பதிலாக ஸ்படிகம் அல்லது மரகத லிங்கங்கள் வைக்கப்பட்டன எனவும் கூறுவர்).

யோக சாதகனின் உடலில் குண்டலினி எழுந்ததும் அவன் தனக்குள்ளே அதிக சூட்டையும் செம்மணியின் ஒளிபரவுவதையும உணர்கின்றான். அதுவே "மாணிக்கத் திரள்" எனப்பட்டது. இதனை யொட்டியே திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமான் மாணிக்கத் தியாகர் என்று அழைக்கப்படுகின்றார்.

இதனைக் கடந்து சுவாதிட்டானத்தை அடையும் போது சாதகன் (ஆரஞ்சு) இளஞ்சிவப்பு வண்ணமான காட்சியைக் காண்கின்றான். அதனைத் தொடர்ந்து மணிபூரகத்தினை அடையும்போது பொன்நிறமான மஞ்சள் ஒளிவெள்ளத்தைக் காண்கிறான். இதனை யொட்டியே செம்மஞ்சள் நிறமான கோமேதலிங்கம் நாகப்பட்டினத்தில் வைத்து வழிபடப்பட்டு வருகின்றது.

இதனையடுத்த அநாகதத்தினை அடையும் போது பச்சை ஒளி தோன்றுகின்றது. இதுவே பச்சைக் கல்லால் அமைந்த் திருநள்ளாற்று மரகதவிடங்கராகப் போற்றப்படுகின்றது.

இதனையடுத்து அவன். விசுத்தித் தலத்தில் கருநீல நிறத்தைக் காண்கிறான். அதற்கு மேலே புருவமத்தியில் நீல நிறம் பிரகாசிக்கின்றது. இந்த நீல நிறம் அறிவுக்கண்ணாக வெளிப்படும். ஆதலின் இது நீலலோகிதம் எனப்பட்டது. அதனையடுத்த கபாலவாயிலில் வெளிறிய நீல நிறம் தோன்றுகின்றது. இதனைக் குறிக்கவே ஏழாவது தலமான திருவாய்மூரில் வீற்றிருக்கும் தியாகர் நீல விடங்கர் என்று அழைக்கப்படுகின்றார். இங்கு நீலக்கல் லிங்கம் வழிபாட்டில் உள்ளது.

இங்கு சொல்லப்பட்டவை ஏழு நிறங்கள் என்றாலும் இதனுள் பின்னால் சொல்லப்பட்ட கருநீலம், நீலம், வெளிர்நீலம் ஆகிய மூன்றுமே நீலநிறத்தின் சாயலேயாகும். எனவே சாதகன் நீல நிற ஒளியைத் தன்னுள் காண்பதே சாதனையின் வெற் றியாகக் கொள்ளப்பட்டது. இந்த வெற்றியை நினைவு கூரவே திருவாரூர் தியாகராஜரின் வலப்பக்கம் நீல நிறப்பட்டில் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்பர். மேலும் தியாகராஜ ருக்கு நீலநிறங்கொண்ட கழுநீர்ப் பூக்களால் அர்ச்சனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு பலவகையிலும் சிவயோக நெறியின் குறியீடாகவே தியாகராஜ வழிபாடு விளங்குவதை யோக அறிஞர்கள் குறித்துள்ளனர். இதுபற்றிய் இன் னும் விரிவான விளக்கங்கள் பல நூல்களில் தகுந்த முறையில் விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

விடங்கத் தலங்களில் - நவக்கிரகங்கள்

சிவாலயங்களில் நவக்கிரகங்களை நிலைப்படுத்தி வணங்கப் பலவகையான முறைகளைப் பூசாபத்ததி நூல்கள் குறிக்கின்றன. இவற்றில் இரண்டு முறைகள் உள்ளன. முதல்வகை ஆகம முறை என்றும் மற்றது வைதீகமுறை எனவும் அழைக்கப்படும். ஆகமநெறிப்படி அமையும் நவக்கிரகப் பிரதிஷ்டையில் நடுவில் சூரியன் மேற்கு நோக்கியவாறு காட்சியளிக்கச் சுற்றிலும் அமைந்த கிரகங்கள் அவரை நோக்கியவாறோ அல்லது வெளிப்புறம் நோக்கியோ காட்சியளிக்கின்றார். வைதீக முறையில் அமையும் நவக்கிரக பிரதிஷ்டையில் நடுவில் சூரியன் கிழக்கு நோக்கி நிற்க சுற்றிலும் கிரகங்கள் நாற்திசைகளையும் நோக்கி ஒன்றையொன்று பார்க்காத வண்ணம் நிலைப்படுத்தப்படுகின்றது.

இதற்கு முற்றிலும் மாறாகத் தியாகராஜஸ்தலங்களில் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் தெற்கு அல்லது மேற்கு நோக்கியவாறு அமைக்கப்படுகின்றன. திருவாரூர், திருக்குவளை, திருவாய்மூர், நாகப்பட்டினம், முதலிய தலங்களில் இந்த அமைப்பைக் காணலாம். (அபூர்வமாகச் சில இடங்களில் 'ட' வடிவிலும் அமைந்திருப்பதையும் காண்கிறோம். தியாகராஜர் உயிர்களின் கோள்களை நீக்கி இன்பமளிப்பவர். அவருடைய சந்நிதியில் நவக்கிரகங்களின் செயல்பாடுகள் இல்லை. அதனால் அவர்களுடைய வக்கிரங்கள் இன்றி ஒரே வரிசையில் நிற்கின்றனர்.

தியாகராஜரின் திருவருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ மஞ்சரி



இது சிவபெருமானுக்குச் சொல்லால்
கட்டப்பட்ட திருக்கோயில்